விளக்க உரை

எழுதியவர்

-சாந்திப்பிரியா -

சௌந்தர்யலஹரி
விளக்க உரை

எழுதியவர்

-சாந்திப்பிரியா -

1945 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பிறந்த நான் அச்சுக் கலை தொழிற் கல்வி படித்து விட்டு, மத்திய அரசுத் துறையில் பணி புரிந்த பின் ஒய்வு பெற்று தற்போது 'சாந்திப்ரியா' என்ற புனைப்பெயரில் எழுதுகின்றேன். இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி நிறுவனம் (CSIR), காகித நாணயம் அச்சிடும் அச்சகம் (Bank /Currency notes) போன்ற இடங்களில் மூத்த அதிகாரியாக பணி புரிந்து 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பிறகு, சிறிது காலம் சில தனியார் நிறுவனங்களுக்கு ஆலோசகராக பணியாற்றினேன். காகித நாணயங்களில் காணப்படும் வரிசை எண் (Serial) அச்சடிக்கும் புதிய நுட்பத்திற்கான காப்புரிமையை பெற்றேன். கள்ள நோட்டு அச்சுறுத்தல் குறித்த ஒரு ஆய்வறிக்கையை வழங்க ஹாங்காங்கில் நடந்த சர்வதேச மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றேன் .

'சாந்திப்ரியா' என்ற புனைப்பெயரில், பல ஆலயங்கள், மகான்கள் மற்றும் பிற ஆலய

வரலாற்றுக் கதைகளை உள்ளடக்கிய 1500 க்கும் மேற்பட்ட ஆன்மீகக் கட்டுரைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதி, எனது சொந்த வலைத்தளமான https://pages.santhipriya.com/ இல் வெளியிட்டுள்ளேன்.

பல்வேறு வலைத்தளங்களுக்காக 2500க்கும் மேற்பட்ட பக்க ஆங்கிலக் கட்டுரைகளை தமிழில் மொழி பெயர்த்துள்ளேன். நான் எழுதிய சில புத்தகங்கள் ஆன்மீக அறிவைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ள சில குழுக்களால் வெளியிடப்பட்டுள்ளன, மேலும் சில விரைவில் வெளியிடப்பட உள்ளன. அச்சுக்கலை பயிற்சி மாணவர்களுக்கு உதவ, https://printing.santhipriya.com/ என்ற வலைத் தளத்தில், கட்டுரைகள் மற்றும் கேள்வி பதில்களை வெளியிட்டு வருகின்றேன்.

N.R. Jayaraman
17-03-2025

நன்றி

2005 ஆம் ஆண்டு நான் ஓய்வு பெற்றதிலிருந்து, நிதானமாக நேரத்தை செலவிட, இணைய (INTERNET) இணைப்புடன் கூடிய பல அம்சங்களுடன் கூடிய கணினியை கொடுத்ததும் இல்லாமல், அவ்வப்போது அவற்றின் தரத்தை மாறுதல்களுக்கு ஏற்ப மேம்படுத்தி கொடுத்து, எழுத்துக் கலையைத் தொடர என்னை ஊக்குவித்த என் மகன் விநாயகராமனுக்கு இந்தப் புத்தகத்தை அர்ப்பணிக்கிறேன். மேலும், பல ஆண்டுகளாக என் வேலையில் தலையிடாமல் பொறுமையாக என்னைப் பொறுத்துக் கொண்டுள்ள என் மனைவிக்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். இல்லை என்றால் என்னால் நிம்மதியாக பல கட்டுரைகளை எழுதி இருக்க முடியாது.

சௌந்தர்யலஹரி எப்படி எழுதினேன்

சௌந்தர்யலஹரி ஸ்லோகங்கள் பற்றி விளக்க குறிப்பு எழுத வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு பல ஆண்டுகளாக நிறைவேறாமல் இருந்தது ; 2010, 2011, 2014 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் சௌந்தர்யலஹரியின் விளக்கத்தை எழுதத் துவங்க அது வேறு கட்டுரையாக மாறி விடும். காரணம் என்னால் அதில் கவனத்தை செலுத்த முடியாமல் இருந்தது. ஆகவே சௌந்தர்யலஹரி ஸ்லோகங்களின் அர்த்தத்தை எழுதுவதை பாதியிலேயே விட்டு விடுவேன்.

Origin	
Authors	Windows User
Last saved by	Jayaraman
Revision number	246
Version number	
Program name	Microsoft Office Word
Company	
Manager	
Content created	10-12-2011 21:42
Date last saved	07-03-2025 16:52
Last printed	06-03-2025 19:08
Total editing time	350:18:00
Content	
Content status	
Content type	application/vnd.openxmlformats-offi...
Pages	644
Word count	91190

பின்னர் அதைக் குறித்து கிட்டத்தட்ட நான் மறந்து விட்டேன் என்றாலும் முடிவில் பிப்ரவரி 2025 ஆம் ஆண்டு அதை எழுத நான் உறுதியாக முடிவு செய்து 10-12-2011 ஆண்டு எழுதி வைத்திருந்த குறிப்புகளைக்

கொண்டு சௌந்தர்யலஹரியின் ஸ்லோகங்களின் அர்த்தத்தை, விளக்க உரையுடன் இந்த ஆண்டு (2025) எழுதினேன்; எனது கனவு நிறைவேறியது. ஒரு புத்தகத்தின் விளக்க உரையை எழுதி முடிக்க 14 ஆண்டுகள் ஆயிற்று என்பது என்னைப் பொறுத்தவரை ஒரு வரலாறு.
2007 அல்லது 2008 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன், நான் பல்வேறு ஆலயங்கள் குறித்து நிறைய கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தபோது, மறைந்து விட்ட எனது சகோதரர் எனக்கு சௌந்தர்யலஹரி பற்றிய ஒரு புத்தகத்தைக் கொடுத்தார்; அதை அவருக்கு என் மறைந்த தந்தை கொடுத்து இருந்தார். மறைந்து விட்ட எனது தந்தை திரு ராமசாமி ஐயர், 1959 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு இருந்த அதன் முதல் பக்கம், பெரும்பாலும் பூச்சிகளால் அழிக்கப்பட்டு விட்டது அல்லது சிறிய காகிதத் துண்டுகளாக உடைந்து சிதறி விட்டது. காரணம் அது அலமாரியில் வைக்கப்பட்டு, பல ஆண்டுகளாக பயன்படுத்தப் படாமல் இருந்துள்ளது . அதன் முதல் பதிப்பு 1944 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது; எனது மறைந்த சகோதரர் எனக்குக் கொடுத்த புத்தகம் 1956 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு உள்ளது. விளக்க உரையை எழுதிய ஆசிரியர் அப்போதைய பிரபல பண்டிதராக இருந்த ஸ்ரீ 'சாஸ்திர ரத்னகார பிரம்ம ஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள்' ஆவார். சௌந்தர்யலஹரியின் வசனங்களுக்கு விளக்க உரை பழைய தமிழ் மொழியில் இருந்தது என்பதினால் புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருந்தது. இருப்பினும், அதையே வேத நூல் போல கருதி ஒவ்வொரு ஸ்லோகங்களின் அடிப்படை அர்த்தங்களையும் புரிந்து கொண்டேன். அந்தப் புத்தகத்துடன் சேர்த்து, இணையத்திலிருந்து ஆங்கிலத்தில் மற்றும் தமிழில் இருந்த பத்து அல்லது

பன்னிரண்டுக்கும் மேற்பட்ட விளக்க நூல்களைப் படித்து, வசனங்களின் உள் அர்த்தங்களைப் புரிந்து கொண்டேன். அவற்றில் முக்கியமானது 1962 ஆம் ஆண்டு கரூர் மாவட்டத்தில் உள்ள மணத்தட்டை எனும் சிறிய கிராமத்தை சேர்ந்த திரு M.K.வெங்கடராம ஐயர் அவர்கள் தமிழில் விளக்க உரை எழுதி வெளியாகி இருந்த ஸ்ரீ ஜகதகுரு க்ரந்தமாலா-7 எனும் புத்தகமும் அடங்கும். அதிலும் விளக்க உரை பழைய தமிழ் மொழியில் இருந்தது என்பதினால் புரிந்து கொள்வது மிகவும் கடினமாக இருந்தது.

அவற்றின் அடிப்படையில் இந்தப் புத்தகத்தை எனது சொந்த பாணியில் எழுதியுள்ளேன், ஒவ்வொரு வசனத்தின் பொதுவான அர்த்தமும், அவற்றின் உள் தத்துவ அர்த்தமும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக, கொடுத்து உள்ளேன். காலம் சென்ற என் சகோதரர் எனக்கு கொடுத்து இருந்த சௌந்தர்யலஹரி புத்தகத்தின் பக்கங்கள் ஒவ்வொரு முறை திறக்கும் போதும் தூள் தூளாக உடைந்து போகின்றது என்பதினால் படிக்க முடியாததாகி விட்டது. புத்தகம் அழிந்து போய் காகிதத் தூள்களாக மாறி விடக் கூடாது என்பதினால் என் தந்தை மற்றும் சகோதரரின் நினைவாக அதை ஒரு சீல் செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவரில் வைத்து விட்டேன்.



சௌந்தர்யலஹரி தோன்றிய கதை

சௌந்தர்யலஹரி வெறும் வார்த்தை ஜாலங்களைக் கொண்ட ஸ்லோகமோ அல்லது கவிதை பாடலோ அல்ல. இது பராசக்தியைப் போற்றி ஆதி சங்கரரால் இயற்றப்பட்ட மந்திர சக்தி வாய்ந்த ஸ்லோகங்கள் ஆகும். தேவியின் பெருமையையும் மேன்மையையும் எவராலும் கூற முடியாது என்பதினால்தான் அவளுடைய மகிமையை எடுத்துரைக்கும் வகையில் ஆதி சங்கரர் இந்த ஸ்லோகங்களை இயற்றி உள்ளார். இதைப் படிப்பவர்களுக்கு செல்வப் பிராப்தி, அறிவாற்றல், பல்வேறு கலைகளில் கீர்த்தி மற்றும் சகல காரியங்களிலும் வெற்றி கிடைக்கும் என்பதாக நம்புகின்றார்கள். சக்தியின் மகிமையைப் பற்றி மட்டும் அல்லாது அவளுடைய அழகைப் பற்றியும் வர்ணிக்கும் மிகச் சிறந்த மந்திர சாஸ்திர ஸ்லோகமாக இது இயற்றப்பட்டு உள்ளது.

சௌந்தர்யலஹரி எப்படி இயற்றப்பட்டது என்பதைக் குறித்த பல கதைகள் உள்ளன. முதலில் இந்த

ஸ்லோகங்கள் மேரு மலையில் தங்கி இருந்த புஷ்பதந்தர் என்ற பெரும் துறவியினால் இயற்றப்பட்டது என்றும் அதை 'ஆதி சங்கரரின்' குருவான, 'கௌத்தபாத பாகவத்பாதாவின்' குருவான, 'கௌத்தபாதச்சார்யா ' என்பவரால் மனப்பாடம் செய்யப்பட்டு, அவர் மூலம் குரு வழி போதனையாக, அவரது சீடரான 'கௌத்தபாத பாகவத்பாதாவின்' மூலம் ஆதி சங்கரருக்கு கிடைத்தது என்பதாக முதல் கதை ஒன்று உள்ளது.

இன்னொரு செய்தியின்படி, கையிலையில் சிவாலயத்தின் மதிற் சுவரில் இந்த ஸ்லோகங்கள் எழுதப்பட்டிருந்ததாகவும் அப்போது மேரு மலையில் இருந்த கௌடபாதர் அதை மனப்பாடம் செய்து, குரு வழி போதனை மூலம் ஆதி சங்கரருக்கு கிடைக்க வைத்தார் என்பதாகவும் சௌந்தர்யலஹரியினை தமிழாக்கிய கவிராஜ பண்டிதர் கூறியுள்ளார்.

மூன்றாம் கதை என்ன எனில், ஆதி சங்கரரே இதனை கைலாசத்திலிருந்து கொண்டு வந்தார் என்பதே. ஆதி சங்கரர் பல ஊர்களுக்கும் சென்றவாறு இருக்கையில் கைலாயத்தையும் அடைகிறார். அங்கு அவருக்கு ஈசன் மற்றும் உமையவளின் தரிசனமும் கிடைக்கிறது. அப்போது ஈசன் ஆதி சங்கரருக்கு ஐந்து ஸ்படிக லிங்கங்களை தந்தார். சிவபெருமான் ஆதி சங்கரருக்கு லிங்கங்களை தந்ததைக் கண்ட உமையவளும் தனது பங்கிற்கு ஆதி சங்கரருக்கு தனது கையில் இருந்த ஒரு கட்டு ஓலை சுவடிகளைத் தந்தாள். அந்த சுவடிகளில் தேவியைக் குறித்து எழுதப்பட்டு இருந்த மந்திர சாஸ்திரமான நூறு (100) ஸ்லோகங்கள் இருந்தன. அவற்றைப் பெற்றுக் கொண்ட ஆதி சங்கரர் கையிலாசத்தை விட்டு வெளி வந்தார். ஆதி சங்கரர் ஓலை சுவடுகள் மற்றும் லிங்கங்களுடன் கைலாசத்தை விட்டு வெளி வந்தபோது அங்கு வாயிலில் அமர்ந்து இருந்த நந்தி தேவர் அவற்றைக் பார்த்தார். கயிலையின் மிகப்

பெரிய புதையலான மந்திர சாஸ்திரம் கயிலையை விட்டுப் போகிறதே என்று சினம் கொண்ட நந்தி தேவர் கோபத்துடன் சங்கரர் கையில் இருந்த சுவடுகள் கட்டை பிடித்து இழுத்தார். நந்தி தேவர் ஆதி சங்கரர் கையில் இருந்த ஓலை கட்டை இழுத்தபோது அனைத்து சுவடிகளையும் கைப்பற்ற முடியவில்லை. ஆதி சங்கரர் கையில் ஒரு பகுதி சுவடி தங்கி விட்டது, மீதி கயிலையின் வாயிலில் விழுந்து விட்டது. நந்தி தேவரிடம் பறிகொடுத்த சுவடிகளை கவனிக்காமல் பூமிக்குத் திரும்பிய ஆதி சங்கரரிடம் சுவடிகளில் இருந்தவை நாற்பத்தி ஒரு (41) ஸ்லோகங்கள் மட்டுமே. ஆகவே சௌந்தர்ய லஹரி முழுமை பெறவேண்டும் என்றால் விடுபட்ட மீதி ஐம்பத்தி ஒன்பது (59) ஸ்லோகங்களும் மீண்டும் புதியதாக இயற்றப்பட்டு அதனுடன் சேர்க்கப்பட வேண்டும் என்பதை புரிந்து கொண்ட தேவி, ஆதி சங்கரர் முன் பிரத்யஷமாகி நடந்தக் கதையைக் கூறி விட்டு மீதமுள்ள 59 ஸ்லோகங்களையும் அவரையே புதிதாக இயற்றுமாறு ஆணையிட்டார். அவ்வளவுதான் உடனடியாக மடை திறந்த வெள்ளம் போல ஆதி சங்கரர் வாயில் இருந்து அன்னையை போற்றிப் பாடும் ஸ்லோகங்கள் வெளிவரத் துவங்க அவைகளே 59 புதிய ஸ்லோகமாக உருவெடுத்தது. அதுவே சௌந்தர்ய லஹரி என கருதப்பட்டது.

நான்காம் கதை என்ன என்றால் ஸ்ரீ ஆதி சங்கரர் காஷ்மீரில் தங்கி இருந்தபோதுதான் தான் ஸ்ரீ சக்கரத்தை வடிவமைத்து சௌந்தர்யலஹரி ஸ்லோகத்தை இயற்றினார் என்பதற்கு கூறப்படும் கிராமியக் கதை இது. ஸ்ரீ ஆதி சங்கரர் காஷ்மீரத்துக்கு சென்று இருந்தபோது அவர் 'விசார்னாக்' எனும் இடத்தில் தமது சிஷ்யர்களுடன் தங்கி இருந்தார். அவருக்கு தங்க ஏற்பாடுகள் செய்திருந்தவர், சமையல் செய்து கொள்ள அனைத்து பொருட்களையும் வாங்கி வைத்திருந்தாலும்

அடுப்பை எரிக்க எந்த சாதனமும் (தீப்பெட்டி, எரியும் விளக்கு போன்றவை) வைத்திருக்கவில்லை. அதனால் அவர்களால் இரவு அடுப்பை மூட்டி சமையல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மறுநாள் அவர்களுக்கு சமையல் செய்து கொடுக்க ஒரு பெண்மணியை அனுப்பி இருந்தார். சமையல் செய்ய வந்த பெண்மணி அடுப்பை எரிக்க எந்த சாதனம் அங்கு இல்லை என்பதினால் அடுப்பை மூட்டித் தருமாறு விருந்தாளிகளை வேண்டிக் கொள்ள, ஆதி சங்கரர் முதல் யாராலும் தீப்பெட்டி இல்லாமல் அடுப்பை எரிய வைக்க முடியவில்லை. அதைக் கண்ட பெண்மணி இரு குச்சிகளை எடுத்து உரசினாள். அதில் இருந்து வெளியான தீப்பொறி மூலம் சமையல் அடுப்பை பற்ற வைத்து சமையல் செய்தார். அதைக் கண்ட ஸ்ரீ ஆதி சங்கரர் திகைத்தார். அது மட்டும் அல்ல. அந்தப் பெண்மணி நன்கு கற்றறிந்தவர், தன்னுடன் ஆன்மீக தர்க்கம் செய்ய விரும்பினாள் என்பதினால் அவளுடன் சுமார் பதினேழு நாட்கள் சக்தியின் மகிமை மற்றும் பிற ஆன்மீக விஷயங்கள் குறித்து தர்க்கம் செய்தார். அந்தப் பெண்மணி சக்தியின் மேன்மை குறித்து எழுப்பிய பல விளக்கங்களுக்கு ஸ்ரீ ஆதி சங்கரரால் பதில் கூற முடியவில்லை. இறுதியில் அவளே சக்தி என்பதை உணர்ந்து கொண்டவர், சக்தியின் மகிமையை புரிந்து கொண்டு, சக்தி தேவி இன்றி சிவனுக்கு தனி சக்தி இல்லை என்பதையும் உணர்ந்தார். அதை அவருக்கு புரிய வைக்கவே பார்வதி தேவி ஒரு பெண் உருவில் அங்கு வந்து அப்படி ஒரு நாடகத்தை நடத்தினார் என்பதாக பண்டிதர்கள் நம்பினார்கள். அதன் பிறகே ஆதி சங்கரர் ஸ்ரீ சக்கரத்தை வடிவமைத்து சௌந்தர்யலஹரி ஸ்லோகத்தை இயற்றினாராம்.

இந்தக் கதை, பீஹார் மாநிலத்தில் உள்ள மகிஷ்மதி நகரில் மந்தன மிஸ்ரா மற்றும் அவரது மனைவி

குமாரி மிஸ்ராவுடன் ஆதி சங்கரர் நடத்திய விவாதத்தைப் போன்றது. அந்தப் போட்டியில் அவர்கள் இருவரையும் ஆதி சங்கரர் தோற்கடித்தார் என்றாலும், காஷ்மீர் பெண்மணியுடன் நடந்த விவாதத்தில் அவரால் வெற்றி பெற முடியவில்லை.



ஸ்ரீ சக்கர வழிபாடு : அதன் மகிமைகள்

யந்திரங்களில் மிகவும் உயர்ந்ததும், சாமான்யங்களினால் எளிதில் வணங்கப்படக் கூடியதுமானது யந்திரம் ஸ்ரீ சக்கரம் ஆகும். ஸ்ரீ சக்கரம் மற்ற யந்திரங்களை போன்றது அல்ல, அது எந்த கெடுதல் விளைவுகளையும் ஏற்படுத்துவது இல்லை. ஸ்ரீ சக்கரம் வீட்டில் வைத்தால் நல்லது. யந்திரங்களில் மிகவும் உயர்ந்ததும், சாமான்யங்களினால் எளிதில் வணங்கப்படக் கூடியதுமான யந்திரம் ஸ்ரீ சக்ரம் எனப்படும் ஸ்ரீ சக்ர பூர்ண மகாமேரு ஆகும். சில குறிப்பிட்ட காரண காரியங்களுக்காக அதையே ஸ்ரீ வித்யா பூஜை என்ற

பெயரில் விஸ்தாரமாக செய்வதும் உண்டு. ஸ்ரீ சக்கரம் என்பது ஆதி பராசக்தியின் சூட்சும ரூபமாகும். ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் உள்ள பிந்துவில் அவள் சூட்ஷம வடிவில், ஸ்தூல ரூபமாக அமர்ந்திருக்க, அவளை காரண வடிவத்தினால் அதாவது மந்திர ஒலியினால் பூஜிக்க வேண்டும். பொதுவாக ஸ்ரீ சக்கரம் என்பது பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் இணைந்து அமர்ந்து உள்ள இடமாகும்.

அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த பராசக்தியை உபாசித்தோ அல்லது முறையான பூஜை செய்தோ பராசக்தியின் அருளை பெறுகின்றவர்கள் வெகு காலம் ஜீவித்து இருப்பார்கள். கல்பத்துக்கு முடிவு ஏற்பட்டாலும், அவர்களுடைய ஆத்மாவுக்கு (ஜீவனுக்கு) முடிவில்லை. கல்ப ஜீவிகள் என்றே அவர்களை கூற வேண்டும். உருவமுள்ள எந்த பொருளுக்கும் அழிவு உண்டு. ஆனால் உபாசகர்கள் சரீரம் என்ற உருவத்துடன் இருந்தவாறு பராசக்தியை ஸ்ரீ சக்கர உபாசனை செய்து அவளது அருளை பரிபூரணமாக பெற்று விட்டால், அவர்களுடைய சரீரம் அழியலாம், ஆனால் அவர்கள் ஆத்மாவுக்கு அழிவில்லை என்பதே ஸ்ரீ சக்கர உபாசனையின் மகிமை ஆகும் என்பது ஐதீகம். ஸ்ரீ சக்கர தேவியின் பெருமையையும், மேன்மையையும் கூறும் லலிதா சஹஸ்ரநாமத்தின் ஒவ்வொரு ஸ்லோகத்தையும் அனு தினமும் படித்து, பராசக்தியை பூஜிக்கும் சாமானியர்களுக்கு சர்வ சௌபாக்கியம் கிட்டும் என்பது உண்மை ஆகும். அவர்களது வீடுகளில் உள்ள துர் தேவதைகள் ஓடி ஒளிந்து கொள்ளும், வியாதிகள் விலகும், சத்ருக்கள் அழிவார்கள், மன அமைதி கிடைக்கும். ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான யந்திரமோ, ஸ்ரீ வித்யாவுக்கு நிகரான மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகை எனும் பராசக்திக்கு மேலான தெய்வமோ இல்லை என்பது அனைத்து மகான்களாலும்,

பண்டிதர்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து ஆகும்.

ஸ்ரீ மஹா மேரு

பலருக்கும் ஒரு சந்தேகம் உண்டு. ஸ்ரீ சக்கரமும், ஸ்ரீ மஹா மேரு எனப்படும் யந்திரமும் ஒன்றே தானா இல்லை வெவ்வேறானவையா என்பதே அந்த சந்தேகம். உண்மை என்ன என்றால் இரண்டுமே ஒன்றுதான். ஸ்ரீ மஹா மேருவின் சமதளப்படுத்தப்பட்ட வடிவமே ஸ்ரீ சக்கரம் என்பதாகும். ஸ்ரீ சக்கர யந்திரத்தை கோடுகளாக வரைந்தால் அது ஸ்ரீ சக்ரம் எனவும் அதற்கு மலை போன்ற அடுக்கடுக்கான நிலையிலான முப்பரிமாண உருவ வடிவம் கொடுத்தால் அது ஸ்ரீ மஹா மேரு எனவும் கூறப்படும். பார்வைக்கு சாதாரணக் கோடுகளும் முக்கோணங்களுமாகத் தெரியும் ஸ்ரீ சக்கரம் ஆதி பராசக்தியின் இருப்பிடம் மட்டுமல்ல, சர்வ சக்தியும் இதில் அடக்கம் என்பதே இதன் மகிமை.

பண்டாஸூர வதத்திற்குப் பிறகு ஸ்ரீபுரம் என்னும் நகரத்தில் அவளுடைய அரண்மனையில் எல்லா தேவதைகளும் சூழ்ந்திருக்க தன்னுடைய கணவர்

காமேஸ்வரருடன் லலிதாம்பிகை எனும் பராசக்தி வீற்று இருக்கையில் ஒரு சிறிய விஷயத்திற்காக உக்கிரம் அடைந்த தேவியின் முகத்தில் இருந்து வாசினிகள் என்ற தேவதைகள் வெளி வந்து அவள் முன் நின்றபோது அந்த தேவதைகளை நோக்கி தான் யார், தன் சக்தி எப்படிப்பட்டது என்பதை அனைவருக்கும் கூறுமாறு தேவி கூற, அதன்படி வசினி உட்பட எட்டு வாக்கு தேவதைகள் மிக ரகசியமான மந்த்ரமாக ஆயிரம் நாமங்களைக் கொண்ட ‘லலிதா சகஸ்ரநாமம்’ ஸ்லோகத்தினை உருவாக்கினர். பராசக்தி உக்கிரத்தைத் தணிக்க பரமேஸ்வரர் அந்த உக்கிரக் கலையையே ஸ்ரீ சக்கரமாக ஸ்தாபித்து, ஆகர்ஷித்து பராசக்திக்கு எதிரில் வைத்து அவளை சாந்தப்படுத்த, பராசக்தி லலிதாம்பிகையாக உருமாறி உலகிற்கு காட்சி தந்தாள். சிவபெருமானால் சாந்தம் அடைந்த தேவி அந்த ஸ்லோகத்தை முறைப்படி கூறி தன்னை துதிப்பவர்களுக்கு, அந்த ஸ்லோகமே தன்னிடம் வந்தடையும் பாதையாக அமையட்டும் எனக் கூறி 'என் கட்டளைக்கு ஏற்பவே இந்த தோத்திரத்தை வாக்கு தேவிகள் செய்துள்ளார்கள். என்னுடைய அருளை வேண்டி இதை படிப்பதுடன் பிற பக்தர்களிடமும் பரவும்படி செய்யுங்கள். பூஜையும் ஜபமும் செய்தாலும் செய்யாவிட்டாலும் எனது அருளை பெறுவதற்கு இந்த சஹஸ்ரநாமத்தை பாராயணம் செய்தால் போதுமானது' என்பதாக கூறினாளாம். அதனால்தான் அம்பிகையின் பேரருளை பெற வேண்டும் என என்று யாரெல்லாம் விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் லலிதா சஹஸ்ரநாமத்தைக் கூற வேண்டும் என்பதாக கூறப்படுகின்றது.

தேவி லலிதாம்பிகையை போற்றி வாக்கு தேவதைகள் துதித்தவைகளே லலிதா சஹஸ்ரநாமம் ஆயிற்று. ஸ்ரீ சக்கரத்தை வடிவமைத்தால் மட்டும்

போதுமா? அதற்குள் உள்ள தேவி யார், அவளது மேன்மை என்ன என்பதை பூவுலகிற்கு யார் மூலம் தெரியப்படுத்துவது என்ற நிலை எழுந்தபோது அதற்கு ஹயக்ரீவரும், அகஸ்திய முனிவரும் தேவைப்பட்டார்கள். லலிதா சஹஸ்ரநாமத்தை அகஸ்திய முனிவருக்கு மகாவிஷ்ணுவின் அவதாரமான ஹயக்ரீவர் ஒரு சம்பாஷணை வடிவில் ரகசியமாக உபதேசித்தார் என்பதாக திருமயிச்சூர் ஆலய வரலாற்றில் கூறப்பட்டு உள்ளது. ஹயக்கிரீவர் அகஸ்திய முனிவரிடம் லலிதா மகா திரிபுர சுந்தரியின் மகிமைகளையும் விளையாடல்களையும் கூறினார். ஸ்ரீ சக்கரத்தில் அமர்ந்து உள்ள அம்பிகையின் இருப்பிடமான ஸ்ரீபுரத்தின் மேன்மையை விவரித்தார், அம்பிகையை உச்சரிக்கும் மந்திரங்களின் மகிமையை கூறினார், அந்த ஸ்ரீ சக்கரத்தில் உள்ள தெய்வ, தேவதைகளைப் பற்றி கூறினார். அந்த சம்பாஷணையில் அகஸ்திய முனிவர் ஹயக்கிரீவரிடம் மீண்டும் மீண்டும் லலிதாம்பிகையின் ஆயிரம் நாமங்களை குறித்த மேன்மையை கேட்டு அறிந்து கொண்டார். ஞானத்தின் அடையாளமான ஹயக்ரீவர் நேரடியாக அகஸ்திய முனிவருக்கே லலிதா சஹஸ்ரநாமத்தை உபதேசம் செய்திருக்கிறார் என்பதில் இருந்தே அது எத்தனை மகிமையான ஸ்லோகம் என்பது விளங்கும். லலிதா சஹஸ்ரநாமம் என்பது என்ன என்றால் அம்பிகையின் ஆயிரம் நாமங்களைக் கொண்ட ஸ்லோகங்கள். 'சஹஸ்ர' என்றால் ஆயிரம் மற்றும் நாமம்' என்றால் பெயர்கள் என்பதினால் லலிதாம்பிகையின் ஆயிரம் பெயர்களை சொல்லி அர்ச்சனை செய்வதை லலிதா சகஸ்ரநாம பூஜை என்கின்றார்கள்.

சகஸ்ர நாமாக்களில் உயர்ந்தது வாக் தேவிகளால் இயற்றப்பட்ட லலிதா ஸகஸ்ரநாமமாகும். இதில் உள்ள வார்த்தைகள் சத்தியமானவை, மந்திர

சக்தியுடையவை. இது எல்லா நோய்களையும் விலக்கும், செல்வத்தையும் நீண்ட ஆயுளும் தரும். ஸ்ரீ வித்யா உபாசனையால் சாதகனுக்கு ஞானம், எதையும் வெல்லும் ஆற்றல், வாக்கு வல்லமை போன்றவை கிட்டி, முக்தியும் கிடைக்கும். பதினெட்டு புராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட புராணத்தில் லலிதாபாக்கியத்தின் 36வது அத்தியாயத்தில் தேவியின் மேன்மையைக் கூறும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் உள்ளது. லலிதா சகஸ்ரநாமத்தில் ஒருமுறை கூறப்பட்ட நாமம் மற்றொரு முறை உபயோகப்படுத்தப் பட்டிருக்காது. அதில் தேவியின் ஸ்வரூபம், அவள் தோன்றிய வரலாறு, அவளை வழிபடத்தக்க யந்திரம், மந்திர பரிவார தேவதைகளின் நிலை, வழிபாட்டு முறை, அவள் அருளால் பெறக் கூடிய மேன்மைகள் ஆகியவைகளை பரமேஸ்வரியின் வாயில் இருந்து வெளிவந்த வாக் தேவதைகளே கூறுவதால் லலிதா சஹஸ்ரநாமம் வேதத்திற்குச் சமமாகக் கூறப்படுகிறது.

பொதுவாக சம தளத்தில் உள்ள யந்திரமான ஸ்ரீ சக்கரத்தை வீடுகளில் வைத்து சுலோகம் சொல்லி பூஜிக்கலாம், ஸ்ரீ சக்கரத்தை முறையாக தாமிரத் தகட்டில் வரைந்து கோணங்கள் தவறாமல் கோடுகளால் பூர்த்தி செய்து, விதி முறைப்படி வழிபடுவது அவசியம். ஆனால் மகாமேரு உருவத்தில் உள்ள ஸ்ரீ சக்கரத்தை குருவின் உபதேசம் இல்லாமல் வீடுகளில் பூஜை செய்யக் கூடாது. அதனால்தான் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ள ஸ்ரீ சக்கரம் பெரும்பாலும் மேரு சக்கர உருவில் இருக்கும். ஸ்ரீ சக்ரம், மேரு மற்றும் யந்திரங்களை முறைப்படி உபதேசம் பெற்றுக் கொண்டு அதை வீட்டில் வைத்து தியானமோ, ஜெபமோ செய்வதாக இருந்தால் மட்டுமே வீட்டில் வைக்க வேண்டும். சில எந்திரங்களை நாம் வீட்டில் வைத்துவிட்டு

ஏனோதானோ என்று இருந்தால் அவை விபரீதமான பலன்களை தரும்.
ஸ்ரீ சக்கரத்தை சுற்றி அறுபத்தி நான்கு (64) கோடி தேவதைகள் வீற்று இருக்க, அந்த ஸ்ரீ சக்கரத்தில் உள்ளேயோ நூற்று பதிமூன்று தேவதைகள் வாசம் செய்கிறார்கள், ஆராதிக்கப்படுகின்றார்கள். அன்னை லலிதாம்பிகை எனும் ஜகன்மாதா தனது நாயகனான சிவபெருமானுடன் ஒன்றிணைந்து அருள் பாலிக்கும் இடம் நடுவில் உள்ள பிந்து எனப்படும் ஸ்ரீபுரம் ஆகும். அந்த பரமேஸ்வரியே ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் ஸ்ரீ சக்கர தேவியாக உள்ளாள் என்பதினால்தான் ஸ்ரீ சக்கர பூஜையை செய்யும்போது பரமேஸ்வரியின் அனுகிரகத்தை பெற நடுவில் உள்ள பிந்துவில்தான் பூக்களையும், குங்குமத்தையும் போட்டு பூஜிக்க வேண்டும் என்பார்கள்.
அம்ருத கடலின் நடுவில் கல்ப விருக்ஷங்களினால் சூழப்பட்ட மணித்வீபம் என்ற தீவில் சிந்தாமணி ரத்தினத்தால் அமைக்கப்பட்டு உள்ள தேவியின் வாசஸ்தலம் ஸ்ரீ சக்கரத்தின் பிந்து ஸ்தானம் போன்ற இடம் ஆகும். சிந்தாமணி எனும் ரத்தினம் சாதாரணமானது அல்ல. அது தன் அருகில் வந்தவர்களுக்கு அளவற்ற பொருளை கொடுப்பதும் அல்லாமல் ஒவ்வொரு தினமும் அளவற்ற ரத்தினத்தை உற்பத்தி செய்து ஸ்வர்க லோகத்தை நிரம்பி விடும் தன்மையைக் கொண்டது என்பதினால், அந்த சிந்தாமணி மீது அமர்ந்துள்ள தேவியை துதிக்கும் பக்தர்களுக்கு அளவற்ற பாக்கியத்தை கொடுப்பாள் என்பது உண்மை.
ஸ்ரீ சக்கரத்தை தொடர்ந்து வழிபட்டு வருகையில், இறுதியில் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றிணைவதை சாத்தியமாக்குகிறது. அதாவது தனி நபருடைய ஆத்மாவானது இறைவனுடன் ஒன்றிணைந்து விடும் நிலைக்கு அழைத்துச் சென்று

பிறப்பின்மை எனும் நிலையை தந்து விடும். இந்த இணைப்பு முழுமையடைவதற்குத் தேவையான ஆன்மீக சக்தியை சாதகர்கள் பெறுவதற்கும், சாதகர் தூய்மையடைந்து பரமாத்மனுடன் (தெய்வீக நிலை) ஐக்கியமாக முழுத் தகுதியைப் பெறுவதற்கும், சாதகர்களுக்கு வழிகாட்டி அருள் புரிவதில், யோகினிகள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஒரு குரு மூலமாக உபதேசம் பெற்று, ஸ்ரீ சக்கர பூஜையைக் செய்பவர்கள் இந்த உலகில் மகா பாக்யங்களைப் பெற முடியும் என்கிறது ஸ்ரீ வித்யா. அத்தகைய மகத்துவம் பெற ஸ்ரீ சக்கரத்தில் என்னென்ன சக்திகள் அடங்கி உள்ளன?

ஸ்ரீ சக்கரம் என்பது ஒன்பது ஆவரணம் என்னும் கோட்டை மதில்களை கொண்டது. அந்த ஒன்பது ஆவரணங்களும் ஒன்றுக்குள் ஒன்றாக அமைந்துள்ளன. ஆவரணம் என்பதை தடுப்பு அல்லது சுவர் என்று கூறலாம். அரசர்கள் அரண்மனைகளைச் சுற்றி கோட்டை மதில்களை அமைத்து உள்ளதை போல தேவியின் வாசஸ்தலமான ஸ்ரீ சக்ரபுரம் என்னும் அரண்மனையை சுற்றி ஒன்பது கோட்டைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு கோட்டையையும் யுத்த வீரர்கள் காப்பது போல அன்னையின் வாசஸ்தலத்தை சுற்றி பல தோற்றங்களைக் கொண்ட 64 கோடிக்கும் மேற்பட்ட தேவதைகள், பெண் யோகினிகள் மற்றும் பல தெய்வங்கள் அமர்ந்து உள்ளார்கள். முதல் சுற்றில் காணப்படும் சித்தி பெற்ற ஆவரண தேவதைகளில் எட்டு (8) ஆவரண தேவதைகளான அனிமா, மஹிமா, கரிமா, பிராப்தி, பிராகாம்யம், வசித்வம், ஈஸித்வம் எனும் எட்டு தேவதைகள் முக்கியமானவர்கள். அவளது சக்தியில் இருந்தே வெளியானவர்கள். ஸ்ரீ சக்கரத்தின் ஒவ்வொரு சுற்றிலும் அதாவது ஒவ்வொரு ஆவரணத்துக்குள்ளும் ஒரு முத்ர தேவதை, ஆவரண தேவதைகள், யோகினி தேவதைகள், பரிவார

தேவதைகள், மற்றும் சித்தி தேவதைகள் உள்ளனர். ஸ்ரீ சக்கரத்தில் உள்ள யோகினிகள் என்பவர்கள் யார்? அவர்கள் அனைவருமே பராசக்தியின் பல்வேறு அவதாரங்களால் படைக்கப்பட்டவர்கள். அதில் உள்ள மாத்ரு தேவதைகள் பராசக்தியின் இன்னொரு அவதாரமான துர்கா தேவியினால் அவளுடைய பல்வேறு அவதாரங்களில் யுத்தங்களில் அவளுக்கு உதவுவதற்காக படைக்கப்பட்டவர்கள். அவர்களில் பலரும் லலிதாம்பிகை தேவியின் பண்டாஸூர யுத்தத்தில் பங்கேற்று உள்ளார்கள். அவர்கள் சாந்தமான மற்றும் உக்ரஹ குணங்களைக் கொண்ட பெண் தேவதைகள் எனப்படும் மஹா வித்யாவின் தேவதைகளாக இருக்கின்றார்கள். அவர்களின் முகத்தில் நீட்டிக் கொண்டுள்ள பற்களோ, பல கண்கள் போன்றவையும் இல்லை. இறக்கைகள் அல்லது அசாதாரண உடல் அமைப்புக்கள் இல்லை. மாறாக அவை சாந்தமாகவே காட்சி அளிக்கின்றன. யோகினிகள் என்பவர்கள் பெண் கடவுட்களில் இருந்து வெளிப்பட்டவர்கள். அவர்களும் சாந்தமான மற்றும் உக்ரஹ குணங்களைக் கொண்டிராத பெண் தேவதைகள். மகா வித்யாவின் யோக மற்றும் தந்திரக் கலை பயிலும் தேவி உபாசகர்கள் யோக சக்தியை அடைய இந்த தேவதைகளையே ஆராதிக்கின்றார்கள். ஸ்ரீ சக்கரத்தின் மேன்மையை இதற்கும் மேல் எப்படி கூற இயலும்?

ஸ்ரீ சக்கர அமைப்பு

ஸ்ரீ சக்கரத்தின் அமைப்பு என்ன? ஸ்ரீ சக்கரம் பிரபஞ்சத்தை எடுத்துக் காட்டும் வடிவியல் படமாகும். இது ஆண் மற்றும் பெண் தெய்வங்களின்- சிவன் மற்றும் சக்தியின்- ஒன்றிணைப்பை குறிக்கின்றது. இதில் ஆவரணங்கள் எனப்படும் பல அரண்கள் (கோட்டைகள்) உள்ளன. ஒவ்வொரு கோட்டையும் ஒவ்வொரு அமைப்பைக் கொண்டது. மைய பகுதியில் உள்ள பிந்துவை சுற்றி நாற்பத்தி மூன்று (43) முக்கோணங்கள் மற்றும் இருபத்தி நான்கு (24) தாமரை இதழ் போன்ற அரண்கள் உள்ளன. அவற்றை சுற்றி மூன்று மதில்களை போன்ற வட்ட வடிவமும், நான்கு வாயில்களைக் கொண்ட சதுரங்க கட்டங்களும் காணப்படும்.

அந்த பிந்துவின் மைய பகுதியில் இருந்து அதன் மீது நேரான பாதையில் மேல் நோக்கிய நிலையில் காணப்படும் நான்கு முக்கோணங்கள் சிவ கோணங்கள். அதாவது ஆண் சக்தியைக் குறிக்கும் கோணங்கள். அதை போலவேதான் கீழ் நோக்கிய நிலையில் காணப்படும் ஐந்து முக்கோணங்களை சக்தி கோணங்கள் என்பதாக கூறுகின்றார்கள். பிந்துவை சுற்றி உள்ள அந்த ஒன்பது

முக்கோணங்கள் சிவ சக்தியைக் குறிப்பதாக கூறுகின்றார்கள்.

ஸ்ரீ சக்கரம் எனப்படும் மஹா மேருவை மேரு பிரஸ்தாரம், கைலாச பிரஸ்தாரம் மற்றும் பூ பிரஸ்தாரம் என்ற மூன்று பிரிவுகளில் கூறுகின்றார்கள். ஒவ்வொரு ஆவரணத்திலுள்ள, ஆவரணத்தை ஆட்சி செய்வதற்காக, சக்ரேஸ்வரி என்று அழைக்கப்படும் ஒரு அதி தேவதை இருக்கின்றாள். அவளுடன் இணைந்தே அங்குள்ள பல்வேறு தேவதைகளும் யோகினிகளும் அன்னை லலிதாம்பிகையை அடையும் வழியில் பாதுகாவலர்களாக உள்ளார்கள். மந்திர உச்சாடனைகள் செய்து அவர்களை திருப்திபடுத்திய பின்னரே, சாதகர்களால் ஒவ்வொரு ஆவாரணத்தையும் கடந்து சென்று மைய பகுதியான ஸ்ரீ புறத்தின் வாயிலை அடைய முடியும். ஸ்ரீ சக்கரத்தின் முப்பரிமாண அமைப்பு மேரு பிரஸ்தரம் என்று அழைக்கப்படுகிறது. பூமியில் ஒரு தட்டையான மேற்பரப்பில் வரையப்படும் ஸ்ரீ சக்கரம் பூ-பிரஸ்தரம் என்று அழைக்கப்படுகிறது. கைலாச பிரஸ்தரம் என்பது மேரு யந்திரத்தின் மிக உயர்ந்த நிலை அல்லது தளத்தைக் குறிக்கிறது.



ஸ்ரீ சக்கரத்தின் நுழை வாயிலான சதுர வடிவிலான கோட்டை **முதலாவது ஆவரணம்** எனப்படும். அதை 'த்ரைலோக்ய மோகன சக்கரம்' அல்லது ஸ்ரீபுரம் என்ற பெயரைக் கொண்டது. த்ரைலோக்ய மோகனம் என்றால் மூவுலகங்களையும் மயக்குவது என்று பொருள். இதில் உள்ள ஒவ்வொரு கோடும் ரேகை எனப்படும். முதல் ரேகையில் மஹா சித்தி தேவதைகளான அனிமா, மஹிமா, லஹிமா, இசித்வா, வசித்தவ, பிரகாம்யா, புத்தி சித்தி, இச்சா சித்தி, சர்வகாமா சித்தி மற்றும் பிராப்தி சித்திகள் இருக்க இரண்டாம் ரேகையில் பிராஹ்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாகேந்திரி, சாமுண்டி, மற்றும் மகாலட்சுமி போன்ற எட்டு அஷ்ட மாதாக்களும் இருக்க, மூன்றாம் ரேகையில் சர்வ சம்ஸ்கோபினி, சர்வ வித்ராவினி, சர்வ த்ரவினி, சர்வ கர்ஷினி, சர்வோன் மாதினி, சர்வ மஹாங்குசா, சர்வ கேசரி, சர்வ பீஜ, சர்வ யோனி மற்றும் சர்வத் ரிகண்டா என்ற பத்து முத்ரா தேவதைகளும் காவலில் இருக்க, இங்கு மொத்தம் இருபத்தி எட்டு (28) தேவதைகள் உள்ளார்கள். முதல் ஆவரணத்தை வணங்குபவர்களுக்கு எல்லா செல்வங்களும் நிலைக்கும். தடைகள் நீங்கும். புத்தி பலம் கூடும், எந்த சக்தியாலும் இடையூறு ஏற்படாது, நினைவாற்றல் பெருகும்.



அதே ஆவரணத்தின் **அடுத்து உள்ள** வட்ட வடிவிலான ஆவாரணத்தில் இந்திரன், அக்னி, எமதர்மன், நிருதிதேவன், வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டு திக்கின் அதிபதிகள் உள்ளார்கள். அந்த வட்ட வடிவிலான ஆவரணத்தை 'த்ரிவாலயம் அல்லது மேகலை' என்பதாக கூறுகின்றார்கள்.



பதினாறு (16) தாமரை போன்ற இதழ்களைக் கொண்டது **இரண்டாவது ஆவரணம்** சக்கரம் ஆகும். இதன் பெயர் 'ஸர்வஷா பரிபூரக அல்லது பூராக சக்ரா' என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆவரணத்தில் உள்ள தாமரை இதழ்கள் ஒவ்வொன்றும் பதினாறு ஆகர்ஷண சக்தி யோகினிகள் காவலில் உள்ளனர். அவர்களில் முக்கியமான சில சக்தி யோகினிகள் காம கர்ஷினி, புத்ய கர்ஷினி, அஹங்கார கர்ஷிணி, சப்த கர்ஷினி, ஸ்பர்ஷ கர்ஷினி, ரூப கர்ஷிணி, ரஸ கர்ஷினி, காந்த கர்ஷிணி, சித்த கர்ஷினி, தைர்ய கர்ஷினி, சம்யுக்த கர்ஷினி, நாம கர்ஷினி, பீஜ கர்ஷினி, ஆத்ம தர்ஷினி, அம்ருத தர்ஷினி மற்றும் �்ரீரா கர்ஷினி என்பவர்கள் ஆகும். இந்த சக்கரத்தை வழிபடுவதன் மூலம் அனைத்து விருப்பங்களும், நிறைவேறும். இங்குள்ள பதினாறு யோகினிகளும் அடுத்த ஆவரணத்தை அடையத் துடிக்கும் சாதகர்களின் மன அழுக்கை

நீக்குகின்றனர் என்பது ஐதீகம். ஸர்வஷா பரிபூரக சக்ரம் என்றால் அனைத்து நம்பிக்கைகளும் எண்ணங்களும் நிறைவேறுதல் என்று பொருள்.



மூன்றாவது ஆவரணத்தில் எட்டு தாமரை இதழ்கள் உள்ளன. இந்த ஆவரணம் ‘சர்வ சம்ஷோபன சக்ரா’ என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு இதழ்களிலும் எட்டு உக்ர தேவதைகள் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் வசுக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அனங்க குசுமா, அனங்க மேகலா, அனங்க மதன, அனங்க மதனதுரா, அனங்க ரேகா, அனங்கவேகினி, அனங்க குசா மற்றும் அனங்கா மாலினி என்ற பெயர்களைக் கொண்ட எட்டு மகா உக்ர தேவதைகள் ஆவார்கள். இந்த சக்கரத்தை வழிபடுவதின் மூலம் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபடலாம்.



‘சர்வ ஸௌபாக்ய தாயகம்’ எனப்படும் **நான்காவது ஆவரணம்** பதினான்கு (14) சிறிய முக்கோணங்களால் சூழப்பட்டுள்ளது. அவை அனைத்தும் யோகினிகள் மற்றும் சக்தி தேவிகளின் காவலில் உள்ளன. அவர்கள் நாடி தேவதைகள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். பதினான்கு நாடி தேவதைகள் சர்வ சங்கோபினி, சர்வ வித்ராவினி, சர்வ கர்ஷினி, சர்வ கிளத்தினி, சர்வ சம்மோஹினி, சர்வ ஸ்தம்பினி, சர்வ ஜ்ரும்பினி, சர்வ சங்கரி, சர்வ ரஞ்சனி, சர்வோன் மதினி, சர்வ த்வந்த்வக்ஷயங்கரி. சர்வ மந்திரமய், சர்வ சம்பத் பூர்ணி மற்றும் சர்வ வஷாங்கரி என்பவர்கள் ஆவார்கள்.



ஐந்தாவது ஆவரணத்தின் பெயர் ‘சர்வார்த்த சாதக ஆவரணம்’ என்பதாகும். இது மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் எதிர் கொள்ளும் பத்து முக்கோணங்களைக் கொண்டுள்ளது. இதில் பத்து யோகினிகள் பத்து முக்கோண வாயிலை காவல் காத்தபடி உள்ளார்கள். அவர்களது பெயர்கள் சித்தி ப்ரதா, சர்வ ஸம்பத்ப்ரதா, சர்வ பிரியங்காரி, சர்வ மங்களகாரிணி, சர்வ காம ப்ரதா, சர்வ துக்க விமோசனி, சர்வ ம்ருத்யுப்ரசாமணி, சர்வ விக்னனிவாரிணி, சர்வங்க சுந்தரி, சர்வ சௌபாக்யதாயினி என்பன. மையத்தில் இருந்து கீழ்

நோக்கிய நிலையிலான ஐந்து முக்கோணங்கள் சரஸ்வதி, லக்ஷ்மி, கௌரி, மகேஸ்வரி மற்றும் மனோன்மணி போன்ற தேவிகளையும், மேல் நோக்கிய நான்கு முக்கோணங்களும் சிவபெருமானின் நான்கு முகங்களான தத்புருஷா, சத்யோஜாதா, அகோர, வாம தேவம் மற்றும் மறைந்துள்ள ஈசான சக்தியையும் குறிக்கின்றன. சிவபெருமானின் இந்த நான்கு முகங்களைத் தியானிப்பதாலோ அல்லது வழிபடுவதாலோ, வாழ்க்கையில் அனைத்து இன்பங்களையும் அடையலாம், மறுபிறவி இல்லாத முக்தி கிடைக்கும் என்பது பிரம்மாவின் வாக்குறுதியாகும்.



ஆறாவது ஆவரணமும் பத்து முக்கோணங்களைக் கொண்டது. இந்த ஆவரணம் ‘சர்வ ரக்ஷகரா’ என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆவரணத்தில் பத்து ஆவரண தேவதைகள் வசிக்கிறார்கள். இங்குள்ள சக்தி தெய்வங்கள் சர்வக்னி, சர்வ சக்தி, சர்வைஸ்த்வர்ய ப்ரதா, சர்வ ஞானமயீ, சர்வவ்யதி வினாஷினி, சர்வ தாரா ஸ்வரூப, சர்வ பாபஹாரா, சர்வ நந்தமயி, சர்வரக்ஷ ஸ்வரூபிணி மற்றும்

சர்வேப்சிதார்த்த பலாதா போன்றவர்கள் ஆவார்கள்.



ஏழாவது ஆவரணம் எட்டு முக்கோணங்களைக் கொண்ட ‘சர்வ ரோஹஹரம்’ எனப்படும். வாசினி, கௌமாரி, மோகினி, விமலா, அருணா, ஜைனி, சர்வேஸ்வரி, கௌலினி ஆகிய தேவதைகள் காவலில் உள்ளார்கள்.



எட்டாவது ஆவரணம் ‘சர்வ சித்தி பிரத சக்ரா’ என்று அழைக்கப்படுகிறது. இதில் ஏழு அஸ்திர தேவதைகள் அல்லது யோகினிகள் காவலாக நிற்கிறார்கள். அவர்கள் போர் தேவதைகள். அவர்கள் ஜாம்பனாக்யா, மோகனாக்யா, வஷ்யக்யா,

ஸ்தம்பனாக்ய அனுக்ஷா, மகேஸ்வரி, வைஷ்ணவி, பிராமி என்று அழைக்கப்படுகிறார்கள். ஒரு மனிதனை அழிவின் விளிம்பிற்குத் தள்ளும் மாயை இந்தச் சக்கரத்தை வழிபடுவதன் மூலம் எரிந்து சாம்பலாகிறது.



ஒன்பதாவது ஆவரண சக்கரத்தை பிந்து என்று அழைப்பார்கள். அதற்குப் பெயர் பிந்து ஸ்தானம் என்பதாகும். இந்த ஆவரணத்தை 'சர்வானந்தமய சக்ரா' என்றும் அழைப்பர். பராசக்தி மற்றும் பரமேஸ்வரர் இருவரும் சிவ-காமேஸ்வரி, சிவ-காமேஸ்வரர் என்ற பெயரில் இந்த பிந்துவில் வசிக்கிறார்கள். அவர்களை பதினைந்து திதி தேவதைகள் பாதுகாத்தபடி உள்ளார்கள். திதி தேவதைகள் என்பவர்கள் காமேஸ்வரி நித்யா, பகமாலினி நித்யா, நித்யக்லின்னா நித்யா, பேருண்டா நித்யா, வந்நிவாசினி நித்யா, மஹாவஜ்ரேஸ்வரி, சிவதூதி நித்யா, த்வரிதா நித்யா, குலசுந்தரி நித்யா, நித்யா நித்யா, நீலபதாகா நித்யா, விஜயா நித்யா, ஸர்வமங்களா நித்யா, ஜ்வாலாமாலினி நித்யா மற்றும் சித்ராதேவி நித்யா என்பவர்கள் ஆவார்கள்.

ஒவ்வொரு பௌர்ணமியும் துவங்கி, அமாவாசை -, அமாவாசை முடிந்து மீண்டும் பௌர்ணமி துவங்கும் ஒவ்வொரு நாளும் (ஒவ்வொரு திதிகளிலும்) முப்பது நாட்களும் ஒவ்வொரு திதி தேவதைகள் காவலில் உள்ளார்கள். அவற்றின் விவரம்:

1. பிரதமை – ஸ்ரீ காமேஸ்வரி நித்யா
2. துவதியை –பகமாலினி நித்யா
3. திரிதியை – நித்யக்லின்னா நித்யா
4. சதுர்த்தி – பேருண்டா நித்யா
5. பஞ்சமி – வந்நிவாசினி நித்யா
6. ஷஷ்டி – மஹாவஜ்ரேஸ்வரி நித்யா
7. ஸப்தமி – சிவதூதி நித்யா
8. அஷ்டமி – த்வரிதா நித்யா
9. நவமி – குலசுந்தரி நித்யா
10. தசமி – நித்ய நித்யா
11. ஏகாதசி – நீலபதாகா நித்யா
12. துவாதசி – விஜயா நித்யா
13. திரயோதசி – ஸர்வமங்களா நித்யா
14. சதுர்த்தசி – ஜ்வாலாமாலினி நித்யா
15. பவுர்ணமி – சித்ராதேவி நித்யா

எச்சரிக்கை

இதில் காணப்படும் யந்திர படங்களை தன் இச்சையாக வரைந்து வைத்துக் கொண்டு, அதை ஆராதிக்கக் கூடாது. ஒரு முறையான பயிற்சி பெற்ற குருவின் உபதேசம் பெறாமல் யந்திர பூஜை செய்வது ஆபத்தான பின் விளைவுகளை ஏற்படுத்தும்

ரோக நிவாரணி ஸ்லோகங்கள் சௌந்தர்யலஹரியில் காணப்படுகின்றன. சௌந்தர்யலஹரி முழுவதுமே மந்திர மந்திர சாஸ்திர அடிப்படையிலானது என்கின்றார்கள். இதில் உள்ள ஒவ்வொரு ஸ்லோகத்தையும் மந்திரமாக நினைத்து ஜபித்தால் பலன்கள் கிடைக்கும். இந்த ஸ்லோகங்களுக்கான தனி-தனி சக்கரங்கள், தியான அல்லது ஆராதனை முறைகளை குரு முலமாக உபதேசம் பெற்றே செய்ய வேண்டும். அதே நேரத்தில் இந்த ஸ்லோகங்களை தெய்வ சன்னதிகளிலோ அல்லது வீடுகளில் பூஜை அறைகளிலோ ஆராதனை முறையில் இல்லாமல் படிப்பதில் எந்த கட்டுப்பாடும் கிடையாது. நம்பிக்கையோடு படித்தால் தெய்வ அருள் கண்டிப்பாக கிடைக்கும்.

ஆனந்தலஹரி (1-40)

-1-

शिवः शक्त्या युक्तो यदि भवति शक्तः प्रभवितुं
न चेदेवं देवो न खलु कुशलः स्पन्दितुमपि ।
अतस्त्वामाराध्यां हरिहरविरिञ्चादिभिरपि
प्रणन्तुं स्तोतुं वा कथमकृतपुण्यः प्रभवति ॥

ஶிவ: ஶக்த்யா யுக்தோ யதி பவதி ஶக்த: ப்ரபவிதும்
ந சேதேவம் தேவோ ந கலு குஶல: ஸ்பந்திதுமபி ।
அதஸ்த்வாமாராத்யாம் ஹரிஹரவிரிஞ்சாதிபிரபி
ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருதபுண்ய: ப்ரபவதி॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 12 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் சகல காரியமும் சித்தி ஆகுமாம்



ஹே பராசக்தி,

பரசிவன் உன்னோடு இணைந்து இருக்கும்போது மட்டுமே, பரமசிவன் எனும் ரூபத்தில் இருந்து வெளி வந்த, மூன்று ரூபங்களில் தோன்றிய அவரால், படைத்தல்; காத்தல்; மற்றும் அழித்தல் முப்பது நாட்களும் எனும் செயலை செய்ய முடியும். அவர் உன்னோடு இல்லாவிடில் அவரால் சிறு துரும்பைக் கூட அசைக்க முடியாது. அதனால்தான் பிரும்மா; விஷ்ணு; ருத்ரன் (மஹேஸ்வரர்) போன்றவர்களால் பூஜிக்கப்படும் உன்னை, பூர்வ ஜென்மங்களில் அளவில்லா புண்ணியங்களை செய்து இருந்தவர்களினால் மட்டுமே ஆராதனை செய்து துதிக்க இயலும்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூல தத்துவம் என்ன என்றால் – 'இந்த ஜகத்தின் (பிரகிருதி) அதிபதி, வெளியில் தெரியாத சக்தி தேவியான திரிபுராசுந்தரி என்பவள் ஆவாள். அவளே ஈஸ்வரி எனும் பெண் சக்தியையும், ஈஸ்வரன் எனும் (சதாசிவன்) ஆண் சக்தியையும் உள்ளடக்கி உள்ளவள். அவள் விரும்பினால் மட்டுமே இந்த ஜகத்தை படைக்க தனது ஆண் சக்தியான ஈஸ்வரா எனும் ரூபத்தை வெளிப்படுத்தி, அதன் மூலம் மூன்று தெய்வங்களான பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்ரனையும் (சிவபெருமானின் இன்னொரு அம்சம்) படைக்கின்றாள்'. இந்த உண்மை வேதங்களிலும், புராணங்களிலும் குறிப்பிடப்பட்டு உள்ளது. இது ஸ்ரீ தத்தாத்திரேயர், ஸ்ரீ பரசுராமருக்கு அருளிய திரிபுரா ரகசியம் எனும் போதனையிலும் கூறப்பட்டு உள்ளது.

2. ஆண் மற்றும் பெண் உறவின்றி பிறப்பில்லை என்பதினால் சிருஷ்டியை ஏற்படுத்தக் கூட பரமேஸ்வரர் மற்றும் பராசக்தி இணைய வேண்டும் என்பதாகவே ஆதி சங்கரர் கருதி இருக்க வேண்டும். சக்தி தத்துவமான ஐந்து த்ரிகோணங்களும் சிவ தத்துவமான நான்கு த்ரிகோணங்களும் இணைந்தால்தானே ஸ்ரீ சக்ரமே உருவாகின்றது என்பது இதற்கு ஒரு உதாரணம். இரண்டு த்ரிகோணங்களும் இணையவில்லை என்றால் எப்படி நடுவில் பிந்துவாக பராசக்தி அமர முடியும்?
3. அவள் விருப்பம் இன்றி இந்த ஜகத்தில் அணு அளவில் கூட எதுவுமே இயங்க முடியாது. அத்தனை ஏன், அவளால் வெளிப்படுத்தப்பட்ட பரமேஸ்வரனே கூட இயக்கம் இல்லாதவராகவே இருப்பார். அத்தனை சக்தி வாய்ந்த, இந்த ஜகத்திற்கே தாயாரான அந்த பராசக்தியை, அவள் விரும்புவதினால் மட்டுமே, அவளால் வெளிப்படுத்தப்பட்ட, மும்மூர்த்திகளான பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்ரர் (சிவன்) போன்றவர்களால் மட்டும் அல்லாமல் அவர்களது கட்டுப்பாட்டில், தேவலோகங்களில் உள்ள அனேக கோடி தேவ, தேவர்களாலும், பூஜித்து வணங்க முடிகின்றது.
4. அவர்களைப் போலவே பூமியில் மானிடர்களாக பிறப்பு எடுத்து வந்துள்ள அனைவராலும் அவளை ஆராதனை செய்ய முடியுமா என்றால் அது முடியாது என்பதே உண்மை. மானிடப் பிறவி எடுத்து வந்துள்ளவர்களில், எவர் ஒருவர் பூர்வ ஜென்மங்களில் அநேக கோடி புண்ணியங்களை செய்து அரிதான மானிடர்களாக பிறப்பு எடுத்துள்ளார்களோ, அவர்களால் மட்டுமே அவள் பெயரை

உச்சரிக்கவோ அல்லது அவளை பூஜித்து ஆராதிக்கவோ முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த ஸ்லோகம் ஆகும்).

-2-

तनीयांसं पांसुं तव चरणपङ्केरुहभवं
विरिञ्चिस्सञ्चिन्वन् विरचयति लोकानविकलम् ।
वहत्येनं शौरिः कथमपि सहस्रेण शिरसां
हरस्संक्षुद्यैनं भजति भसितोद्धूलनविधिम् ॥

தனீயாம்ஸம் பாம்ஸூம் தவ சரணபனகேருஹபவம்
விரிஞ்சிஸ்ஸஞ்சின்வன் விரசயதி லோகானவிகலம் ।
வஹத்யேனம் ஶௌரி: கதமபி ஸஹஸ்ரேண ஶிரஸாம்
ஹரஸ்ஸங்க்ஷூத்யைனம் பஜதி
பஸிதோத்தூலனவிதிம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 55 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் மற்றவர்களை தன்பால் இழுக்கும் திறனையும், சக்தியையும் பெறுவார்கள்



ஹே பராசக்தி,
நீ நடக்கும்போது உன்னுடைய பாதத்தில் இருந்து விழுந்த சிறு தூசிகளை திரட்டி வைத்துக் கொண்டு, அந்த துளிகளைக் கொண்டே பிரும்மாண்டமான பதினான்கு லோகங்களையும் பிரும்மா படைத்தார். ஆயிரம் தலைகளைக் கொண்ட ஆதிசேஷனாக தன்னை உருமாற்றிக் கொண்ட மஹாவிஷ்ணு, உனது பாதத் துளிகளினால் படைக்கப்பட்ட அத்தனை லோகங்களையும், தனது தலைகளில் தாங்கி கொண்டு அனைவரையும் பாதுகாத்து வருகின்றார். அவற்றைக் கண்ட ருத்திரனோ, உனது பாதத் துளிகளுக்கு ஆசைப்பட்டு, உனது பாதத் துளியினால் படைக்கப்பட்ட லோகங்களை, பிரளய காலத்தில் பொடிப் பொடியாக ஆக்கி அழித்து விட்டு, அந்த தூள்களை தனது உடல் முழுவதும் வீபூதியைப் போல பூசிக் கொள்கின்றார்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகம் 'இந்த ஜகத்தைப் படைத்த பராசக்தி நடந்து சென்றபோது அவளது பாதங்களில் இருந்து கீழே விழுந்த சிறிய தூசிகளின் மகிமை கூட எந்த அளவிலான மேன்மையைக் கொண்டவைகளாக இருந்தது' என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்து உள்ளது.
2. ஜகம் வெளிப்படுவதற்கு முன், அகண்டத்தின் தேவி அவளிடத்தில் இருந்த மேன்மையினாலும், சுதந்திரத் தன்மையினாலும், சிவனும் சக்தியுமாக இணைந்து இருந்த அவள் சதாசிவா எனும் தனது தத்துவத்தில் இருந்து (ஆண் பாகத்தில்

இருந்து) முதலில் ஈஸ்வரா எனும் சக்தியை வெளிப்படுத்த, அந்த ஈஸ்வரன் தன்னுள் இருந்து மூன்று தன்மைகளில் ஆன தெய்வங்களான பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன் என்பவர்களை வெளிபடுத்தினார். அதை தொடர்ந்து பராசக்தியின் சக்தியினால் தேவலோகங்களும், தேவர்களும் தோற்றுவிக்கப்பட்டனர். பராசக்தி தங்குவதற்காக தேவலோகத்தில், திரிபுராவில், ஶ்ரீபுரம் எனும் மாளிகை அமைந்தது.

3. விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் ஆகிய மூன்று (= மூன்று) நகரங்களில் (= புரா) வாழ்கிறாள் என்பதினால் ஆன்மீகவாதிகள் அவள் வாழும் இடத்தை தேவலோகத்தில் உள்ள திரிபுரா என்று கூறுகின்றார்கள்.

4. லோகங்களை படைக்க தோற்றுவிக்கப்பட்ட பிரும்ம தேவனோ லோகங்களை எப்படி படைப்பது என்ற சிந்தனையுடன் இருந்தவாறு, அந்த பரமேஸ்வரியையே தரிசனம் செய்து அதற்கான விளக்கத்தைப் பெறலாம் என்று ஶ்ரீபுரத்திற்கு சென்றபோது, அங்கிருந்த தோட்டத்தில் பரமேஸ்வரி நடந்து கொண்டிருந்தபோது, அவளது காலில் இருந்து விழுந்த சிறு தூசிகளைக் கண்டார். அது போதுமே லோகங்களைப் படைக்க என்ற எண்ணம் கொண்டவர், தேவியின் பாதங்களில் இருந்து கீழே விழுந்த தூசிகளை தனது கைகளில் ஒற்றி எடுத்துக் கொண்டு எடுத்துக் கொண்டு வந்தார்.

5. அவளது பாதங்களில் இருந்து கீழே விழுந்த தூசிகளைக் கொண்டே மேல் லோகங்களான பூலோகம் /புவர் லோகம்/சுவர் லோகம்/மஹர் லோகம்/ஜனோ லோகம்/தபோ லோகம் மற்றும்

சத்ய லோகம் என ஏழு மேல் லோகங்களையும், அதல லோகம்/விதல லோகம்/சுதல லோகம்/தலாதல லோகம்/மகாதல லோகம்/ரஸாதல லோகம் மற்றும் பாதாள லோகம் என்ற ஏழு கீழ் லோகங்களை படைத்தார்.

6. இப்படியாக பதினான்கு லோகங்களையும் படைத்தவர் மூன்று தன்மைகளில் ஆன உயிரினங்களை அவற்றில் உற்பத்தி செய்ய வைக்கின்றார். ஆக பதினான்கு லோகங்களும் அதே ஈஸ்வரியின் பாதத்தில் இருந்து விழுந்த சிறு தூசிகளினால் தோற்றுவிக்கப்பட்டது எனும்போது அந்த பாதத் துளிகளின் மேன்மையைக் குறித்து என்ன என்று கூற முடியும்?

7. அதை பார்த்த மஹா விஷ்ணுவும், அந்த தேவியின் பாதத் துளிகள் தனக்கும் கிடைக்க வேண்டும் என்ற ஆசைப்பட்டு, தன்னை ஆயிரம் தலைகளைக் கொண்ட ஆதிசேஷனாக உருமாற்றிக் கொண்டு, பராசக்தியின் பாதத் துளிகளினால் ஏற்படுத்தப்பட்ட அத்தனை லோகங்களையும் தனது தலை மீது ஏந்தி வைத்துக் கொண்டார். இப்படியாக அவருக்கும் பராசக்தியின் பாதத்தில் இருந்து விழுந்த சிறிய தூசிகள் கிடைக்கின்றது.

8. பராசக்தியின் பாதத்தில் இருந்து விழுந்த சிறிய தூசிகள் பிரும்மாவிற்கும் மஹாவிஷ்ணுவிற்கும் கிடைத்து விட்டதே என்பதைக் கண்ட ருத்திரர் சும்மா இருப்பாரா? பராசக்தியின் சக்தி மூலம் படைக்கப்பட்ட லோகங்கள் அழிய வேண்டிய பிரளய காலம் தோன்றும் வரை அமைதியாக இருந்தார். பிரளய காலம் தோன்றி பிரபஞ்சம் அழிய

வேண்டிய வேளை வந்தபோது, பராசக்தியின் பாதத் துளிகளினால் தோற்றுவிக்கப்பட்ட லோகங்களை பொடிப் பொடியாக தூசிகளாக்கி அழித்த பின்னர், அந்த தூசிகளை எல்லாம் வாரி எடுத்து தனது உடல் முழுவதிலும் வீபூதியை பூசிக் கொண்டதை போல பூசிக் கொண்டு ஆனந்தம் அடைந்தாராம்.

9. இப்படியாக மூன்று தெய்வங்களும் பராசக்தியின் பாதத்தில் இருந்து விழுந்த தூசிகள் தமக்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு மேன்மை அடைந்தார்கள் என்றால், அந்த தேவியின் பாதங்களை துதித்து ஆராதிக்கும் நமக்கு எத்தனை பெரிய அளவிலான மேன்மை கிடைக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த ஸ்லோகத்தில் காணப்படும் ஆழமான தத்துவம் ஆகும்).

-3-

अविद्यानामन्त-स्तिमिर-मिहिरद्वीपनगरी
जडानां चैतन्य-स्तबक-मकरन्द-स्रुतिझरी ।
दरिद्राणां चिन्तामणिगुणनिका जन्मजलधौ
निमग्नानां दंष्ट्रा मुररिपु-वराहस्य भवति ॥

அவித்யானாமந்த-ஸ்திமிர-மிஹிரத்வீபனகரீ
ஜடானாம் சைதன்ய-ஸ்தபக-மகரந்த-ஸ்ருதிஜரீ ।
தரித்ராணாம் சிந்தாமணிகுணனிகா ஜன்மஜலதௌ
நிமக்னானாம் தம்ஷ்ட்ரா முரரிபு-வராஹஸ்ய பவதி ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 2000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் சகல வித்யா பிராப்தி அடையலாம்



ஹே பராசக்தி, மனம் அறியாமையினால் சூழப்பட்டு கிடப்பவனின் மன இருளை அகற்றும் விதத்திலான ஒளியைத் தரும் சூரியனைப் போல நீ திகழ்கின்றாய். மந்த புத்தி கொண்டவர்களுக்கோ, பூவில் உள்ள அமிர்தம் போன்ற தேனாக இருந்து அறிவாற்றாலைத் தருகின்றாய். ஒன்றுமற்ற அனாதைகளுக்கோ, சிந்தாமணியைப் போல இருந்து ஐஸ்வர்யங்களைக் கொடுக்கின்றாய். எப்படி கடலில் மூழ்கிக் கொண்டிருந்த பூமியை காப்பாற்ற, மஹாவிஷ்ணு வராகி அவதாரம் எடுத்து, துதிக்கையைப் போன்ற தனது இரண்டு தந்தங்களினால் பூமியை பற்றிக் கொண்டு, மேலெழுந்து வந்து கரை சேர்த்தாரோ, அவ்வாறே பிறப்பும் இறப்பும் கொண்ட ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கிக் கிடந்து தத்தளிப்பவர்களை கரை சேர்க்கும் விதமாக நீ அவர்களுக்கு அருள் புரிகின்றாய்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகமும் முன் கூறப்பட்ட இரண்டாவது ஸ்லோகத்துடன் சம்மந்தப்பட்டது ஆகும். இந்த ஸ்லோகமும் பராசக்தியின் பாத தூசிகள் எந்த அளவு மேன்மையானவைகளாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்து உள்ளது. சம்சார சாகரத்தில் மூழ்கிக் கிடப்பவன் மீண்டும், மீண்டும் பிறப்பு எடுத்து மரணத்தை அடைகின்றான். கரையில்லாததும் கடக்க முடியாததுமான சமுத்திரத்தில் அகப்பட்டுக் கொண்டவனைப் போன்றது அவனது நிலை. அதனால்தான் மீண்டும், மீண்டும் பிறப்பும்,

இறப்பையும் கொண்டவன் மண் ஆசை, பெண் ஆசை மற்றும் பொன் ஆசைகளைக் கொண்டவனாக இருந்தவாறு பல்வேறு வேதனைகளையும் துன்பங்களையும் வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டி உள்ளது. அப்படிப்பட்ட நிலையில் இருந்து விடுதலை பெற்று, பிறப்பும் இறப்பும் இல்லாத, மோட்ஷ நிலையை அடைய வேண்டும் என்றால், இந்த ஜகத்தைப் படைத்த பராசக்தியின் தாமரைப் பூவைப் போன்ற பாதங்களை இறுக பற்றிக் கொண்டு அவளது பாதத் துளிகளில் சரண் அடைவதுதான் ஒரே வழி ஆகும்.

2. இதை யார் செய்ய விரும்புகின்றார்கள்? சம்சார பந்தங்களில் இருந்தாலும் மனப் பூர்வமாக ஆத்ம விடுதலை பெற்று மோட்ஷத்தை அடைய வேண்டும் என விரும்பும் முக்ஷுக்கள்தான் அப்படிப்பட்ட நிலை வேண்டும் என விரும்பி, ஜகத்தைப் படைத்த பராசக்தியின் பாதங்களில் சரண் அடைகின்றார்கள்.
3. இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ள தத்துவத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, ஒரே வரியிலான சில உவமைகள் இந்த ஸ்லோகத்தில் காணப்படுகின்றன.
4. முன் ஒரு காலத்தில் ஹிரண்யாக்ஷிகன் எனும் அசுரனினால் தேவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வந்தார்கள். ஒருமுறை அவன் பூமாதேவியை கடத்திக் கொண்டு போய் கடலுக்கு அடியில் மறைத்து வைத்து விட்டான். ஆகவே பூமாதேவியைக் காப்பாற்ற மஹாவிஷ்ணு இரண்டு தந்தங்களைக் கொண்ட பன்றி உருவம் கொண்டு, கடலுக்குள் சென்று அந்த அசுரனைக் கொன்று பூமா தேவியை மீட்டு

வந்தார். இங்கு கடல் என்பது சம்சார சாகரத்தைக் குறிப்பிடுகின்றது. எப்படி கடலில் மூழ்கி இருந்த பூமாதேவியை மஹாவிஷ்ணு காப்பாற்றி கரை சேர்த்தாரோ அப்படித்தான் சம்சார சாகரத்தில் மூழ்கி உள்ள முமுக்ஷுக்கள் (பந்தங்களில் இருந்து விடுதலை பெற்று மோட்ஷத்தை அடைய துடிப்பவன்)பராசக்தியின் பாதத் துளிகளில் சரண் அடைந்து விட்டால், அந்த தேவி அவர்களை பிறப்பும், இறப்பும் கொண்ட சம்சார சாகரத்தில் இருந்து மீட்டு, மோட்ஷ பாதையில் அனுப்பி விடுகின்றாள் என்பது இந்த கதை மூலம் உணர்த்தப்பட்டு உள்ளது.

5. இந்த ஸ்லோகத்தில் சிந்தாமணி எதற்காக கூறப்பட்டு உள்ளது? சிந்தாமணி ரத்தினம் ஸ்வர்க்க லோகத்தைச் சேர்ந்த ரத்தினக் கல் ஆகும். அதை ஆராதிப்பவர்களுக்கு குபேரனை போன்ற செல்வத்தையும், ஈஸ்வரனைப் போன்ற அந்தஸ்த்தையும், மஹாலக்ஷ்மியை போன்ற புகழையும் அது தரும் என்பதாக புராணங்களில் குறிப்புக் காணப்படுகின்றது. அனைத்திற்கும் மேலாக இந்திரனுக்குச் சமமான அதிகாரம் கிடைக்கும். அதன் காரணம் பராசக்தியின் பூரண அருளைப் பெற்றது சிந்தாமணி ரத்தினம் என்பதாகும். உலகில் உள்ள நல்லவை அனைத்தையும் சிந்தாமணிக் கல் நமக்குத் தரும். அதனால்தான் எவர் ஒருவர் பொருள் இன்றி, மேன்மை இன்றி, ஏழ்மை நிலையில் உள்ளாரோ, அவர் மனமார பராசக்தியின் பாதத்துளிகளில் சரண் அடைந்து அவளுடைய மகிமையை விளக்கும் இந்த ஸ்லோகத்தை கூறி அவளை மனதார வேண்டி வந்தால் அவர்கள் பணக் கஷ்டங்கள் விலகி வாழ்வில்

மேன்மை நிலையை அடைவார்கள் என்பதாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.

6. மூடர்களும், மந்த புத்தியினரும் அவர்களுக்குள் உள்ள அறியாமையினால் தவறான பாதையில் சென்று, மீள முடியாத துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்கும்போது, அந்த நிலையில் இருந்து மீண்டு வந்து அமைதியான வாழ்வைப் பெற வேண்டும் என நினைக்கும் போது லலிதா சஹஸ்ர நாமாவளியில் காணப்படும் இந்த மூன்றாவது ஸ்லோகத்தை முறையாக கூறிக் கொண்டு பராசக்தியின் பாதத்துளிகளில் சரண் அடைந்து விட்டால் அந்த நிலையில் பராசக்தி நமது மன இருளை அகற்றி, நல் வழியில் செல்ல வழிகாட்டுவாள். அதன் மூலம் நாமும் வாழ்க்கையின் துன்பங்களில் இருந்து விடுதலை பெற முடிகின்றது என்பதை சூசகமாக எடுத்துக் காட்டும் விதத்தில் இந்த ஸ்லோகம் அமைந்து உள்ளது.

-4-

त्वदन्यः पाणिभ्यामभयवरदो दैवतगणः
त्वमेका नैवासि प्रकटितवराभीत्यभिनया ।
भयात् त्रातुं दातुं फलमपि च वाञ्छासमधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥

த்வதன்ய: பாணிப்யாமபயவரதோ தைவதகண:
த்வமேகா நைவாஸி ப்ரகடிதவராபீத்யபினயா ।
பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்
ஶரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ
நிபுணௌ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 3000 முறை 36 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் மன பயங்கள் அகலும், வியாதிகள் குணமடையும்.

ஹே பராசக்தி,
பிரும்மா, விஷ்ணு மற்றும் சிவபெருமான் உட்பட அனைத்து தெய்வங்களும் தம்மிடம் வரம் கேட்டு வரும் பக்தர்களுக்கு, 'உன்னைக் காப்பாற்றுவேன்' எனும் அபய முத்திரை, மற்றும் 'உன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றுவேன்' எனும் வர முத்திரை சின்னங்களை தமது கைகளால் காட்டி அருள் புரிகிறார்கள். ஆனால் அனைத்து உலகங்களின் புகலிடமான பராசக்தி தாயே, நீ மட்டுமே அப்படிப்பட்ட முத்திரை சின்னம் எதையுமே கைகளால் காட்டாமல், உனது கமலத் திருப்பாதங்களே அவை அனைத்தையும் விட மேலான பலன்களை அளிக்கும் என்பதை வெளிப்படுத்துவதினால், நீ மற்ற தெய்வங்களை விட மகிமை வாய்ந்தவளாக காணப்படுகின்றாய்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் பராசக்தியின் தாமரை மலர் போன்ற பாதங்களின் மேன்மையும், மகிமையும் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. உலகில் உள்ள அனைத்து தெய்வங்களும் தமது கைகளினால் ஏதாவது ஒரு முத்திரை சின்னங்களைக் காட்டிக் கொண்டு காட்சி தருகின்றார்கள். அந்த சின்னங்கள் மூலமே அவர்கள் தம்மை நாடி வரும் பக்தர்களுடைய வேண்டுகோட்களை நிறைவேற்றுகிறார்கள். அனைத்து ஆலயங்களிலும் உள்ள பெரும்பாலான தெய்வங்களின் கைகள் அபய மற்றும் வர முத்திரைகளைக் காட்டிய நிலையில் காணப்படுகின்றன.
2. 'அபய முத்திரை' என்பது ‘நான் உனக்கு அபயம் தருகின்றேன்’ என்றும், 'வர முத்திரை' என்பது

'நீ வேண்டிய வரங்களை நான் உனக்கு அளிப்பேன்' என்பதை வெளிப்படுத்தும் விதமாகவும் உள்ளது.

3. ஆனால் இந்த உலகத்தையே ரட்ஷிக்கும் பராசக்தி ஒருவள் மட்டுமே தனது கைகளால் எந்த சின்னத்தையும் காட்டாமல், தெய்வங்களின் கைகளால் காட்டப்படும் முத்திரை சின்னங்கள் மூலம் பெறப்படும் வரங்களை விட அதிக அளவிலான சக்தி வாய்ந்த வரங்களை எனது தாமரை மலர் போன்ற பாதங்களை தரிசிப்பதின் மூலம் பெறலாம் என்பதை வெளிப்படுத்துவதை போல காட்சி தருகின்றாள்.
4. அதற்கும் ஒரு காரணம் உள்ளது. பக்தர்கள் அனைவருமே தெய்வங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும்போது தலை பகுதி தரையை தொட்டபடி இருப்பதினால், அந்த நிலை நமஸ்கரிப்பவர் தெய்வங்களின் பாதங்களில் சரண் அடைந்து விட்ட நிலையைக் காட்டுகின்றது. அதனால்தான் தனது பாதங்களை நமஸ்கரிக்கையிலேயே பக்தர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை தனது பாதங்களே நிறைவேற்றுகின்ற என்பதை வெளிப்படுத்தும் விதமாக அந்த தேவியானவள் தனது கைகளினால் எந்த முத்திரை சின்னங்களையும் வெளிப்படுத்துவது இல்லை.
5. அனைத்து தெய்வங்களும் தமது கைகளால் கொடுக்கும் அருளை, தமது தாமரை மலர் போன்ற பாதங்களினால் கொடுத்து விடுகின்றாள் என்பதில் இருந்தே அந்த தேவியின் பாத மகிமையை உணர முடியும்.

-5-

**हरिस्त्वामाराध्य प्रणतजनसौभाग्यजननीं
पुरा नारी भूत्वा पुररिपुमपि क्षोभमनयत् ।
स्मरोऽपि त्वां नत्वा रतिनयनलेह्येन वपुषा
मुनीनामप्यन्तः प्रभवति हि मोहाय महताम् ॥**

**ஹரிஸ்த்வாமாராத்ய ப்ரணதஜனஸௌபாக்யஜனநீம்
புரா நாரீ பூத்வா புரரிபுமபி க்ஷோபமனயத்।
ஸ்மரோபி த்வாம் நத்வா ரதினயனலேஹ்யேன வபுஷா
முனீனாமப்யந்த: ப்ரபவதி ஹி மோஹாய மஹதாம் ॥**

இந்த ஸ்லோகத்தை தினமும் 2000 முறை 8 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் ஸ்த்ரீ வசியத்தை தரும்.



ஹே பராசக்தி,
மனம், வாக்கு, சரீரம் முதலிய இயக்கம் அல்லது செய்கைகளினால் உன்னை ஆராதிப்பவருக்கு சகல விதமான பாக்கியத்தையும் நீ அளிக்கின்றாய் என்பதினால்தான் முன் ஒரு காலத்தில் மஹாவிஷ்ணு கூட உன்னை பூஜை செய்து, நீ கொடுத்த சக்தியினால் திரிபுரசுந்தரனைக் அழித்த பரமசிவனை ஸ்த்ரீ வேடம் கொண்டு மோகிக்க வைத்து அவரது கோபத்தை அடக்கினார். மன்மதனும் உன்னை ஆராதனை செய்தே, அவனது மனைவி ரதியின் கண்களில் மட்டுமே நிற்கும் வகையிலான வசீகர தோற்றத்தை அடைந்து, கடுமையான தவத்தில் இருந்த முனிவர்களின் மனதில் கூட மோகத்தை ஏற்படுத்த முடிந்தது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் தேவி பராசக்தியின் மகிமை மட்டும் அல்ல, அவளை ஆராதிக்கும் முறையிலான ஸ்ரீ சக்கர ஆராதனையின் மகிமையும் இரண்டு தேவலோகக் கதைகள் மூலம் கூறப்பட்டு உள்ளன.
2. அதில் முதலாவதான கதை இது. அசுரன் திரிபுரசுந்தரனை அழித்து விட்டு வந்த சிவபெருமானின் கோபம் என்ன செய்தும் அடங்கவே இல்லை. அது பல கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட மஹாவிஷ்ணு, சிவபெருமானின் கோபத்தை தணிக்க என்ன செய்யலாம் என்ற யோசனையில் அமர்ந்து இருந்தபோது, அவரிடம் சென்ற நாரத முனிவர்,

சிவபெருமானுடைய கோபத்தை அடக்கும் சக்தியை பெற வேண்டும் எனில் தேவி பராசக்தியின் அனுக்கிரஹம் தேவை என்றும், அதை பெற மஹாவிஷ்ணு பராசக்தியை ஸ்ரீ சக்கர பூஜை மூலம் ஆராதனை செய்யுமாறு அறிவுரை வழங்கினார்.

3. அந்த அறிவுரையை ஏற்றுக் கொண்ட மகாவிஷ்ணுவும் அந்த ஆராதனையை முறைப்படி செய்ய ஒரு குரு தேவை என்பதை உணர்ந்து, அதற்கு எவரை அணுகலாம் என்ற யோஜனை செய்து கொண்டு இருந்தபோது அந்த பராசக்தியே அவர் எதிரில் தோன்றி அவருக்கு ஸ்ரீ சக்கர பூஜா விதி மற்றும் பஞ்சதசாக்ஷரி எனும் மஹா மந்திரத்தை உபதேசித்தாள்.
4. அவற்றை சித்தி செய்து கொண்டதினால்தான் மஹாவிஷ்ணுவிற்கு தான் நினைத்த எந்த ரூபத்தையுமே எடுக்க முடியும் என்ற அளவிலான அபார சக்தி கிடைத்தது. அந்த சக்தியைக் கொண்டே அவர் மோகினி எனும் பெண் ரூபத்தை எடுத்துக் கொண்டு, பரமசிவனை மயக்கி அவருடைய கோபத்தை அடக்கினார்.
5. இரண்டாவது கதை மன்மதனைக் குறித்தது. மன்மதனும் ஸ்ரீ சக்கரம் மற்றும் பஞ்சதசாக்ஷரி எனும் மஹா மந்திரத்தையும் உபாசனை செய்தே அசாத்திய சக்திகளைப் பெற்றவர், தனது மனைவி ரதியின் கண்களிலிருந்து மறைய மறுக்கும் அளவிற்கான கவர்ச்சியான, வசீகர மற்றும் கண் கவர் தோற்றத்துடன் கூடியவராக மாறினார். அதனால்தான் அவரால் கடுமையான தவத்தில் இருந்த முனிவர்கள் மற்றும் துறவிகளின் மனதைக் கூட கலக்க முடிந்தது.

6. இந்த இரண்டு கதைகள் மூலம் ஸ்ரீ சக்கர தேவியின் மகிமை மட்டும் அல்ல ஸ்ரீ சக்கரத்தின் மேன்மையும் விளக்கப்பட்டு உள்ளது. பஞ்சதசாக்ஷரி மந்திரம் என்பது என்ன**?** பஞ்சதச என்றால் பதினைந்து என்று பொருள். இந்த மந்திரம் பதினைந்து மந்திர அஷ்சரங்களைக் கொண்டுள்ளது**,** அதனால் பஞ்சதசாக்ஷரி எனப்படுகிறது. ஒவ்வொரு வரியும் பீஜ மந்திரங்களை கொண்ட (விதை மந்திரங்கள்) ஒரு கூடம் எனக் கூறப்படும். பஞ்சதசாக்ஷரி மந்திரங்கள் மூன்று கூடங்களாக**-** வாக்ப கூடம்**,** காமராஜ கூடம்**,** சக்தி கூடம்- எனப்படும் பகுதிகளாக உள்ளன. வாக்ப கூடம் என்பது ஸ்ரீ பராசக்தியின் முகத்தையும்**,** காமராஜ கூடம் என்பது ஸ்ரீ பராசக்தியின் கழுத்தில் இருந்து இடை வரையும்**,** சக்தி கூடம் என்பது இடைக்கு கீழ் பகுதியையும் குறிக்கும். இந்த மூன்று கூடங்களும் பராசக்தியின் முழு வடிவை தியானிக்கும் வகையில் அமைந்து உள்ளன. இந்த காரணத்தினால்தான் பஞ்சதசாக்ஷரி மந்திரம் மஹா சக்தி வாய்ந்த மந்திரமாக கருதப்படுகிறது. பராசக்தியே ஸ்ரீ லலிதாம்பிகை ஆவாள்**.**

7. பஞ்சதசாக்ஷரி என்பது பராசக்தியின் மகா மந்திரம் ஆகும். அதன் விரிவாக்க வடிவத்தில் அது பதினாறு எழுத்துக்களைக் கொண்ட மந்திரமான ஷோடசி அல்லது ஷோடசாக்ஷரி என்று அழைக்கப்படுகிறது. சாதகர்கள் இந்த மந்திரத்தின் தீட்சை நேரடியாக ஒரு குருவிடமிருந்து பெற வேண்டும்**;** அதை விடுத்து தன இச்சையாக அந்த மந்திர உச்சாடனைகளை செய்யக் கூடாது. இது மிகவும் சக்தி வாய்ந்த மந்திரம் ஆகும்

என்பதினால், அந்த மந்திரத்தின் உச்சரிப்பு சரியாக இல்லை என்றால் அது சாதகருக்கு தீமையை விளைவிக்கும். எனவே, தேர்ச்சி பெற்ற ஒரு குருவிடமிருந்து நேரடியாக தீட்ஷை பெறுவது அவசியம்.

8. நவ சக்கரம் என்ற பெயரில் அழைக்கப்படும் ஸ்ரீ சக்கரத்தில்தான் அனைத்து சக்திகளும் அடங்கியிருக்கின்றன என்பதின் காரணம் இதில் **64** கோடி ஆவரண தேவதைகள் வசிக்கிறார்கள். ஆவரணம் என்றால் பிரகாரம் அல்லது சுற்று என்று பெயர். அவற்றைக் காக்கும் தேவதைகளை ஆவரண தேவதைகள் என்பார்கள். ஒன்பது அடுக்குகளைக் கொண்ட இந்த ஸ்ரீ சக்கரம் பராசக்தி அமர்ந்து உள்ள இடமாகும்.

9. ஸ்ரீ சக்கரத்தில் ஆவரணங்கள் என்று சொல்லக் கூடிய ஒன்பது சுற்றுக்கள் இருக்கின்றன. இவற்றின் நடுவில் திரிகோணத்தின் மத்தியில் தான் ஸ்ரீ பராசக்தி என்று போற்றப்படும் பராசக்தியானவள் பிந்து என்கிற புள்ளியாகக் காட்சித் தருகிறாள். இந்த சக்கரத்தில் சாதாரண கோடுகளும் முக்கோணங்களும் தான் நம் கண்களுக்கு தெரியும். மற்ற தேவதைகளோ, ஸ்ரீபுரம் தேவியோ நமது கண்களுக்கு புலப்படாமல் அதற்குள் உள்ளார்கள்.

10. பரமேஸ்வரி, பராசக்தி மற்றும் ஸ்ரீ லலிதாம்பிகை என்பவர்கள் அனைவருமே வேறு, வேறு பெயர்களில் அழைக்கப்படும் பராசக்திதான்.

1.

-6-

धनुः पौष्पं मौर्वी मधुकरमयी पञ्च विशिखाः
वसन्तः सामन्तो मलयमरुदायोधनरथः ।
तथाप्येकः सर्वं हिमगिरिसुते कामपि कृपाम्
अपाङ्गात्ते लब्ध्वा जगदिद-मनङ्गो विजयते ॥

தனு: பௌஷ்பம் மௌர்வீ மதுகரமயீ பஞ்ச விஶிகா:
வஸந்த: ஸாமந்தோ மலயமருதாயோதனரத: ।
ததாப்யேக: ஸர்வம் ஹிமகிரிஸுதே காமபி க்ருபாம்
அபானகாத்தே லப்த்வா ஜகதித-மனனகோ விஜயதே॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 500 முறை 21 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் மழலை செல்வம் இல்லாதவர்களுக்கு கூட குழந்தை பிறக்கும்.



ஹே பராசக்தி,
ஹிமவானின் மகளே, மன்மதனின் வில் கரும்பிலானது; தேன் உண்ணும் வண்டுகள் அதன் நாண் கயிறாக இருக்க, ஐந்து அம்புகளை கொண்டவனுக்கு, வசந்த காலம் தோழனாகவும், மலைய மலையில் இருந்து வரும் தென்றல் காற்று ரதமாகவும் உள்ளன. அத்தனை சக்தி உள்ள மன்மதனுக்கு, காம பாணத்தினால் (அசோகா மரம், வெள்ளை தாமரை, நீலத் தாமரை, மல்லிகை மற்றும் மாங்காய் மர மலர்களால் ஆன பாணங்கள்) உலகத்தை வெற்றி கொள்ள, உன்னுடைய கடைக் கண்ணில் இருந்து வெளிவரும் கருணை தேவையாக உள்ளது.

(**விளக்கம்:**

1. பராசக்தியின் மேன்மையையும், சக்தியையும் எடுத்துக் காட்டவே இந்த ஸ்லோகத்திலும் காமதேவன் என வர்ணிக்கப்படும் மன்மதன் குறிப்பிடப்பட்டு உள்ளார். உருவம் அற்ற அவன் யுத்த பூமிக்கு செல்ல முடியாதவன் என்றாலும், அனைவரின் எண்ண அலைகளுடன் யுத்தம் செய்து அவர்களை தன் எண்ண அலைகளான மோகத்தில் வீழ்த்தி விடுகின்றான். அதற்காகவே அவன் படைக்கப்பட்டு உள்ளான்.
2. காட்டில் கிடைத்ததை உண்டு வாழும் தபஸ்விகள் முதல் முனிவர்கள் வரை அனைவரையும் தனது சக்தியினால் ஆக்ரமித்துக் கொண்டு இருந்தவன் ஒரு முறை சிவபெருமானுக்கும் அப்படி ஒரு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விடுகின்றான். அதனால் கோபமுற்ற சிவபெருமான் அவனை தனது நெற்றிக் கண்ணால் எரித்து விட்டார்.

எரிந்து சாம்பலானவனுக்கு மீண்டும் உயிர் கொடுக்குமாறு அவனது மனைவியான ரதி வேண்டிக் கொள்ள சிவபெருமானும் அவளது வேண்டுகோளுக்கு இணங்கி அவனுக்கு சரீரம் இல்லாத உருவை கொடுக்கின்றார்.

3. அதனால் அவன் அனங்கன் எனும் பெயரையும் அடைகின்றான். அனங்கன் என்றால் அங்கங்கள் அற்றவன் என்பது அர்த்தம். ஆனால் அவன் எதற்காக படைக்கப்பட்டானோ, மற்றவர்களை மோக வலையில் வீழ்த்தும் அனங்க வித்தை எனும் அந்த அந்த சக்தியும் எரிந்து போய் விட்டதினால் அவற்றை மீண்டும் பெறுவதற்காக அவன் ஸ்ரீ சக்கர பூஜை செய்தும், பஞ்சதசாக்ஷரி மகா மந்திரத்தை ஜபம் செய்தவண்ணமும் இருந்தான்.

4. அதனால் மனம் மகிழ்ந்து போன பராசக்தி, உடலே இல்லாத அவனுக்கு மனிதர்களின் மன எண்ணங்களை உடைத்து மோக வலையில் சிக்க வைக்கும் விதத்திலான ஆயுதங்களாக தேன் உறிஞ்சும் வண்டுகள் நாணாக உள்ள கரும்பிலான வில்; ஐந்து மலர்களால் ஆன அம்புகள், நண்பனாக வசந்த காலம் மற்றும் மலைய மலையில் இருந்து வீசும் காற்றானது தேராகவும் இருக்கும் வகையிலான சக்தியை கொடுத்தாள்.

5. அதைக் கொண்டே அவன் உலகில் உள்ள அனைவரையும் ஜெயிக்கின்றான். பராசக்தியின் கருணை இல்லாமல் அவனால் அந்த சக்திகளை பெற்று இருக்க முடியாது என்பதினால் அவனும் பராசக்தியை உபாசனை செய்பவர்களில் ஒருவனாகி விட்டான்.

6. சாம்பலாகி விட்டவனுக்கு, சரீரமே இல்லாதவனுக்கு உயிரையும் கொடுத்து, அவனுடைய பல்வேறு சக்திகளை மீண்டும் கொடுத்த தேவியை, ஸ்ரீ சக்கர பூஜை மற்றும் பஞ்சதசாக்ஷரி மகா மந்திரத்தை ஜெபித்து நாமும் மனதார ஆராதனை செய்தால், நமக்கு எத்தனை பெரிய பாக்கியங்களை அவள் தருவாள் என்பதை விளக்குவதே இந்த ஸ்லோகத்தின் தத்துவம் ஆகும்.

-7-

**क्वणत्काञ्चीदामा करिकलभकुम्भस्तननता
परिक्षीणा मध्ये परिणतशरच्चन्द्रवदना ।
धनुर्बाणान् पाशं सृणिमपि दधाना करतलैः
पुरस्तादास्तां नः पुरमथितुराहोपुरुषिका ॥**

**க்வணத்காஞ்சீதாமா கரிகலபகும்பஸ்தனநதா
பரிக்ஷீணா மத்யே பரிணதஶரச்சந்த்ரவதனா ।
தனுர்பாணான் பாஶம் ஸ்ருணிமபி ததானா கரதலை:
புரஸ்தாதாஸ்தாம் ந: புரமதிதுராஹோபுருஷிகா ॥**

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 12
நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால்
எதிரிகள் அழிவார்கள்.

ஹே பராசக்தி,

உனது இடுப்பு பகுதியில் தரித்து உள்ள ஒட்டியாணம் ஜல், ஜல் என சலங்கை ஒலி எழுப்பியவண்ணம் இருக்க, மதம் பிடித்த யானையின் கும்பம் போன்ற தலைக்கு நிகரான பெருத்த தெய்வீக ஸ்தனங்களின் பாரத்தினால் சற்றே குனிந்து நினைப்பவளாகவும், மெல்லிய இடுப்பைக் கொண்டவளாகவும், பௌர்ணமி நிலவைப் (முழு நிலவு) போன்ற மலர்ந்த முகத்துடனும், நான்கு கைகளிலும் கரும்பிலான வில், புஷ்ப பாணங்கள், பாசக் கயிறு, மற்றும் ஈட்டியை ஏந்திய வண்ணம் அலங்காரமாக காட்சி தரும், பரமேஸ்வரனனின் ரூபிணியான பராசக்தி, உன் மீதான எங்கள் பக்தி என்றும் நிலைத்து நிற்கட்டும்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் தேவி பராசக்தியின் ரூப வர்ணனை- அதாவது அவளது அழகின் மேன்மையைக் குறித்து கூறப்பட்டு உள்ளது. ஆதி சங்கரர் சிவபெருமானின் அவதாரம் என்று நம்பப்படுகிறது. அன்னையின் பக்தர்கள் அவளை உருவ வழிபாடு செய்வதினால் அவளுடைய உருவ அழகை அவர்களுக்காக அப்படியே வர்ணித்து உள்ளாரென்றே கருத வேண்டி உள்ளது. இடுப்பிலே அநேக இரத்தின மணிகள் அடங்கிய ஒட்டியாணம் கட்டி இருக்க, அந்த தேவியானவள் நடந்து வரும்பொழுது அவற்றில் இருந்து வெளிவரும் ஜல், ஜல் என்ற சலங்கை ஒலி அனைவரையும் கட்டி இழுக்கும் வண்ணம் உள்ளது.

2. தேவியின் அங்க அழகுகளே சமுத்திரிகாலக்ஷணம் வெளி வந்திருக்க காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பதாக ஆதி சங்கரர் எண்ணி இருக்க வேண்டும். அவ்வளவு தெய்வீக அழகைக் கொண்ட தேவியின் தோற்றத்தின் காரணம் காமேஸ்வரன் எனப்படும் பரமசிவன் ஆகும். அவர்தான் சமுத்திரத்தைக் கடைந்து அமிர்தத்தை எடுத்ததை போல, தேவியின் பீஜ மந்திரங்களை தனது மனதில் கடைந்து கொண்டிருந்தபோது அவளுடைய அழகிய தோற்றம் வெளி வந்தது.
3. பீஜ மந்திரம் என்பது ஒரு சமிஸ்கிருத வார்த்தை. அதன் பொருள் 'விதை-மந்திரம்' என்பதாகும். இது ஒரு தெய்வத்தின் அம்சங்களைக் குறிக்கும் ஒரு ஓரெழுத்து மந்திரமாகும்.
4. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை பராசக்தி சாமுத்ரிகா லட்ஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.
5. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்.

6. உடலில் அமைந்துள்ள அங்கங்களின் அமைப்பைக் பற்றிக் கூறுவது தான் சாமுத்ரிகா சாஸ்திரம் (லட்ஷணம்). மனித உடலில் ஒவ்வோர் அங்கமும் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்று சமுத்திரிகாலக்ஷணம் இலக்கணம் வகுத்துக் கூறும் இந்த சாஸ்திரம் அகஸ்திய முனிவரால் எழுதப்பட்டு உள்ளதாக கூறுகின்றார்கள்.

7. இதில் உள்ள விவரங்களைக் கொண்டுதான் தெய்வங்களின் சிலைகளை வடிவமைத்தவர்களும் தெய்வ சித்திரங்களை வரைந்தவர்களும் வடிவமைப்பு செய்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

-8-

सुधासिन्धोर्मध्ये सुरविटपिवाटीपरिवृते
मणिद्वीपे नीपोपवनवति चिन्तामणिगृहे ।
शिवाकारे मञ्चे परमशिवपर्यङ्कनिलयां
भजन्ति त्वां धन्याः कतिचन चिदानन्दलहरीम् ॥

ஸுதாஸிந்தோர்மத்யே ஸுரவிடபிவாடீபரிவ்ருதே
மணித்வீபே நீபோபவனவதி சிந்தாமணிக்ருஹே ।
ஶிவாகாரே மஞ்சே பரமஶிவபர்யனகனிலயாம்
பஜந்தி த்வாம் தன்யா: கதிசன சிதானந்தலஹரீம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 12 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் பந்தங்களில் இருந்து விடுபடுவார்கள். அனைத்து ஆசைகளும் நிறைவேறும்.



ஹே பராசக்தி,
அமிர்த கடலின் நடுவில், கல்ப விருட்ஷங்கள் சூழ்ந்துள்ள, மணித்வீப தீவின் நடுவில், சிந்தாமணி ரத்தினத்தால் நிர்மாணிக்கப்பட்ட அரண்மனையின் அந்தப்புரத்தில், சதாசிவம் எனும் தத்துவத்திலான ஆசனத்தின் மீது ஆனந்தமயமான கோலத்தில் அமர்ந்து உள்ளவளே, பூர்வ ஜென்மங்களில் புண்ணியம் செய்தவர்களால் மட்டுமே உன்னை வணங்க முடிகின்றது.

(விளக்கம்:

1. ஸ்ரீ சக்கரத்தில் மத்திய பாகத்தில் ஒன்பது த்ரிகோணங்கள் ஒன்றையொன்று வெட்டிக் கொண்டு உள்ளன. அவை அனைத்துமே யோனி ரூபம் எனப்படும். அவற்றில் நான்கு த்ரிகோணங்கள் சிவ ஸ்வரூபம் என்றும், ஐந்து த்ரிகோணங்கள் சக்தி ஸ்வரூபம் என்றும் அழைக்கப்படுகின்றன.



ஒன்றையொன்று வெட்டிக் கொண்டு உள்ள ஒன்பது த்ரிகோணங்கள் மூலம் நாற்பத்து மூன்று முக்கோணங்கள் உண்டாயிருக்கும். மத்திய பிந்துவையும் கோணமாகவே சேர்த்து

நாற்பத்து நான்கு என்றும் சொல்வதுண்டு. இந்த நாற்பத்து நான்கு கோணங்கள் ஆறு ஆவரணங்களாக அமைந்திருக்கின்றன.

2. இவற்றின் நடுவில் உள்ள பிந்துவில்தான் பராசக்தி அமர்ந்து உள்ளாள். அதுவே மணித்வீபம் எனப்படுகின்றது. அதில் அமர்ந்து உள்ள தேவியின் வர்ணனையே இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ளது. சாதகர்கள் அதில் உள்ள தேவியையே ஶ்ரீ சக்கர பூஜை செய்து ஆராதிக்கின்றார்கள்.
3. ஆலயங்களுக்கு சென்று தெய்வங்களை வணங்கி துதிப்பதை போல எவர் வேண்டுமானாலும் ஆலயங்களில் அல்லது வீடுகளில் பராசக்தியை வணங்கி துதிக்க முடியும் என்றாலும், முறைப்படி அவளை ஆராதித்து துதித்து பயனடைய பெரும் அளவிலான பூர்வ ஜென்ம புண்ணியம் செய்து இருக்க வேண்டும்; முக்கியமாக சாதகர்கள் அவளை தியானிப்பதற்கு பூர்வ ஜென்ம புண்ணியம் நிச்சயமாக அவர்களுக்கு அமைந்து இருக்க வேண்டும்; அப்படிப்பட்ட பாக்கியம் அனைவருக்கும் கிடைக்காது என்பதாகவே இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறி உள்ளார்.

-9-

महीं मूलाधारे कमपि मणिपूरे हुतवहं
स्थितं स्वाधिष्ठाने हृदि मरुतमाकाशमुपरि ।
मनोऽपि भ्रूमध्ये सकलमपि भित्वा कुलपथं
सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ॥

மஹீம் மூலாதாரே கமபி மணிபூரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டானே ஹ்ருதி மருதமாகாஶமுபரி ।
மனோபி ப்ரூமத்யே ஸகலமபி பித்வா குலபதம்
ஸஹஸ்ராரே பத்மே ஸஹ ரஹஸி பத்யா விஹரஸே ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் நீண்டநாள் காணாமல் போனவர்கள் வீடு திரும்புவர்



ஹே பராசக்தி,
சகலத்துக்கும் அடிப்படை ஆதாரமான, மூலாதார சக்கரத்தில் உள்ள பிருதிவி தத்துவத்தையும், மணிப்பூரா சக்கரத்தில் உள்ள ஜலத் தத்துவத்தையும், ஸ்வாதிஸ்தான சக்கரத்தில் உள்ள அக்னி தத்துவத்தையும், அனாஹத சக்கரத்தில் உள்ள வாயு தத்துவத்தையும், விசுத்த சக்கரத்தில் உள்ள ஆகாச தத்துவத்தையும், ஆக்ஞா சக்கரத்தில் உள்ள மனஸ் தத்துவத்தையும், சுஷூம்னா வழித் தடம் மூலம் கடந்து சென்று, சஹஸ்ரரா எனும் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை மலர் போன்ற சக்கரத்தில் சதாசிவனுடன் ஆனந்தமாக காட்சி தருகின்றாய்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகமானது, ஸ்ரீ சக்கர தியான வழிபாட்டை மேற்கொள்ளும் சாதகர்கள், சுஷூம்னா நாடி மூலம் பயணித்து, ஏழு சக்கர நிலைகளான முதுகுத் தண்டின் அடிப் பகுதியில் உள்ள மூல தானா சக்கரம், தொப்பிளுக்கு கீழே உள்ள ஸ்வாதிஸ்தான சக்கரம், வயிற்றுப் பகுதியில் உள்ள மணிப்பூரா சக்கரம், மார்பின் மையத்தில் உள்ள அனாஹத சக்கரம், தொண்டையில் அடிப் பகுதியில் உள்ள விசுத்த சக்கரம், இரு புருவங்களுக்கு இடையே உள்ள ஆக்ஞா சக்கரம் போன்றவற்றை கடந்து தலை மேல் உள்ள சஹஸ்ரரா எனும் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை மலரில் குடி கொண்டுள்ள தேவியின் இருப்பிடத்தை அடைந்தவுடன், அங்கு சதாசிவா எனும் பரமேஸ்வரனுடன் ஆனந்த மயமாக காட்சி தரும் சுத்த பிரும்மனான அந்த தேவியின் ஸ்வரூபத்தைக்

கண்டு அவளிடம் இருந்து பரிபூரண அருளை எப்படி அடைகின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்து உள்ளது.

2. சுஷூம்னா என்பது முதுகெலும்பு தண்டு வடத்தின் மூலம் பாம்பைப் போல வளைந்து வளைந்து ஒவ்வொரு சக்கரங்கள் வழியாக நேராக ஓடுகிறது.
3. தியான நிலையில் உள்ள சாதகனின் பிராணன் சுஷூம்னா நாடியில் பயணிக்கும் போது, அது வழியில் அனைத்து சக்கரங்களையும் உற்சாகப்படுத்துகிறது. உயர்ந்த சிந்தனை மற்றும் உணர்வுக்கு காரணமான மனதின் செயலற்ற பகுதிகளைத் தூண்டுகிறது. எனவே, சுஷூம்னா என்பது முக்தி அல்லது அறிவொளிக்கான பாதை என்று அறியப்படுகிறது.

-10-

सुधाधारासारैश्चरणयुगलान्तर्विगलितैः
प्रपञ्चं सिञ्चन्ती पुनरपि रसाम्नायमहसः ।
अवाप्य स्वां भूमिं भुजगनिभमध्युष्टवलयं
स्वमात्मानं कृत्वा स्वपिषि कुलकुण्डे कुहरिणि ॥

ஸுதாதாராஸாரை: சரணயுகலாந்தர்விகளிதை:
ப்ரபஞ்சம் ஸிஞ்சந்தீ புநரபி ரஸாம்நாயமஹஸ: ।
அவாப்ய ஸ்வாம் பூமிம் புஜகநிபமத்யுஷ்டவலயம்
ஸ்வம் ஆத்மாநம்க்ருத்வா ஸ்வபிஷி குலகுண்டே குஹரிணி ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 6 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் ஆண்மை மற்றும் உடல் வலிமை பெருகும்



ஹே பராசக்தி, சந்திர மண்டலத்தில் இருந்துக் கிளம்பி, சூஷ்ம துவாரங்களைக் கொண்ட தாமரைக் கிழங்குகளை போன்ற ஆதார சக்கரத்தில் (மூலாதார சக்ரா), குண்டலம் போன்ற பாம்பின் தோற்றத்தில், கண்களுக்கு தெரியாத நிலையில், யோக நித்திரையில் ஆழ்ந்து உள்ள உனது திருவடிகளிலிருந்து பெருகி வரும் அமிர்த வெள்ளமானது, இந்த உலகில் உள்ள எழுபத்திரண்டாயிரம் உயிர் நாடிகளை நனைக்கின்றது.

(விளக்கம்:

1. இங்கு குண்டலம் என்பது சுருண்ட சக்தி அல்லது தூங்கும் பாம்பின் தோற்றத்தைக் குறிக்கின்றது. ஆண்களின் தலைமுடி மீதுதான் சந்திர மண்டலம் உள்ளது என்பதாக ஆன்மீகப் பெரியோர்கள் கூறுவார்கள். அதுவே சஹஸ்ரரா சக்கரம் என்பதின் மேல் பகுதியில் உள்ளது. அதற்கு சான்று 'பித்தா பிறை சூடி என்று போற்றப்படும்' பரமசிவனின் முடியில் உள்ள சந்திரன் ஆகும்.
2. அந்த சந்திர மண்டலமே ஸ்ரீ சக்கரம் என்பதாக கூறப்படுகின்றது. அதில் உள்ள ஆயிரம் தளங்களைக் கொண்ட தாமரை மலரின் நடுவில் உள்ள ஆதார சக்கரம் என்பதில் உள்ள பிந்துவில்தான் தேவி பராசக்தி காணப்படுகிறாள்.
3. ஸ்ரீ சக்கர பூஜையில் மகிழ்வுறும் தேவியின் பாதங்களில் சமர்ப்பிக்கப்படும் ஜலமானது, அமிர்தம் போன்ற சக்தியை வெளிப்படுத்தி



சரீரத்தின் உள்ளே உள்ள எழுபத்திரண்டாயிரம் உயிர் நாடிகளை தட்டி எழுப்புகின்றபோது, ஸ்ரீ சக்கர உபாசனை செய்யும் சாத்வீகர்கள் மனோபலம், வாக்கு பலம் போன்ற அனைத்து பலத்தையும் பெற்று சிரஞ்சீவிகள் ஆகிறார்கள் என்பது தத்துவம். இந்த தத்துவத்தை வெளிப்படுத்துவதே இந்த ஸ்லோகம் ஆகும்.

4. தியான நிலையின் உச்ச சக்தியினால், மண்டை ஓட்டில் வெப்பமும் அழுத்தமும் தோன்றுகின்றது அப்போது பெருமூளையில் 'மூளை தண்டு வட திரவம்' உருகி தொண்டையில் பாய்கிறது. அது தொண்டை மூலம் விழுங்கப்படும்போது உடலில் உள்ள **72,000** நாடிகள் வழியாக பாய்ந்து சென்று, முழு உடலுக்கும் ஒரு பளபளப்பைத் தருகிறது. அதே சமயத்தில் மண்டை ஓட்டில் 'மூளை தண்டு வட திரவம்' மீண்டும் உற்பத்தி ஆகி விடுகின்றது.

-11-

चतुर्भिः श्रीकण्ठैः शिवयुवतिभिः पञ्चभिरपि
प्रभिन्नाभिः शम्भोर्नवभिरपि मूलप्रकृतिभिः ।
चतुश्चत्वारिंशद्वसुदलकलाश्रत्रिवलय- (त्रयश्चत्वारि)
त्रिरेखाभिः सार्धं तव शरणकोणाः परिणताः ॥

சதுர்பி ஶ்ரீகண்டை: ஶிவயுவதிபி: பஞ்சபிரபி
ப்ரபின்னாபி: ஶம்போர்னவபிரபி மூலப்ரக்ருதிபி: ।
சதுஶ்சத்வாரிம்ஶத்வஸுதலகலாஶ்ரத்ரிவலய-
(திரயஸ்சட்வரி)
த்ரிரேகாபி: ஸார்தம் தவ ஶரணகோணா: பரிணதா: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 8 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் புத்ர யோகம் கிடைக்கும்



ஹே பராசக்தி,
உனது ஸ்ரீ சக்கரத்தில் சிவ ஸ்வரூபமாக நான்கு சக்கரங்களும், சக்தி ஸ்வரூபமாக ஐந்து சக்கரங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்பது சக்கரங்களாக காணப்பட, நீ வசிக்கும் பிந்து* ஸ்தானத்தை சுற்றி அஷ்ட தளங்கள்(எட்டு), பதினாறு சோடச தளங்கள், மூன்று த்ரிவலய தளம், த்ரி ரேகைகள் எனப்படும் மூன்று ரேகைகள் மற்றும் நான்கு திக்குகளிலும், வாசல்களைக் கொண்ட பூபுத்ரயம் எனப்படும் நான்கு சுவர்கள் என ஸ்ரீ சக்கரம் நாற்பத்தி நான்கு தத்துவங்களைக் குறிக்கின்றன. (*பிந்துவையும் சேர்த்தே நாற்பத்தி நான்கு தத்துவங்களைக் கொண்டது ஸ்ரீ சக்கரம்)

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் ஸ்ரீ சக்கரத்தின் ஸ்வரூபம் விளக்கப்பட்டு உள்ளது. சிவ ஸ்வரூபமாக உள்ள நான்கு சக்கரங்களும், சக்தி ஸ்வரூபமாக உள்ள ஐந்து சக்கரங்களும் முக்கோண வடிவில் ஒன்றை ஒன்று பிளந்து கொண்டு உள்ள நிலையில் காணப்படுகின்றன. அவற்றை யோனிகள் என சாதகர்கள் அழைக்கின்றார்கள்.
2. ஒன்றையொன்று வெட்டிக் கொண்டு உள்ள ஒன்பது த்ரிகோணங்கள் மூலம் நாற்பத்து மூன்று முக்கோணங்கள் உண்டாயிருக்கும். மத்திய பிந்துவையும் கோணமாகவே சேர்த்து நாற்பத்து நான்கு என்றும் சொல்வதுண்டு. இந்த நாற்பத்து நான்கு கோணங்கள் ஒன்பது ஆவரணங்களாக அமைந்திருக்கின்றன.
3. ஆவரணம் என்றால் மறைப்பு, ஆடை, சட்டை, கோட்டை என்று பல பொருள் இருந்தாலும்

இங்கு கோட்டை என்பதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும் .

4. இவற்றின் நடுவில் உள்ள பிந்துவில்தான் ஸ்ரீ பராசக்தியானவள் காமேஸ்வரி எனும் பெயரில் பிந்துவாக, காமேசுவரி-காமேஸ்வரன் எனும் தோற்றத்தில் சிவனுடன் ஒன்றியவளாக எழுந்தருளியிருக்கிறாள்.
5. இந்த ஸ்லோகத்தில் ஸ்ரீ சக்கரத்தின் வடிவமே விளக்கப்பட்டு உள்ளது. சாதாரணமான எந்த ஒரு யந்திரத்திற்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. யந்திரங்கள் என்பது ஒவ்வொரு தெய்வத்தின் அல்லது அந்த தெய்வத்தின் ஆராதனை தேவதைகளின் சக்தியை அடக்கிக் கொண்டு உள்ளவை ஆகும் என்பதினால் அந்தந்த தெய்வத்தின் பெயரைக் கொண்டே யந்திரங்கள் அழைக்கப்படுகின்றன.
6. யந்திரம் என்பது ஒரு தேவதையின் இருப்பிடமாக உள்ளது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் பிரத்தியேகமாக ஒவ்வொரு யந்திரம் உண்டு. ஆனால் சிவ பூசை மற்றும் விஷ்ணு பூசை செய்பவர்கள் யந்திரங்களை வைத்து ஆராதிப்பது இல்லை. காரணம் அவர்களுக்கான சக்தி யந்திரங்கள் சாஸ்திரங்களில் கூறப்படவே இல்லை. சிவபெருமானை லிங்க வடிவிலும், விஷ்ணு பூஜையை, சாளக்கிராமத்தை வைத்தும் பூசை செய்கின்றார்கள்.
7. ஸ்ரீ சக்கரம் பராசக்தி யந்திரம் என அழைக்கப்படாமல் ஸ்ரீ சக்கரம் என்பதாகவே அழைக்கப்படுகின்றது. பல்வேறு ரூபங்களில் உள்ள தேவிகளுக்கும் ஸ்ரீ சக்கரத்தை வைத்தே பூசைகள் செய்யப்படுகின்றன என்பதின் காரணம் பல்வேறு ரூபங்களில் உள்ள அனைத்து தேவிகளுமே பராசக்தியின் நிழல்

தெய்வங்களே ஆகும். இது தான் ஸ்ரீ சக்கரத்தின் சிறப்பு.

8. ஸ்ரீ சக்கரம் என்பது ஒன்பது ஆவரணம் என்னும் கோட்டைகளைக் கொண்டது. அவை ஒன்பது ஆவரண தேவதைகளினால் காவல் காக்கப்படுகின்றன.
9. முதலாவது ஆவரணம் என்பது 'த்ரைலோக்ய மோகன சக்கரம்' அல்லது ஸ்ரீபுரம் என்ற பெயரைக் கொண்டது.
10. இரண்டாம் ஆவணம் பதினாறு (16) இதழ் தாமரை தளங்களைக் கொண்ட சோடச தளம் அல்லது கலாச்ரம் எனப்படுவது ஆகும்.
11. மூன்றாவது ஆவரணம் எட்டு தாமரை இதழ்களைக் போன்ற தளத்தைக் கொண்ட வசு எனப்படும் 'சர்வ சம்ஷோஷன சக்ரா' என அழைக்கப்படுகின்றது.
12. நான்காவது ஆவரணம் எனப்படும் 'ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரம்'- பதினான்கு (14) சிறு முக்கோணங்களால் சூழப்பட்ட தளம் ஆகும்.
13. ஐந்தாவது ஆவரணத்தின் பெயர் 'சர்வார்த்த சாதக சக்கரம்' என்பதாகும். இதில் மேலும் கீழும் நோக்கிய நிலையில் பத்து முக்கோணங்கள் உள்ளன.
14. ஆறாவது ஆவரணமும் பத்து முக்கோணங்களைக் கொண்ட 'சர்வ ரக்சாகரச் சக்கர' தளம் ஆகும்.
15. ஏழாவது ஆவரணம் 'சர்வ ரோஹ சக்கரம்' என்று கூறப்படும்.
16. எட்டு முக்கோண தளங்களைக் கொண்ட எட்டாவது ஆவரணத்திற்கு 'ஸர்வ ஸித்திப்ரத சக்கரம்' என்று பெயர்.
17. ஒன்பதாவது ஆவரண தளத்தின் உள்ளே மையப் பகுதியில் புள்ளி வடிவில் இருப்பதே

ஸ்ரீபுரம் என்பது. அதையே பிந்து ஸ்தானம் என்கின்றார்கள். இந்த பிந்துவில்தான் பராசக்தி, காமேஸ்வரி எனும் பெயரில் பிந்துவாக, சிவ-காமேசுவரியாக, காமேஸ்வரன் எனும் சிவனுடன் ஒன்றியவளாக எழுந்தருளியிருக்கிறாள்.



18. இந்த பிந்து ஸ்தானத்தை 'ஸ்ரீ சக்ராங்கித பிந்து மத்யவஸதீம்' என்பதாக ஆதி சங்கரர் அருளிய மீனாட்சி பஞ்சரத்தினம் எனும் ஸ்லோகத்தில் குறிப்பிட்டு உள்ளார். மதுரை மீனாட்சி அம்மனின் பரிபூரணமான அருளை பெறுவதற்காக ஸ்ரீ ஆதி சங்கரரால் அருளப்பட்டதுதான் ஸ்ரீ மீனாட்சி பஞ்சரத்னம். பஞ்சரத்னம் என்றால் ஐந்து விதமான ரத்னங்கள் அல்லது ஆபரணங்கள் என்று பொருள்.

-12-

त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चिप्रभृतयः ।
यदालोकौत्सुक्यादमरललना यान्ति मनसा
तपोभिर्दुष्प्रापामपि गिरिशसायुज्यपदवीम् ॥

த்வதீயம் ஸௌந்தர்யம் துஹினகிரிகன்யே துலயிதும்
கவீந்த்ரா: கல்பந்தே கதமபி விரிஞ்சிப்ரப்ருதய: ।
யதாலோகௌத்ஸுக்யாதமரலலனா யாந்தி மனஸா
தபோபிர்துஷ்ப்ராபாமபி கிரிஶஸாயுஜ்யபதவீம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் சிவன் அருள் கிட்டும், ஊமை பேசும் சக்தி பெறுவான்

सौः

सौः

ஹே பராசக்தி,
பனி சூழ்ந்த மலையின் மன்னனின் மகளே, உன் அழகை மேற்கோள் காட்டி வர்ணிக்க முடியாமல் மகா கவிகளான பிரும்மா போன்றவர்கள் கூட தவிக்கிறார்கள். உனது அழகை ரசிக்க ஆசைப்பட்ட ரம்பை, ஊர்வசி போன்ற தேவதைகள் கூட விரதங்களை அனுஷ்டித்தும், உன் அழகை காண முடியாமல் போனதினால் தமது மனதிலேயே சிவஸாயுஜ்யத்தை ஏந்திக் கொண்டு உன்னைக் காண முயல்கிறார்கள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகம் தேவியின் அழகு எவ்வாறு எவராலும் எளிதில் கூற முடியாத அளவிலான சௌந்தர்ய ரூபமாக இருந்தது என்பதை வெளிப்படுத்தும் வகையில் அமைந்து உள்ளது.
2. மாபெரும் தேவலோக மஹானுபாவர்களான பிரும்மா, விஷ்ணு மற்றும் இந்திரன் போன்றவர்களால் கூட தேவியின் அழகை எதனுடனும் ஒப்பிட்டு கூற முடியாத அளவிலான அழகை தேவி கொண்டு இருந்தாள்.
3. அதைக் கண்ட அழகிகளிலும் மேலான அழகைக் கொண்ட தேவலோக அழகிகளான ரம்பை மற்றும் ஊர்வசி போன்றவர்களும் தேவியின் அழகைக் காண ஆசைக் கொண்டார்கள். ஆனால் அவர்களால் தேவியின் அருகில் சென்று அவளது அழகை சற்று நேரம் கூட காண முடியாத வகையில் இருந்தது. அதன் காரணம் அவர்கள் தம் அழகுடன் ஒப்பிட்டு பார்த்துக் கொண்டே இருக்கும்போதே தேவியின் அழகு மேலும்

மேலும் அதிகமாகிக் கொண்டே இருந்தது என்பதே ஆகும்.

4. அதனால் இறைவனின் திருமேனியில் உள்ளேயே பிரவேசம் புரிந்து, திருமேனியிலேயே குடி கொண்டிருந்து, தேவியின் அழகைக் காண முயன்று, அதற்கான சிவஸாயுஜ்யம் போன்ற விரதங்களை அனுஷ்டித்தும் தோல்வி அடைந்து, தமது மனதிலேயே ஸாயுஜ்யத்தை ஏந்திக் கொண்டு தேவியின் அழகை மனக் கண்ணில் காண முயன்றார்கள்.
5. ஸாயுஜ்யம் என்பது இறைவனின் திருமேனியில் உள்ளேயே பிரவேசம் புரிந்து, திருமேனியிலேயே குடி கொண்டிருத்தல் என்பது ஆகும்.
6. சிவஸாயுஜ்யம் என்பது, சிவபெருமானின் திருமேனியில் உள்ளே பிரவேசம் புரிந்து, திருமேனியிலேயே குடி கொண்டிருத்தல் ஆகும். இந்த நிலை ஒருவரை முடிவாக கைலாயத்திற்கு அனுப்பி வைக்கும், கடவுளுடன் இணையும் நிலையைக் குறிக்கும். சிவஸாயுஜ்யம் குறித்து முப்பதாவது (30) ஸ்லோகத்திலும் கூறப்பட்டு உள்ளது.

-13-

नरं वर्षीयांसं नयनविरसं नर्मसु जडं
तवापाङ्गालोके पतितमनुधावन्ति शतशः ।
गलद्वेणीबन्धाः कुचकलशविस्रस्तसिचया
हठात् त्रुट्यत्काञ्चो विगलितदुकूला युवतयः ॥

நரம் வர்ஷீயாம்ஸம் நயனவிரஸம் நர்மஸு ஜடம்
தவாபானகாலோகே பதிதமனுதாவந்தி ஶதஶ: ।
கலத்வேணீபந்தா: குசகலஶவிஸ்ரஸ்தஸிசயா
ஹடாத் த்ருட்யத்காஞ்ச்யோ விகலிததுகூலா யுவதய: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 6 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் காதல் வெற்றி அடையும்

क्लीं क्लीं क्लीं
साध्यम
क्लीं क्लीं क्लीं

ஹே பராசக்தி,
உனது கடைக் கண் பார்வையின் அருளை பெற்றவன் கிழவனோ, அவலக்ஷணமானவனோ, சக்தியற்றவனாகவோ காம-ரசத்தை அறியாதவனாக இருந்தாலும் கூட, அவனை மன்மதனாகவே எண்ணி, வெட்கத்தை துறந்த இளம் பெண்கள், அவிழ்ந்த தலை முடியோடு, தோளில் இருந்து கீழே விழுந்த சேலையையோடு, இடுப்பில் கட்டி இருந்த ஒட்டியாணம் மற்றும் பட்டுத் துணி அவிழ்ந்து விழுந்ததைக் கூட கவனிக்காமல் அவன் பின் ஓடுவார்கள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் தேவியின் கடைக்கண் பார்வையின் அருளை பெற்றவன் வாழ்க்கையில் எத்தனை பாக்கியத்தைக் பெறுகின்றான் என்பது வெளிப்படுகின்றது.
2. இதில் கூறப்பட்டுள்ள உதாரணங்கள் பெண்களின் காம ரசத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து உள்ளவை அல்ல.
3. எவன் ஒருவன் வெளிப் பார்வைக்கு கிழவனாகவோ, அவலக்ஷணமானவனாகவோ, சக்தியற்றவனாகவோ, காம ரசத்தை அறியாதவனாகவோ காணப்படுகின்றானோ, பூர்வ ஜென்மங்களில் அவன் செய்து இருந்த புண்ணியங்களினாலும், அடுத்தடுத்த ஜென்மங்களில் தேவியின் அருளினால் அவன் பெறும் குணாதிசயங்களினாலும், மூன்று லோகங்களிலும் உள்ள பெண்களால், அவனும் மன்மதனாகவே பார்க்கப்பட்டு, அவன் மீது மோகம் கொள்ளும் அளவிலான பாக்கியத்தை அடைகின்றான்.

4. இந்த ஸ்லோகத்தில் மன்மதனைப் போல என்பதை, குணாதிசயங்களில் அனைவரையும் விட மேன்மையானவன் என்பதாகவும், மோகம் என்பதை சமூகத்தில் பெரும் மரியாதை பெற்றவனாக இருப்பான் என்பதாகவும் பார்க்க வேண்டும்.

5. இதில் இருந்தே தேவியின் கண் பார்வையினால் கிடைக்கும் அருள் எத்தகைய சக்தி வாய்ந்தது என்பது விளங்கும். தேவியின் கண்பார்வை பட்டதுமே கிடைக்கும் அருளின் நிலையே இப்படி என்றால் தேவியின் முழு அருளும் கிடைத்தவனின் நிலை எத்தனை மேன்மையானதாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கக் கூட முடியுமா?

-14-

क्षितौ षट्पञ्चाशद् द्विसमधिकपञ्चाशदुदके
हुताशे द्वाषष्टिश्चतुरधिकपञ्चाशदनिले ।
दिवि द्विष्षट्त्रिंशन्मनसि च चतुष्षष्टिरिति ये
मयूखास्तेषामप्युपरि तव पादाम्बुजयुगम् ॥

க்ஷிதௌ ஷட்பஞ்சாஶத் த்விஸமதிகபஞ்சாஶதுதகே
ஹுதாஶே த்வாஷஷ்டிஶ்சதுரதிகபஞ்சாஶதனிலே ।
திவி த்விஷ்ஷட்த்ரிம்ஶன்மனஸி ச
சதுஷ்ஷஷ்டிரிதி யே
மயூகாஸ்தேஷாமப்யுபரி தவ பாதாம்புஜயுகம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் வறுமை விலகும்



ஹே பராசக்தி,
பிருதிவி தத்துவமான மூலாதார சக்கரத்தில் 56 **ஒளிக் கதிர்கள் (கிரணங்கள்), ஜல தத்துவமாகிய மணிபூரகம் சக்கரத்தில்** 52 **ஒளிக் கதிர்கள், அக்னி தத்துவமாகிய ஸ்வாதிஸ்தான சக்கரத்தில்** 62 **ஒளிக் கதிர்கள், வாயு தத்துவமாகிய அனாஹத சக்கரத்தில்** 54 **ஒளிக் கதிர்கள், ஆகாச தத்துவமாகிய விசுத்தி சக்கரத்தில்** 72 **ஒளிக் கதிர்கள், மனஸ் தத்துவமாகிய ஆக்ஞா சக்கரத்தில்** 64 **ஒளிக் கதிர்கள், என்று மொத்தமாக 360 ஒளிக் கற்றைகள் ஒளி வீசிக் கொண்டு இருந்தாலும், அவற்றை எல்லாம் தாண்டி சஹஸ்ரரா கமலத்தின் மத்தியில் உள்ள உனது பாதங்கள் அதிக ஒளி வீசியபடி உள்ளன.**

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள கிரணங்கள் என்பதின் அர்த்தம் ஒளிக் கதிர் மற்றும் காலத்தைக் குறிப்பதாக உள்ளது. காலத்தை மறைமுகமாக குறிப்பிட்டே அதை ஒளிக் கதிர்கள் அல்லது கிரணங்கள் எனக் கூறப்பட்டு உள்ளது.
2. மூலாதாரம், ஸ்வாதிஸ்தானம், மணிபூரகம், அனாஹத, விசுத்தி, அஜ்ன போன்றவற்றில் கூறப்பட்டு உள்ள கிரணங்கள் எனப்படும் கால நாட்கள் முறையே வசந்த காலம், மழைக் காலம், கோடைக் காலம், இலையுதிர் காலம், பனிக் காலம் மற்றும் குளிர் காலத்தைக் காட்டும் வகையில் 360 நாட்களாக உள்ளன. ஒவ்வொரு காலமும் குறிப்பிட்ட அளவிற்குள்தான் அடங்கி உள்ளன.
3. ஆனால் தேவியின் திருப்பாதங்கள் ஒளி வீசும் கிரணங்களின் கால அளவு இந்த ஸ்லோகத்தில்

குறிப்பிடவில்லை என்பதின் காரணம் பராசக்தி கால தேசங்களுக்கும், நேரத்திற்கும் அப்பாற்பட்டு நிற்பவள் என்பதே ஆகும். இந்த பிரபஞ்சத்தை படைத்தவளுக்கு காலமும் நேரமும் இருக்க முடியுமா?

4. சுருக்கமாக கூறினால் பராசக்தியின் தாமரை பாதங்களிலிருந்து 360 கதிர்கள் உருவாகின்றன, அவை நெருப்பு, சூரியன் மற்றும் சந்திரன் வழியாக இந்த உலகில் பிரதிபலிக்கின்றன. கதிர்கள் என்பது ஒளியை மட்டுமல்ல, ஆற்றல் சக்தியையும் குறிக்கிறது.

5. பிரபஞ்சம் இயங்கத் தேவையான உயிர் சக்தியே அண்ட சக்தி அல்லது ஆற்றல் சக்தியாகும். அதை தருவதே அன்னையின் பாதங்களில் இருந்து வெளியாகும் ஒளிக் கதிர் சக்தியாகும். நமது கண்களுக்கு தெரியாத அந்த சக்தி அனைத்து இடங்களிலும் வியாபித்து உள்ளது. பிரபஞ்சத்தில், விண்மீன் திரள்களுக்கு இடையில் மற்றும் விண்வெளியில் உள்ளது. அண்டத்தில் உள்ள ஆற்றல் சக்தி மிகவும் சக்தி வாய்ந்தது, அதனால் எதையும் வெளிப்படுத்த முடியும், இது நிரந்தரமானது மற்றும் அழிக்க முடியாதது. நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்துமே அண்டத்தில் உள்ள ஆற்றல் சக்தியால்தான் இயங்குகின்றன. இது நாம் வாழ்வதற்கான சக்தியைக் கொடுத்து பிரபஞ்சத்திலும் சமநிலையை பராமரிக்கும் ஆற்றல் பெற்றதாகும்.

-15-

शरज्ज्योत्स्नाशुद्धां शशियुतजटाजूटमकुटां
वरत्रासत्राणस्फटिकघटिकापुस्तककराम् ।
सकृन्न त्वा नत्वा कथमिव सतां संन्निदधते
मधुक्षीरद्राक्षामधुरिमधुरीणाः भणितयः ॥ or फणितयः

ஶரஜ்ஜ்யோத்ஸ்னாஶுத்தாம்
ஶஶியுதஜடாஜூடமகுடாம்
வரத்ராஸத்ராணஸ்படிககடிகாபுஸ்தககராம் ।
ஸக்ருன்ன த்வா நத்வா கதமிவ ஸதாம்
ஸம்ன்னிதததே
மதுக்ஷீரத்ராக்ஷாமதுரிமதுரீணா: பணிதய: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அறிவாற்றலும், கவன சக்தியும் அதிகரிக்கும்

ஹே பராசக்தி,
இளவேனில் காலத்துச் சந்திரனைப் போன்று அலங்கரிக்கப்பட்டு உள்ள உனது தலை முடியில், நவரத்தினங்களில் ஆன கிரீடத்தை தரிப்பவள். ஸ்படிக மாலையினையும், புத்தகத்தையும் இரண்டு கரங்களில் ஏந்திக் கொண்டு, மற்ற இரண்டு கரங்களினால் அபய மற்றும் வர முத்திரைகளைக் காட்டியவாறு காட்சி தரும் உன்னை, ஒரு தடவை மட்டுமே வணங்கினாலும் போதும், அவர்களால் தேன், பால், திராக்ஷை போன்ற இனிப்புகளை விட அதிக இனிப்பை தரும் சொல் வளங்களை ஏன் பெற இயலாது?

(விளக்கம்:

1. இங்கு பராசக்தி எனும் பராசக்தியின் தோற்றத்தின் மகிமை வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. அவளுடைய வெண்ணிறத் தோற்றம் அமைதியான சத்வ குணத்தைக் குறிக்கின்றது. தலையில் உள்ள பிறை சந்திரனோ, அந்த தேவிக்குள், தலையில் பிறையை சூட்டி உள்ள பரமசிவனும் அடங்கி உள்ள உண்மையை வெளிப்படுத்துகின்றது. அதனால்தானோ என்னவோ ஶ்ரீ சக்கரத்தில் உள்ள தேவி காமேஸ்வரி- காமேஸ்வரனாக தோற்றம் தருகின்றாள்.
2. தேவியின் பல வடிவங்களில் ஒன்றான, இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ள தோற்றத்தில் (சரஸ்வதி அம்சத்தில்), அவள் காட்டும் முத்திரைகள், அவள் தரும் அபயத்தையும், அருளையும் காட்டுகின்றன.

3. ஆதி சங்கரர் இயற்றிய வேறு சில ஸ்லோகங்களில் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். அவற்றில் சில:

• **தேவி புஜங்கம்:-** இது ஸ்ரீ சக்ரதேவி எனும் பராசக்தியை நோக்கி செய்யப்படும் பிரார்த்தனை. இது அவளது பல்வேறு வடிவங்களையும் பண்புகளையும் புகழ்ந்து கூறும் ஸ்லோகம் ஆகும். அதில் அவர் கூறி உள்ளது:- ''ஒரு முறையாவது தேவியிடம் பிரார்த்தனை செய்பவர்களுக்கு, பிரகாசமான நெக்லஸ் மற்றும் அற்புதமான ஆடைகளை அணிந்து கொண்டும், கையில் ஜெபமாலை மற்றும் புத்தகத்தை ஏந்திக் கொண்டும் காட்சி அளிக்கும் கருணையுள்ள பராசக்தி, கல்வியின் தெய்வம் கொடுக்கக் கூடிய அளவைவிட அதிகமான அறிவாற்றலை வழங்குகிறாள். - தேவி புஜங்கம், ஸ்லோகம்-13''

• **கல்யாண விருஷ்டி ஸ்தவம்** என்பது ஆதி சங்கரர் இயற்றி உள்ள மற்றொரு ஸ்லோகம் ஆகும் . இது தேவி பராசக்தியின் அருளைப் வேண்டுவதற்காக இயற்றப்பட்டு உள்ளது. அதில் அவர் கூறுகிறார்:- ''தேவி, உனது தாமரைப் பாதங்களில் பிரார்த்தனை செய்வது, ஒருவரை நன்கு கற்றறிந்தவர்களாக ஆக்குகிறது, மேலும் அவர்களை வாக்கு வன்மை கொண்டவர்களாக மாற்றுகின்றது''- கல்யாண விருஷ்டி ஸ்தவ -ஸ்லோகம் 7.

4. மற்ற இரு கைகளில் ஒன்றில் புத்தகத்தைக் காட்டுவது தன்னை வணங்குபவர்கள் பெரும் அறிவு பெற்ற ஜீவிகளாக இருப்பார்கள் என்பதையும், இன்னொரு கையில் உள்ள ஸ்படிக மாலை மூலம் தன்னை மந்திர ஜெபத்தினால் ஆராதனை செய்து வந்தால் தனது ஸ்வரூபம் அவர்களுக்கு புலப்படும்

என்பதை கூறுவது போல உள்ளது. நவராத்திரியில் பராசக்தியான துர்கா பரமேசுவரியையும், மகாலக்ஷ்மியையும், ஸரஸ்வதி தேவியையும் பூஜிக்கிறோம்.

5. மூன்று மூர்த்திகளாகச் சொன்னாலும், முப்பத்து முக்கோடி மூர்த்திகளாகச் சொன்னாலும், அனைத்துமாக உள்ளவள் ஒரே பராசக்திதான். இந்த உண்மையைத்தான் லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பராசக்தியை வர்ணிக்கும்போது அவளே சிருஷ்டி செய்பவள் (ஸ்ருஷ்டிகர்த்ரீ – ப்ரஹ்ம ரூபா), அவளே பரிபாலனம் செய்பவள் (கோப்த்ரீ – கோவிந்த ரூபிணீ), அவளே சம்ஹாரம் செய்பவள் (ஸம்ஹாரிணீ – ருத்ரரூபா) என்று சொல்கிறது.

6. லலிதாம்பிகையாகவும், துர்க்கையாகவும் இருக்கிற பராசக்திதான் மஹாலக்ஷ்மியாகவும், ஸரஸ்வதியாகவும் இருக்கின்றாள். லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் 'பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:' என்று வருகிறது. ஸரஸ்வதி அஷ்டோத்தரத்திலும் இப்படியே 'பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:' என்று வருகிறது. படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என அனைத்தையும் செய்வது ஒரே சக்திதான் என்று இந்த நாமங்கள் நமக்கு நன்றாக உணர்த்துகின்றன. ஒரே பராசக்திதான் வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டு வெவ்வேறு காரியங்களைச் செய்கிறது, ஸரஸ்வதியாகி ஞானம் தருகிறது.

{நன்றி : Sage of Kanchi - https://mahaperiyavaa.blog/2018/05/09/200-devis-of-navarathri-by-maha-periyava/ } and

http://isatsang.blogspot.com/2015/06/soundarya-lahari-sloka-15.html

-16-

कवीन्द्राणां चेतःकमलवनबालातपरुचिं
भजन्ते ये सन्तः कतिचिदरुणामेव भवतीम् ।
विरिञ्चिप्रेयस्यास्तरुणतरशृङ्गारलहरी-
गभीराभिर्वाग्भिर्विदधति सतां रञ्जनममी ॥

கவீந்த்ராணாம் சேத:கமலவனபாலாதபருசிம்
பஜந்தே யே ஸந்த: கதிசிதருணாமேவ பவதீம் ।
விரிஞ்சிப்ரேயஸ்யாஸ்தருணதரஶ்ருனகாரலஹரீ-
கபீராபிர்வாக்பிர்விதததி ஸதாம் ரஞ்ஜனமமீ ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் வாக்கின் வலிமை கூடும்/ வேதங்களில் மேன்மையானவர்களாக இருப்பார்கள்



ஹே பராசக்தி,
சிறந்த கவிகளின் மனது தாமரை மலர்களுக்கு ஒப்பானது. அந்த தாமரை மலர்களை மலரச் செய்யும் இளம் வெய்யில் போன்ற சிவப்பு நிறத்தவளும், அருணை எனும் பெயரைக் கொண்டவளுமான உன்னை, எவர் வணங்கி துதிக்கின்றார்களோ, அவர்கள் பிரும்மா போற்றிடும் சரஸ்வதி தேவியின் கடாட்ஷமான வாக்கு வலிமை பெற்று மற்றவர்களை மகிழ்விக்கின்றார்கள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகமும் சரஸ்வதி தேவி அருளும் வாக்கு வலிமையின் சக்தியை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து உள்ளது. பராசக்தியின் மகிமையை விளக்கும் சௌந்தர்யலஹரியில் ஏன் சரஸ்வதியின் பெருமை கூறப்பட்டு உள்ளது என நினைக்கலாம். அதற்கு காரணம் உண்டு.
2. அன்னை பராசக்தி தன்னிடம் இருந்த பெண் சக்திகளில் இருந்து முதலில் தோற்றுவித்தது மூன்று சக்திகள். அவை முறையே மஹா காளி, மஹா லக்ஷ்மி, மஹா சரஸ்வதி என்று தேவி மஹாத்மியம் கூறுகிறது.
3. ஆகவே அனைவருக்கும் கல்வி அறிவு மற்றும் வாக்கு வலிமையை தனது ஸ்வரூபமான சரஸ்வதி எனும் வித்யா தேவியின் அம்சத்தின் மூலம் அளிப்பதினால் இந்த ஸ்லோகத்தில் பராசக்தியின் மேன்மை அவள் அளிக்கும் வாக்கு வலிமை எனும் தன்மை மூலம் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது. வித்யா எனும் பெயரே அறிவாற்றலைக் குறிக்கின்றது.

4. முந்தைய ஸ்லோகத்தில் சரஸ்வதி அம்சத்திலான அவள், சத்வ குணத்தைக் குறிக்கும் வெண்மை நிறத்திலான அன்னையாக உள்ளதாக அவளது தோற்றத்தின் வர்ணனை கூறப்பட்டது. இந்த ஸ்லோகத்தில் சரஸ்வதி அம்சத்திலான அவள் சிவப்பு நிறத்திலான அருணை எனும் தேவியாக கூறப்பட்டு உள்ளாள்.
5. அருணை என்பது எட்டு கைகளைக் கொண்ட அம்சம். அதில் நான்கு கைகளில் பராசக்தியின் கைகளில் உள்ள கரும்பிலான வில், மலர்களாலான அம்பு, பாசக் கயிறு மற்றும் அங்குசம் காணப்பட, பிற நான்கு கைகளிலும் சரஸ்வதியின் கைகளில் உள்ள புத்தகம், ஸ்படிக மாலை, வர மற்றும் அபய முத்திரை சின்னங்கள் உள்ளன. பராசக்தியானவள் பல்வேறு சமயங்களில், பல்வேறு காரணங்களுக்காக, பல்வேறு ரூபங்களில் காட்சி அளிக்கிறாள்.
6. ஆகவே இந்த ஸ்லோகத்தின் மூலம் சரஸ்வதியின் அம்சத்தை உள்ளடக்கி, எட்டு கைகளைக் கொண்ட பராசக்தி தரும் வாக்கு வலிமை எத்தகையது என்பது கூறப்பட்டு உள்ளது. இந்த ரூபத்தில் பராசக்தி தன்னுள் அடங்கி உள்ள சரஸ்வதியின் அம்சத்துடன் காட்சி அளிப்பதினால் அந்த ரூபம் அருணை எனப்பட்டது.
7. வாக்கு வலிமை என்பதற்கு உதாரணமே உஜ்ஜயினியை சேர்ந்த காளிதாசன்தான். அவர்தான் வாக்கு வலிமையை காளி தேவி மூலம் அடைந்த கவிஞர் ஆவார்.
8. மஹா பராசக்தியின் இன்னொரு அம்சம் காளிதேவி ஆவார். ஆகவே காளிதாசன் அடைந்திருந்த வாக்கு வலிமையையும் மஹா

பராசக்தி அளித்ததே. காளிதாசன் பராசக்தி மூலம் பெற்று இருந்த வாக்கின் வலிமைக்கு ஒரு சின்ன உதாரணம் கீழே உள்ள கதை.

9. ஒருமுறை உஜ்ஜயினியை ஆண்டு வந்திருந்த போஜ ராஜன் தனது அரச சபையில் ஒரு புதிரைப் போட்டார். 'தாமரை மலர்களில் இன்னொரு மலர் முளைத்து இருப்பதாக கூறப்படுகின்றது. ஆனால் மலர்களால் மலர்களை பார்க்க முடியவில்லை என்பதில் காணப்படும் மலர்கள் என்ன என்றால்...............' எனும் பொருளைத் தரும், பாதி ஸ்லோகத்தை கூறி விட்டு அந்த ஸ்லோகத்தின் பின் பகுதியை கூறுபவர்களுக்கு பரிசு தருவதாக கூறினார்.

10. அதற்கு யாராலும் பதில் தர இயலவில்லை, ஆனால் காளிதாசனோ சற்றும் சளைக்காமல் எழுந்து நின்று 'உத்தமமான பெண்களின் முகங்களே தாமரை மலர். அந்த தாமரை மலர் போன்ற முகத்தில் காணப்படும் நீலோத்பவம் எனும் மலர்களை போன்றவைகளே இரு கண்கள். அதனால்தான் நீலோத்பவ மலர்களால், அதே நீலோத்பவ மலர்களை பார்க்க முடியவில்லை (முகத்தில் உள்ள கண்களால் அதே கண்களை பார்க்க முடிவதில்லை') எனும் பொருளைக் கொண்ட ஸ்லோகத்தைக் கூற, அரசன் மூலம் பாராட்டையும் பெரும் பொருளையும் காளிதாசன் பெற்றார்.

11. இதன் மூலம் பராசக்தி தனது அம்சமான அருணை எனும் சரஸ்வதி மூலம் வழங்கும் வாக்கு வலிமை எத்தகையது என்பது விளங்கும். அருணையின் இன்னொரு அம்சமே காளி தேவி என்பதினால் காளியும் அருணையும் ஒருவரே. ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது அருணை, சரஸ்வதி மற்றும்

காளி எனும் மூன்று தேவிகளுமே வெவேறு ரூபங்களில் உள்ள ஒரே அம்சத்திலானவர்கள்தான் என்பது புலனாகும்.

-17-

सवित्रीभिर्वाचां शशिमणिशिलाभङ्गरुचिभिः
वशिन्याद्याभिस्त्वां सह जननि संचिन्तयति यः ।
स कर्ता काव्यानां भवति महतां भङ्गिरुचिभिः
वचोभिर्वाग्देवीवदनकमलामोदमधुरैः ॥

ஸவித்ரீபிர்வாசாம் ஶஶிமணிஶிலாபனகருசிபி:
வஶின்யாத்யாபிஸ்த்வாம் ஸஹ ஜனநி
ஸஞ்சிந்தயதி ய: ।
ஸ கர்தா காவ்யாநாம் பவதி மஹதாம் பனகிருசிபி:
வசோபிர்வாக்தேவீவதனகமலாமோதமதுரை: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அறிவியல்களில் நிபுணத்துவம் பெறுவார்கள்.



ஹே பராசக்தி,
வாக்கில் இருந்து வெளி வரும் வார்த்தைகளுக்கு அதிபதிகளும், வெண்மை நிறத்திலான சந்திரக் கல் போன்ற நிறத்தைக் கொண்ட எட்டு தேவிகளின் சக்திகளை உள்ளடக்கி உள்ள உன்னையும், வாக்கு தேவதைகளான வசினி தேவதைகளையும் ஒன்றாக சேர்ந்து உபாசிப்பவர்கள், வாக்கு வல்லமை கொண்ட ஆற்றலைப் பெறுவார்கள். மணம் நிறைந்த தாமரை மலரைப் போன்று காணப்படும் உன் முகத்தைப் போல, இனிமையான புலமை நிரம்பிய காவியங்களை இயற்றும் ஆற்றல் படைத்தவர்களாக இருப்பார்கள்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் எதற்காக வசினி தேவதைகளை பராசக்தியுடன் சேர்த்து வர்ணித்து உள்ளார் என்பது வியப்பாக தோன்றலாம். அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.
2. வாக் தேவதைகள் எனப்படும் வசினி தேவதைகள் யார் என்றால், சரஸ்வதி தேவி வாக்கு வலிமை மற்றும் அறிவாற்றலை கொடுப்பவள் என்றால், அந்த வாக்கில் இருந்து வெளி வரும் வார்த்தைகளின் அதிபதிகளாக வசினி தேவதைகள் இருக்கிறார்களாம். அது மட்டும் அல்ல அவர்கள் பராசக்தியின் மாளிகையில் காவலில் உள்ள பரிவார தேவதைகள் ஆவார்கள்.
3. அவர்களின் பெயர்கள் வசினி, காமேஸ்வரி, மோதினி, விமலா, அருணா, ஜெயினி, பராசக்தி, மற்றும் கௌலினி என்பதாகும். ஸ்ரீ சக்ரத்தில் ஏழாவது ஆவரணத்திலுள்ள எட்டுக்

கோணங்களில் இந்த எட்டுப் பேரும் பராசக்தியை சுற்றி அமர்ந்திருப்பார்கள்.

4. ஸ்ரீ சக்கர தேவியான பராசக்தியை பொறுத்த மட்டில், அவளை சுற்றி காவலுக்கு பல்வேறு நிலைகளிலான பல்வேறு தேவதைகள் காவலுக்கு உள்ளார்கள் என்றாலும் அந்த தேவதைகளில் முக்கியமானவர்கள் வாக்கில் இருந்து வெளிவரும் வார்த்தைகளுக்கு அதிபதிகளாக உள்ள வாக் தேவதைகள் எனப்படும் வசினி தேவதைகள் ஆவர். சரஸ்வதி வாக்கு வலிமையை தருபவள் என்றால் அந்த வாக்கில் இருந்து வெளி வரும் வார்த்தைகள் தெளிவாக இருக்க, அருள் புரிபவர்கள் இரண்டாம் நிலையிலான வசினி தேவதைகள்.

5. இந்த ஸ்லோகத்தில் எவன் ஒருவன் அறிவாற்றல் பெற வேண்டும் என நினைக்கிறானோ, அவன் பராசக்தியை எட்டு வாக் தேவிகளுடன் சேர்ந்து தியானித்து அவர்களது அருளை பெற வேண்டும் என்று கூறுகிறது. சமஸ்கிருதத்தில் வாக் என்றால் வார்த்தைகள் என்று பொருள். சமஸ்கிருதத்தில் உயிரெழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்களைக் கொண்ட 51 எழுத்துக்கள் உள்ளன. அந்த 51 எழுத்துக்களும் எட்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு எட்டு வாக் தேவதைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

6. இந்த எட்டு வாக் வாசினிகளும் பராசக்தியின் கட்டளைப்படி லலிதா சஹஸ்ரநாமத்தை இயற்றியதால் அவளுக்கு மிக நெருக்கமானவர்கள். உபாசகர்கள் பராசக்தியின் மீது தியானம் செய்யும்போது அவர்களுக்கு பொருளும் செல்வத்திற்கும்

பதிலாக ஆத்ம விடுதலை கிடைக்கின்றது; அதே சமயம் பக்தியுடன் அவளை ஆராதிக்கும் சாதாரண பக்தர்கள் செல்வத்தையும் செழிப்பையும் பெற அவளுடைய அருள் வகை செய்கின்றது; செல்வத்துடனும், செழிப்புடனும், அறிவித் திறனையும் சேர்த்துப் பெறுவதற்கு வாக் தேவி என்று அழைக்கப்படும் எட்டு வாக் தேவிகளுடன் சேர்ந்து பராசக்தியை வழிபட வேண்டியிருக்கும். இதுவே இந்த ஸ்லோகத்தின் தத்துவம் ஆகும்.

7. வாக் தேவியர்கள் புதிதாக வெட்டப்பட்ட நிலவு கற்கள் போல முற்றிலும் தூய வெள்ளை நிறத்தில் தோன்றுகிறார்கள். சந்திரக் கல் உருகும் தன்மைக் கொண்டது என்பதினால் அவற்றை வாக் தேவியர்களுடன் ஒப்பிடுகிறார்கள். அதே போல அவற்றின் உருகும் தன்மையை வாயில் இருந்து வெளிப்படும் வார்த்தைகளுடன் ஒப்பிடுகிறார்கள்.

8. எப்படி ஒரு சந்திரக் கல் உருகுகின்றதோ அவ்வாறே, தம்மை வணங்கித் துதிக்கும் பக்தர்களது மன எண்ணங்களையும், உணர்வுகளையும் வாக் தேவதைகள் வார்த்தைகளாக உருவகப்படுத்தி அவர்களது வாயில் இருந்து வெளிப்பட வைக்கின்றார்கள், அல்லது அவர்களது எழுத்தில் பிரதிபலிக்க வைக்கின்றார்கள். எனவே வாக்கு வலிமை வேண்டும் என்று எவர் ஒருவர் நினைக்கிறாரோ அவர்கள் பராசக்தியோடு, எட்டு வாக் தேவதைகளையும் சேர்த்து வழிபாடு செய்யும் பக்தர்களின் எண்ணம் தூய்மையாக இருந்தால் அவர்கள் பெரிய அளவிலான அறிவாற்றலைப் பெறுகிறார்கள் என்பது தெளிவாகிறது.

9. இருப்பினும், பராசக்தியை வணங்காமல் எட்டு வாக் தேவிகளை மட்டும் வணங்கினால் ஒருவருக்கு பேச்சுத் திறமை அல்லது அறிவாற்றலோ கிடைக்காது. அதன் காரணம் வாக் தேவியர்கள் பராசக்தியிடமிருந்து மட்டுமே அதற்கான சக்தியைப் பெறுகிறார்கள், மேலும் அவர்கள் பராசக்தியின் இருப்பிடத்தில் அவளுடைய காவல் தெய்வங்களாக பணியில் இருக்கிறார்கள் (ஸ்ரீ சக்கர ஆவரணங்களை படித்தால் அவர்கள் காவல் பணியில் உள்ள இடம் புரியும்).

10. அதனால்தான் இந்த ஸ்லோகத்தில் பராசக்தியின் மேன்மையை, வாக்கின் அதிபதியானவளும் அவளுடைய அம்சமுமான சரஸ்வதி தேவி, மற்றும் அவளுடைய பரிவார தேவதைகளும், வார்த்தைகளின் அதிபதிகளுமான வசினி தேவதைகள் மூலம் கூறப்பட்டு உள்ளது.

11. ஆதி சங்கரர் இயற்றி உள்ள இந்த ஸ்லோகங்கள் மூலம் ஒன்று புலனாகின்றது. பராசக்தி கல்வி அறிவிற்காக வெளிப்படுத்திய சரஸ்வதி அம்சத்திலேயே நல்ல வாக்கு வன்மை, இசை, இலக்கியம் மற்றும் நடனம் போன்ற கலைகளில் தேர்ச்சி, சங்கீத ஞானம், சகலகலா பாண்டித்யம், அனைத்து கலைகளையும் எளிதாக அருள என்பவற்றுக்கென பல்வேறு ரூபங்களில் தேவிகள் வெளிப்படுத்தப் படுகின்றார்கள்.

12. அவர்கள் காளி; ஸ்ரீ ராஜ மாதங்கி எனும் சியாமளா தேவி; மாணிக்க மயமான வீணை வாசிக்கும் வாக்வாதினி தேவதைகள்; அருணை; பரா சரஸ்வதி; பால சரஸ்வதி; தாரண சரஸ்வதி; நித்யா சரஸ்வதி; வஷினி;

மோதினி; விமலா; ஜபினி; சர்துஸ்வரி என்ற பெயர்களில் உள்ள தேவிகள் ஆவார்கள். அதனால்தான் பல ஸ்லோகங்களிலும் கல்வித் திறன், கலை, அறிவாற்றல் வாக்கின் வலிமை போன்றவற்றை தரும் தெய்வங்களின் பெயர்கள் மாறுபட்டு காணப்படுகின்றன என்றாலும் அவர்கள் அனைவருமே பராசக்தி உடலுக்குள் இருந்து வெளிப்படும் பல்வேறு ரூபங்கள்தானே தவிர வேறு ஒன்றும் இல்லை).

-18-

तनुच्छायाभिस्ते तरुणतरणिश्रीसरणिभिः
दिवं सर्वामुर्वीमरुणिमनि मग्नां स्मरति यः ।
भवन्त्यस्य त्रस्यद्वनहरिणशालीननयनाः
सहोर्वश्या वश्याः कति कति न गीर्वाणगणिकाः ॥

தனுச்சாயாபிஸ்தே தருணதரணிஸ்ரீஸரணிபி:
திவம் ஸர்வாமுர்வீமருணிமனி மக்நாம் ஸ்மரதி ய: ।
பவந்த்யஸ்ய த்ரஸ்யத்வனஹரிணஶாலீனநயனா:
ஸஹோர்வஶ்யா வஶ்யா: கதி கதி ந
கீர்வாணகணிகா: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அவர்களின் காதல் வெற்றி பெறும்.



ஹே பராசக்தி,
எந்த ஒரு உபாஸகன், இளஞ் சூரியன் ஒளிக் கதிர்களுக்கு நிகரான இளம் சிவப்பு நிறத்திலான பராசக்தியின் உடலின் இருந்து வெளி வரும் ஒளியில், ஈரேழு உலகங்களும் மூழ்கிக் கிடப்பதாக மனதில் எண்ணிக் கொண்டு அவளை உபாசிக்கின்றானோ, அவனிடம், மருண்டு நிற்கும் மான் குட்டியைப் போன்ற கண்களுடன் காணப்படும் ஊர்வசி போன்ற அப்சரஸ்கள் கூட வசியமாகின்றார்கள் எனும்போது சாதாரண பெண்களைக் குறித்துக் கூற முடியுமா?

(**விளக்கம்:**

1. விடியற் காலையில் சூரியன் உதிக்கையில், சூரியன் வெளிப்படுத்தும் இளம் சிவப்பிலான ஒளிக் கதிர்களில் இந்த உலகமே இளம் சிவப்பாகத் தோற்றம் அளிக்கின்றது.
2. பராசக்தியின் ஆதிக்கத்தில் தான் இந்த பிரபஞ்சமே அடங்கி உள்ளது என்பதினால், அவளது உடலை தழுவிக் கொண்டு கீழே விழும் இளம் காலைப் பொழுதின் சூரிய ஒளிக் கதிர்கள், அவளது உடலின் நிறத்தை கிரகித்துக் கொண்டு, அதே நிறத்தோடு உலகின் மீது விழுகின்றது. அதனால்தான் இந்த உலகமே விடியற் காலையில் இளம் சிவப்பு நிறத்தில் காட்சி தருகின்றது.
3. ஆகவே பராசக்தியை உபாசனை செய்யும் உபாசகர்கள் தமது மனதிலும் எண்ணங்களிலும் இந்த உண்மையை ஆழமாக நிலைப்படுத்திக் கொண்டு உபாசனை செய்யும்போது தேவியின் எண்ணங்களினால் நிறைந்து உள்ள அந்த உபாசகர்கள் தேவலோக ரம்பைகளும் பொறாமைப்படும் அளவில்

பிரகாசிக்கும் அளவிலான உடல் அழகை பெறுகின்றார்கள் என்பதாக இந்த ஸ்லோகத்தின் தாத்பர்யம் உள்ளது.

4. இந்த ஸ்லோகத்தின் அர்த்தத்தை மேலோட்டமாக பார்க்கக் கூடாது. இந்த உலகமே அன்னையின் நிறத்திலான இளம் சிவப்பில் காணப்படுவதாக ஒரு சாதகன் எண்ணினால், அவன் இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையுமே பராசக்தியின் ரூபமாகவே பார்க்கின்றான் என்பதாக அர்த்தம் கொள்ள வேண்டும். நாம் அந்த விளக்கத்தை ஒளி என்றே பார்க்கின்றோம், ஆனால் சாதகனின் நினைவு முழுவதுமே அன்னைதான் உள்ளாள் என்பதினால் இளம் சிவப்பிலான ஒளி, அனைத்து இடங்களிலுமே அவளே வியாபித்து உள்ளாள் என்ற உண்மையை முழுமையான தியானத்தில் உள்ள அவனுக்கு உணர்த்துகின்றது.

5. தேவலோக ரம்பைகளும் பொறாமைப்படும் அளவில் பிரகாசிக்கும் அளவிலான உடல் அழகை பெறுகின்றார்கள் என்பதின் பொருள் என்ன என்றால் 'எப்படி இந்த சாதகனால் தனது சிந்தை முழுவதுமே பராசக்தியின் நினைவினால் மட்டுமே நிரப்பி வைத்துக் கொள்ள முடிகின்றது, நம்மால் முடியவில்லையே என்ற என்ற ஆதாங்கத்தை வெளிப்படுத்தும் நிலை ஆகும்).

-19-

मुखं बिन्दुं कृत्वा कुचयुगमधस्तस्य तदधो
हरार्धं ध्यायेद्यो हरमहिषि ते मन्मथकलाम् ।
स सद्यः संक्षोभं नयति वनिता इत्यतिलघु
त्रिलोकीमप्याशु भ्रमयति रवीन्दुस्तनयुगाम् ॥

முகம் பிந்தும் க்ருத்வா குசயுகமதஸ்தஸ்ய தததோ
ஹரார்தம் த்யாயேத்யோ ஹரமஹிஷி தே மன்மதகலாம் ।
ஸ ஸத்ய: ஸங்க்ஷோபம் நயதி வனிதா இத்யதிலகு
த்ரிலோகீமப்யாஶு ப்ரமயதி ரவீந்துஸ்தனயுகாம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 25 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் பெண்களையும் மிருகங்களையும் கூட அடக்கும் வசிய சக்தி பெறுவார்கள்.



ஹே பராசக்தி,
சிவபெருமானின் துணைவியே, ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் உள்ள பிந்துவை உனது முகமாகவும், அதன் கீழே உள்ள இரு ஸ்தனங்களையும், அதன் கீழே உள்ள யோனியையும் தியானம் செய்து கொண்டு அதில் உள்ள மன்மதக் கலையை எவன் ஒருவன் உபாசிக்கின்றானோ, அவன் அனைத்து ஸ்த்ரீகளையும் தன் வயப்படுத்துகின்றான். மூவுலகிலும் சூர்ய, சந்திரர்களை போன்ற ஸ்தனங்களாகக் கொண்டுள்ள ஸ்த்ரீகளையும் கூட தன் வயப்படுத்துகின்றான்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தை பாராயணம் செய்தால் ஸ்த்ரீ வசிய சித்தி கிடைக்கும் என்பது உண்மை. ஆனால் இது ஸ்த்ரீ வசியத்திற்காக ஏற்பட்ட ஸ்லோகம் அல்ல. மாறாக ஒருவனுக்கும் உள்ள காம மோக இச்சைகளை முற்றிலும் அழித்து அவனுக்கு மோட்ஷத்தை தரும் நிலையிலான ஸ்லோகமே இது.
2. ஒரு உபாசகன் பிந்துவை பராசக்தியின் முகமாக வைத்துக் கொண்டு அவளது அங்கங்களை மன்மதக் கலையாக வைத்துக் கொண்டு உபாஸிக்கையில், அவன் மனதில் பராசக்தி ஒரு மிகப் பெரிய உண்மையை ஆழப் பதிக்கின்றாள். ‘நானே உனது தாயார். எனது உடலில் இருந்து யோனி மூலம் வெளிப்பட்ட உனக்கு, எனது குருதியை இந்த ஸ்தனத்தில் இருந்துதான் பாலாக்கி கொடுத்து வளர்த்தேன். ஆகவே ஒவ்வொரு பெண்ணை பார்க்கும் போதும் அவளை நீ என்னைப் போன்ற தாயாகவே பாவிக்க வேண்டும்.

இப்போது முதல், இனி உன் முன் ஒவ்வொரு பெண்ணாகவும் நானே நிற்பேன்’.

3. அதனால் அது முதல் மெல்ல மெல்ல அந்த உபாசகன் குழந்தையின் மன நிலையில் சென்று ஒவ்வொரு பெண்ணையும் அவன் தனது தாயாரைப் போலவே பார்க்கத் துவங்குவான். அவன் மனதில் இருந்து ஒரு பெண்ணின் உடலில் உள்ள வசீகர அவயங்கள் மீதான மோகம் அழியத் துவங்க, ஒரு கட்டத்தில் அவனிடம் உள்ள காம மோக இச்சைகள் அழிகின்றன.
4. தியான நிலையில் உள்ள அவனது எண்ணங்களில் அந்த தத்துவம் ஆழமாக ஊடுருவிக் கொள்ள ஒரு கட்டத்தில் அவன் மனதாலும் எண்ணங்களினாலும் குழந்தையாகவே ஆகி விடுகின்றான். ஒரு அந்த நிலைக்கு சென்று விடும்போது மோட்ஷத்திற்கு செல்லும் பாதை அவனுக்கு திறத்து விடப்படுகின்றது.
5. அதனால்தான் இந்த ஸ்லோகத்தின் மூலம் பராசக்தியை உபாசிக்கும் ஒருவன், வசீகரமான பொலிவைப் பெற்றவுடன், அழகிய சிறு குழந்தையைக் கண்டால் எப்படி ஒரு பெண் ஆசையோடு ஓடி வந்து கொஞ்சுவாளோ அதுபோன்று அவனது வசீகரத்தால் கவரப்பட்ட பெண்கள் அவனை நாடி ஓடி வரும்போது அவர்கள் அனைவரையுமே தனது தாயாராகவே அவன் பார்க்கின்றான். இதுதான் இந்த ஸ்லோகத்தை தியானிப்பதின் மகிமை ஆகும்).

-20-

किरन्तीमङ्गेभ्यः किरणनिकुरम्बामृतरसं
हृदि त्वामाधत्ते हिमकरशिलामूर्तिमिव यः ।
स सर्पाणां दर्पं शमयति शकुन्ताधिप इव
ज्वरप्लुष्टान् दृष्ट्या सुखयति सुधाधारसिरया ॥

கிரந்தீமனகேப்ய: கிரணனிகுரம்பாம்ருதரஸம்
ஹ்ருதி த்வாமாதத்தே ஹிமகரஶிலாமூர்திமிவ ய: ।
ஸ ஸர்பாணாம் தர்பம் ஶமயதி ஶகுந்தாதிப இவ
ஜ்வரப்லுஷ்டான் த்ருஷ்ட்யா ஸுகயதி
ஸுதாதாரஸிரயா॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 25 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் விஷங்கள் முறியும், திருஷ்டி அகலும் பிரயோகம் கிடைக்கின்றது

ஹே பராசக்தி,
சந்திர காந்தக் கல் போன்று பிரகாசிப்பவளே, உன்னை துதிக்கும் சாதகனுக்கு, உன் உடலில் இருந்து பிரவாகம் போல வெளி வரும் ஒளிக் கதிர்கள் மூலம் அமிர்த மழையினை வாரி வழங்குகின்றாய். அதனால் அவன் கருடனைப் போன்ற சக்தி பெற்று நச்சுப் பாம்புகளின் வீரியத்தை அடக்கும் சக்தியை பெறுகின்றான். ஜுரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் அளித்து, அனைத்து நோய்களையும் குணப்படுத்தும் அளவிலான சக்தியை பெறுகின்றான்.

(விளக்கம்:

1. ஆனந்தலஹறியில் தரப்பட்டு உள்ள பல ஸ்லோகங்கள், நோய்களுக்கு நிவர்த்தி தரும் மந்திர சக்திகளைக் கொண்ட ஸ்லோகங்களாக உள்ளன. அதில் ஒன்றுதான் இந்த ஸ்லோகமும் ஆகும். இந்த ஸ்லோகத்தை கூறி பராசக்தியை எவர் ஒருவர் ஆராதிக்கின்றாரோ அவருக்கு நிச்சயமாக நோய்களை தீர்க்கும் சக்தி கிடைக்கும்.
2. எந்த ஒரு சாதகர் இந்த மந்திரத்தை வெகு சிரத்தையோடு தியானித்து பலன் அடைவார்களோ அவர்களுக்கு கருட பகவானின் ஆற்றலும் சக்தியும் கிடைக்கும் என்பது நிச்சயம். கருடனின் சக்தியைப் பெறும் சாதகர்களுக்கு பாம்பின் விஷத்தை முறியடிக்கும் சக்தி கிடைக்கும், ஜுரங்களை முற்றிலும் கட்டுப்படுத்தும் சக்தியும், எந்த விதமான நோய்களையும் பார்வையால் பார்த்தே குணப்படுத்தும் சக்தியும் கிடைக்கும்

என்பதே இந்த ஸ்லோகத்தின் மகிமையாக உள்ளது.

3. ஆனால் இந்த சித்தியை அனைத்து சாதகர்களினாலும் அடைய முடியாது என்பதின் காரணம் இதை தியானிப்பதற்கு பல நியமங்கள் உள்ளன, பல கட்டுப்பாடுகள் உள்ளன.
4. கருடன் ஒரு சாதாரணப் பறவை அல்ல, அது ஒரு தெய்வீகப் பறவை ஆகும். திருமாலும் கருடனும் ஒருவரே' என்று மகாபாரதத்திலுள்ள அனுசாசன பர்வத்தில் கூறப்பட்டு உள்ளது.
5. கருட பகவான் ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம், அதீத சக்தி, தேஜஸ் என்ற ஆறு விதமான குணங்களுடன் காணப்படுகின்றார். திருமாலைப் போல அணிமா, மகிமா, லகிமா, கரிமா, ஈஸித்வம், வசித்வம், பிராபதி மற்றும் பிராகாம்யம் ஆகிய எட்டு விதமான சக்திகளைக் கொண்டவராக உள்ளார் என்பதினால்தான் தன்னை இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆராதிக்கும் சாதகர்களுக்கு, கருட பகவானின் இந்த சக்திகளை தேவி பராசக்தி வழங்குகிறாள்.
6. இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த கருட சக்தியை அனைத்து தெய்வங்களையும் தன்னுள் அடக்கி வைத்துள்ள பராசக்தியைத் தவிர வேறு எந்த தெய்வத்தினாலும் தர முடியாது. அத்தனை ஏன், கருட பகவானால் கூட அப்படிப்பட்ட தனது சக்தியை பக்தர்களுக்கு தர முடியாது, கருடனை தனது வாகனமாக வைத்துள்ள மஹாவிஷ்ணுவினால் கூட கருட சக்தியை எவருக்கும் தர முடியாது.

-21-

तटिल्लेखातन्वीं तपनशशिवैश्वानरमयीं
निषण्णां षण्णामप्युपरि कमलानां तव कलाम् ।
महापद्माटव्यां मृदितमलमायेन मनसा
महान्तः पश्यन्तो दधति परमाह्लादलहरीम् ॥

தடில்லேகாதன்வீம் தபனஶஶிவைஶ்வானரமயீம்
நிஷண்ணாம் ஷண்ணாமப்யுபரி கமலாநாம் தவ கலாம்।
மஹாபத்மாடவ்யாம் ம்ருதிதமலமாயேன மனஸா
மஹாந்த: பஶ்யந்தோ தததி பரமாஹ்லாதலஹரீம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 11 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அசாத்திய மன தைரியம் பெறுவார்கள்



ஹே பராசக்தி,
மின்னல் கொடி போன்று தோன்றி மறைபவளாகவும், ஜ்யோதிர்மயமாகவும், சூரியன், சந்திரன் மற்றும் அக்னியின் உருவமாகவும் உள்ளவளே, ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஸ்தானம், மணிபூரகம், அனாஹத, விசுத்தி, மற்றும் ஆக்ஞா போன்றவற்றின் மேல் பகுதியில் உள்ள ஸஹஸ்ராரம் எனப்படும் ஆயிரம் தள தாமரை வனத்தில் வசிப்பவளே; காமம், மாயை மற்றும் அறியாமையை போன்ற மன அழுக்குகளை அழித்துக் கொண்டு அங்கு செல்லும் ஞானிகள், உன்னை தரிசித்து பேரானந்தத்தை அடைகின்றார்கள்.

(விளக்கம்:

1. தியான நிலையில் உள்ள சாதகனின் குண்டலினி சக்தியானது தலையின் மேல் வழியாக வெளிச் சென்று, சஹஸ்ராரம் எனும் சக்கரத்தை அடைந்தவுடன், அங்குள்ள தெய்வீக ஆற்றலுடன் ஒன்றிணைகின்றது. அந்த நிலையை எட்டி விட்டதும் அமைதியாக பேரானந்தம் எனும் சமுத்திரத்தில் நீந்தியபடியே இருக்கின்றான். இதை எடுத்துக் காட்டுவதே இந்த ஸ்லோகம் ஆகும். அந்த நிலைக்கு மேலான நிலை வேறு எதுவுமே கிடையாது என்பதினால் அந்த நிலையை அடைய விரும்பும் சாதகர்கள் தமது மன மலங்கள் எனப்படும் ஆசை, அகங்காரம், வெறுப்பு, காமம், மாயை மற்றும் அறியாமையை போன்றவற்றை தமது மனதில் இருந்து அழித்துக் கொண்டு தியானத்தில் ஈடுபட வேண்டும். மன

மலங்களை அழித்துக் கொண்டு விட்டவர்களே ஞானிகள்.

2. தேவியின் தரிசனத்தைப் பெற தியான நிலையில் அமர்ந்து கொள்ளும் ஞானிகளின் சக்தியானது ஆறு கீழ் நிலைகளில் இருந்து படிப்படியாக மேலெழும்பும். ஆக்ஞா சக்கரத்தை அடைந்தவுடன் அங்கிருந்து மின்னல் வேகத்தில் மேலெழும்பிச் சென்று ஸஹஸ்ராரம் எனும் நிலையை அடைந்தவுடன் அங்கு தேவியின் தரிசனத்தைப் பெற்று, ஆனந்த வெள்ளத்தில் மூழ்குவார்கள். தாமரை மலர் வனத்தைப் போன்ற நிலையிலான ஸஹஸ்ராரத்தில்தான் சந்திர, சூரிய, அக்னியின் உருவங்களை தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள தேவியானவள் ஜெகத் ஜ்யோதியாக ஜொலித்தபடி இருந்தவாறு, சாதகருக்கு காட்சி தந்து அவரை ஆனந்த வெள்ளத்தில் முழுக்க வைக்கிறாள். அந்த ஒளி வெள்ளத்தை அனைவராலும் காண முடியாது. சஹஸ்ராரத்தை எட்டி விட்ட சாதகர்களால் மட்டுமே காண முடியும்.

-22

भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणा-
मिति स्तोतुं वाञ्छन् कथयति भवानि त्वमिति यः ।
तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्यपदवीं
मुकुन्दब्रह्मेन्द्रस्फुटमकुटनीराजितपदाम् ॥

பவானி த்வம் தாஸே மயி விதர த்ருஷ்டிம் ஸகருணா-
மிதி ஸ்தோதும் வாஞ்சன் கதயதி பவானி த்வமிதி ய: ।
ததைவ த்வம் தஸ்மை திஶஸி நிஜஸாயுஜ்யபதவீம்
முகுந்தப்ரஹ்மேந்த்ரஸ்புடமகுடனீராஜிதபதாம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் ராஜ்யங்களை எல்லாம் வெல்வான்



ஹே பராசக்தி,
ஈஸ்வரனின் பத்தினியான பவானி தேவியே, உனது கடைக் கண் பார்வை, உன் பக்தன் என் மீது விழுந்து கருணை புரிய வேண்டும் என்று ஒருவன் வேண்டிக் கொள்ள நினைத்து, 'பவானி' என்று ஆரம்பித்த உடனேயே, பிரும்மா, விஷ்ணு மற்றும் இந்திரனின் க்ரீடங்களின் ஒளியினால் தீபாராதனை செய்யப்பட்ட உனது பாதங்களில் கலந்து விடும் வகையில், அவனுக்கு நீ மோட்ஷத்தைத் தருகின்றாய்.

(விளக்கம்:

1. பரமசிவனின் மனைவியான பராசக்திதான் இந்த ஸ்லோகத்தில் பவானி தேவி என்கின்ற அவளது இன்னொரு ரூபத்தில் கூறப்பட்டு உள்ளாள்.
2. பவானி தேவி எனும் தேவி பராசக்தியின் மற்றொரு வடிவம் (ரூபம்) ஆவார். பராசக்தி பிரபஞ்சத்தில், அந்தந்த நிலப்பரப்பின் தேவைகளின்படியும், சாப விமோசனம் பெறவும், சாப விமோசனங்கள் தரவும், அசுரர்களை வீழ்த்தவும், தீய சக்திகளை அழிக்கவும் பல்லாயிரம் வடிவங்களிலும், அவதாரங்களிலும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றார்.
3. பிரார்த்தனைகள் என்பது பல்வேறு தரத்திலான செயல் திறன் மற்றும் வார்த்தைகளை உள்ளடக்கியவை. உண்மையான பிரார்த்தனை என்பது வேண்டுபவருக்கும் தெய்வத்திற்கும் இடையே நடைபெறும் உரையாடல் மட்டும் அல்ல இருவருக்கும் இடையிலான நேரடி தொடர்பை வெளிப்படுத்துவது ஆகும்.

4. வழிபடுபவன் மற்றும் வழிபடப்படும் தெய்வங்களுக்கு இடையிலான இணக்கம் என்பது வழிபடுபவரின் உண்மைத் தன்மையிலான பிரார்த்தனைகளை பொறுத்தே அமைந்து இருக்கும். அதுவே பிரார்த்தனை நிறைவேறுவதற்கான முதல் நிபந்தனையாகும். வேண்டுபவர்கள் புரிதலுக்கு ஏற்ப, தெய்வங்களே வெவ்வேறு தரத்திலான அருளை வழங்குகின்றன.
5. இரண்டாவது நிபந்தனை பிரார்த்தனையின் நோக்கம். வெறும் வார்த்தை ஜாலங்களிலான பிரார்த்தனை அதன் தன்மையை வலுப்படுத்துவதில்லை. அதில் உண்மைத் தன்மை இருக்க வேண்டும்; தூய்மை இருக்க வேண்டும்; 'எனக்கு ஒரு கண் போனாலும் சரி, அடுத்தவனுக்கு இரண்டு கண்களும் போக வேண்டும்' போன்ற தன்மையிலான சுயநலத்துடன் கூடியதாக இருக்கக் கூடாது. எவருக்கும் பாதிப்பில்லாமல் 'எனக்கு உன் அருள் வேண்டும்' என்கின்ற பாவனை வேண்டும். தெய்வங்கள் அவற்றை புரிந்து கொள்வதினால்தான் பிரார்த்தனைகளை ஏற்கின்றன அல்லது ஒதுக்கி விடுகின்றன.
6. உயர்ந்த மற்றும் தூய்மையான வழிபாட்டிற்கு தகுதியான நபர் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். அவர் தன்னை ஒரு கடமையை செய்யும் உபாசகராக நினைத்துக் கொள்ளக் கூடாது. முழுமையான மனதுடன் உபாசனைகளில் ஈடுபட வேண்டும். மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளிப்புறத்தில் வேறுபட்டவராக இருக்கக் கூடாது.
7. தேவியின் கருணை அபாரமானது; அது எளிதில் விளக்க முடியாதது. பராசக்தியின்

பாதங்களில் கலந்து விட வேண்டும் என்ற முடிவுடன் ஆத்மார்த்தமாக அன்னையை தியானிக்கும் சாதகன், தூய்மையான மனதுடன் 'பவானி தேவி எனக்கு உனது பாதங்களில் ஐக்கியம் ஆகி விட அருள் புரிய வேண்டும்' என்று வேண்ட நினைத்து ஆத்மார்த்தமாக 'அம்மா பவானி' என்று தனது பிரார்த்தனையை துவங்குகிறான். வேண்டுபவரின் உள்ளத்தில் உள்ளதை, வேண்டப்படும் தெய்வங்கள் புரிந்து கொண்டு அருள் புரிவதை போல, 'அம்மா பவானி' என்ற வார்த்தைகள் அவன் வாயில் இருந்து வெளி வந்த அடுத்த கணம் பவானி தேவி அவனுக்கு சாயுஜ்யம் எனும் மேன்மையான பதவியை தந்து விடுகின்றாளாம். சாயுஜ்யம் என்பது இறைவனின் திருமேனியில் உள்ளேயே பிரவேசம் புரிந்து, திருமேனியிலேயே குடி கொண்டிருத்தல் என்பது ஆகும்.

8. அதுவும் தெய்வங்களின் பாதத்தில் சரணடைந்து விடும் நிலையான மோட்ஷத்தை வேண்டுபவர்களுக்கு அவர்களது எண்ணம் முற்றிலும் உண்மையானது அல்லது பொய்யானது என்பதை உடனடியாக புரிந்து கொண்டு விடுவதினால், உண்மையான பக்தர்களுக்கு 'பக்தனே, நீ வெறும் வேண்டுதலை வைப்பவன் அல்ல, எனது பாதத்தில் கலந்து விட வேண்டியவன் என்பதினால் இனி நீயும் நானும் வேறல்ல, இருவருமே ஒருவரே' என்ற பொருளில் உடனடியாக வேண்டுதலை நிறைவேற்றி வைக்கின்றார்கள் என்ற தத்துவத்தை எடுத்துக் காட்டுவதே இந்த ஸ்லோகம் ஆகும்)

-23-

त्वया हृत्वा वामं वपुरपरितृप्तेन मनसा
शरीरार्धं शम्भोरपरमपि शङ्के हृतमभूत् ।
यदेतत्त्वद्रूपं सकलमरुणाभं त्रिनयनं
कुचाभ्यामानम्रं कुटिलशशिचूडालमकुटम् ॥

த்வயா ஹ்ருத்வா வாமம் வபுரபரித்ருப்தேன மனஸா
ஶரீரார்தம் ஶம்போரபரமபி ஶங்கே ஹ்ருதமபூத் ।
யதேதத்த்வத்ரூபம் ஸகலமருணாபம் த்ரினயனம்
குசாப்யாமானம்ரம் குடிலஶஶிசூடாலமகுடம் ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் கடன் தொல்லை அழியும் , செல்வம் பெருகும்

ஹே பராசக்தி,
பரமசிவனின் இடது பாதியான நீ, சிவந்த உடலோடும், கொண்டை முடியில் கிரீடம் போல சந்திர கலையையும், கனத்த மார்பகங்களையும், முகத்தில் மூன்று கண்களையும் கொண்டு காட்சி அளிக்கின்றாய். சிவபெருமானின் இடது பக்கத்தை மட்டுமே அபகரித்துக் கொண்டு உள்ளாய் என எண்ணிக் கொண்டு இருக்கையில், திருப்தி அடையாமல், அவரது வலது பக்கத்தையும் அபகரித்துக் கொண்டு விட்டதை போல, உனது கனத்த மார்பகத்தினால் முன்புறம் சற்றே குனிந்து உட்கார்ந்து இருக்கையில், உனது மார்பகம் அவருடைய வலது பாகத்தை மறைத்தபடி காணப்படுகின்றது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் சிவனும் சக்தியும் ஒன்றே என்ற தத்துவம் வலிமையாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.
2. சிவபெருமானின் உருவம் பளிங்கு போன்ற வெண்மை நிறமானது, ஆனால் அவரது இடது பாதியான தேவியின் உருவமோ சிவப்பு நிறத்திலானது.
3. அவர்கள் இருவரும் பக்கத்து பக்கத்தில் அமர்ந்து கொண்டு இருக்கையில், அவளது கனத்த மார்பகத்தினால் அவள் முன்புறம் சற்றே குனிந்து உட்கார்ந்து இருக்கையில், அவளது மார்பகம் சிவபெருமானின் வலது பக்கத்து இதய பகுதியை மறைந்து கொண்டு உள்ளதை பார்க்கும்போது அவள் சிவபெருமானை மெல்ல மெல்ல முற்றிலும் தன் உருவால் மறைத்து விடுவாளோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அர்த்தநாரீஸ்வரர்

என்ற தோற்றத்தில் இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு இருந்தபோது, பராசக்தி 'தானே சிவம், சிவமும் தன்னிலே' என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் அவருடைய முழு உருவத்தையும் மறைத்துக் கொண்டு தனது உருவைக் காட்டுகிறாள் என தத்துவார்த்தமாக ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளார்.

4. சிவபெருமான் பளிங்கு கல்லை போன்ற வெண்மை நிறத்தில் இருந்தாலும் பராசக்தியின் சிவப்பு நிறத்தில் அது கலந்து விடுவதினால் இருவரும் சேர்ந்து இருக்கையில் இருவருமே சிவப்பு நிறத்திலான தோற்றத்தில்தான் காட்சி அளிக்கின்றார்களாம். சிவப்பு நிறத்தில் காட்சி தருவதினால் இரண்டாக இணைந்து உள்ள ரூபத்தில் வெண்மை நிறத்தவரான சிவபெருமானை பார்க்க முடியாமல் அந்த ரூபம் பராசக்தி என்றே எண்ணத் தோன்றுகின்றது. சிவபெருமானைப் போலவே தலை முடி மீது சந்திரனையும் சூட்டிக் கொண்டு இருக்கின்றாள், மூன்று கண்களையும் கொண்டு காட்சி தருகின்றாள் என்பதை எல்லாம் பார்க்கும்போது சிவபெருமானையே தன்னுள் கிரகித்துக் கொண்டு விட்டாளோ என்று எண்ணத் தோன்றுகின்றது.
5. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள்

என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

6. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எவ்வாறான அளவில்,எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

7. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

8. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்).

-24-

जगत्सूते धाता हरिरवति रुद्रः क्षपयते
तिरस्कुर्वन्नेतत्स्वमपि वपुरीशस्तिरयति ।
सदापूर्वः सर्वं तदिदमनुगृह्णाति च शिव-
स्तवाज्ञामालम्ब्य क्षणचलितयोर्भ्रूलतिकयोः ॥

ஜகத்ஸூதே தாதா ஹரிரவதி ருத்ர: க்ஷபயதே
திரஸ்குர்வந்நேதத்ஸ்வமபி வபுரீஶஸ்திரயதி ।
ஸதாபூர்வ: ஸர்வம் ததிதமனுக்ருஹ்ணாதி ச ஶிவ-
ஸ்தவாஜ்ஞாமாலம்ப்ய
க்ஷணசலிதயோர்ப்ரூலதிகயோ:॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 20 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் பேய் பூதங்கள் மீதான பயம் விலகும், சூனியம் வைத்திருந்தால் அது அழியும்



ஹே பராசக்தி,
பிரும்மா இந்த லோகத்தை படைக்கின்றார், விஷ்ணு படைத்தவற்றைக் காப்பாற்றுகிறார், ருத்திரனோ பிரளய காலத்தில் (நான்கு யுகங்களின் முடிவில்) பிரபஞ்சத்தை அழிக்கிறார். அவர்களுக்கும் மேலான ஈஸ்வரரோ அந்த மூவரையும் தன்னுள் கிரகித்துக் கொண்டு தானும் மறைந்து விடுகின்றார். ஆனால் மெல்லிய கொடி போன்ற உனது முகத்தில் உள்ள புருவத்தின் உத்தரவை ஏற்று பிரபஞ்சத்தை படைக்க சதாசிவன் மீண்டும் அந்த நால்வரையும் தோற்றுவிக்கின்றார்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில், தெய்வங்களில் முதலும் முழுவதுமான பராசக்தியே தன் விருப்பப்படி பிரபஞ்சத்தை உருவாக்கி மீண்டும் அழிக்கிறாள் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.
2. பராசக்தியின் சரீரத்தில் உள்ளடங்கியவரும், பிரபஞ்சத்தை உருவாக்கும் சக்தியும் கொண்டவருமான, சிவபெருமானின் உச்ச வடிவமான சதாசிவனின் மேன்மையையும் இந்த ஸ்லோகம் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.
3. அனைத்து யுகங்களின் முடிவிலும் தோன்றும் பிரளய காலத்தின் போது, சதாசிவன் தனது அடுத்த கீழ் நிலை வடிவமான ஈஸ்வரராக தோன்றி பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரர் ஆகிய மூன்று கடவுள்களையும் விழுங்கி, பிரபஞ்சத்தை மறையச் செய்கிறார். அவரும் மறைந்து விடுகின்றார், அதாவது சதாசிவனாகி தேவியுடன் இணைந்து

விடுகின்றார் ஆனால் பராசக்தி மறைவதில்லை.

4. இவ்வாறு, பரமேஸ்வரியின் சரீரத்திற்குள் உள்ளடங்கி நிற்கும் சதாசிவன், ஈஸ்வர ரூபத்தையும், அவர் மூலமாக ருத்ரனாகவும் தோற்றங்கள் எடுக்கின்றார். பிரபஞ்சம் மறைந்த சில காலத்திற்குப் பிறகு, மீண்டும் முழுமையான தெய்வமான பராசக்தி மூலம், சதாசிவன் தோன்றி, அவளுடைய கட்டளையை ஏற்று மீண்டும் பிரபஞ்சத்தை தோற்றுவிக்கின்றார்.

5. பராசக்தி தனது முகத்தில் உள்ள புருவங்களின் அசைவுகள் மூலம் அவருக்கு பிரபஞ்சத்தைப் படைக்க உத்தரவு பிறப்பிக்க, சதாசிவனும் ஈஸ்வர ரூபத்தில் தோன்றி பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரனை தோற்றுவித்து பிரபஞ்சத்தை படைக்க, யுகங்களின் தோற்றமும் சக்கரமும் சுழல்கின்றன.

-25-

त्रयाणां देवानां त्रिगुणजनितानां तव शिवे
भवेत् पूजा पूजा तव चरणयोर्या विरचिता ।
तथा हि त्वत्पादोद्वहनमणिपीठस्य निकटे
स्थिता ह्येते शश्वन्मुकुलितकरोत्तंसमकुटाः ॥

த்ரயாணாம் தேவாநாம் த்ரிகுணஜனிதாநாம் தவ ஶிவே
பவேத் பூஜா பூஜா தவ சரணயோர்யா விரசிதா ।
ததா ஹி த்வத்பாதோத்வஹனமணிபீடஸ்ய நிகடே
ஸ்திதா ஹ்யேதே ஶஶ்வன்முகுலிதகரோத்தம்ஸமகுடா: ॥

இந்த ஸ்லோகத்தை தினமும் 1000 முறை 45 நாட்கள் தொடர்ந்து பாராயணம் செய்தால் அதிகார பிராப்தி கிடைக்கும்



ஹே பராசக்தி
ரஜஸ், சத்வ, மற்றும் தமோ குணங்களைக் கொண்ட மூன்று தெய்வங்களான பிரும்மா விஷ்ணு, மற்றும் ருத்திரன் போன்ற மூவரும், நவரத்தினங்களில் ஆன தமது கிரீடங்களின் மேல்புறத்தில் கைகளை தூக்கி வைத்துக் கொண்டு, எப்போதுமே பராசக்தியை வழிபட்டுக் கொண்டு இருப்பதினால், ஒருவர் பராசக்தியின் பாதங்களுக்கு செய்யும் பூஜையானது அந்த மூன்று தெய்வங்களின் சிரஸிற்கும் சேர்த்தே செய்யப்படும் விதத்திலான பூஜையாக அமைந்து விடுகின்றது.

(விளக்கம்:

1. பராசக்தியை பரபிரும்மன் என்றும் கூறுவது உண்டு. பரபிரும்மன் என்பது அசைவற்றது, நிலையானது, அழிவற்றது போன்ற பல குணங்களைக் கொண்டது மட்டும் அல்ல கண்களுக்கு தெரியாத சக்தி ஆகும். அந்த பரபிரும்மன் எல்லா குணங்களுக்கும் அப்பாற்பட்ட சக்தி ஆகும். படைப்பாற்றலைக் கொண்ட சதாசிவனை உள்ளடக்கிய சக்தி. சதாசிவன் சில சமயங்களில் சிவன் அல்லது ஈஸ்வரன் என்றும் அழைக்கப்படுகிறார் என்பதின் காரணம் சதாசிவனிடமிருந்து ஈஸ்வரன் வெளிப்பட, ஈஸ்வரனில் இருந்து ருத்திரன் என்ற பெயரில் சிவன் வெளிப்படுகிறார்.
2. ருத்ரன் பிற இரு தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு ஆகிய இருவருடன் சேர்ந்து ஈஸ்வரரிடம் இருந்து வெளி வந்தவர். சதாசிவம் எனும் சக்தி பொதுவாக சிவன் என்றும் ஈஸ்வரன் என்றும் கூறப்படுகின்றது.

எதுவாக இருந்தாலும் சதாசிவனும் பராசக்தியும் ஒன்றிணைந்த சக்திகள், ஒருவரிடம் இருந்து இன்னொருவரை பிரிக்க முடியாத சக்திகள் ஆகும்.

3. பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன் ஆகிய மூவரும் முறையே சத்வ, ரஜஸ் மற்றும் தமஸ் எனும் மூன்று குணங்களை கொண்டவர்கள். அந்த அனைத்து குணங்களும் பராசக்தியிலிருந்து பெறப்பட்டவை.
4. சத்வ குணம் என்பது தூய்மை மற்றும் அறிவைக் குறிக்க, ரஜோ குணம் என்பது பேரார்வத்தின் செயல்பாடு மற்றும் தமோ குணம் என்பது செயலற்ற தன்மை அல்லது அறியாமை என்பவற்றைக் குறிக்கின்றன.
5. அந்த மூன்று தெய்வங்களும் பராசக்தியின் கீழ் நிலை தெய்வங்கள் ஆகும். இது முந்தைய ஸ்லோகத்தில் விளக்கப்பட்டு உள்ளன.
6. பராசக்தி அழிவற்றவள், நிலையானவள் என்பதினால் அந்த மூன்று தெய்வங்களும், நவரத்தினங்களில் ஆன தமது கிரீடங்களின் மேல்புறத்தில் கைகளை தூக்கி வைத்துக் கொண்டு, எப்போதுமே பராசக்தியை வழிபட்டுக் கொண்டு நிலையாக வணங்கி வருகின்றார்கள் என்பதினால் பக்தர்களால் நேரடியாக பராசக்தியின் பாதங்களை பார்க்க முடிவது இல்லை. எனவே பராசக்தியை வழிபடுபவரினால் செய்யப்படும் எந்தவொரு பிரார்த்தனையும் அந்த மூன்று தெய்வங்களைக் கடந்தே செல்கின்றன.
7. பக்தர்களின் பிரார்த்தனைகள் பராசக்தியின் பாதங்களை அடைவதற்கு முன், மூன்று தெய்வங்களை அந்த பிரார்த்தனையின் பகுதி அடைந்து அவர்களை தாண்டிக் கொண்டு பராசக்தியின் பாதங்களை அடைகின்றன

என்பதினால் பராசக்தியின் பாதங்களில் போடப்படும் மலர்கள் நமஸ்கரித்த வண்ணம் உள்ள மூன்று தெய்வங்களின் தலையிலும் விழுகின்றது என்பதினால், இந்த ஸ்லோகத்தை தியானித்தவாறு பராசக்தியை வழிபடுகையில் பிற மூன்று தெய்வங்களையும் ஆராதனை செய்த பலன் கிடைக்கும் என்பது இந்த ஸ்லோகத்தின் தத்துவம்.

-26-

विरिञ्चिः पञ्चत्वं व्रजति हरिराप्नोति विरतिं
विनाशं कीनाशो भजति धनदो याति निधनम् ।
वितन्द्री माहेन्द्री विततिरपि संमीलितदृशा
महासंहारेऽस्मिन् विहरति सति त्वत्पतिरसौ ॥

விரிஞ்சி: பஞ்சத்வம் வ்ரஜதி ஹரிராப்னோதி விரதிம்
வினாஶம் கீனாஶோ பஜதி தனதோ யாதி நிதனம் ।
விதந்த்ரீ மாஹேந்த்ரீ விததிரபி ஸம்மீலிதத்ருஶா
மஹாஸம்ஹாரேஸ்மின் விஹரதி ஸதி
த்வத்பதிரஸௌ॥

இந்த ஸ்லோகத்தை ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் 1000 முறை என, ஆறு மாதம் பாராயணம் செய்தால் எதிரிகள் அழிவார்கள்



ஹே பராசக்தி
மஹா பிரளய காலத்தில் பிரம்மா , விஷ்ணு , யமன், குபேரன், தேவர்கள் மற்றும் பதினான்கு இந்திரர்கள் முதல் அனைத்து ஜீவராசிகளும் முற்றிலும் அழிந்து விடுகின்றன; ஆனால் சதாசிவன் மட்டும் அதில் அழிவதில்லை; என்றுமே அழிவற்றவளான நீயும் அழிவது இல்லை; மீண்டும் புதிய பிரபஞ்சத்தை சதாசிவன் மூலம் படைக்க வேண்டும் என்பதினால்தான் உன் கற்பின் சக்தியால் சதாசிவனுக்கு அழிவைத் தராமல் காப்பாற்றுகின்றாயோ ?

(விளக்கம்:

1. இந்திரனின் ஆட்சி காலம் ஒரு மன்வந்திரம் ஆகும். ஒவ்வொரு மன்வந்திரத்திலும் ஒரு புதிய இந்திரன் தோன்றி தேவலோக அரசனாக இருப்பார்.
2. நான்கு (4) யுகங்களும் சேர்ந்தது ஒரு மகா யுகம் எனப்படுகின்றது. பன்னிரண்டு (12) மகா யுகங்களைக் கொண்டது ஒரு மன்வந்திரம் ஆகும். ஒரு மன்வந்திரத்திற்கு ஒரு இந்திரன் ஆட்சி செய்கின்றார். பதினான்கு (14) மன்வந்திரங்களைக் கொண்டது ஒரு கல்பம். ஒரு கல்ப காலத்தில் பதினான்கு (14) இந்திரன்கள் ஆட்சி செய்கின்றார்கள். ஒரு கல்பம் முடிந்த பின் பிரளய காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் அழிந்து விட்டு புதிய பிரபஞ்சம் தோன்றுகிறது என்பது புராணங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.
3. பிரளய காலத்தில் பிரபஞ்சம் அழிந்து விடும்போது அதில் பிரம்மா,விஷ்ணு, யமன், குபேரன், தேவர்கள் மற்றும் பதினான்கு

இந்திரர்கள் முதல் அனைத்து ஜீவராசிகளும் முற்றிலும் அழிந்து விடுகின்றார்கள். அடுத்து புதிய பிரபஞ்சம் தோன்றும் போது புதிய மனுக்கள் முதல் இந்திரன்கள், தெய்வங்கள் என அனைவரும் தோன்றுவார்கள்.

4. ஆனால் பிரபஞ்சமே அழிந்தாலும் கூட சதாசிவனும் பராசக்தியும் அழிவது இல்லை. சதாசிவன் பராசக்தியுடன் இணைந்து உள்ள ஆண் சக்தி ஆகும். ஆகவே பராசக்தி என்றுமே பதிவிரதை என்பதினால் அவரை அழிய விடுவதில்லை என்பதை விளக்குவதே இந்த ஸ்லோகம் ஆகும். இதன் மூலம் சதாசிவனின் மகிமை மற்றும் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.

5. இந்த ஸ்லோகத்தில் காணப்படும் முக்கியமான இன்னொரு அம்சம், சதாசிவனால் படைக்கப்பட்ட மூன்று தெய்வங்களில் பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன் இருந்தாலும், பிரளய கால அழிவில் ருத்திரர் அழிவதாக கூறப்படவில்லை. அதன் காரணம் பிரளய காலத்தில் ருத்திரன் அனைவரையும் தன்னுள் விழுங்கி பிரபஞ்சத்தை அழித்த பின்னர், அவர் மீண்டும் சதாசிவனில் இணைந்து மறைந்து விடுகின்றார்.

-27-

जपो जल्पः शिल्पं सकलमपि मुद्राविरचना
गतिः प्रादक्षिण्यक्रमणमशनाद्याहुतिविधिः ।
प्रणामस्संवेशस्सुखमखिलमात्मार्पणदृशा
सपर्यापर्यायस्तव भवतु यन्मे विलसितम् ॥

ஜபோ ஜல்ப: ஶில்பம் ஸகலமபி முத்ராவிரசனா
கதி: ப்ராதக்ஷிண்யக்ரமணமஶனாத்யாஹுதிவிதி: ।
ப்ரணாமஸ்ஸம்வேஶஸ்ஸுகமகிலமாத்மார்பணத்ருஶா
ஸபர்யாபர்யாயஸ்தவ பவது யன்மே விலஸிதம் ॥

=

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
ஆத்ம சித்தி அடைவார்கள்



ஹே பராசக்தி
என்னுடைய உடல், பொருள், ஆவி என அனைத்து பதினான்குமே உன்னுடையதாகட்டும். என் பேச்சுகள் அனைத்துமே உன்னை ஜபிக்கும் மந்திரங்கள் ஆகட்டும்; என் கைகளின் அசைவுகள் அனைத்தும் உனது முத்திரைகளாகட்டும்; நான் நடப்பது கூட உன்னை பிரதர்ஷணம் செய்வதாகட்டும்; நான் உண்பவை உனது ஹோமகுண்டத்தில் போடுபவை ஆகட்டும்; நான் படுத்திருப்பது கூட உன்னை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் நிலையில் அமைந்ததாக இருக்கட்டும்; என் சுகங்கள் அனைத்துமே உன்னுடையதாகட்டும்; நான் என்னை ஆத்மார்த்தமாக உன்னிடம் சமர்ப்பணம் செய்து விட்டதினால் என்னுடைய அனைத்து செயல்களுமே உன்னை ஆராதிக்கும் பூஜைகளாகட்டும்.

(**விளக்கம்:**

1. தேவியின் பாதங்களில் முழுமையாக சரணாகதி அடைய விரும்புபவர்கள் தூய்மையான மனதுடன் அவளை இவ்வாறாக மனதில் வழிபட வேண்டும். இந்த ஸ்லோகம் ஜீவன் முக்த அல்லது தேவி வழிபாட்டில் மேம்பட்ட நிலையை அடைந்து விட்ட சாதகர்களை குறிப்பிடுகின்றது, ஆனால் முழுமையாக ஆத்ம விடுதலை பெற்று விட்ட சாதகர்களை குறிப்பிடவில்லை.
2. மன ரீதியாக குடும்ப வாழ்க்கையில் இருந்து விடுதலை அடைந்து தேவியின் பாதங்களில் சரணாகதி அடைந்து விட்டவர்களை ஜீவன் முக்தன் என்பார்கள்; கட்டாயத்தால் அவர்கள் குடும்ப வாழ்க்கையை தொடர்ந்து கொண்டு

இருப்பவர்கள். மனத்தால் தூய்மை அடைந்து விட்டவர்கள் இதயத்தின் உள்ளே, வெளித் தெரியாமல் தேவியை வழிபாடு செய்தவண்ணம் உள்ளவர்கள். இந்த நிலையை அடைந்து விட்டவர்கள், அதுவரை செய்து வந்திருந்த வெளிப்படையான பூஜை புனஸ்காரங்களை தமது உள்ளத்துக்குளேயே செய்யத் துவங்கி விடுகின்றார்கள், அதாவது வெளி வழிபாடு, உள் மன வழிபாடாகி விடுகின்றது. வழிபாடு என்பது சரணாகதியின் ஒரு வடிவம் ஆகும். தேவியை மனத்தால் வழிபடுகையில், சரண் அடைந்து விட்ட மேல் மட்ட நிலையிலான சாதகர்கள் மனம் பேரானந்த நிலையை பெறுகின்றது.

3. பொதுவாகவே, வழிபாட்டு முறைகள் சடங்கு சம்பிரதாயமான உருவ வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள், தேவியின் வாசஸ்தலமான பிந்துவை தமது இதயத்தில் பதித்து வைத்துக் கொண்டு அவளது நாமத்தை மனதிற்குள் உச்சாடனை செய்தவண்ணம் இருப்பவர்கள். அவர்கள் பூஜைப் பொருட்களை கொண்டு பூஜைகளை செய்வதில்லை, தேவியின் பாதங்களில் பூக்களை வீசுவது, கைகளால் பல முத்திரைகளைக் காண்பிப்பது, மணிக் கணக்கில் தொடர்ந்து மந்திர ஜபம் செய்வது போன்ற வெளிப்புற வழிபாட்டில் ஈடுபட மாட்டார்கள். அவர்கள் தமது உடல், உயிர் மற்றும் ஆன்மாவை அவளிடம் முழு மனதுடன் அர்ப்பணித்து விட்டவர்கள். அவர்கள் இப்படியாக வழிபடுபவர்கள்:

4. 'என் கைகளின் அசைவுகள் அனைத்தும் உன்னை ஆராதிக்கும் பத்து முத்திரைகள்

ஆகட்டும், நான் நடப்பது உன்னை பிரதர்ஷணம் செய்வதாகட்டும். நான் உண்பவை உனது ஹோமக குண்டத்தில் போடுபவை ஆகட்டும், நான் படுத்திருப்பது கூட உன்னை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கும் நிலையில் அமைந்ததாக இருக்கட்டும். என் சுகங்கள் அனைத்துமே உன்னுடையதாகட்டும். என்னுடைய அனைத்து செயல்களுமே உன்னை ஆராதிக்கும் பூஜைகளாகட்டும்'

5. சிவானந்தலஹரி என்பது ஆதி சங்கரரால் சிவபெருமான் மீது இயற்றப்பட்ட ஸ்லோகம் ஆகும். ஆத்மார்த்தமாக தேவியின் பாதங்களில் சரண் அடைந்து விட்டவர்கள் தேவியை பூஜிக்க மலர்களைக் கொண்டு அர்ச்சிக்க வேண்டாம், வேறு விதங்களில் ஆன பூஜைகள் செய்ய வேண்டாம். மனத்தால் அர்ச்சனை செய்தால் மட்டுமே போதும். இதையே ஆதி சங்கரர் அவர் இயற்றி உள்ள சிவானந்தலஹரியின் ஒன்பதாம் ஸ்லோகத்தில் கீழே உள்ளவாறு எடுத்துக் காட்டி உள்ளார். சிவானந்தலஹரி என்பதின் அர்த்தம்- 'மங்களகரமான பேரின்பம்' என்பதாகும்.

'உனக்கு பூஜை செய்யவேண்டும் என்ற விருப்பத்தில் ஆழமான மலைகளிலும், பள்ளங்களிலும், ஜன நடமாட்டமில்லாத காட்டிலும் மலர்களை தேடி அலைபவன் ஒரு மூடன். உமா தேவியின் நாயகனே, தனது மனமாகிய ஒரு தாமரைப் பூவை உனக்கு ஆத்மார்த்தமாக அர்பணித்தால் அதுவே போதுமானது என்பதை அந்த மூடன் அறியாமல் இருப்பது ஏனோ?' - **சிவானந்தலஹரி: ஸ்லோகம்-9.**

6. இந்த ஸ்லோகம் ஒரு மேம்பட்ட நிலையிலான தேவியின் சாதகர்களின் மனநிலையை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்து உள்ளது, ஆனால் ஏற்கனவே தேவியுடன் ஐக்கியம் ஆகிவிட்ட சாதகர்களை குறிப்பிடவில்லை.

-28-

सुधामप्यास्वाद्य प्रतिभयजरामृत्युहरिणीं
विपद्यन्ते विश्वे विधिशतमखाद्या दिविषदः ।
करालं यत्क्ष्वेलं कबलितवतः कालकलना
न शम्भोस्तन्मूलं तव जननि ताटङ्कमहिमा ॥

ஸுதாமப்யாஸ்வாத்ய ப்ரதிபயஜராம்ருத்யுஹரிணீம்
விபத்யந்தே விஶ்வே விதிஶதமகாத்யா திவிஷத: ।
கராலம் யத்க்ஷ்வேலம் கபலிதவத: காலகலனா
ந ஶம்போஸ்தன்மூலம் தவ ஜனநி தாடனகமஹிமா ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--விஷ பயங்கள் அகலும், காரிய சித்தி அடையலாம்



ஹே பராசக்தி

பிரும்மா மற்றும் இந்திரன் போன்றவர்கள் கிழட்டுத் தன்மையை அழிக்கும் மற்றும் என்றும் மரணத்தை தராத அமிர்தத்தை உண்டும் கூட பிரளய காலத்தில் அழிகின்றார்கள். ஆனால் அந்த அமிர்தத்தை உண்ணாமல் ஆல கால விஷத்தை உண்ட உனது கணவர் சதாசிவன் மட்டும் பிரளய காலத்தில் கூட அழிவதில்லை என்பதின் காரணம் உனது காதில் உள்ள தாடங்கம்தானோ ?

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஒரு உண்மை புரிகின்றது. எந்த ஒரு ஸ்த்ரீ என்றாலும் அவளது பதிவிரதைத்தனம் மட்டுமே அவளது கணவனைக் காப்பாற்றுகிறது. அந்த ஸ்த்ரீ பராசக்தியாகவே இருந்தாலும் அது அவளுக்கு பொருந்துகின்றது.
2. பராசக்தியின் பாதி உடல் சதாசிவனின் உருவம் ஆகும். பராசக்தியே இந்த பிரபஞ்சத்தைப் படைக்கின்றாள், அதே பிரபஞ்சத்தில் அசையும், அசையா மற்றும் பல்வேறு ஜீவன்களை படைக்கவும், காக்கவும், அழிக்கவும் தேவையான தெய்வங்களை சதாசிவன் மூலமே உருவாக்குகின்றாள்.
3. பிரபஞ்சத்தின் அழிவின்போது அனைத்து தெய்வங்களும் அழிய வேண்டும் என்பதே நியதி என்றாலும் அந்த நியதியையும் தகர்க்கும் வகையில் சதாசிவனின் அழிவு ஏற்படுவதில்லை. காரணம் மீண்டும் அதே சதாசிவன் மூலமே பிரபஞ்சத்தைப் படைக்க வேண்டி உள்ளது. தனது உடலில் பாதியான சதாசிவன் அழிந்து விட்டால் தன்னுடைய

சக்தியும் பாதி அழிந்து விட்டது போல ஆகிவிடும் அல்லவா?

4. பராசக்தி நிலையானவள், அழிவற்றவள் என்பதினால், மீதி பாதி உடலான சதாசிவனை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் அவள் தன்னுடைய காதுகளில் தாடங்கம் எனும் குண்டலங்களை அணிந்து கொண்டு இருக்கின்றாள் என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த ஸ்லோகம் ஆகும். சதாசிவனின் அழிவு, அவரது துணைவியை விதவை ஆகி விட்டால் அவளால் தடாகத்தை அணிய முடியாது. அப்படி ஒரு நிலை ஏற்படக் கூடாது என்பதால், சதாசிவனுக்கு பிரளய காலத்தினால் பாதிப்பு ஏற்படாமல் காப்பாற்றியது அந்த தாடங்கத்தின் சக்தி என்று தத்துவார்த்தமாக சொல்லப்பட்டு உள்ளது.

5. சிவனும் சக்தியும் தெய்வீக ஜோடியும் அல்ல, தம்பதிகளும் அல்ல. அவர்கள் இருவர் அல்ல, ஒருவரே ஆகும். காரணம் அவர்கள் இரண்டு வெவ்வேறு உடல்களில் கூட இல்லை, ஒரே உடலில் இரு சக்திகளாக உள்ளனர். இந்த வடிவத்தில் சிவம், சக்தி இரண்டும் நுட்பமாக மற்றும் கண்ணுக்கு தெரியாத உருவிலும் உள்ளனர். சதாசிவனுக்கு பராசக்தியே ஆத்மா, அது போலவே பராசக்திக்கு சதாசிவனே ஆத்மா. எந்த ஒருவருக்கும் இரண்டு ஆத்மாக்கள் கிடையாது, அது தெய்வங்களுக்கும் பொருந்தும் என்பதினால் பிரளய காலத்திலும் சதாசிவனுக்கு அழிவே கிடையாது.

6. ஒரு காலத்தில் திருச்சி அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில், பராசக்தி, அகிலாண்டேஸ்வரி என்ற ரூபத்தில் இருந்தபோது அவள் ருத்ர

தேவி எனக் கூறப்பட்டாள். ருத்ரம் என்றால் சினம் மிக்கவள் என்பது அர்த்தம். அவளை எவராலும் சன்னதியில் நுழைந்து வழிபட முடியாத நிலைமை ஏற்பட்டது. அதைக் கேள்விப்பட்ட, சௌந்தர்யலஹரியை இயற்றிய ஆதி சங்கரர், அன்னையின் கோபத்தை தணிக்க 'ஸ்ரீ சக்கரம்' மற்றும் 'சிவ சக்கரம்' ஒருங்கிணைந்த தாடகத்தை வடிவமைத்து, அவளது கோபத்தை அந்த தாடங்கத்தில் அடக்கி வைத்துக் கொள்ளுமாறு வேண்டுதல் விடுக்க, கருணை மிக்க பராசக்தியும் ஆதி சங்கரரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு சினத்தை அடக்கிக் கொண்டாளாம். அந்த தாடங்கம் இன்றும் அகிலாண்டேஸ்வரி காதுகளில் காணப்படுகின்றது .

7. தாடகங்கத்தை அணிந்து கொண்டு இருந்தால் மரணம் சம்பவிக்காது. தாடங்கம் எனும் குண்டலத்தை குறித்த கதை ஒன்று மகாபாரதத்தின் பதிவிரதா மாஹாத்மியப் பர்வம் பகுதியில் உள்ளது (https://mahabharatham.arasan.info/2014/10/Mahabharatha-Vanaparva-Section308.html). அதில் கர்ணனின் காதுகளில் தாடங்கம் எனும் குண்டலம் இருக்கும்வரை அவனுக்கு அழிவில்லை என்பதை புரிந்து கொள்ளும் இந்திரன் அதை வஞ்சகமாக கர்ணனிடம் இருந்து தானமாகப் பெற்றுக் கொண்டு கர்ணனின் அழிவிற்கான பாதையை வகுத்தான். அதனால்தான் யுத்தத்தில் வெல்லவே முடியாத கர்ணனுக்கு மரணம் ஏற்பட்டது என்பதான கதை உள்ளது என்பதை கவனத்தில் கொண்டால் தாடங்கத்தின் மேன்மை புரியும்.

8. கர்ணனின் காதுகளில் இருந்த தாடங்கம் எனும் குண்டலத்திற்கே அத்தனை சக்தி இருந்தது என்றால் தேவியின் காதுகளில் இருந்த தாடங்கம் எனும் குண்டலத்தின் மேன்மையைக் குறித்து யாரால் கூற இயலும்?

அகிலாண்டேஸ்வரி தாடங்கம்

1. way for his death he fraudulently received it from Karna as a gift. An invincible Karna therefore had to meet death in the war. The greatness of the Tadagangam can be understood by this story.

2. If the Tadagangam, earring in Karna's ears had so much power, then how to explain the greatness of the Tadagangam worn by Parasakti?

A

-29-

किरीटं वैरिञ्चं परिहर पुरः कैटभभिदः
कठोरे कोटीरे स्खलसि जहि जम्भारिमुकुटम् ।
प्रणम्रेष्वेतेषु प्रसभमुपयातस्य भवनं
भवस्याभ्युत्थाने तव परिजनोक्तिर्विजयते ॥

கிரீடம் வைரிஞ்சம் பரிஹர புர: கைடபபித:
கடோரே கோடீரே ஸ்கலஸி ஜஹி ஜம்பாரிமுகுடம் ।
ப்ரணம்ரேஷ்வேதேஷு ப்ரஸபமுபயாதஸ்ய பவனம்
பவஸ்யாப்யுத்தானே தவ பரிஜனோக்திர்விஜயதே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--தீயவர் அடங்குவார்கள், சுக பிரசவம் ஏற்படும்

ஹே பராசக்தி,
உன்னைக் காண பரமேஸ்வரர் உனது வீட்டிற்கு வரும்போது உன் பாதங்களை பிரும்மா, விஷ்ணு மற்றும் இந்திரன் முதலியோர் வணங்கி கொண்டு இருக்கின்றார்கள். பரமசிவன் வருவதைக் கண்டதும் நீ வேகமாக எழுந்து அவரை வரவேற்க செல்லும்போது, ஆவரண தேவதைகள் கவலையில், 'பிரும்மா மற்றும் இந்திரனின் கிரீடத்தை ஒதுக்கி விட்டுச் செல்', 'விஷ்ணுவின் கிரீடம் உனது காலில் பட்டு இடறி விழப் போகின்றாய்', அந்த கிரீடங்களை ஒதுக்கி விட்டு செல்' என்று உனது காதுகளில் மட்டும் கேட்கும்படியாக குரல் எழுப்புகிறார்கள்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் பராசக்தி அனைத்து தேவர்களுக்கும் தெய்வங்களுக்கும் மேலானவள் என்பதும், அவளை சுற்றி உள்ள ஆவரண தேவதைகள் எனப்படும் காவல் தேவதைகள் எந்த அளவு பராசக்தி மீது அன்பை செலுத்துகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டும் வகையில் கூறப்பட்டு உள்ளது.
2. இந்த ஸ்லோகம் 'பிரும்மா, விஷ்ணு போன்ற தெய்வங்களும், தேவலோக அதிபதி இந்திரனும் அனு தினமும் வந்து தேவியின் பாதங்களை வணங்கி கொண்டு இருக்கின்றார்கள் என்பதை மீண்டும் வெளிப்படுத்துகின்றது. இந்த நிலை ஏற்கனவே 25 ஆம் ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ளது என்றாலும், இதிலும் கூறப்பட்டு உள்ளதின் காரணம் பராசக்தியின் ஆவரண தேவதைகள் பராசக்தி எங்கேயாவது

செல்லும்போது, அவளுக்கு எந்த விதமான இடையூறும் ஏற்பட்டு விடக் கூடாதே என்று எத்தனை கவலைபடுகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.

3. பராசக்தியின் இல்லத்திற்கு திடீர் என வருகை தந்த பரமேஸ்வரரை வரவேற்க பராசக்தி வேகமாக எழுந்து செல்லும்போது அவளது பாதங்களை வணங்கி கொண்டிருக்கும் தெய்வங்களின் கிரீடங்கள் அவள் பாதத்தில் பட்டு அவளது பாதங்களுக்கு இடையூறு செய்யக் கூடாதே என்ற கவலையில் ஆவரண தேவதைகள் அந்த கிரீடங்களை தவிர்த்து விட்டு செல்லுமாறு பராசக்திக்கு குரல் கொடுப்பதாக இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ளது.
4. அதே சமயம் பராசக்தி அவசரமாக எழுந்து பரமசிவனை வரவேற்க செல்லுகையில் கிரீடத்தோடு தலையை குனிந்து பராசக்தியை வணங்கி கொண்டிருந்த தெய்வங்களை அலட்ஷியப்படுத்துவது போல அவர்களது கிரீடங்களை பராசக்தி தமது காலால் உதைத்து விட்டு சென்றாள் என்ற அவப்பெயர் பராசக்தி மீது விழுந்து விடக் கூடாதே என்ற கவலையிலும் குரல் எழுப்பினார்கள் என்பது இதில் மறைந்து உள்ள இன்னொரு அர்த்தம் ஆகும். இவற்றில் இருந்து எவ்வளவு நுணுக்கமாக ஒவ்வொரு ஸ்லோகத்தையும் ஆதி சங்கரர் அமைத்து உள்ளார் என்பதும் தெரிகின்றது.

-30-

स्वदेहोद्भूताभिर्घृणिभिरणिमाद्याभिरभितो
निषेव्ये नित्ये त्वामहमिति सदा भावयति यः ।
किमाश्चर्यं तस्य त्रिनयनसमृद्धिं तृणयतो
महासंवर्ताग्निर्विरचयति नीराजनविधिम् ॥

ஸ்வதேஹோத்பூதாபிர்க்ருணிபிரணிமாத்யாபிரபிதோ
நிஷேவ்யே நித்யே த்வாமஹமிதி ஸதா பாவயதி ய: ।
கிமாஸ்சர்யம் தஸ்ய த்ரினயனஸம்ருத்திம்
த்ருணயதோ
மஹாஸம்வர்தாக்னிர்விரசயதி நிராஜனவிதிம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 96 நாட்கள்
பாராயணம் செய்தால்
--கூடு விட்டு கூடு பாயும் வித்தை கைகூடும்

ஹே பராசக்தி,
‘ஆதியும் அந்தமும் இல்லாத தாயே, உன்னுடைய பாதங்களில் இருந்து வெளிவரும் அணிமா மற்றும் மகிமா போன்ற எட்டு சித்திகளால் (தேவதைகள்) நாலாபுறமும் சூழப்பட்டு உள்ள தேவியே’ என்று உன்னை போற்றியவாறு எந்த ஒரு உபாசகன் உன்னை தியானிக்கின்றானோ, அவனுக்கு பிரளய காலத்தில் தோன்றும் பஞ்சாக்னி கூட கற்பூர ஆரத்தி எடுப்பதை போலவே தோன்றும். அவன் சிவஸாயுஜம் போன்ற ஐஸ்வரியங்களையும் கூட ஒரு புல்லை போலவே பாவிப்பான் என்பதில் என்ன ஆச்சர்யம்?

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் பராசக்தி தேவியின் உடலில் இருந்து வெளிப்படும் அமானுஷ்ய சக்திக் கதிர்கள், எதிரில் உள்ளவர்களை சுற்றி ஒளிக் கதிர்கள் போல பரவி விடுகின்றன என்றும், அந்த நிலையில் தேவியை தியானிப்பவர்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதாகவும் கூறப்பட்டு உள்ளது.
2. அவளை சுற்றி காவலில் உள்ள எட்டு ஆவரண தேவதைகளுக்கு அந்த சித்திகள் எனும் ஆற்றல்களை அந்த தேவியே அளித்து இருக்கின்றாள் என்றாலும் அந்த அமானுஷ்ய சக்திகளை பராசக்தியின் அடிப்படை இயல்பில் காண முடியாது என்பதைத்தான் இந்த ஸ்லோகம் குறிப்பிடுகிறது. அந்த எட்டு ஆவரண தேவதைகளும் அணிமா, மஹிமா, கரிமா, லஹிமா, ப்ராப்தி, பிரகாம்யா, இசித்வா மற்றும் வசித்வா என்பவர்கள் ஆவர்.

3. எட்டு சித்திகள் அல்லது ஆற்றல்கள் என்பவை - **அணிமா:** ஒரு அணுவைப் போல சிறியதாக தன்னை மாற்றிக் கொள்ளுதல் / **மஹிமா:** உடலின் அளவை எல்லையற்ற அளவில், விண்வெளியைத் தொடும் அளவில் பெரியதாக்கிக் கொள்ளும் திறன் / **கரிமா:** ஒருவராலும் அசைக்க முடியாத அளவில் உடல் எடையை அதிகரித்துக் கொள்வது / **லஹிமா:** காற்றில் கூடப் பறக்கும் அளவில் உடலின் எடையை பஞ்சு போல ஆக்கிக் கொள்வது /**ப்ராப்தி:** உலகின் எந்த மூலைக்கும் க்ஷணத்தில் சென்றடையும் திறன் /**பிரகாம்யா:** ஒருவரின் மனதில் புகுந்து அவர்கள் நினைப்பதை அறிந்து கொள்ளும் திறன் /**இசித்வா:** தெய்வங்களுக்கு இணையான சக்தியை அடைவது / மற்றும் **வசித்வா:** எந்த மனிதரையும் அடக்கி ஆள முடிந்த திறன், பறவை மற்றும் விலங்குகளைக் கூட அடக்க முடியும்.
4. பராசக்தியை தியானிக்கும் உண்மையான சாதகர்கள், அஷ்டமா சித்திகளான ஆற்றல்களை அடைய எண்ணி தியானிப்பது இல்லை. மாறாக பராசக்தியுடன் இணைந்து விட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மட்டுமே தியானிக்கின்றார்கள் என்றாலும் அவர்கள் பராசக்தியை சென்றடைய அவளை சுற்றி உள்ள பாதையில் காவலில் உள்ள ஆவரண தேவதைகளைக் கடந்தே செல்ல வேண்டி உள்ளது.
5. தேவியின் பாதங்களுடன் கலந்து விட வேண்டும் என விரும்பி தியானிப்பவர்கள் ஒரு க்ஷணம் கூட தனக்கு அஷ்டமா சக்திகள் கிடைக்க வேண்டும் என நினைப்பது இல்லை.

அந்த சக்திகளை பெற்றுக் கொண்டு மற்றவர்கள் பார்வையில் தன்னை ஒரு பெரிய ஆன்மீகவாதியாக காட்டிக் கொள்ளவும் விரும்புவது இல்லை. அவர்களது எண்ணம் முழுவதுமே மோட்ஷ நிலையை விட மேலான நிலையான தேவியின் பாதங்களில் கலந்து விட வேண்டும் என்பதாகவே இருக்கும் .

6. அவர்கள் சிவசாயுஜ்யம் எனும் நிலையை கூட வெறும் புல்லை போன்றது என்றே நினைக்கின்றார்கள். சிவசாயுஜம் என்பது, சிவபெருமானுடன் ஒன்றிணையும் நிலை ஆகும். இந்த நிலை ஒருவரை கைலாயத்திற்கு அனுப்பி வைக்கும் நிலை ஆகும்.

7. உபாசகர்களின் உண்மையான பிரார்த்தனை, 'அயமாத்மா' (‘இந்த ஆத்மாவே பிரம்மம்’), 'தத்வமசி' (‘நான் அது’ அல்லது ‘நீ அதுதான்’) மற்றும் 'அஹம் பிரம்மா' (‘நான் பிரம்மன்’, அல்லது ’நான் தெய்வீகமானவன்’) என்பதாகவே உள்ளது. புனித தேவியின் காலடியில் இணைவது என்பது இவற்றின் பொதுவான பொருள் ஆகும்).

-31-

चतुष्षष्ट्या तन्त्रैः सकलमतिसंधाय भुवनं
स्थितस्तत्तत्सिद्धिप्रसवपरतन्त्रैः पशुपतिः ।
पुनस्त्वन्निर्बन्धादखिलपुरुषार्थैकघटना-
स्वतन्त्रं ते तन्त्रं क्षितितलमवातीतरदिदम् ॥

சதுஷ்ஷஷ்ட்யா தந்த்ரை: ஸகலமதிஸந்தாய புவனம்
ஸ்திதஸ்தத்தத்ஸித்திப்ரஸவபரதந்த்ரை: பஶுபதி: ।
புனஸ்த்வன்னிர்பந்தாதகிலபுருஷார்தைககடனா-
ஸ்வதந்த்ரம் தே தந்த்ரம் க்ஷிதிதலமவாதீதரதிதம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--அனைத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, செல்வங்களையும் ஈட்ட முடியும்.



ஹே பராசக்தி

அனைத்து ஆத்மாக்களின் இறைவனான சிவபெருமான் ஒவ்வொருவரும் தாம் விரும்பும் சக்தியை அடைந்து கொள்ள, அறுபத்து நான்கு தந்திரங்களைப் (மந்திரக் கலைகளை) படைத்த பின்னர் அமைதியாகி விட்டார். ஆனால் திரும்பவும் உனது கட்டாயத்தினால் சகல சக்திகளையும் ஒருங்கே கொடுக்கும் உன்னுடைய ஸ்ரீ வித்யா மந்திரமான ‘பஞ்சதசாக்ஷரி ’ எனும் கலையை உலகிற்கு கொடுத்தார்.

(விளக்கம்:

1. ஐம்புலன்களையும் கொண்டு சம்சார வாழ்க்கையில் மூழ்கிக் கிடப்பவர்களை பசுக்கள் என்று ஆன்மீக ரீதியில் கூறுவார்கள். அந்த மனிதர்கள் கர்மா, மாயை மற்றும் மோகம் எனும் மூன்று நிலைகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள்
2. மோகம் என்பது காம இச்சைகள் ஆகும். மாயை என்பது அறியாமை, மற்றும் கர்மா என்பது பூர்வ ஜென்ம பாவ மற்றும் புண்ணியங்களினால் ஏற்படும் பலன்கள் ஆகும். இவற்றினால் ஒவ்வொருவரும் பிறப்பு - இறப்பு எனும் நிலைகளில் சுழன்று கொண்டு உள்ளார்கள்.
3. அவர்களில் பரமேஸ்வரரை உபாசிப்பவர்கள் மோட்ஷம் பெறுவார்கள், அவரை உபாசிக்காதவர்களுக்கு மீண்டும், மீண்டும் பந்தத்திலான பிறப்பும், இறப்பும் ஏற்படுகின்றது. இது ஒரு பொது நிலை ஆகும்.
4. பக்தர்களுக்கு மேலான அருளை தருபவரே பரமசிவன் என்பதினால் அவரை மனிதர்களின் அதிபதி எனும் பொருளில்

சமஸ்கிருதத்தில் பசுபதி என அழைக்கின்றார்கள். 'பசு' என்றால் மானிடர்கள் என்றும் 'பதி' என்றால் ரட்ஷிப்பவர் என்பது பொருள். அதனால்தான் இந்த ஸ்லோகத்திலும் சிவபெருமானைக் குறிப்பிடுகையில் 'பசுபதி:' எனக் கூறப்பட்டு உள்ளது.

5. அந்த பரமேஸ்வரனே பிரபஞ்சம் உருவாகிய பின்னர், சில காலங்களிலேயே பராசக்தியையும் கலந்து ஆலோசனை செய்யாமல் மானிடர்களின் ஆசைகளை அவரவர்களே பூர்த்தி செய்து கொள்ளும் விதத்திலான **64** விதங்களில் ஆன தந்திர சாஸ்திரங்களை உருவாக்கி விட்டார்.

6. அந்த **64** கலைகளும் சாதாரணக் கலைகள் அல்ல. அவற்றை **64** தாந்த்ரீக யோகினிகள் எனப்படும் எட்டு சித்தி தேவதைகள், சக்தி தேவியிடம் இருந்து பெற்றுக் கொண்டு இருந்தவைகள் ஆகும். ஒவ்வொரு சித்தி தேவதைகளும் எட்டு விதமான சித்திகளை பெற்று இருந்தார்கள். அந்த எட்டு சக்திகளுக்கும் தனித்தனியிலான தேவதைகள் இருந்தார்கள். இப்படியாக ஏற்பட்டதே தந்திர சாஸ்திரத்தில் காணப்படும் **64** தேவதைகள் ஆவார்கள். அந்த எட்டு சித்தி தேவதைகளை ஆராதித்து அவர்களிடம் இருந்து அந்த சித்திகளை அடைய முடியும் .

7. அவர்கள் அனைவருமே பரமேஸ்வரியின் காவல் தேவதைகள் என்றாலும் அவர்கள் கொண்டிருந்த சக்தியை பெற்றுக் கொண்ட சாதகர்கள், சாஸ்திரங்களுக்கு விரோதமான பல்வேறு தீய செயல்களில் ஈடுபட்டார்கள். அந்த சக்திகளினால் நன்மை, தீமை, காம, மோக இச்சைகளை பெறவும் முடிந்தது.

இதனால்தான் பல இடங்களிலும் மோகினி மற்றும் யோகினி ஆலயங்களும் ஏற்பட்டன (மேலும் அவற்றை அறிந்து கொள்ள தரப்பட்டு உள்ள லிங்கைப் பார்க்கவும் : **https://santhipriya.com/2020/12/யோகினிகள்.html**).

8. இந்த நிலையைக் கண்டு பரமேஸ்வரன் மனம் கலங்கி நின்றபோது, பராசக்தியானவள், அந்த சக்திகளை எல்லாம் முறியடித்து நல்லவர்களுக்கு சுகத்தைக் கொடுக்கும் ஸ்ரீ வித்யா எனும் உபாசனையையும் சகல சக்திகளையும் ஒருங்கே கொடுக்கும் தந்திரக் கலையான 'பஞ்சதசாக்ஷரி' எனும் கலையையும் அதே சிவபெருமான் மூலம் உலகிற்கு கொடுக்க வைத்தார்.

9. பதினைந்து எழுத்துக்களை கொண்ட லலிதாம்பிகையின் பிரதான மந்திரம் பதினைந்து பீஜங்களை கொண்ட பஞ்சதசாக்ஷரி எனும் மஹா மந்திரமாகும். பஞ்சதச என்றால் பதினைந்து என்று பொருள். இந்த மந்திரம் பதினைந்து எழுத்துக்களை கொண்டுள்ளது, அதனால் பஞ்சதசாக்ஷரி எனப்படுகிறது.

10. பீஜம் என்பது தனியே ஒரு சம்ஸ்கிருத எழுத்தினை மட்டும் கொண்டதல்ல. உதாரணமாக 'ஸ' என்பது ஒரு சமஸ்கிருத எழுத்தினை கொண்ட பீஜம் ஆகும். அதே போல 'ஹ்ரீம்' என்பது பல எழுத்துக்களை கொண்ட பீஜம் ஆகும். சமஸ்கிருதத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு அர்த்தம் உண்டு.

11. பதினைந்து பீஜங்களை கொண்ட பஞ்சதசாக்ஷரி மூன்று பகுதிகளாக உள்ளது. ஒவ்வொரு வரியும் ஒரு கூடம் எனப்படும், இந்த

மூன்று கூடங்களும் முறையே வாக்ப கூடம், காமராஜ கூடம், சக்தி கூடம் எனப்படும்.

12. வாக்ப கூடம் லலிதாம்பிகையின் முகத்தினையும், காமராஜ கூடம் கழுத்தில் தொடங்கி இடை வரையிலான பகுதியையும், இடைக்கு கீழே உள்ள பகுதி சக்தி கூடத்தினையும் குறிக்கும்.
13. இந்த மூன்று கூடங்களும் லலிதாம்பிகையின் முழு வடிவத்தினால் ஆக்கப்படிருக்கின்றது. இந்தக் காரணத்தினால்தான் பஞ்சதசாக்ஷரி மிக சக்தி வாய்ந்த மந்திரமாக கருதப்படுகிறது.
14. சிவனுக்கு பஞ்சாக்ஷரி மந்திரம் போலவும், விஷ்ணுவிற்கு அஷ்டாக்ஷரி மந்திரம் போலவும், பராசக்திக்கு பஞ்சதசாக்ஷரி மந்திரம் அமைந்து உள்ளது).

-32-

शिवः शक्तिः कामः क्षितिरथ रविः शीतकिरणः
स्मरो हंसः शक्रस्तदनु च परामारहरयः ।
अमी हृल्लेखाभिस्तिसृभिरवसानेषु घटिता
भजन्ते वर्णास्ते तव जननि नामावयवताम् ॥

ஶிவ: ஶக்தி: காம: க்ஷிதிரதரவி: ஶீதகிரண:
ஸ்மரோ ஹம்ஸ: ஶக்ரஸ்ததனு ச பராமாரஹரய: ।
அமீ ஹ்ருல்லேகாபிஸ்திஸ்ருபிரவஸானேஷு கடிதா
பஜந்தே வர்ணாஸ்தே தவ ஜனநி நாமாவயவதாம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--வியாபாரங்களில் வெற்றி பெறலாம்.



ஹே பராசக்தி,
உன்னை முதல் பகுதியான 'க ஏ ஈ ல ஹ்ரீம்', இரண்டாம் பகுதியான 'ஹ ஸ க ஹ ல ஹ்ரீம்' மற்றும் மூன்றாம் பகுதியான 'ஸ க ல மற்றும் ஹ்ரீம் எனும் பதினைந்து அக்ஷரங்களினால் ஆன பஞ்சதசாக்ஷரி எனும் மந்திரத்தினால் உபாசனை செய்கின்றார்கள்.

(**விளக்கம்:**

1. ஏற்கனவே முந்தைய ஸ்லோகத்தில் குறிப்பிட்டு உள்ளதை போல தேவியின் உருவம் மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டு ஆராதிக்கப்படுகின்றது.
2. பஞ்சதச என்றால் பதினைந்து என்று பொருள். இந்த மந்திரம் பதினைந்து எழுத்துக்களை கொண்டுள்ளது, அதனால் 'பஞ்சதசாக்ஷரி' எனப்படுகிறது.
3. ஒவ்வொரு வரியும் ஒரு கூடம் எனக் கூறப்படும். பஞ்சதசாக்ஷரி மந்திர பீஜங்கள் முறையே வாக்ப கூடம், காமராஜ கூடம், சக்தி கூடம்- எனப்படும் முன்று பகுதிகளாக உள்ளன.
4. வாக்ப கூடம் என்பது ஸ்ரீ லலிதாம்பிகையின் முகத்தையும், காமராஜ கூடம் என்பது ஸ்ரீ லலிதாம்பிகையின் கழுத்தில் இருந்து இடை வரையும், சக்தி கூடம் என்பது இடைக்கு கீழ் பகுதியையும் குறிக்கும்.
5. இந்த மூன்று கூடங்களும் ஸ்ரீ லலிதாம்பிகையின் முழு வடிவை தியானிக்கும் வகையில் அமைந்து உள்ளன.
6. ஞான சக்தியைக் குறிக்கும் மேல் கூடம் எனப்படும் தேவியின் முக பாகத்தை ‘க ஏ ஈ ல ஹ்ரீம்’ என்ற முதல் ஐந்து அட்ஷரங்களை கொண்டு தியானிக்கின்றார்கள். இந்த

பாகத்தை அக்னி கண்டம் என்றும் கூறுவார்கள்.

7. இச்சா சக்தியைக் குறிக்கும் தேவியின் கழுத்திலிருந்து இடுப்பு வரையிலான மத்திய கூடத்தை ' ஹ ஸ க ஹ ல ஹ்ரீம்' என்னும் அக்ஷரங்களினால் தியானிக்கின்றார்கள். இந்த பாகத்தை சூர்ய கண்டம் என்றும் கூறுவார்கள்.

8. கிரியா சக்தியை வெளிப்படுத்தும் சக்தி கூடமான தேவியின் இடுப்பின் கீழ் பகுதியை மந்திரத்தின் இறுதிப் பகுதியான 'ஸ க ல ஹ்ரீம்' எனும் நான்கு அக்ஷரங்களினால் தியானிக்கின்றார்கள். இந்த பாகத்தை சந்திர கண்டம் என்றும் கூறுவார்கள்.

9. இந்த காரணத்தினால்தான் பராசக்தி எனப்படும் ஸ்ரீ லலிதா மஹா பராசக்தியின் உபாஸனைக்கு உச்சரிக்கப்படும் பஞ்சதசாக்ஷரி மந்திரம் மஹா சக்தி வாய்ந்த மந்திரமாக கருதப்படுகிறது. பதினைந்து அட்ஷரங்களை இந்த மந்திரம் கொண்டு உள்ளதினால் இந்த மந்திரத்தை 'பஞ்சதசாக்ஷரி' என்பதாகவும் கூறுவார்கள்.

10. எப்படி காயத்ரி மந்திரம் போன்றவை குரு முகமாக உபதேசம் செய்து கொள்ளுவது அவசியமோ அது போன்றே இந்த மந்திரத்தையும் குரு மூலமே உபதேசம் பெற்றுக் கொண்டு ஜபிக்க வேண்டும்).

11. ஒவ்வொரு கூடத்தின் முடிவிலும் வரும் ஹ்ரீம் எனும் அக்ஷரமானது சாதகர்கள் கடக்க வேண்டிய மூன்று படிகளை குறிக்கின்றதாம் அவற்றுக்கு கிரந்தி என்று பெயர். அக்னி கண்டத்தில் வரும் ஹ்ரீம் என்பதை ருத்ர கிரந்தி என்றும் சூர்ய கண்டத்தில் வரும் ஹ்ரீம் என்பதை விஷ்ணு கிரந்தி என்றும் சந்திர

கண்டத்தில் வரும் ஹ்ரீம் என்பதை பிரும்ம கிரந்தி என்பதாகவும் குறிப்பிடுகின்றார்கள்.



-33-

स्मरं योनिं लक्ष्मीं त्रितयमिदमादौ तव मनो-
र्निधायैके नित्ये निरवधिमहाभोगरसिकाः ।
भजन्ति त्वां चिन्तामणिगुननिबद्धाक्षवलयाः
शिवाग्नौ जुह्वन्तः सुरभिघृतधाराहुतिशतैः ॥

ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம் த்ரிதயமிதமாதௌ தவ மனோ-
ர்னிதாயைகே நித்யே நிரவதிமஹாபோகரஸிகா: ।
பஜந்தி த்வாம் சிந்தாமணிகுனநிபத்தாக்ஷவலயா:
ஶிவாக்னௌ ஜுஹ்வந்த: ஸுரபிக்ருததாராஹுதிஶதை: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--பணம் விருத்தி ஆகும்.



ஹே பராசக்தி

என்றும் நிலையானவளும், அழிவற்றவளுமான பரமேஸ்வரி, உன்னை உபாசிக்கும் சாதகர்கள், கயிற்றில் கோர்க்கப்பட்டுள்ள சிந்தாமணி மாலையை கையில் ஏந்திய வண்ணம் உன்னை ஆராதிக்கும் போது, அவர்கள் உச்சாடனம் செய்யும் பதினைந்து அக்ஷரமான பஞ்சதசாக்ஷரி மந்திரத்தின் முன், காம பீஜமான 'க்ளீம்' எனும் அக்ஷரத்தையும், புவனேஸ்வரி பீஜமான 'ஹ்ரீம்' எனும் அக்ஷரத்தையும், லட்சுமி பீஜமான 'ஸ்ரீம்' எனும் அக்ஷரத்தையும் சேர்த்து மந்திர உச்சாடனைகள் செய்தபடி, த்ரீகோணமான அக்னி குண்டத்தில், பசு நெய்யை ஊற்றியவாறு, ஸ்ரீ சக்கரத்தில் இருக்கும் உன்னை தியானித்து சேவிக்கின்றார்கள்.

(விளக்கம்:

1. **32** ஆம் ஸ்லோகத்தில் கூறப்பட்டது பஞ்சதசாக்ஷரி எனும் மஹா மந்திரம் ஆகும். ஆனால் இந்த ஸ்லோகத்தில் (**33**) கூறப்பட்டு உள்ளதோ சௌபாக்கிய பஞ்சதசாக்ஷரி மந்திரம் என்பதாகும்.
2. கையில் சிந்தாமணி மணியினால் ஆன மாலையை வைத்துக் கொண்டு பஞ்சதசாக்ஷரி மந்திரத்துடன் காம அக்ஷரத்தையும், புவனேஸ்வரி மற்றும் லட்சுமி அக்ஷரத்தையும் சேர்த்து உச்சாடனம் செய்தவண்ணம், சிவாக்கினி எனப்படும் முக்கோண ஹோம குண்டத்தில் சுத்த பசும் நெய்யை ஊற்றி தேவியை ஆவாஹிக்கும்போது அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்பது தத்துவம் ஆகும்.

3. ஹோம குண்டங்கள் பெரும்பாலும் சதுரமாகவே இருக்கும். ஆனால் சௌபாக்கிய பஞ்சதசாக்ஷரி மந்திரத்தை உச்சரித்தபடி செய்யப்படும் ஹோம குண்டம் மட்டும் சிவபெருமானுக்கு உகந்த முக்கோண வடிவில் இருந்தால்தான் பராசக்தியின் முழுமையான கடாக்ஷம் கிடைக்கும்).

-34-

शरीरं त्वं शम्भोः शशिमिहिरवक्षोरुहयुगं
तवात्मानं मन्ये भगवति नवात्मानमनघम् ।
अतश्शेषश्शेषीत्ययमुभयसाधारणतया
स्थितः संबन्धो वां समरसपरानन्दपरयोः ॥

ஶரீரம் த்வம் ஶம்போ: ஶஶிமிஹிரவக்ஷோருஹயுகம்
தவாத்மானம் மன்யே பகவதி நவாத்மானமனகம் ।
அதஶ்ஶேஷஶ்ஶேஷீத்யயமுபயஸாதாரணதயா
ஸ்தித: ஸம்பந்தோ வாம் ஸமரஸபரானந்தபரயோ: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--கணவன் மனைவி இடையே அன்பு அதிகரிக்கும்



ஹே பராசக்தி,
நீ சூரியன் மற்றும் சந்திரனை உன்னுடைய ஸ்தனங்களாகக் கொண்டு, ஆனந்த பைரவரின் (பரமேஸ்வரன்) உடலாக காட்சி தருகின்றாய். எனவே, நான் உன்னை தூய்மையான சிவனாகக் கருதுகிறேன். உன்னுடைய சரீரம் ஆனந்த பைரவரின் சரீரமாகவும், ஆனந்த பைரவரின் சரீரம் உன்னுடையதாகவும் உள்ளதினால்தான் இருவருமே சமமான குணங்களை உடையவராக இருக்கின்றீர்கள். அனைத்து குணாதிசயங்களும் இருவருக்குமே பொதுவாக உள்ளதினால் நீங்கள் பேரானந்த நிலையிலான ஆனந்த பைரவராகவும், ஆனந்த பைரவியாகவும் காட்சி தருகின்றீர்கள்.

(விளக்கம்:

1. இங்கு சந்திர சூரியர்கள் பராசக்தியின் மார்பகங்களாக கூறப்பட்டு உள்ளது வெளிப் பார்வைக்கு விகாரமாக தோன்றலாம். ஆனால் ஸ்லோகத்தில் அப்படி கூறப்படவில்லை. இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ள உள்ளர்த்தம் மிகவும் ஆழமானது, அற்புதமான தத்துவத்தைக் கொண்டது ஆகும்.
2. பராசக்தியின் இரு மார்பகங்களும் ஒரு தாயின் தன்மையை வெளிப்படுத்துகின்றன. பிரபஞ்சத்தில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் தாயின் அரவணைப்பு தேவை; பிறந்த குழந்தையை அரவணைத்து, தனது மார்பகங்களிலிருந்து ஊட்டச் சத்துக்கள் நிறைந்த உணவான பாலை தந்து வளர வைக்கின்றாள். ஒரு தாயின் உணவு இல்லாமல் எந்த குழந்தையும் வாழ முடியாது; எப்படி சந்திரனும் சூரியனும் பிரபஞ்சத்திற்கு இன்றி அமையாததாக உள்ளதோ அதை

போலவேதான் ஒரு தாயின் தாயின் ஸ்தனமும் குழந்தைக்கு மிக அவசியமானது என்பதை வெளிப்படுத்தவே பராசக்தியின் ஸ்தனங்களை சந்திரன் மற்றும் சூரியனாக கூறி உள்ளார்.

3. இந்த பிரபஞ்சத்தை படைத்தவள் பராசக்தி. அவளது குழந்தைகளே அனைத்து ஜீவன்களும் ஆவார்கள். அத்தனை ஏன், சந்திரன் மற்றும் சூரியன் கூட அவளால் வெளிப்படுத்தப்பட்டவர்களே என்பதினால் அவர்களும் அவளது குழந்தைகள் ஆவார்கள்.

4. பூமியில் உள்ள ஒரு செடியியோ, மரமோ, குழந்தை பிறப்பதைப் போல புதிய துளிர்களை வெளியிடுகின்றன. அந்த செயலை செய்ய அவற்றுக்கு வெப்பமும் தேவை, குளுமையும் தேவை. அனைத்து நாட்களின் காலமும் சூரிய ஒளியாக மட்டுமே இருந்து விட்டால் அதன் வெப்பத்தினால் பயிர்கள் தழைப்பது இல்லை, மரங்கள் துளிர் விடுவதில்லை. அதனால்தான் வசந்த காலம் மற்றும் கோடைக் காலம் என மாறி மாறி வருகின்றன.

5. மரங்களும் செடி கொடிகளும் மானிடர்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை ஆகும். மானிடர்களுக்கும், விலங்குகளுக்கும் உயிர் வாழ ஆக்ஸிஜன் தேவை. அதை ஒளிச் சேர்க்கை எனப்படும் செயல் முறையில் தாவரங்களே வெளியிடுகின்றன. அந்த செயலை செய்ய தாவரங்களுக்கு சூரிய ஒளி தேவைப்படுகிறது. தாவரங்களின் ஒளிச் சேர்க்கை என்பது தாவரங்கள் சூரிய ஒளி, நீர் மற்றும் கார்பன் டை ஆக்சைடு ஆகியவற்றை உறிஞ்சிக் கொண்டு ஆக்ஸிஜன் மற்றும் ஆற்றலை உருவாக்கும் செயல் முறையாகும்.

6. அப்படி ஒளிச் சேர்க்கையினால் தாவரங்கள் மானிடர்களுக்கு தேவையான ஆக்சிஜனை வெளிப்படுத்தாவிடில் நாம் உயிர் வாழ முடியாது. சூரியனில் இருந்து வெளிவரும் வெப்பம் இல்லாவிடில் பூமி உறைந்து விடும்.
7. அது மட்டுமின்றி, பல விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் உணவுக்கு தாவரங்கள் தேவை. எனவே, தாய் மற்றும் குழந்தையின் இணைப்பைப் போன்றே அனைத்து ஜீவராசிகளுடன் சூரியனின் இணைப்பும் உள்ளது.
8. சூரிய ஒளியைப் போன்றே சந்திரனின் நிலவு வெளிச்சமும் பிரபஞ்சத்திற்கு தேவை. காரணம் இரவில் ஒரு நுட்பமான ஒளி மனிதர்கள் உட்பட தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உயிர் வாழும் நிலைக்கு அத்தியாவசியமாக உள்ளது. சந்திரனின் ஒளிக் கதிர்கள் பல்வேறு உயிரியல் செயல் முறைகளை பாதிக்கிறது. தாவர வளர்ச்சி மற்றும் விலங்குகளின் நடத்தை சந்திர ஒளியின் சுயற்சியுடன் பிணைக்கப்பட்டுள்ளது. தாவரங்களின் பூக்கள் பூக்க நிலவொளி தேவை. பூமி நாள் முழுவதும் வெப்பமடைகிறது; அந்த வெப்பத்தைத் தணித்து பூமி குளிர்வடைய நிலவொளி அவசியம்.
9. ஒரு தாய் குழந்தையை பாலூட்டி வாழ வைத்து காப்பதை போல, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஜீவன்களையும் வாழ வைப்பது சந்திர சூரியன்கள் ஒளி வெள்ளங்களே என்பதாலும், அதே சந்திர சூரியனை பிறப்பு எடுக்க வைத்ததும் அதே பராசக்தி என்பதினாலும், அவை இன்றி எந்த ஜீவ ராசிகளும் உயிர் வாழ முடியாது

என்பதினாலும், சூரியன் மற்றும் சந்திரனை பராசக்தியின் மார்பகங்களாக, ஒரு உவமையாக இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ளது.

10. சக்தி தேவியே சிவபெருமானுக்கு கண்ணாடி போல இருந்து அவருடைய சுயத்தை அவரால் பார்க்க முடிந்தவாறு செயல்படுகிறாள். சக்தி என்பவள் சிவபெருமானை இயக்கும் ஆற்றல் ஆகும். அவர் சிவ பெருமானாகவே மட்டுமே இருந்துவிட்டால் உணர்வுகள் அற்ற ஜடமாக இருந்திருப்பர் என்று கூறப்படுகிறது. பிரம்மன் என்பது ஜட நிலையில் இருக்க முடியாது. (சதாசிவ வடிவில் உள்ள - சிவம் மற்றும் சக்தி) சிவ பெருமான் ஜடமாக இருந்தாலும், பராசக்தியானவள் பிரபஞ்சத்தின் உருவாக்கம், வாழ்வாதாரம் மற்றும் அழிவு ஆகிய செயல்களை செய்யும் ஆற்றல் மிக்க சிவனின் சக்தியாக இருந்தவாறு செயல்படுகிறாள். எனவே, சக்தி இல்லாத சிவன் அல்லது சிவன் இல்லாத சக்தி என்பது உணர்ச்சி அற்றதாகவே இருந்து விடும்.

11. பிரம்மத்தின் இரண்டு மிக முக்கியமான அம்சங்கள் விழிப்புணர்வு மற்றும் பேரின்ப நிலை ஆகும். விழிப்புணர்வு என்பது பராசக்தியின் ஆற்றல் ஆகும். அதனால்தான் சக்தி என்பவள் சிவபெருமானுக்கு உள்ளே மறைந்துள்ள ஆற்றல் என்று கூறப்படுகிறது. சிவனும் சக்தியும் எந்த சூழ்நிலையிலும் பிரிக்க முடியாதவர்கள் என்பதினால்தான் அவர்கள் பிரபஞ்சத்தின் தாய் -தந்தையர் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் இருவருமே பேரானந்த நிலையில் இருக்கும்போது இந்த பிரபஞ்சமும் பேரானந்த நிலையில் இருக்கும் என்பதே இந்த

ஸ்லோகத்தில் காணப்படும் உள் அர்த்தம் ஆகும் .

12. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

13. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

14. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்.

-35-

मनस्त्वं व्योम त्वं मरुदसि मरुत्सारथिरसि
त्वमापस्त्वं भूमिस्त्वयि परिणतायां न हि परम् ।
त्वमेव स्वात्मानं परिणमयितुं विश्ववपुषा
चिदानन्दाकारं शिवयुवति भावेन बिभृषे ॥

மனஸ்த்வம் வ்யோம த்வம் மருதஸி மருத்ஸாரதிரஸி
த்வமாபஸ்த்வம் பூமிஸ்த்வயி பரிணதாயாம் ந ஹி பரம் ।
த்வமேவ ஸ்வாத்மானம் பரிணமயிதும் விஶ்வவபுஷா
சிதானந்தாகாரம் ஶிவயுவதி பாவேன பிப்ருஷே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--க்ஷயரோகம் (காச நோய்) நிவர்த்தி ஆகும்



ஹே பராசக்தி,
ஆக்ஞா சக்கரத்தில் உள்ள மனஸ் தத்துவம் நீதான், விசுத்தி சக்கரத்தில் உள்ள ஆகாய தத்துவமும் நீயே, அனாஹத சக்கரத்தில் உள்ள வாயு தத்துவமும் நீதான், ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் உள்ள அக்னி தத்துவமும் நீதான், மணிப்பூரா சக்கரத்தில் உள்ள ஜலத் தத்துவமும் நீயே, மூலாதாரத்தில் உள்ள பிருதிவி தத்துவமும் நீதான். நீயே இந்த பிரபஞ்சமாக இருப்பதை வெளிப்படுத்துவதற்காக மஹேஸ்வரனின் மனைவியான காமேஸ்வரியாக பேரானந்த நிலையில் காட்சி தருகின்றாய்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் இரண்டு தத்துவங்களை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.
2. முதலாவது இது. ஒரு விதை படிப்படியாக முளை விட்டவாறு ஒரு கட்டத்தில் பெரிய மரமாகி விடும். ஒரு மரம் திடீரென்று தோன்ற முடியாது, அது படிப்படியாகவே வளர்கின்றது என்பதை போலவே, ஒரு விதை போல, குண்டலினி வடிவில் சுருண்ட பாம்பைப் போல மூலாதான சக்கரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டு உள்ள குண்டலினி சக்தியை எழுப்பும் சாதகர் அதனுடன் பல சக்கரங்களைக் கடந்து சஹஸ்ராரத்தை சென்றடைகின்றார். அங்கு பரமேஸ்வரர் பரமேஸ்வரியுடன் பேரானந்த நிலையில் காட்சி தருகின்றார். அதைக் காணும் சாதகனோ அந்த பேரானந்த நிலையிலான கடலில் பேரானந்தமாக நீந்துகின்றார். இதைத்தான் ஆதி சங்கரர், ஒவ்வொரு

சக்கரத்திலும் பராசக்தி இருக்கின்றாள், எப்படி ஒரு விதை படிப்படியாக முளைவிட்டு பெரிய மரமாகின்றதோ அதை போல, அவளோடு பயணிக்கையில் சாதகர் பேரானந்த நிலையை அடைகின்றார் என்பதாக இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளார்.

3. இந்த ஸ்லோகத்தின் மூலம் நமது சரீரத்தில் உள்ள ஒவ்வொரு சக்கரங்களும் எத்தனை தாமரை மலர்களின் இதழ்களுக்கு ஒப்பானவை என்றும், அவை எந்தெந்த தத்துவங்களைக் குறிக்கின்றன என்றும், அந்த தத்துவங்களைக் கொண்ட ஷேத்திரங்களைக் குறித்தும் அறிந்து கொள்ள முடிகின்றது.

- பிரிதிவி தத்துவத்தைக் குறிக்கும் மூலாதார சக்கரத்தை நான்கு தாமரை இதழ்களுக்கும், காளஹஸ்தி ஷேத்திரத்திற்கும்,
- அக்னி தத்துவத்தைக் குறிக்கும் ஸ்வாதிஷ்டான சக்கரத்தை எட்டு தாமரை இதழ்களுக்கும், திருவண்ணாமலை ஷேத்திரத்திற்கும்,
- ஜலத் தத்துவத்தைக் குறிக்கும் மணிப்பூரா சக்கரத்தைக் ஆறு இதழ் தாமரை மற்றும் திருவானைக்கா கோவில் ஷேத்திரத்திற்கும்
- வாயு தத்துவத்தைக் குறிக்கும் அனாஹத சக்கரத்தை பத்து இதழ் தாமரை மற்றும் ஆவுடையார் ஷேத்திரத்திற்கும்,
- ஆகாய தத்துவத்தைக் குறிக்கும் விசுத்தி சக்கரத்தை பன்னிரண்டு இதழ் தாமரை மற்றும் சிதம்பர ஷேத்திரத்திற்கும்

- மனசு தத்துவத்தைக் குறிக்கும் ஆக்ஞா சக்கரத்தை இரண்டு இதழ் தாமரை மற்றும் காசி ஷேத்திரத்திற்கும்,
- காமேஸ்வரி-காமேஸ்வரனின் இருப்பிடமானதும் பேரானந்த நிலையை தருவதுமான சஹஸ்ரார சக்கரத்தை ஆயிரம் இதழ் தாமரைக்கும் ஒப்பானவை என்று கூறி உள்ளார்.

இதுவே ஸ்ரீ வித்யா, ஸ்ரீ சக்கரத்தின் தத்துவம் ஆகும். பராசக்தி பிரபஞ்சத்தை தன்னுள் இருந்து படிப்படியாக வெளிப்படுத்துகிறாள்.

4. பராசக்தி நிலையானவள்;அழிவற்றவள்; நமது கண்களுக்கு தெரியாத பரபிரும்ம ரூபத்தில் உள்ளவள்; தூய உணர்வு கொண்டவள்; அவளுக்கு உடலியல் போன்ற எந்த குணங்களும் கிடையாது.

-36-

तवाज्ञाचक्रस्थं तपनशशिकोटिद्युतिधरं
परं शम्भुं वन्दे परिमिलितपार्श्वं परचिता ।
यमाराध्यन् भक्त्या रविशशिशुचीनामविषये
निरालोकेऽलोके निवसति हि भालोकभुवने ॥

தவாஜ்ஞாசக்ரஸ்தம் தபனஶஶிகோடித்யுதிதரம்
பரம் ஶம்பும் வந்தே பரிமிலிதபார்ஶ்வம் பரசிதா ।
யமாராத்யன் பக்த்யா ரவிஶஶிஶுசீனாமவிஷயே
நிராலோகேலோகே நிவஸதி ஹி பாலோகபுவனே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால்
--எல்லா விதமான நோய்களும் நிவர்த்தி ஆகும்

ஹே பராசக்தி
உன்னுடைய திருமேனியில் புருவங்களின் நடுவே குடி கொண்டுள்ள ஆக்ஞா சக்கரத்தில் வசிப்பவரான காமேஸ்வரன், ஆயிரம் கோடி சூர்ய சந்திரர்களின் ஒளியை விட அதிக பிரகாசமானவர்; அவர் தன்னுடைய இன்னொரு பக்க உடலில் பேரானந்தத்தை தரும் பரமேஸ்வரியை உள்ளடக்கியவர். அப்படிப்பட்ட பரமசிவனையும், உன்னையும் எவன் ஒருவன் தியானம் செய்கிறானோ அவன் ஆயிரம் கோடி சூர்ய சந்திரனை விட (கண்ணுக்கு புலப்படாத) ஒரு ஜோதி மயமான உயர்ந்த உலகத்தை அடைகிறான்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகம் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிவது என்ன என்றால், தேவியின் இரு புருவங்களுக்கு இடையே உள்ள ஆக்ஞா சக்கரத்தில் சிவபெருமான் அக்னி, சூரியன் மற்றும் சந்திரன் போன்ற மூன்று பேர்களின் ஒளியையும் ஒன்று சேர்த்தால் எத்தனை பிரகாசம் கிடைக்குமோ அதை விட பல்லாயிரம் மடங்கிலான ஒளி கிரணங்களை வீசிக் கொண்டு அமர்ந்து உள்ளார்.
2. அவரை சுற்றி பராசக்தியினால் வெளிப்பட்ட ஒளியும் வியாபித்து இருக்க, சிவபெருமானின் உடலில் இருந்து வீசிக் கொண்டு உள்ள ஒளி வெள்ளமானது, அக்னி, சூரியன் மற்றும் சந்திரன் போன்ற எவருமே நுழையக் கூட வெட்கப்படும் அளவிலான இடமாக உள்ளது.
3. சிவபெருமானின் உடலில் இருந்து வீசிக் கொண்டு இருக்கும் ஒளி வெள்ளம் இந்த பிரபஞ்சத்தையே பிரகாசமாக வைத்துக்

கொண்டு உள்ளது என்றால், அவருக்கு அப்படிப்பட்ட ஆற்றலை பராசக்தியே தருகின்றாள்.

4. சஹஸ்ராரா சக்கரத்தில் பரமேஸ்வரியுடன் உள்ள பரமேஸ்வரன் எப்போதெல்லாம் பிரபஞ்சத்தைப் படைக்க ஆணை கிடைக்கிறதோ அப்போதெல்லாம் ஈஸ்வரன் எனும் சிவன் ரூபத்தில் ஆக்ஞாவில் வந்து தங்கி பிரபஞ்சத்தைப் படைக்கின்றார். ஆகவே ஆக்ஞாவும் அவர் இருப்பிடம் என்பதினால்தான் அந்த இடமும் அத்தனை பிரகாசமாக உள்ளது.
5. அந்த ஒளியை, தியானம் மற்றும் யோகா நிலை மூலம் ஆக்ஞா சக்கரத்தை எட்டி விட்ட சாதகர்களால் மட்டுமே காண முடியும். அத்தகைய ஒளி, தேவியின் புருவங்களுக்கு மத்தியில் சாதகர்களுக்கு தெரிவதின் காரணம், அந்த நிலையை எட்டும் சாதகர் இருள் முழுவதும் மறைந்து உள்ள மனநிலையில் இருக்கின்றார்.
6. அந்த நுழை வாயில் மூலமே, காமேஸ்வரன்-காமேஸ்வரி இருவரும் இணைந்து காட்சி அளிக்கும் சஹஸ்ராரா சக்கரம் எனும் இடத்தை சென்று அடைந்து மோட்ஷ நிலையை பெற முடியும் என்பதினால், அவர்களை சென்று அடையும் வழி முழுவதையுமே சிவபெருமான் உடலின் இருந்து வெளியாகும் ஒளி வெள்ளம் பிரகாசமாக வைத்துக் கொண்டு உள்ளது).

-37-

**विशुद्धौ ते शुद्धस्फटिकविशदं व्योमजनकं
शिवं सेवे देवीमपि शिवसमानव्यवसिताम् ।
ययोः कान्त्या यान्त्याः शशिकिरणसारूप्यसरणे-
विधूतान्तर्ध्वान्ता विलसति चकोरीव जगती ॥**

**விஶுத்தௌ தே ஶுத்தஸ்படிகவிஶதம்
வ்யோமஜனகம்
ஶிவம் ஸேவே தேவீமபி ஶிவஸமானவ்யவஸிதாம் ।
யயோ: காந்த்யா யாந்த்யா:
ஶஶிகிரணஸாரூப்யஸரணே-
விதூதாந்தர்த்வாந்தா விலஸதி சகோரீவ ஜகதீ ॥**

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் --பூத பிரேதங்களின் பயம் ஒழியும்



ஹே பராசக்தி,
ஆகாய தத்துவத்தின் மூலமானவரும், சுத்தமான ஸ்படிகமணி போன்று தெளிவானவருமான பரமேஸ்வரனையும், உன்னையும் எவன் ஒருவன் விசுத்தி சக்கரத்தில் ஆராதனை செய்கிறானோ, அங்கு உங்கள் இருவரிடமும் இருந்து வெளியாகும் பிரகாசமான ஒளிக் கிரணங்களினால் அவர்களது அறியாமை எனும் மன இருட்டு அகன்று, முழு நிலவை கண்ட சகோர பட்ஷி மனம் மகிழ்வதை போல, அமிர்தம் அருந்திய மன நிலையில் ஆனந்தமாக இருப்பான் .

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகம் வெளிப்படுத்துவது என்ன என்றால் பராசக்தியின் ஆணையை ஏற்று, பிரபஞ்சத்தை உருவாக்க முடிவு செய்த பரமேஸ்வரர், முதலில் ஆக்ஞா சக்கரத்தில் நுழைகிறார். அங்கு அவர் பிரபஞ்சத்தை எப்படி படைப்பது என்ற எண்ணத்தை வலுப்படுத்திக் கொண்ட பின்னர் விசுத்தி சக்கரத்தில் சென்று விண்வெளி எனும் ஆகாயத்தை உருவாக்குகிறார். எப்படி பராசக்தியின் இருந்து வெளியான சதாசிவன், ஈஸ்வரனை வெளிப்படுத்த, அவரிடம் இருந்து அனைத்து பிற தெய்வங்களும் தோன்றினவோ, அதே போலவே ஆகாசத்தில் இருந்தே பிரபஞ்சத்தின் அனைத்தும் தோன்றின.
2. பரமேஸ்வரர் ஒவ்வொரு சக்கரங்களுக்கும் செல்லுகையில் தனியே பயணிப்பதில்லை. அவரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை செய்யத் தேவையான சக்திகளை தர வேண்டும் என்ற எண்ணத்தில், வெளித்

தெரியாமல் அவரோடு இணைந்து உள்ள பராசக்தியும் செல்கின்றாள்.

3. சந்திரன் தன் குளிர்ந்த கதிர்களால் விசுத்தி சக்கராவின் இடத்தை நிரப்பி உள்ளதினால் விசுத்தி சக்கரா குளிர்ச்சியாக உள்ளது .
4. சகோரா என்ற பறவை சந்திரனைக் கண்டதும் கண் விழித்து, நிலவின் ஒளியில் மகிழ்ச்சியில் எப்படி பறக்குமோ, அதுபோல, சாதகர்கள் விசுத்தி சக்கராவில் நுழைந்து சிவ-சக்தியின் தரிசனத்தைப் பெற்றதுமே அவர்களது ஆன்மீக அறியாமை மறைந்து விடுகின்றது. அவனது பயணத்தின் இறுதி இலக்கான சஹஸ்ராரத்திற்கு சிறிது தூரத்தில் மட்டுமே உள்ள அவன் விழிப்புணர்வு பெற்றவனாக ஆகின்றான் .
5. ஒரு பழம் பெரும் பறவையான 'சகோர' எனும் பறவை குறித்து இந்து புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ளது (இதன் சமஸ்கிருத பெயர்: चकोर i.e. Chakor; கிரீக் நாட்டு ரோமானியத்தில் பெயர்: சகோரா என்பதாகும்). இது சந்திரனின் கதிர்களை குடிப்பதாக நம்பப்படுகிறது. சகோரா மற்றும் சந்திரனின் தொடர்பு குறித்த பல நாட்டுப்புற காதல் கதைகள் வட மொழியில் உள்ளன என்கின்றார்கள்).

1.

-38-

समुन्मीलत् संवित् कमलमकरन्दैकरसिकं
भजे हंसद्वन्द्वं किमपि महतां मानसचरम् ।
यदालापादष्टादशगुणितविद्यापरिणति-
र्यदादत्ते दोषाद् गुणमखिलमद्भ्यः पय इव ॥

ஸமுன்மீலத் ஸம்வித் கமலமகரந்தைகரஸிகம்
பஜே ஹம்ஸத்வந்த்வம் கிமபி மஹதாம் மானஸசரம் ।
யதாலாபாதஷ்டாதஶகுணிதவித்யாபரிணதி-
ர்யதாதத்தே தோஷாத் குணமகிலமத்ப்ய: பய இவ॥

இந்த ஸ்லோகத்தை 5000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் --குழந்தைகளின் நோய்கள் அகலும்



ஹே பராசக்தி,
இந்த ஸ்லோகத்தில் நீங்கள் இருவருமே (பரமேஸ்வரனையும் பரமேஸ்வரியையும்) இரண்டு அன்னப் பறவைகளாக காட்டப்பட்டு உள்ளீர்கள். நீங்கள் இருவரும்தான் (பரமேஸ்வரரும், பரமேஸ்வரியும்) அஷ்டாதச வித்தைகள் வெளிப்பட மூல காரணமாக இருந்தவர்கள். அன்னப் பறவையின் குணம் பாலில் உள்ள நீரை பிரித்து எடுத்து விட்டு பாலை மட்டும் பருகும். அதை போலவேதான் உங்களை பிரார்திப்பவர்களின் தோஷங்களை, அன்னப் பறவைகள் போன்று நீங்கள் விலக்கி, அவர்களுடைய மனதில் குடி இருப்பீர்கள்; மேலும் அவர்களுக்கு அஷ்டாதச வித்தைகளையும் நீங்களே தருகின்றீர்கள் என்பதினால் அனாஹத சக்கரத்தில் நான் உங்களை வணங்கி தியானிக்கின்றேன்.

(**விளக்கம்:**

1. அஷ்டாதச வித்தைகள் என்பவை பதினெட்டு வித்தைகள் -நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், எட்டு சாஸ்திரங்கள் ஆக பதினெட்டு நூல்களில் உள்ள சாரம் ஆகும்.
2. பரமேஸ்வரி மற்றும் பரமேஸ்வரரை 'ஹம்ஸத்ந்த்வம்: (हंसद्वन्द्वं)' என ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறி உள்ளார். ஹம்ச என்பது அன்னப் பறவையை குறிக்கின்றது. மேலும் ஹம்ச எனும் வார்த்தையில் உள்ள 'ஹம்ஸ' என்பதில் முதல் இரு எழுத்துக்கள் ஆன 'ஹம்' என்பது புருஷனாகிய சிவனையும், 'ஸ:' என்பது பராசக்தியையும் குறிக்கும். எனவே 'ஹம்ஸ:' என்பதே பரமேஸ்வரி மற்றும்

பரமேஸ்வரரை குறிக்கும் சொல்லாகவே உள்ளது.

3. வேதாங்கங்கள் என்பது வேதத்தின் ஆறு உறுப்புகள் என்று சொல்லப்படுகின்றன. வேத ஒலிகளையும் அக்ஷரங்களையும் புரிந்து கொண்டு சரியான முறையில் பயன்படுத்த வேதாங்கங்கள் மிக முக்கியமாக இருக்கின்றன. வேதங்களைக் கற்பிப்பதில் வேதாங்கங்களுக்கு முதன்மை இடம் அளிக்கப்படுகிறது.
4. தாமரை மலர்கள் பூக்கும் நீர் நிலைகளில் அன்னப் பறவைகள் நீந்திக் கொண்டும், மிதந்து கொண்டு இருப்பதைக் காணலாம். அவை உயிர் வாழ்வதற்கு தேவையான ஆகாரத்தை தாமரை வேர்களில் இருந்து எடுத்துக் கொள்கின்றன. நீண்ட மற்றும் அழகான கழுத்துக்களை உடைய அன்னப் பறவைகள் நீர் நிலைகளின் உள்ளே சென்று தாமரை செடியின் மென்மையான, உண்ணக் கூடிய வேர்களை வெளியே இழுத்துக் கொண்டு வந்து அவற்றை உணவாக உண்ணும். அன்னப் பறவைகள் பக்ஷிகள் (ஹம்ஸ பக்ஷி) வசிக்கும் இடத்தை 'மானஸ ஸரஸ்' என்பார்கள். மானஸம் என்னும் பொய்கையில் அந்த நதி உற்பத்தியாகி பாய்வதால், அது சரயூ நதி என்ற பெயரைப் பெற்று, தேவர்களால் போற்றப்பட்டது.
5. எதனால் இந்த ஸ்லோகத்தில் உள்ள இரண்டு தெய்வங்களையும் நீர் நிலைகளில் காணப்படும் அன்னப் பறவையுடன் ஒப்பிட வேண்டும்? சாதகர்கள் அனாஹத சக்கரத்தை அடையும் போது, அவர்கள் மனம் முழுவதும் பரமேஸ்வரி மற்றும் பரமேஸ்வரரின் சிந்தனைகளில் மூழ்கிக் கிடந்தாலும் மனதில்

உள்ள சில அசுத்தங்கள் அவர்களைத் தொந்தரவு செய்ய முயற்சிக்கும். பேரின்ப நிலையை அடைய விரும்பி சாதனாக்களில், அனாஹத சக்கரத்தை அடைந்து விட்ட சாதகரின் உற்சாகமான முயற்சியின் தீவிரத்தை உணர்ந்து, இரட்டை தெய்வங்களும் அன்னப் பறவை போல அந்த சாதகர்கள் எண்ண அலைகளில் நீந்திச் சென்று அசுத்த எண்ணங்களை அழித்து விடுகின்றார்கள் என்பதினால் தத்துவார்த்தமாக இந்த உவமை கூறப்பட்டு உள்ளது.

6. அனாஹத சக்கரம் ஒருவரின் உடலுக்குள் உள்ள மிக முக்கியமான சக்கரம் ஆகும். அங்கு சென்று விட்டால் கல்பதாரு மரத்தைப் போல நாம் விரும்புவதை அடைய வழி வகுக்கும்.

-39-

तव स्वाधिष्ठाने हुतवहमधिष्ठाय निरतं
तमीडे संवर्तं जननि महतीं तां च समयाम् ।
यदालोके लोकान् दहति महति क्रोधकलिते
दयार्द्रा या दृष्टिः शिशिरमुपचारं रचयति ॥

தவ ஸ்வாதிஷ்டானே ஹுதவஹமதிஷ்டாய நிரதம்
தமீடேஸம்வர்தம் ஜனநி மஹதீம் தாம் ச ஸமயாம் ।
யதாலோகே லோகான் தஹதி மஹதி க்ரோதகலிதே
தயார்த்ரா யா த்ருஷ்டி: ஶிஶிரமுபசாரம் ரசயதி ॥

இந்த ஸ்லோகத்தை 5000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் --அனாவசிய மன பயங்கள் விலகும்

ठं ठं

षं षं षं

ഖം ഖം ഖം

ஹே பராசக்தி,
பிரளய காலத்தில் லோகங்களை அழிப்பவரும், எட்டு தாமரை தளங்களைக் கொண்ட ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் அக்னி ஸ்வரூபத்தை வெளிப்படுத்தியவாறு உள்ள, காலாக்னி மற்றும் ஸம்வர்த்தா மற்றும் ருத்ரன் எனும் பெயர்களைக் கொண்ட உன் கணவரை, குளிர்ந்த நிலவைப் போன்ற பார்வையினால் பார்த்து உக்கிரத்தை தணிப்பவளும், நீரின் அம்சத்தோடு கூடியவளுமான ஸம்வர்த்தினி எனும் பெயரைக் கொண்ட உன்னை, ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் வணங்கி தியானிக்கின்றேன்.

(**விளக்கம்:**

1. பெரும்பாலான ஸ்லோகங்கள், பரமேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி இருவருமே ஒன்றிணைந்துள்ள, சிவன் மற்றும் சக்தி எனும் பிரிக்க முடியாத சக்திகள் என்பதை காட்டுகின்றன. எனவே, தங்கள் பயணப் பாதையில் சஹஸ்ரார சக்கரத்தில் நுழைய விரும்பும் சாதகர்கள், ஒவ்வொரு சக்கரத்திலும் சிவ-சக்தியின் பல்வேறு வடிவங்களிலான ஸ்வரூபங்களை தியானித்த பிறகே சஹஸ்ராரத்தை சென்று அடைய முடிகின்றது.
2. இந்த ஸ்லோகத்தில் பரமேஸ்வரர் பிரளய காலத்தில் ருத்திரர் எனும் ரூபத்தைக் கொண்டு, கோபத்துடன் நெருப்பை வெளிப்படுத்தி, பிரபஞ்சத்தை அழிப்பவராக காட்டப்படுகிறார். இந்தச் செயலில் ஈடுபடும் அவர் காலாக்னி என்றும், ஸம்வர்த்தர் என்றும் அழைக்கப்படுகிறார். அவரே மூன்று உலகங்களையும் எரித்தவர் மற்றும் மூன்று வகையான நெருப்புகளை கொண்டவர் எனும்

பெருமைகளைக் கொண்டவர். அவற்றுக்கு அப்பால், ஆக்ஞா சக்கரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவர் ஒளியின் உச்ச கட்ட பிரகாசத்தைக் கொண்டவர் என்பதும் புரிகின்றது என்றாலும், அனைத்து சக்திகளுமே அவரோடு பிரிக்க முடியாத துணையாக இருக்கும் அதே பராசக்தியினால்தான் வழங்கப்படுகின்றன என்பதும் புரியும்.

3. ருத்திர ரூபத்தில் பரமேஸ்வரர் பிரபஞ்சத்தை எரித்தாலும், கருணை வடிவமான பரமேஸ்வரி, பிரபஞ்சத்தில் உள்ள உயிரினர்களின் ரணங்களுக்கு குளிர்ச்சியை தந்து, அவற்றுக்கு ஆறுதல் தரும் வகையில் அதே சதாசிவன் மூலம் புதிய பிரபஞ்சத்தை எழுப்புகின்றார்.
4. பரமேஸ்வரன் கோபத்தோடு மன்மதனை எரித்து விட்டாலும், அவளது கருணை உணர்வினால், அவளுடன் மகிழ்ச்சியான மன நிலையில் பரமேஸ்வரர் இருந்தபோது அதே பரமேஸ்வரன் மூலம் எரிக்கப்பட்ட மன்மதனின் உயிருக்குப் புத்துயிர் அளிக்க வைக்கிறாள் என்பதில் இருந்தே, காதலின் வலிமையினால் அவளிடத்தில் பரமேஸ்வரர் அடங்கிக் கிடந்தது தெரிகின்றது.
5. எனவே, இந்தச் சக்கரத்தில் சிவன் மற்றும் சக்தி ஆகிய இருவரையும் வழிபடுவது, மோகத்திலான உடல் உணர்வுகளை அழித்து, அறிவாற்றல் மிக்க மன நிலையையும், ஆன்மீக அறிவாற்றலையும் உயர்த்துகின்றது என்பது தெரிகின்றது.

-40-

तटित्त्वन्तं शक्त्या तिमिरपरिपन्थिस्फुरणया
स्फुरन्नानारत्नाभरणपरिणद्धेन्द्रधनुषम् ।
तव श्यामं मेघं कमपि मणिपूरैकशरणं
निषेवे वर्षन्तं हरमिहिरतप्तं त्रिभुवनम् ॥

தடித்த்வந்தம் ஶக்த்யா திமிரபரிபந்திபுரணயா
ஸ்புரன்னானாரத்னாபரணபரிணத்தேந்த்ரதனுஷம் ।
தவ ஶ்யாமம் மேகம் கமபி மணிபூரைகஶரணம்
நிஷேவே வர்ஷந்தம் ஹரமிஹிரதப்தம் த்ரிபுவனம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் --நாம் நினைப்பதை ஸ்வப்னத்தில் காணலாம்



ஹே பராசக்தி,
கருநீல வண்ணத்தில் சூழ்ந்து உள்ள மணிபூரக சக்கரத்தில் உள்ள இருளை போக்கும் மின்னல் ஒளியாக நீ இருக்கிறாய். நீ அணிந்துள்ள பல்வேறு அணிகலன்களும், ஆபரணங்களும் வெளிப்படுத்தும் ஒளியில் அந்த கருமை நிற சக்ரமானது பல வண்ணங்களைக் கொண்ட வானவில் போல காட்சி தருகின்றது. ருத்திரனின் கோபத்தினால் பிரளய காலத்தில் தகிக்கப்பட்ட பிரபஞ்சத்தை, அமிர்தம் போன்ற மழையினால் குளிர வைக்கும் உனது சதாசிவ ரூபத்தை அந்த சக்கரத்தில் வணங்கி தியானிக்கின்றேன்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் மணிப்பூரா சக்கரத்தின் மேன்மை வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. மனித உடலின் தொப்புள் பகுதியில் உள்ள இது மிக முக்கியமான சக்கரம் ஆகும்.
2. இந்த சக்கரத்தில் பரமேஸ்வரரை வலிமை கொண்ட கருமை நிறத்திலான மழை பொழியும் மேகம் போலவும், அதில் அவருக்கு சக்தியை அளிக்கும் மின்னல் போல தோன்றும் பரமேஸ்வரியையும் உவமையாக கூறி பராசக்தி அணிந்துள்ள அணிகலங்களின் வெளிச்சமே வானவில்லை போல அந்த மேகத்தில் தோன்றுவதாகவும் வர்ணனை செய்யப்பட்டு உள்ளது.
3. பரமேஸ்வரனுக்கு எப்போதெல்லாம் ஆற்றல் தேவையோ அப்போதெல்லாம் அவள் மீண்டும் மீண்டும் தோன்றி, அவருக்கு ஆற்றலை கொடுத்தபடி இருக்கின்றாள் எனும் தத்துவத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

4. இது எடுத்துக் காட்டுவது என்ன என்றால் பரமசிவனையும் பரமேஸ்வரியையும் பிரிக்க முடியாது, அவர்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து உள்ளார்கள் என்பதினால் அதில் சிவன் யார் சக்தி யார் என்பது தெரியாமல் உள்ளது.
5. இரண்டாவதாக, மேகத்தில் தோன்றும் வானவில்லை பற்றி மிகவும் சுவாரஸ்யமான கேள்வி எழுகிறது. மேகத்தில் தோன்றும் வானவில்லின் வண்ணங்கள் என்பது பராசக்தி அணிந்திருக்கும் ஆபரணங்களால் வெளிப்படும் பிரகாசமான ஒளிக் கதிர்களை தவிர வேறில்லை. இருபுறமும் எல்லை இல்லாத காட்சியில் வானவில் உள்ளது என்பதினால் அது பராசக்தியின் கைகளில் காணப்படும் நாண்கள் இல்லாத கரும்பினால் ஆன வில் ஆகும். வில்லின் இரு முனைகளும் நம்மால் காண முடியாத எல்லையற்ற தூரத்திலுள்ளது என்பதால், அதற்கு எந்த நாண்களும் இல்லை.
6. இந்த சக்கரத்தில் பரமேஸ்வரர் மற்றும் பரமேஸ்வரியை தியானம் செய்யும்போது அறியாமை அகலத் துவங்கும் என்பதாக கூறப்பட்டு உள்ளது.

-41-

तवाधारे मूले सह समयया लास्यपरया
नवात्मानं मन्ये नवरसमहाताण्डवनटम् ।
उभाभ्यामेताभ्यामुदयविधिमुद्दिश्य दयया
सनाथाभ्यां जज्ञे जनकजननीमज्जगदिदम् ॥

தவாதாரே மூலே ஸஹ ஸமயயா லாஸ்யபரயா
நவாத்மானம் மன்யே நவரஸமஹாதாண்டவனடம் ।
உபாப்யாமேதாப்யாமுதயவிதிமுத்திஶ்ய தயயா
ஸனாதாப்யாம் ஜஜ்ஞே ஜனகஜனநீமஜ்ஜகதிதம் ॥

இந்த ஸ்லோகத்தை 4000 முறை என, 30 நாட்கள் பாராயணம் செய்தால் -- அடி வயிற்று நோய்கள் தீரும்

ஹே பராசக்தி,
திரிகோண ரூபமான மூலாதார சக்கரத்தில் நடனப் பிரியையான சமயா எனும் தேவியுடன், மஹா பைரவர் எனும் ஸ்வரூபத்தில் இருந்தவாறு, சிங்காரம் போன்ற ஒன்பது விதமான தாண்டவத்தை (நடனத்தை) ஆடி வரும் உங்கள் இருவரையும் இந்த சக்கரத்தில் வணங்குகின்றேன். அழிந்து விட்ட பிரபஞ்சத்தை மீண்டும் வெளிப்படுத்த இப்படியான ஒரு ஸ்வரூபத்தில் இணைந்து உள்ள நீங்கள் இந்த பிரபஞ்சத்தின் தாய்-தந்தையாக விளக்குகின்றீர்கள்.

(**விளக்கம்:**

1. சஹஸ்ராரத்தை அடைய விரும்பும் சாதகன், அவர்கள் கடக்கும் சக்கரங்கள் ஒவ்வொன்றிலும் பல்வேறு வடிவங்களில் தோற்றம் தரும் பரமேஸ்வரரையும் பரமேஸ்வரியையும் தியானிக்கிறார்கள். மூலதாரா சக்கரத்தில் சமயா தேவி எனும் ரூபத்தில் உள்ள பரமேஸ்வரி, ஆனந்த பைரவியாகவும், பரமேஸ்வரர் ஆனந்த பைரவராகவும், காட்சி தருகின்றார்கள். இருவரும் ஒன்றாக லாஸ்யம் மற்றும் தாண்டவம் எனும் ஏழு வித நடனங்களை வெளிப்படுத்துகிறார்கள். அந்த இரு வகையிலான நடனங்களும் ஒன்பது விதமான மன நிலைகளை வெளிப்படுத்துகிறது.
2. தாண்டவ நடனங்கள் ஆணுடன் தொடர்புடையவை, அதே சமயம் லாஸ்யம் எனும் நடனங்கள் பெண்ணுடன் தொடர்புடையவை. சிவபெருமானின் வீரிய தாண்டவ நடனத்திற்கு இணையாக இருக்கும்

வகையில் பார்வதி தேவியும் லாஸ்யம் எனும் நடனத்தை ஆடியதாக நம்பப்படுகிறது.

3. சிவபெருமான் நடனமாடிய ஏழு தாண்டவங்கள்:

- ஆனந்த தாண்டவம்
- ருத்ர தாண்டவம்
- திரிபுரா தாண்டவம்
- சந்தியா தாண்டவம்
- சம்ஹார தாண்டவம்
- காளிகா தாண்டவம் மற்றும்
- உமா தாண்டவம் என்பன ஆகும்.

4. பார்வதி தேவி நடனமாடிய ஏழு லாஸ்யங்கள்:

- சுத்த லாஸ்யம்
- தேசி லாஸ்யம்
- பிரேரனா லாஸ்யம்
- பிரேரங்கணா லாஸ்யம்
- குண்டலினி லாஸ்யம்
- தண்டிகா லாஸ்யம் மற்றும்
- கலச லாஸ்யம் என்பன ஆகும்.

5. சிவபெருமான் மற்றும் அவரது மனைவி பார்வதியின் தாண்டவ மற்றும் லாஸ்யங்களுடன் தொடர்புடைய ஒன்பது மனநிலைகள்:

- சிருங்காரம் (காதல்/ஈர்ப்பு),
- ஹாஸ்ய (சிரிப்பு/நகைச்சுவை),
- கருணா (துக்கம்/கருணை),
- ரௌத்ரா (கோபம்),
- வீரம் (வீரம்/தைரியம்)),
- பயனகா (பயங்கரவாதம்/பயம்),
- பிபஸ்தியா (வெறுப்பு),
- அத்புதா (ஆச்சரியம்/ஆச்சரியம்) என்பன ஆகும்.

6. பிரளய காலத்தில் காலாக்னியால் அழிக்கப்பட்ட பிரபஞ்சத்தை மீண்டும்

உருவாக்க, பரமேஸ்வரர் மற்றும் பரமேஸ்வரி இருவரும் தாய் மற்றும் தந்தையாக காட்சி தந்தார்கள். பிரபஞ்சத்தின் தாயாக சமய தேவி மற்றும் பிரபஞ்சத்தின் தந்தையாக ஆனந்த பைரவர் உருவில், இருவரும் மூல தாரா சக்கரத்தில் இணைந்து நடனமாடினார்கள்.

7. 41 வது ஸ்லோகங்கள் முடிய ஆனந்த லஹரி என்றும் இனி வரும் 59 ஸ்லோகங்கள் சௌந்தர்யலஹரி என்றும் சொல்லப்படுகிறது. இதுவரையில் சொல்லப்பட்டது மந்த்ர சாஸ்திரம், உபாசனை முறைகள் போன்றவற்றைக் கொண்ட ஸ்லோகங்கள் ஆகும். இந்த 49 ஸ்லோகங்கள் ஆதி சங்கரருக்கு சிவபெருமானே நேரடியாக தோன்றி கூறியதாக கூறப்படுகின்றது. ஆனந்தலஹரி என்பதை ஆனந்தம் என்பது 'மகிழ்ச்சி'யை குறிக்க லஹரி என்பது 'அலை'களைக் குறிக்கின்றது. ஆகவே ஆனந்தலஹரி என்றால் 'ஆனந்தமான அலைகள்' என்பது அர்த்தம் . அதே போல சௌந்தர்யலஹரியில் சௌந்தர்யம் என்றால் 'அழகு' என்றும் லஹரி என்பது 'அலை'களைக் குறிக்க, சௌந்தர்யலஹரி என்பது 'அழகின் அலைகள்' என்பதைக் காட்டுகின்றது.

8. அதை தொடர்ந்து 42 ஆம் ஸ்லோகத்தில் இருந்து எழுதப்பட்டு உள்ள 59 ஸ்லோகங்களையும் ஆதி சங்கரர் இயற்றியதாக கூறப்படுகின்றது. 42 ஆம் ஸ்லோகத்தில் இருந்து காணப்படும் ஸ்லோகங்களில் அம்பாளின் அற்புதமான அழகு விவரிக்கப்பட்டு உள்ளன. இந்த பகுதிக்கு சௌந்தர்யலஹரி என்று பெயர். சௌந்தர்யம் என்றால் அழகு என்பது பொருள் லஹரி என்றால் உரை என்பதாகும்.

சௌந்தர்ய லஹரி (42-100)

-42- **गतैर्माणिक्यत्वं गगनमणिभिः सान्द्रघटितं** **किरीटं ते हैमं हिमगिरिसुते कीर्तयति यः ।** **स नीडेयच्छायाच्छुरणशबलं चन्द्रशकलं** **धनुः शौनासीरं किमिति न निबध्नाति धिषणाम् ॥** **கதைர்மாணிக்யத்வம் ககனமணிபி: ஸாந்த்ரகடிதம்** **கிரீடம் தே ஹைமம் ஹிமகிரிஸுதே கீர்தயதி ய: ।** **ஸ நீடேயச்சாயாச்சுரணஶபலம் சந்த்ரஶகலம்** **தனு: ஶௌனாஸீரம் கிமிதி ந நிபத்னாதி திஷணாம் ॥**
இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- ஜல ரோக நிவாரணம் பெறலாம் 

ஹே பராசக்தி
மலை அரசனின் மகளே, உன்னுடைய தலையில் நீ சூட்டிக் கொண்டு உள்ள தங்க கிரீடத்தில் உள்ள மாணிக்கக் கற்கள், பன்னிரண்டு சூரியன்கள் ஒரே நேரத்தில் தோன்றும்போது வெளிப்படுத்தும் ஒளிக் கற்றைகளை போல ஜொலிக்கின்றது. அவை பலவிதமான வண்ணங்களில் மின்னுவதினால் அதை சந்திரனால் ஏற்பட்ட இந்திரா தனுஷ் எனும் வானவில் என்றே அந்த கிரீடத்தை பார்க்கும் சாதகன் நினைப்பான்.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் தேவியின் தலை முடி மீது காணப்படும் ரத்தினைக் கற்கள் பதிக்கப்பட்ட தங்கத்திலான கிரீடத்தின் மகிமை விளக்கப்பட்டு உள்ளது.
2. தேவர்களில் 'த்வாத சாதித்தியாள்' என்று ஒரு பிரிவு உள்ளதாக தெரிகின்றது. சூரிய பகவான் தன்னை பன்னிரண்டு ரூபங்களில் பிரித்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ரூபத்தில் பிரபஞ்சத்தில் காட்சி அளிக்கின்றார். அந்த பன்னிரண்டு சூரியன்களையே 'த்வாத சாதித்தியாள்' என்று அழைக்கின்றார்கள்.
3. 'த்வாத சாதித்தியாள்' என அழைக்கப்படும் பன்னிரண்டு சூரியர்களுக்கும் பராசக்தியின் அருகில் இருந்தவாறு அவளுடைய தரிசனத்தைப் பெற வேண்டும் என்ற ஆவல் உண்டு. ஆனால் அவர்களால் பராசக்திக்கு அருகில் கூட செல்ல முடியவில்லை என்பதினால் அந்த பன்னிரண்டு சூரியன்களும் பன்னிரண்டு நவரத்னக்

கற்களாக தம்மை மாற்றிக் கொண்டு விட்டார்கள்.

4. பராசக்தி அணிந்திருந்த கிரீடம் தயாரிக்கப்பட்டபோது அதில் ரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டபோது அந்த பன்னிரண்டு சூரியன்களும் அந்த கிரீடத்தில் நவரத்தினக் கற்களாக அமர்ந்து கொண்டு விட்டார்கள். ஆகவே அவர்களால் தினமும் அன்னையை தரிசித்துக் கொண்டே இருக்கும் பாக்கியம் கிடைத்தது.
5. அன்னையின் கிரீடத்தில் வானவில்லை போன்ற வண்ணங்கள் தோன்றுவதற்கு சந்திரக் கலையே காரணம் என்பதான நம்பிக்கை உண்டு. சந்திரனைச் சுற்றி ஒரு பிரகாசமான வெள்ளை ஒளி வளையம் எப்போது வேண்டுமானாலும் தோன்றும். அதுவே தேவியின் கிரீடத்தின் மீது படும்போது வண்ணமயமான வானவில்லாக காட்சி அளிக்கின்றதாம்.
6. இப்படியாக சூரியனும் சந்திரனும் அன்னையின் அருகில் செல்வதற்கு பல முயற்சிகள் எடுக்க வேண்டி உள்ள நிலையில் சாதகர்களால் அத்தனை எளிதில் அன்னையின் பாதத்தில் சரண் அடைந்து விட முடியுமா?
7. அதற்குத் தேவை அன்னையின் கருணை, சாதகனின் விடா முயற்சி மற்றும் முழு மனதிலான வைராக்கியம் போன்றவை ஆகும் என்பதை வெளிப்படுத்துவதே இந்த ஸ்லோகம் ஆகும்) .

-43-

धुनोतु ध्वान्तं नस्तुलितदलितेन्दीवरवनं
घनस्निग्धश्लक्ष्णं चिकुरनिकुरुम्बं तव शिवे ।
यदीयं सौरभ्यं सहजमुपलब्धुं सुमनसो
वसन्त्यस्मिन् मन्ये वलमथनवाटीविटपिनाम् ॥

துனோது த்வாந்தம் நஸ்துலிததலிதேந்தீவரவனம்
கனஸ்னிக்தஶ்லக்ஷ்ணம் சிகுரனிகுரும்பம் தவ ஶிவே ।
யதீயம் ஸௌரப்யம் ஸஹஜமுபலப்தும் ஸுமனஸோ
வஸந்த்யஸ்மின் மன்யே வலமதனவாடீவிடபிநாம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- நோய்கள் தீரும், வசீகரம் அடைவார்கள், அனைத்திலும் வெற்றி கிடைக்கும்



ஹே பராசக்தி, பரமேஸ்வரரின் துணைவியே, மலர்ந்த நீலோத்பல புஷ்ப காடுகளைப் போன்றதும், வழுவழுப்பானதுமான உனது கேசம் எங்கள் மனதில் உள்ள அறியாமை எனப்படும் மன இருளை போக்கட்டும். இந்திரனின் நந்தவனத்தில் உள்ள செடிகளின் புஷ்பங்கள், உங்கள் தலை முடியின் வாசனையைப் பெற்றுக் கொள்ள ஆசைப்பட்டு உங்கள் தலை முடியையே நந்தனமாகக் கருதி அங்கு வசிக்கின்றன போலும் என்று நினைக்கின்றேன். அதனால்தான் இயற்கையின் மணத்துடன் உங்கள் கூந்தல் உள்ளது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் பராசக்தியின் கூந்தல் இயற்கையான மணம் கொண்டது என்று விவரிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்லோகம் 1000 ஆண்டுகளுக்கு முன்பு ஆதி சங்கராச்சாரியாரால் தொகுக்கப்பட்டது. அடர்ந்த காட்டில் உள்ள பல வகையான செடி கொடிகளிலும், மரங்களிலும் பூக்கும் பூக்கள் மலர்ந்து நறுமணத்தை வெளியிடுவதை போல, பராசக்தியின் கூந்தல் இயற்கையான மணத்தை வெளிப்படுத்துவதாக இந்த ஸ்லோகத்தில் அவர் கூறி உள்ளார். பராசக்தியின் கூந்தலானது மனதை மயக்கும் வகையிலான நறுமணத்தைக் கொண்ட நீலோத்பல மலர்களின் நறுமணத்தை வெளிப்படுத்துவதாகவும் தேவேந்திரன் தோட்டத்தில் உள்ள செடிகளும் மரங்களும் கூட நறுமணத்தைப் பெற்றுக் கொள்ள பராசக்தியின் தலை முடி மீது அவ்வப்போது

வந்து தங்கிச் செல்வதாகவும் குறிப்பிட்டு உள்ளார்.

2. இது இந்த ஸ்லோகத்தின் ஒரு அம்சம் என்றாலும் மற்றொரு அம்சம் அறியாமை எனப்படும் மன இருளை விரட்டுவதாகும். மன இருட்டை பராசக்தியின் கருமை நிறத்திலான கூந்தலோடு ஒப்பிட்டுக் கூறி உள்ளார். பராசக்தியை தியானிக்கையில் ஒருவரது மனதில் சூழ்ந்துள்ள அறியாமை எனப்படும் இருண்ட எண்ணங்களிலிருந்து ஆன்மீக எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் விழித்து எழுகின்றன. இருண்ட இரவு சூரியனின் ஒளியினால் பிரகாசமடைவதை போல, பராசக்தியின் அருளினால் இருண்ட மனதின் ஆன்மீக உணர்வுகள் விழித்து எழுகின்றன என்பதாக இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ளது.
3. நக்கீரன் என்ற கவிஞருக்கும் சிவபெருமானுக்கும் இடையேயான சர்ச்சையை விவரிக்கும் ஒரு கதையை சிவபுராணத்தில் காணலாம். பார்வதியின் கூந்தலில் இருந்து வெளி வருவது இயற்கையான நறுமணம் என்று சிவபெருமான் கூற, அதை ஏற்க மறுத்த நக்கீரன் பராசக்தியின் கூந்தல் இயற்கையிலேயே மணம் கொண்டது அல்ல, அது அவள் தலையில் உள்ள பூக்களில் இருந்து எழுபவையே என வாதிட்டார். அதற்கு முடிவு எட்டப்படவில்லை என்பதினால் சிவபெருமானின் சாபத்தைப் பெற்று பாஸ்கரராயர் எனும் பண்டிதராக அடுத்த ஜென்மத்தில் பிறப்பு எடுத்து அதில் மோட்ஷம் பெற்றார்)

-44-

तनोतु क्षेमं नस्तव वदनसौन्दर्यलहरी-
परीवाहस्रोतःसरणिरिव सीमन्तसरणिः ।
वहन्ती सिन्दूरं प्रबलकबरीभारतिमिर-
द्विषां वृन्दैर्बन्दीकृतमिव नवीनार्ककिरणम् ॥

தனோது க்ஷேமம் நஸ்தவ வதனஸௌந்தர்யலஹரீ-
பரீவாஹஸ்ரோத:ஸரணிரிவ ஸீமந்தஸரணி: ।
வஹந்தீ ஸிந்தூரம் ப்ரபலகபரீபாரதிமிர-
த்விஷாம் ப்ருந்தைர்பந்தீக்ருதமிவ
நவீனார்ககிரணம்॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 12 நாட்கள் பாராயணம் செய்தால் -- நோய்கள் தீரும்



ஹே பராசக்தி,
உன் அழகிய கூந்தலின் நடுவில் ஒரு மெல்லிய கால்வாய் ஓடுவது போல உள்ள வகிடு, உன் முகத்திற்கு அழகு சேர்க்கின்றது. உன் அடர்த்தியான மற்றும் கருமையான கூந்தலின் நடுவில் உள்ள வகிட்டின் முனையில் மின்னும் குங்குமம், காலையில் ஒளிரும் இளம் சூர்ய கிரணம் போல காட்சி தருகின்றது. அந்த குங்குமமும், கூந்தலின் நடுவே உள்ள வகிடும் எங்களுக்கு எல்லாவிதமான நன்மைகளையும் தரட்டும்.

(**விளக்கம்:**

1. பொதுவாக அனைத்து பெண்களுமே தமது தலை முடியை இரண்டு பகுதிகளாகப் பிரித்து சீவி இருப்பார்கள். நடுத் தலையில் இருந்து நெற்றி வரை ஓடும் மெல்லிய வெற்று இடம் வகிடு அல்லது மகிடு எனப்படும். அந்த வகிட்டின் நுனி பகுதியில் கரும் சிவப்பு அல்லது சிவப்பு நிறத்திலான குங்குமம் எனப்படும் ஒரு பெரிய பொட்டும் வைப்பார்கள்.
2. தலையில் காணப்படும் வகிட்டை சமஸ்கிருதத்தில் 'சீமந்த சரணி' என்று கூறுவார்கள். நெற்றியில் மையத்தில் வைக்கப்படும் குங்குமம் எனப்படும் சிவப்பு பொட்டின் இருபுறமும் அடர்த்தியான மற்றும் கருமை நிறத்திலான முடி காணப்படுவது, அந்த சிவப்பு புள்ளியை தலை முடியானது இருபுறங்களிலும் சுற்றி வளைத்து சிறை பிடித்து வைத்துள்ளனவோ என்பதை போலத் தோன்றும்.

3. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர், தேவியின் தலை பகுதியில் வகிட்டின் அருகில் காணப்படும் சிவப்பு நிறத்திலான பொட்டை, உதிக்கும் சூரியனுடன் ஒப்பிடுகிறார். அந்த பொட்டானது ஒருவரின் மன இருளை அகற்றும். மங்கலான மண்டை ஓட்டின் நிறத்தை வெளிப்படுத்தும் வகிடு தண்ணீரால் நிரம்பி வழியும் ஓடைக்கு ஒப்பானது என்பதாக ஆதி சங்கரர் கூறுகின்றார்.
4. 'நீர் நிரம்பி வழியும் ஓடை' என்பதின் தத்துவார்த்தமான பொருள் என்ன என்றால் குங்குமப் பொட்டினால் அகலும் மன இருள் வழிந்து ஓடி விட அமைந்துள்ள பாதை என்பதாகும். பராசக்தியின் கருமையான கூந்தல் இருள் எனப்படும் மாயையைக் குறிக்கின்றது. அந்த மாயை என்பதே பராசக்தியிடம் இருந்து தோன்றியதே ஆகும் அல்லவா.
5. அன்னையின் நெற்றியில் காணப்படும் நெற்றி பொட்டும், தலையின் மெல்லிய கூந்தலில் காணப்படும் மெல்லிய கோடும் பராசக்தியின் முகத்திற்கு கடலைப் போன்ற அளவிலான அழகை சேர்க்கின்றன. அந்த அழகை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாது, அவளது அழகை புரிந்து கொள்ளவோ அல்லது வர்ணிக்கவோ முடியாது என்று இந்த ஸ்லோகம் கூறுகிறது. நெற்றியின் உச்சியில் சிவப்பு நிறத்திலான பொட்டு வைப்பது மங்களகரமானது).

-45-

अरालैः स्वाभाव्यादलिकलभसश्रीभिरलकैः
परीतं ते वक्त्रं परिहसति पङ्केरुहरुचिम् ।
दरस्मेरे यस्मिन् दशनरुचिकिञ्जल्करुचिरे
सुगन्धौ माद्यन्ति स्मरदहनचक्षुर्मधुलिहः ॥

அராலை: ஸ்வாபாவ்யாதலிகலபஸஶ்ரீபிரலகை:
பரீதம் தே வக்த்ரம் பரிஹஸதி பனகேருஹருசிம் ।
தரஸ்மேரே யஸ்மின் தஶனருசிகிஞ்ஜல்கருசிரே
ஸுகந்தௌ மாத்யந்தி ஸ்மரதஹனசக்ஷுர்மதுலிஹ: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 12 நாட்கள் பாராயணம் செய்தால் -- வாக்கு பலிக்கும்



ஹே பராசக்தி,
உனது அழகிய முகம் மீதுள்ள சுருண்ட தலை முடி, தாமரை மலரில் சுற்றி அலையும் வண்டுகளை போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றது. இயற்கையாகவே பளபளப்பான சுருண்ட முடியோடு காணப்படும் உனது நெற்றியானது, வண்டுகள் சூழப்பட்ட தாமரை மலரின் அழகையும் தோற்கடிப்பதாக உள்ளது. அழகிய முகத்தில் நீ வெளிப்படுத்தும் புன்னகையில் வெளிப்படும் பற்களின் அழகு உனது அழகிற்கு மேலும் மெருகேற்றும் வண்ணம் உள்ளது. அதனால்தான் காமனை எரித்த பரமசிவனின் கண்கள் கூட அந்த வண்டுகளை போல உன்னை சுற்றியே அலைகின்றது.

(விளக்கம்:

1. பெரும்பாலான சமஸ்கிருத இலக்கியப் படைப்புகளில் பெண்ணின் அழகு, குறிப்பாக அவர்களின் முகம் தாமரை மலர்கள் அல்லது சந்திரனுடன் ஒப்பிடப்பட்டு உள்ளதைக் காண முடியும். அந்த அம்சத்தில் இந்த ஸ்லோகம் மாறுபடவில்லை. பராசக்தியின் முக அழகு ஒருவரால் விவரிக்க முடியாதது என்பதினால் பராசக்தியின் முகம் மலர்ந்த தாமரை மலருடன் ஒப்பிடப்பட்டு, தாமரை மலரில் உள்ள தேனை உறுஞ்சுவதற்காக அதன் மீது சுழன்று கொண்டிருக்கும் கருப்பு நிறத்திலான வண்டுகளை அவளது சுருண்ட கேசத்துடன் ஒப்பிட்டு உள்ளார்.
2. தேன் உறிஞ்சும் கறுப்பு தேனீக்கள் உண்மையில் அவள் முகத்தைச் சுற்றிக் கொண்டே இருக்கவில்லை என்றாலும் பராசக்தியின் நெற்றியின் மேல் காணப்படும்

சுருள் முடியின் இயற்கை அழகு அந்தத் தேனீக்கள் கூட்டத்தைப் போலவே இருப்பதாக, இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறுகிறார்.

3. இந்த ஸ்லோகத்தின் இரண்டாவது அம்சம் பராசக்தியின் மென்மையான புன்னகை; அவள் சிரிக்கும் போது, புதிதாக மலர்ந்த மல்லிகைப் பூக்கள் பூப்பதை போல அவளது வெண்ணிறமான பற்கள் காணப்பட்டு அவளது அழகை அதிகரிக்கின்றன; இப்படியாக தாமரை மலரில் காணப்படும் வெள்ளை தண்டு பராசக்தியின் பற்களுடன் ஒப்பிடப்படுகிறது.

4. மூன்றாவது அம்சம், தாமரையைச் சுற்றி ஓடும் இளம் தேனீக்கள் சிவனின் கண்களுடன் ஒப்பிடப்படுகின்றன. எப்படி தேனீக்கள் தாமரை மலர் மீது சுற்றிக் கொண்டே உள்ளனவோ அப்படித்தான் மன்மதனை எரித்த சிவபெருமானின் கண்கள் கூட பராசக்தியின் அழகிய முகத்தைப் பார்த்தபடியே இருந்தவாறு அவள் மீது அதிக மோகம் கொள்கின்றார் என்பதாக இந்த ஸ்லோகம் கூறுகிறது).

-46-

ललाटं लावण्यद्युतिविमलमाभाति तव य-
द्द्वितीयं तन्मन्ये मकुटघटितं चन्द्रशकलम् ।
विपर्यासन्यासादुभयमपि संभूय च मिथः
सुधालेपस्यूतिः परिणमति राकाहिमकरः ॥

லலாடம் லாவண்யத்யுதிவிமலமாபாதி தவ ய-
த்த்விதீயம் தன்மன்யே மகுடகடிதம் சந்த்ரஶகலம் ।
விபர்யாஸன்யாஸாதுபயமபி ஸம்பூய ச மித:
ஸுதாலேபஸ்யூதி: பரிணமதி ராகாஹிமகர: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- குழந்தை பாக்கியம் கிடைக்கும்



ஹே பராசக்தி,
உன்னுடைய முகத்தில் இருபுறமும் வளைந்து காணப்படும் வெண்ணிறத்திலான நெற்றிப் பகுதி சந்திரனின் கீழ் பகுதியை வெளிப்படுத்தும் விதத்தில் தோற்றம் தருகின்றது. உனது கிரீடத்தில் காணப்படும் சந்திரனோ அதன் மேல் பாகத்தை (பிறைச் சந்திரன்) வெளிப்படுத்துவதாக மேல்புறம் வளைந்து காணப்படுகின்றது. ஆகவே கிரீடத்திலும், உனது முகத்திலும் தோற்றம் அளிக்கும் இரு சந்திரன்களையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கும்போது, அற்புதமான உனது முழு முகம் அமிர்தம் போன்ற பூரண சந்திரனை வெளிப்படுத்துவதாக உள்ளது.

(விளக்கம்:

1. பொதுவாகவே அழகிற்கு சந்திரனே ஆதாரமாக உள்ளதினால், பெரும்பாலான பாடல்களிலும் கவிதைகளிலும் பெண்களின் வளைந்து காணப்படும் முக லக்ஷணங்களை சந்திரனுடன் ஒப்பிடுவது உண்டு.
2. பராசக்தியும் பரமசிவனும் அணிந்துள்ள கிரீடத்தில் மேல் நோக்கி வளைந்து உள்ள பாதி சந்திரன் காணப்படுகின்றது. வளர்பிறை தோன்றும்போது முதல் பாதி நாட்களில், அதாவது அஷ்டமி எனப்படும் எட்டாவது தினத்தில் பாதி சந்திரன் தெரியும். அது பராசக்தி அணிந்துள்ள கிரீடத்தில் மேல் பகுதியில் காணப்படும் பாதி வடிவிலான பிறை சந்திரனுக்கு ஒப்பானது.
3. பராசக்தியின் புருவங்களுக்கு கீழே முகவாய்கட்டை வரை அழகிய வடிவில் வளைந்து தோன்றும் முக லட்ஷணம்

சந்திரனின் மீதி பாதியைப் போல காட்சி அளிக்கின்றது.

4. அஷ்டமிக்கு அடுத்த ஏழாவது நாள் முடிவில் பௌர்ணமி அன்று முழுமையாக காட்சி தரும் சந்திரனின் தோற்றம் போன்றே கிரீடம் அணிந்துள்ள பராசக்தியின் முழு முகமும் அமிர்தம் போன்ற பூரண சந்திரனை பிரதிபலிக்கும் விதத்தில் காட்சி அளிப்பதாக இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறி உள்ளார்.

5. இந்த ஸ்லோகத்தின் மகிமையை எடுத்துரைக்கும் விதத்திலான ஒரு கதை உண்டு. பல நூறாண்டுகளுக்கு முன்னர் ரத்னகேட தீக்ஷதர் என்றொரு பண்டிதர் இருந்தார். அவருடைய இயற்கையான பெயர் ஸ்ரீனிவாச தீக்ஷதர் என்பதாகும். அக் காலத்தில் அவர் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் கிருபையினால் மஹா வித்வானாக வலம் வந்து கொண்டிருந்தார். சூரப்பநாயகன் என்ற அரசனின் ஆஸ்தான வித்வானாக இருந்தார். அந்த காலத்தில் அவரது பெயர் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்று இருந்த போதிலும் ரத்னகேட தீக்ஷிதர் என்ற பெயரையும் சேர்த்து ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்றே கூறி வந்தார்கள்.

6. காமாக்ஷி தேவியோ பராசக்தியின் அம்சம். ஆகவே ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் தினமும் சௌந்தர்யலஹரியில் உள்ள இந்த ஸ்லோகத்தை பாராயணம் செய்து வந்தார். அதனால் அவ்வப்போது அவருக்கு பராசக்தியின் முழு நிலையிலான முகம் நேரில் தோன்றுவது உண்டு.

7. அவர் ஒருமுறை தொண்டை நாட்டுக்கு சென்று இருந்தார். 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை நாடு சின்ன

பொம்ம ராஜா என்ற மன்னன் ஆட்சியில் இருந்தது. மன்னனின் அரண்மனைக்கு சென்ற ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் சில விவாதங்களில் பங்கேற்றார். அப்போது அவரைப் பார்த்த மன்னன் இன்று என்ன திதி என்று கேட்க அவரும் இன்று பூரண பௌர்ணமி என்று வாய் தவறி கூறி விட அனைவரும் சிரித்தார்கள். காரணம் அன்று முழு அம்மாவாசை திதியாகும்.

8. ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் ஒரு நிமிடம் கண்களை மூடினார், கண்களில் காமாட்சி அம்மன் முகம் முழு நிலவாக காட்சி அளிக்க, கண்களை திறந்த தீக்ஷதர் அன்று இரவு நிச்சயமாக முழு நிலவில் சந்திரன் தோன்றும், தான் கூறியதை உண்மை என நிரூபிக்கும் என்று சபதம் செய்ய, மன்னனும் மற்ற அனைவரும் இரவு வரும் வரை காத்திருந்தார்கள். என்ன அதிசயம். முழு அம்மாவாசை தினத்தன்று முழு நிலவான முகத்தோடு அம்மன் ஆகாயத்தில் காட்சி அளிக்க அனைவரும் வெட்கி தலை குனிந்து அவரிடம் மன்னிப்பைக் கோரினார்கள்.

-47-

भ्रुवौ भुग्ने किंचिद्भुवनभयभङ्गव्यसनिनि
त्वदीये नेत्राभ्यां मधुकररुचिभ्यां धृतगुणम् ।
धनुर्मन्ये सव्येतरकरगृहीतं रतिपतेः
प्रकोष्ठे मुष्टौ च स्थगयति निगूढान्तरमुमे ॥

ப்ருவெள புக்னே கிஞ்சித்புவனபயபனகவ்யஸனினி
த்வதீயே நேத்ராப்யாம் மதுகரருசிப்யாம் த்ருதகுணம் ।
தனுர்மன்யே ஸவ்யேதரகரக்ருஹீதம் ரதிபதே:
ப்ரகோஷ்டே முஷ்டெள ச ஸ்தகயதி நிகூடாந்தரமுமே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 25 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்திலும் வெற்றி கிடைக்கும்



ஹே பராசக்தி
அனைத்து உயிர்களுக்கும் அபயமளிக்கும் உமா தேவியே, சற்றே வளைந்து காணப்படும் உனது புருவங்கள் மன்மதனின் கையில் உள்ள கரும்பு வில்லிற்கு ஒப்பானதாக தெரிகின்றது. உன்னுடைய கருமை நிறைந்த கண்களோ வண்டுகளால் பின்னப்பட்ட நாண் கயிறு போல காட்சி அளிக்கின்றது. புருவங்களின் இடைப் பகுதியானது (மூக்குப் பகுதி) அந்த வில்லை மன்மதன் கையில் பிடித்திருப்பதினால் மறைந்து காணப்படும் கரும்பு வில்லின் நடுப் பகுதி போல தெரிகின்றது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில் பராசக்தியை ஆதி சங்கரர் உமா என்று அழைத்து உள்ளார். உமா தேவியும், பார்வதியும், பரமேஸ்வரியும், பராசக்தியின் வேறு வேறு பெயர்கள்தான். இங்கு உமா என்றால் சிவபெருமானின் மகிமை என்று பொருள்.
2. இந்த ஸ்லோகத்தில் பரமேஸ்வரியின் முகத்தில் உள்ள புருவங்களின் அழகு விவரிக்கப்பட்டு உள்ளது. அவளது முகத்தில் வளைந்து காணப்படும் புருவமானது மன்மதனின் கையில் உள்ள கரும்பு வில்லின் இரு பகுதிகளாக தோற்றம் தருவதாகவும், இரண்டு காதுகளின் அருகில் வரை நீண்டு இருக்கும் மீன் விழி போன்ற இரண்டு கண்களும் மன்மதனின் வில்லின் நாண் போன்ற வண்டுகளின் அணிவகுப்பாகவும் காணப்படுகின்றது என்று வர்ணித்து உள்ளார்.
3. மேலும் மன்மதனின் கையில் ஏந்தி உள்ள கரும்பு வில்லின் நடுப் பகுதியை அவர் இடது

கையினால் பிடித்துக் கொண்டு உள்ளதினால் வில்லின் நடுப்பகுதி தெரியாமல், புருவங்களின் இடையே உள்ள இடைவெளி (மூக்குப் பகுதி) கரும்பு வில்லை மறைப்பது போல உள்ளது என்று வர்ணிக்கிறார்.



4. வில்லை ஏந்திய வண்ணம் உள்ளவர்கள் எப்போதும் அதன் நடுப் பகுதியை தமது இடது கையில் பிடித்துக் கொண்டு நிற்கையில் தூரத்தில் இருந்து பார்க்கும்போது வில்லின் நடுப் பகுதியைக் காண முடியாமல் அவர்களது கை முட்டி வில்லை மறைத்துக் கொண்டு இருக்கும். அந்த தத்துவத்தை இந்த புருவங்களின் தோற்றங்களாக ஆதி சங்கரர் வர்ணித்து உள்ளார்.

5. சிவபெருமானின் மனைவியை உமா மற்றும் பார்வதி எனும் இரண்டு ரூபங்களில் அழைக்கின்றார்கள். பிரபஞ்சம் தோன்றியது முதலேயே அவளை ஒரு உயர்ந்த பெண் தெய்வமாகவே பார்க்கின்றார்கள் . சிலர் உமா தேவியை துர்கா என்று அழைக்கிறார்கள். சிவபெருமானின் மனைவியான பராசக்தியை (பார்வதி என்றும் பெயர் உண்டு) 10,000 க்கும் மேற்பட்ட பெயர்களில் வணங்குகின்றார்கள் என்றாலும் பொதுவாக அவளை 'பார்வதி' என்ற பெயரில் அழைக்கின்றார்கள். வேதங்கள், உபநிடதங்கள் மற்றும்

புராணங்களில் 'உமா' என்ற பெயர் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

6. உமாவின் கதை படிக்க சுவாரசியமாக உள்ளது. ஒரு முறை ஜனமேஜய என்ற மன்னன் வியாச முனிவரிடம் சென்று கேட்டார் ‘மகா சக்தி எனும் தெய்வம் அனைத்து தெய்வங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டு உள்ளதாக கூறப்படும் நிலையில் நாம் ஏன் பல தெய்வங்களை தனித் தனியே வணங்க வேண்டும்? மஹா சக்தி யார், அவள் தங்குமிடம் எங்கே என்று எனக்கு விளக்குவீர்களா?’. அதைக் கேட்ட வேத வியாசர் ஒரு சிறிய கதை மூலம் அதற்கான பதிலைக் கூறினார் .

7. அவர் சொன்னார் ‘ஒருமுறை தலை கனம் பிடித்த அசுர குலத்தினர் தேவர்களுடன் போர் தொடுத்தனர், அது 1000 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது என்றாலும் இரு தரப்பில் எவருக்கும் வெற்றி கிடைக்கவில்லை. அசுரர்களின் படைகளை தேவர்களால் வெல்ல முடியாததால், போரில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களால் பிரபஞ்சம் அழிந்து விடும் என்று வானவர்களும் மற்றவர்களும் உணர்ந்தனர். வானோர்களின் நிலையை கவனித்த மஹா சக்தி தேவர்களுக்கு தெரியாமல் அவர்களுக்கு அளவற்ற சக்திகளை தந்ததும் அல்லாமல், தானே யக்ஷினி எனும் வடிவில் யுத்தகளத்தில் சென்று அசுரர்களை கொன்று குவிக்க, அதனால் அச்சமுற்ற அசுரர்கள் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆயுதங்களை போட்டு விட்டு தப்பிச் சென்று பாதாள லோகத்தில் பதுங்கிக் கொண்டார்கள். யுத்தத்தில் வெற்றி பெற்ற தேவர்கள் மகிழ்ந்தனர், ஆனால்

அவர்கள் தமக்கு எங்கிருந்து அத்தனை சக்தி கிடைத்தது, எப்படி அசுரர்களை வெல்ல முடிந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள்'.

8. வேத வியாசர் கூறிக் கொண்டு இருந்த கதையை சற்று நிறுத்திய பின்னர் கதையைத் தொடர்ந்தார் 'உண்மையில் மஹா சக்தி என்ற பராசக்திதான் தேவர்களுக்கு உதவ, ஆயிரக்கணக்கான சூரிய பிரகாசத்துடன் கூடிய, திகைப்பூட்டும் ஒளி வடிவில் யக்ஷனி எனும் வேடத்தில் போர்க்களத்தில் இறங்கினார். யக்ஷனி என்பவள் உமா தேவி ஆகும்.

9. போர் முடிந்ததும், தேவர்கள் யக்ஷனியை அணுகி அவளைப் பற்றி விசாரிக்க முடிவு செய்தனர். முதலில் அக்னி தேவர் யக்ஷனியிடம் சென்று, உலகம் முழுவதையும் எரிக்கும் சக்தி கொண்ட அக்னி தேவன் தான் என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டு அவள் யார் என்று கேட்டார். யக்ஷனி, அக்னியின் முன் சிறிய வைக்கோல் துண்டை வைத்து, அவர் முன் வைக்கப்பட்ட வைக்கோல் துண்டை அவர் எரித்து விட்டால் தான் யார் என்பதை வெளிப்படுத்துவேன் என்று கூறினாள். அக்னியும் தனது முழு ஆற்றலையும் பயன்படுத்திய போதிலும், அந்த வைக்கோல் துண்டை எரிக்க முடியாமல் தோற்றுப் போனதினால் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

10. அடுத்து வாயு பகவான் யக்ஷனியிடம் சென்றதும் அவளும் வேண்டுமென்றே பணிவுடன் அவர் யார் என்று கேட்டாள். அவரும் தான் வாயு தேவன் என்றும், பிரபஞ்சத்தை தன்னிடமே வைத்திருக்கும் அனைத்து சக்திகளையும் கொண்டவர்

என்றும் தன்னைக் குறித்து பெருமிதத்துடன் பதிலளித்தார். யக்ஷினி மீண்டும் அதே வைக்கோல் துண்டை அவர் முன் வைத்து, அந்த வைக்கோல் துண்டை எவ்வளவு விரைவாக அகற்ற முடியுமோ அவ்வளவு வேகமாக அகற்றும்படி கூறினார். தனது முழு ஆற்றலையும் பயன்படுத்திய போதிலும், வாயுவினால் அந்த வைக்கோல் துண்டை சற்று கூட அசைக்க முடியவில்லை என்பதினால் அவமானப்பட்டு வீடு திரும்பினார்.

11. யக்ஷினி யார் என்று எவராலும் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதினால் அவர்கள் தேவேந்திரனை யக்ஷினியை சந்திக்க அனுப்பினார்கள், ஆனால் அவர் அங்கு செல்வதற்குள், அவள் மறைந்து விட்டாள். அவளைச் சந்திக்கும் முயற்சியில் தோல்வியுற்று தேவேந்திரன், பராசக்தியிடம் உண்மையாகவும் முழு மனதுடன் சரணடைந்து, யக்ஷினி என்பவள் யார் எனும் புதிரைத் தீர்க்க அவளது அருளை வேண்டினார்.

12. அனைத்து வானவர்களும் தியானத்தில் இருந்த அவரை சூழ்ந்து கொண்டு அமர்ந்திருந்தபோது சில நாட்கள் கழிந்தன. திடீரென்று ஒரு நாள் தேவேந்திரன் தியானம் செய்யும் இடத்தில் ஆயிரம் சூரிய ஒளியைப் போன்ற ஒரு திகைப்பூட்டும் ஒளி தோன்றியது. நான்கு கைகளுடன் நான்கு முத்திரைகளைக் காட்டிய ஒரு அழகான பெண் தோன்றினாள். பிரகாசத்தின் மத்தியில் தோன்றிய தேவி, தான் பார்வதியின் மற்றொரு வடிவமான உமா என்றும், தானே மகா மாயா அதாவது மாபெரும் சக்தி தேவி என்றும் தன் உருவை வெளிப்படுத்தினாள் - போரில் தோற்றுப்

போக இருந்த தேவர்களை மீட்க யக்ஷினி வடிவில் தோன்றி மகா சக்தியான தான் அவர்களுக்கு யுத்தத்தில் வெற்றி பெற தேவையான சக்தியைக் கொடுத்ததாகக் கூறினாள்'. வேதா வியாசர் கூறிய பதிலால் திருப்தியடைந்த ஜனமேஜயன் திரும்பிச் சென்றார்.)

)

-48-

अहः सूते सव्यं तव नयनमर्कात्मकतया
त्रियामां वामं ते सृजति रजनीनायकतया ।
तृतीया ते दृष्टिर्दरदलितहेमाम्बुजरुचिः
समाधत्ते संध्यां दिवसनिशयोरन्तरचरीम् ॥

அஹ: ஸூதே ஸவ்யம் தவ நயனமர்காத்மகதயா
த்ரியாமாம் வாமம் தே ஸ்ருஜதி ரஜனீனாயகதயா ।
த்ருதீயா தே த்ருஷ்டிர்தரதலிதஹேமாம்புஜருசி:
ஸமாதத்தே ஸந்த்யாம் திவஸனிஶயோரந்தரசரீம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என, 9 நாட்கள் பாராயணம் செய்தால் -- நவ கிரஹ தோஷங்கள் விலகும்



ஹே பராசக்தி

உனது வலது பக்க கண்ணில் சூரியனின் ஸ்வரூபத்தை நீ அடக்கி வைத்துக் கொண்டு உள்ளதினால் பகல் நேரத்தில் வெளிச்சம் தருகின்றாய். உனது இடது கண்ணிலோ சந்திரனின் ஸ்வரூபத்தை அடக்கிக் கொண்டு உள்ளதினால் இரவில் குளிர்ச்சி நிறைந்த வெளிச்சத்தைத் தருகின்றாய். உனது நெற்றியில் உள்ள நடுக் கண்ணோ தங்கத் தாமரைப் பூப்போல் மலரும் விடியற் காலை மற்றும் மாலையில் சந்தி வேளைக்கு தேவையான ஒளியை தருகின்றது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் சில முக்கியமான விஷயங்களை எடுத்துக் காட்டுகிறார். முதலாவது அம்சம் சூரியனும் சந்திரனும் பராசக்தியின் கண்களின் ஸ்வரூபங்கள் என்பதை அவர் மீண்டும் வலியுறுத்துகின்றார்.
2. இரண்டாவது அம்சம், பராசக்திக்கும் மூன்று கண்கள் உள்ளன என்பதாக தெரிவிக்கின்றார். அதன் காரணம் அவள் பரமேஸ்வரனின் ஒரு பாதி என்பதினால், அவர்கள் இருவரும் ஒன்றிணைந்த நிலையிலான சதாசிவனாக இருக்கும்போது அவரது மூன்றாம் கண்ணிலும் அவளுக்கு பாதி கிடைத்து விடுகின்றது.
3. சூரியனும் சந்திரனும் முறையே பிரபஞ்சத்திற்கு விழிப்பை தருகின்றார்கள் அல்லது பிரபஞ்சத்தை உறக்கம் போன்ற முழுமையான அமைதியில் வைத்து விடுகின்றார்கள். அப்படிப்பட்ட இரண்டு செயல்களுமே வாழ்க்கைக்கு அத்தியாவசியம் ஆகும். ஆகவே பராசக்தியின் கண்களை

நான்கு கால கட்டங்களுடன் அவர் ஒப்பிடுகிறார்

4. - பகல், இரவு, விடி காலை (முழு இரவு மற்றும் சூரிய உதயத்திற்கு இடையில் தோன்றுவது) மற்றும் சந்தியா காலம் (மாலை நேரம் மற்றும் முழு இரவுக்கு இடையில் தோன்றும் காலம்) எனும் நான்கு நிலைகளை பராசக்தியின் கண்கள் வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டு உள்ளார். சந்தியா காலம் மற்றும் விடி காலை என்ற இரண்டுமே பகல் மற்றும் இரவு என்கின்ற இரண்டு காலங்களையும் இணைக்கிறது.

5. ஆதி சங்கரர் பராசக்தியின் கண்களின் அழகை விடிகாலை மற்றும் சந்தியா காலத்துடன் ஒப்பிடுகிறார். விடிகாலை பூக்கும் அழகான தாமரை மலர் மலர்வது போலவும், மாலை சந்தி வேளையில் தாமரை மலர்களின் இதழ்களை மூடுவது போலவும் அவளது கண்கள் முடித்த திறக்கின்றன என்கின்றார். மேலும், விடி காலையில் சந்தியா தேவியாகவும், அந்தி நேரத்தில் சாயா தேவியாகவும் அவள் வழிபடப்படுகிறார்.

அப்போது அவளது கண்கள் பாதி மூடிய நிலையில் உள்ளன.

6. இந்த ஸ்லோகத்தில் மூன்றாவது அம்சம் அவளை தியானிக்கும் சாதகனின் நிலை. பராசக்தியின் இரண்டு கண்கள், சூரியன் மற்றும் சந்திரனின் அவதாரங்கள் என்பதினால் அவை இரண்டுமே பராசக்தி மீதான தியான நிலையில் உள்ள சாதகர்களின் மனதிலுள்ள அறியாமை எனும் இருட்டை அழித்து அவர்களை விழித்து எழ வைக்கின்றன.

7. மூன்றாவது கண்ணால் ருத்ர ரூபமான பரமேஸ்வரன் பிரளய காலத்தின் போது பிரபஞ்சத்தை அழிக்கிறார். அதே போல இரக்கமுள்ள பரமேஸ்வரியின் மூன்றாவது கண்ணால் மீண்டும் மூன்று குணங்களான ரஜஸ், சத்வ மற்றும் தமஸ் ஆகியவற்றைக் கொண்ட பிரபஞ்சத்தையும் அவற்றுக்கான தெய்வங்களாக பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்திரனை மூன்று தொழில்களான ஆக்கல், காத்தல் மற்றும் அழித்தலுக்கு படைக்கின்றாள்.

8. அதனால்தான் சந்தி வேளை மற்றும் விடியற்காலை எனும் கால கட்டங்களையே மூன்றாம் கண்ணுடன் ஒப்பிட்டு, அதை பிரபஞ்சத்தின் அழிவிற்கு முற்பட்ட மற்றும்

பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்னர் உள்ள காலமாக உவமையாக கூறி உள்ளார்.

9. பராசக்தி கண்களை மூடி விட்டால் உலகமே அழிந்து விடும் என்பதினால்தான் அவள் சந்தி வேளையிலும், விடியற் காலையில் கூட பாதி திறந்த கண்களுடன்தான் இருக்கின்றாள். அவளது இரண்டு கண்களும் சந்திரன் மற்றும் சூரியன் என்பதினால் இரவிலும் ஒரு கண்ணால் உலகை பார்த்தபடியேதான் இருக்கின்றாள். இதனால்தான் அவள் கண்களை பிரளய காலத்தில் மூடும் வரை இந்த பிரபஞ்சமும் அழியாமல் உள்ளது.

-49-

विशाला कल्याणी स्फुटरुचिरयोध्या कुवलयैः
कृपाधाराधारा किमपि मधुराभोगवतिका ।
अवन्ती दृष्टिस्ते बहुनगरविस्तारविजया
ध्रुवं तत्तन्नामव्यवहरणयोग्या विजयते ॥

விஶாலா கல்யாணீ ஸ்புடருசிரயோத்யா குவலயை:
க்ருபாதாராதாரா கிமபி மதுராபோகவதிகா ।
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹுனகரவிஸ்தாரவிஜயா
த்ருவம் தத்தன்னாமவ்யவஹரணயோக்யா விஜயதே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என,10 நாட்கள் பாராயணம் செய்தால் -- புதையல்களைக் கண்டுபிடிக்க முடியும்



ஹே பராசக்தி
உனது அழகிய கண்கள் விசாலமாகவும், மங்களகரமானதாகவும், ஜொலிப்பதாகவும், நீலோத்பல பூக்கள் கூட தோற்கும் அளவிலான வசீகரத்தைக் கொண்டதாகவும், கருணைக்கு ஆதாரமாகவும், விவரிக்க முடியாத அழகுடனும், கருத்த நீல நிறத்திலும், பக்தர்களுக்கு அருள் புரிபவைகளாகவும், பல்வேறு வெற்றிகரமான நகரங்களை குறிப்பதாகவும் காணப்படுகின்றன.

(**விளக்கம்:**

1. உத்தம ஸ்த்ரீகளுடைய பார்வை எட்டு வகைகளிலானது என்றும், இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் மூலம் பராசக்தி அந்த பார்வைகளை வெளிப்படுத்தி யுத்தங்களில் சத்ருக்களை அழித்தாள் என்பதாகவும் உணர முடிகின்றது. ஒரு காலத்தில் இந்த லோகத்தில் எட்டு நகரங்கள் இருந்தன என்றும், அவை பராசக்தியின் எட்டு பார்வைகளைக் குறிப்பதாகவும், எனவே அந்த எட்டு பார்வைகளில் உள்ளவளாக அவளை மனதில் ஏந்திக் கொண்டு சாதகர்கள் ஆராதிக்க வேண்டும் என்பதாகவும் கூறப்படுகின்றது.
2. அன்னை பராசக்தியின் எட்டு பார்வைகளும் அதற்கான பெயர்களும் கீழே தரப்பட்டு உள்ளன.
    - கண்கள் விசாலமாக இருப்பதால் அவளை விசாலா என்றும்,
    - மங்களகரமாக உள்ளதினால் கல்யாணி என்றும்,

- நீலோத்பவ புஷ்பத்தை விட அழகிய பார்வையைக் கொண்டவள் என்பதினால் அயோத்யா என்றும்,
- கருணை பொழியும் பார்வையை தாரா என்றும்,
- வர்ணிக்க முடியாத அழகினைக் கொண்ட பார்வையை மதுரா என்றும்,
- ஸ்நேகத்தைக் காட்டுவதை போகவதீ என்றும்,
- தனது விழிகளின் பார்வையினால் சகல உலகங்களையும் காத்தபடி இருப்பதினால் அதை அவந்தீ என்றும்
- அநேக குணங்களை உள்ளடக்கிக் கொண்டு உள்ளதினால் விஜயா என்றும் கூறுகின்றார்.

விசாலை, கல்யாணி, அயோத்தி, தாரை, மதுரா, பகவதி, அவந்தி மற்றும் விஜயா என்று கூறப்படும் நகரங்களில் அயோத்தி, மதுரா, அவந்தி போன்றவற்றை தாண்டி தற்காலத்தில் பிற நகரங்கள் என்னென்ன, அவை எங்குள்ளன என்பது நமக்கு விளங்கவில்லை.

3. சாதாரண பெண்களின் எட்டு பார்வைகளை

- உள்ளார்ந்த,
- ஆச்சர்யமான,
- முழுக்க மலர்ந்த,
- களைப்போடு கூடிய,
- சஞ்சலமான,
- ப்ரியத்துடன் கூடிய,
- மயங்கிய நிலையில்,
- மற்றும் பாதி மூடிய நிலையிலான

என்பதாகக் கூறுகின்றார்கள். இந்த எட்டும் கூட அன்னையின் எட்டு பார்வைகளில் அடங்கியவைகள்தான் என்பதாக ஆதி சங்கரர் கருதி உள்ளார்).

-50-

कवीनां संदर्भस्तबकमकरन्दैकरसिकं
कटाक्षव्याक्षेपभ्रमरकलभौ कर्णयुगलम् ।
अमुञ्चन्तौ दृष्ट्वा तव नवरसास्वादतरला-
वसूयासंसर्गादलिकनयनं किंचिदरुणम् ॥

கவீநாம் ஸந்தர்பஸ்தபகமகரந்தைகரஸிகம்
கடாக்ஷவ்யாக்ஷேபப்ரமரகலபௌ கர்ணயுகலம் ।
அமுஞ்சந்தௌ த்ருஷ்ட்வா தவ நவரஸாஸ்வாததரலா-
வஸூயாஸம்ஸர்காதலிகனயனம் கிஞ்சிதருணம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 5 நாட்கள் பாராயணம் செய்தால் -- அம்மை போன்ற நோய்கள் தீரும்



ஹே பராசக்தி
உன்னை துதித்து கவிஞர்கள் பாடும் பாடல்களிலும் கவிதைகளிலும் இருந்து வெளியாகும் அமிர்தம் போன்ற சப்தங்களை, புஷ்பங்களில் உள்ள தேனை, வண்டுகள் உறிஞ்சி எடுப்பதை போல இரண்டு காதுகளும் கேட்டு மகிழ்ந்து கொண்டு இருக்கையில், மீன் விழி போன்ற உன்னுடைய கண்களும் அந்த அமிர்தத்தை சுவைக்க ஆவல் கொண்டு, சிறிய தேனீ வண்டுகள் பறப்பதை போல, காது வரை நீண்டிருக்கும் கண்களால் காதுகளை பார்க்கின்றன. அந்த கண்களைக் காணும் நெற்றியில் உள்ள மூன்றாவது கண்ணோ பொறாமை மிகக் கொண்டு சிவந்த நிறத்தில் காணப்படுகின்றது.

(**விளக்கம்:**

1. கவிஞர்கள் தங்கள் இதயத்தையும் உள்ளத்தையும் முழுமையாக செலுத்தி பராசக்தியை துதித்து பாடும் அமிர்தம் போன்ற உணர்ச்சி மிக்க கவிதை மற்றும் பாடல்களின் அலைகளை கேட்டவண்ணம் உள்ள, காதுகள் வரை நீண்டிருக்கும், பராசக்தியின் கரிய நிறத்திலான, தேனிக்களைத் போன்ற நீண்ட இரண்டு அழகிய கண்களும், இரு காதுகளையும் உற்று நோக்கிய வண்ணம் இருந்தவாறு, உணர்ச்சி மிக்க கவிதை மற்றும் பாடல் அலைகளின் ரீங்காரங்களை ரசித்தபடியே உள்ளன. அமிர்தம் போன்ற உணர்ச்சி மிக்க பாடல்கள் என்று இங்கு கூறப்பட்டு உள்ளது அந்த பாடல்களில் உள்ள இனிமையான சொற்களால் மட்டும் ஏற்படுவதில்லை. அதை

விட முக்கியமானது பாடுபவர்களில் குரல் வளம் ஆகும். பாடல்களின் இனிமைக்கும், ஸ்தோத்திரங்களை அழகிய உணர்வோடு வெளிப்படுத்தும் தன்மைக்கும் குரல் வளம் பெரும் பங்கு வகிக்கின்றது.

2. அப்படிப்பட்ட இனிமையான குரல் வளத்தைக் கொடுப்பது தொண்டையில் உள்ள சக்கரமே. தொண்டையில் உள்ள விசுத்த சக்கரத்தின் ஆற்றல் சக்தியாக சரஸ்வதி எனும் வடிவில் பராசக்தியே அமர்ந்து உள்ளாள் என்பதினால் அவளே குரல் வளத்தை தருகின்றாள். மேலும் தேவியின் மீதான தோத்திரங்களை, பாடல்களையும் தன்னை மறந்து உணர்ச்சியுடன் ஒருவர் பாடும்போதோ அல்லது உச்சரிக்கும்போதோ பெருமூளையில் சுரக்கும் மூளை தண்டு வட திரவம் என்பது உருகி தொண்டையில் பாய்கின்றதாம். அமிர்தம் போன்ற அந்த திரவம் பாடுபவர் அல்லது துதிப்பவர்களது குரலை மனதை உருக்கும் வகையில் இருக்குமாறு மாற்றி அமைத்து விடுகின்றது என்பதை ஆதி சங்கரர் கூறாமல் கூறி உள்ளார்.

3. கவிஞர்கள் தங்கள் இதயத்தையும் உள்ளத்தையும் முழுமையாக செலுத்தி பராசக்தியை துதித்து பாடும் அமிர்தம் போன்ற உணர்ச்சி மிக்க கவிதை மற்றும் பாடல்களின் இனிமையை கேட்டவண்ணம் உள்ள காதுகளையும், அதை உன்னிப்பாக பார்த்தபடி இருந்து ரசிக்கும் கரு விழிகளையும் பார்க்கும் மூன்றாவது கண்ணோ தனக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லையே என்ற பொறாமையினால் சிவந்து விடும். சிவபெருமானின் மூன்றாவது கண் சிவந்து,

திறக்கும் போதெல்லாம், அது பிரபஞ்சத்தை அழிக்கிறது. அதே நேரத்தில் பராசக்தியின் சிவந்திருக்கும் மூன்றாவது கண் திறக்கும்போது அது தனது பக்தர்களின் மீது இரக்கத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றது).

-51-

शिवे शृङ्गारार्द्रा तदितरजने कुत्सनपरा
सरोषा गङ्गायां गिरिशचरिते विस्मयवती । (गिरिशनयने)
हराहिभ्यो भीता सरसिरुहसौभाग्यजननी (जयिनी)
सखीषु स्मेरा ते मयि जननी दृष्टिः सकरुणा ॥

ஶிவே ஶ்ருங்காரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா
ஸரோஷா கனகாயாம் கிரிஶசரிதே விஸ்மயவதீ ।
ஹராஹிப்யோ பீதா ஸரஸிருஹஸௌபாக்யஜனநீ (ஜயினீ)
ஸகீஷு ஸ்மேரா தே மயி ஜனநீ த்ருஷ்டி: ஸகருணா ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- சர்வ ஜனங்களையும் வசியப்படுத்தலாம்

क्लीं
क्लीं
क्लीं

ஹே பரமேஸ்வரி,
சிவபெருமானின் மீதான உனது பார்வை மென்மையாகவும் சிருங்கார ரசங்கள் நிரம்பியதுமாக இருக்க, அவர் மீதான உனது முழுமையான அன்பு வெளியில் தெரிகின்றது. ஆனால் அவரை தவிர்த்து மற்றவர்கள் மீதான பார்வையில் பொறாமையும், முக்கியமாக கங்கையின் மீது வெறுப்பும், கோபமும் தெரிகின்றது. சிவனின் பராக்கிரமங்களைக் கேட்கும்போது நீ பரவசப்படுகின்றாய், ஆனால் அவர் மீதுள்ள பாம்பைக் கண்டு, குளத்தில் மலர்ந்த தாமரைப் பூக்களின் நிறத்தைப் போன்ற சிவப்பு முக பாவத்தைக் காட்டி அச்சத்தை வெளிப்படுத்துகின்றாய். நண்பர்களோடு ஹாஸ்ய ரசத்துடன் உள்ளவளாகவும், என் மீது கருணை கொண்டவளுமாக காட்சி தருகின்றாய்.

(விளக்கம்:

1. சிருங்கார ரசம் என்பது நாட்டியம், இசை, கவிதை, நாடகம், ஓவியம் மற்றும் சிற்பத் துறையில் வெளிப்படும் கேளிக்கை, வெறுப்பு, கோபம், பயம், பொறாமை, கருணை, வீரம் அன்பு, காதல், ஆசை போன்ற பாவங்களை வெளிப்படுத்துவது ஆகும்.
2. பரமேஸ்வரி தனது கணவரான பரமேஸ்வரனைப் பார்க்கும் போதும் அவரோடு இருக்கும் போதும் சிருங்கார ரசங்களை வெளிப்படுத்துவது போல பராசக்தியின் முக பாவங்கள் உள்ளது என்பதாக இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் கூறி உள்ளார்.
3. அவள் இயற்கையாகவே மென்மையான குணம் கொண்டவள் என்பதினால் அவள்

பரமேஸ்வரனோடு இருக்கையில் கனிவான அன்பை வெளிப்படுத்துகிறாள். அவர்கள் இவருடைய அன்பும் எப்படிப்பட்டது என்றால் எப்படி ஒரு சொல்லின் அர்த்தத்தை சொல்லில் இருந்து தனியே பிரிக்க முடியாததோ அப்படிப்பட்ட அன்பு ஆகும்.

4. ஆனால் அவள் பரமேஸ்வரனுடன் மற்றவர்களைப் பார்க்கும்போது, அவளுடைய கனிவான அன்பின் வெளிப்பாடு ஒரு விதமான பொறாமை கலந்த தோற்றத்தை தருகின்றது. இது சிருங்கார ரசத்தில் இன்னொரு தோற்றமாகும்.
5. பரமேஸ்வரர் பெரும்பாலான சமயங்களில் தியான நிலையில்தான் இருக்கின்றார், அப்போதெல்லாம் அவரது குண்டலினி சக்தியில் பரமேஸ்வரியை அமர்ந்து இருக்கின்றாள் என்பதினால் பரமேஸ்வரரின் தலை எப்போதுமே நெருப்பு போன்று சூடாகவே இருக்கும், அதனால்தான் எப்போதுமே அவரது தலையில் கங்கா தேவி அமர்ந்து கொண்டு அவரது தலையை குளிர்ச்சி அடைய வைத்துக் கொண்டே இருப்பதான கருத்தும் உண்டு.
6. புனித நதியான கங்கை பரமேஸ்வரனனின் ஜடை முடியின் மேல் அமர்ந்து உள்ளதை பார்க்கையில் தனது கணவரது தலை மீது இன்னொருவள் அமர்ந்து இருக்கிறாளே என்ற ஆத்திரம் மேலெழ, அது பொறாமையாக மாறுகின்றது. அதுவும் சிருங்கார ரசத்தில் ஒரு தோற்றமாகும். சிவபெருமானின் தலையை குளிர்ச்சி அடைய வைப்பதற்காகத்தான் அவர் தலை மீது கங்கை அமர்ந்து இருக்கின்றாள் என்ற கூற்றை பராசக்தியினால் ஏற்க முடியவில்லை.

7. சிவபெருமானின் பத்தினி பராசக்தி தன்மீது கோபமாக இருக்கின்றாள் என்பதை உணர்ந்து கொண்ட, பனிப் பாறையாக சிவபெருமான் தலை மீது அமர்ந்து இருந்த கங்கை, பராசக்தியின் கோபத்திற்கு பயந்து, தன்னை உருக்கிக் கொண்டு தண்ணீராக பாயத் துவங்கி விட்டாளாம்.

8. முனிவர்களும் ரிஷிகளும் திரிபுரா யுத்தத்தில் பரமேஸ்வரனின் பராக்கிரமங்களையும், புத்தி கூர்மையினால் மூன்று நகரங்களையும் அழித்த கதைகளையும் பரமேஸ்வரிக்கு கூறிக் கொண்டு இருக்கையில், தனது கணவரின் பெருமையைக் கேட்டு வியப்புடன் பரமேஸ்வரரை பார்வதி நோக்கிக் கொண்டு இருப்பாளாம்.

9. அதே போலவேதான் அணிகலன்கள் காணப்பட வேண்டிய தனது கணவரின் உடலில் பாம்புகள் இருப்பதைக் கண்டு தனது மனதில் உள்ள கோபக் கனலை வெளிப்படுத்தும் விதத்தில் தாமரை மலர் போன்ற சிவப்பான முகத்தோடு இருந்தவாறு அவரது அருகில் செல்ல பயப்படுவாள். ஆனாலும் அவள் தனது பக்தர்களைக் காணும்போது கருணையை பொழிகின்றாள்.

-52-

गते कर्णाभ्यर्णं गरुत इव पक्ष्माणि दधती
पुरां भेत्तुश्चित्तप्रशमरसविद्रावणफले ।
इमे नेत्रे गोत्राधरपतिकुलोत्तंसकलिके
तवाकर्णाकृष्टस्मरशरविलासं कलयतः ॥

கதே கர்ணாப்யர்ணம் கருத இவ பக்ஷ்மாணி தததீ
புராம் பேத்துஶ்சித்தப்ரஶமரஸவித்ராவணபலே ।
இமே நேத்ரே கோத்ராதரபதிகுலோத்தம்ஸகலிகே
தவாகர்ணாக்ருஷ்டஸ்மரஶரவிலாஸம் கலயத: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- காதுகள் மற்றும் கண் நோய்கள் குணமாகும்

रं

ஹே பராசக்தி,
நீ ஹிமவானுடைய வம்சத்திற்கு பெருமை சேர்க்கும் விதத்தில் தோன்றி உள்ளவள். இரண்டு காதுகள் வரை நீண்டு உள்ள உனது அழகிய இரண்டு கண்களுக்கும் மேலே உள்ள இமைகளில் காணப்படும் மயிர்கள், பாணங்களின் இரு புறங்களிலும் கட்டப்பட்ட இறகுகள் போன்று காணப்படுகின்றன, அப்படிப்பட்ட உனது கண்கள் காது வரை இழுத்து விடப்பட்ட மன்மதனின் பாணம் போன்று உள்ளது. அதனால்தானோ என்னவோ உனது கண்கள் திரிபுரா சம்ஹாரம் செய்த சிவபெருமானின் உணர்ச்சிகளை உன்னிடம் கட்டி இழுக்கின்றன.

(**விளக்கம்:**

1. பனி மூடிய மலைகளின் மன்னனான ஹிமவான் (பார்வதியின் தந்தை) பரம்பரையில் பிறந்துள்ள பராசக்தி அவரது கிரீடம் போன்றவள். இருபுற காதுகள் வரை நீண்டு உள்ள அவளது கண்கள் மன்மதனின் அம்பு போல உள்ளது. கண்கள் மேலும் கீழுமுள்ள கண் இமைகள் பறவையின் இறகுகள் சிறகடித்தபடி உள்ளதை போல காணப்படுகின்றன என்பதினால்தான் சிவனின் மனதிலும் உள்ளத்திலும் அவள் கிளர்ச்சியை ஏற்படுத்தி அவரை அவளிடம் கட்டி இழுக்கின்றன என்பதாக ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளார்
2. இந்த ஸ்லோகத்தின் மூலம் மறைமுகமாக ஹிமவானின் பெருமையும் பார்வதியின் கண்களின் வலிமையையும் கூறப்படுகின்றது. பராசக்தியின் மீதான ஈர்ப்பு அவளது உடல் அங்கங்களினால் அவருக்கு ஏற்படவில்லை.

பராசக்தி மீதான ஈர்ப்பு அவளுடைய அழகிய கண்களில்தான் உள்ளது என்பது ஆதி சங்கரருக்கு தெரிந்தது. பல சீடர்களுக்கு குருமார்கள் கண்களின் அசைவுகள் மூலமே தீட்ஷை தருவார்கள் என்பதினால் கண்கள் மிகவும் முக்கியமானவை ஆகும்.

3. இமய மலையில் உள்ள பல குகைகளிலும் முனிவர்கள் மற்றும் ரிஷிகள் அமர்ந்து இருந்தபடி தியானம் செய்கிறார்கள். அவர்களில் சிலர் வேண்டும் என்றே தவத்தைக் கலைக்க முற்படும் அப்சரஸ்களின் அழகிய கண் இமைகளின் சிமிட்டல்களினால், மோகம் கொண்டு தவத்தைக் கலைத்துக் கொண்டு தவ வலிமையை இழப்பார்கள்.
4. அதே போலவேதான் காம வலையில் அனைவரையும் விழ வைக்கும் மன்மதனின் பாணங்களை போன்ற கண்களைக் கொண்ட பராசக்தியின் கண்களும் கூட பரமேஸ்வரனின் மனதை தன்னிடம் கட்டி இழுக்கின்றதாம்.
5. மன்மதனிடம் ஐந்து மலர் அம்புகள்தான் உள்ளன. ஆனால் சிவபெருமானை பராசக்தியின் மீது மயக்க வைக்க வேண்டிய போதெல்லாம், மன்மதன் பராசக்தியின் கண்ணை தனது ஆறாவது அம்பு போல தோற்றம் தர வைத்து பரமேஸ்வரரை பராசக்தி மீது மயங்க வைக்கின்றான் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

-53-

विभक्तत्रैवर्ण्यं व्यतिकरितलीलाञ्जनतया
विभाति त्वन्नेत्रत्रितयमिदमीशानदयिते ।
पुनः स्रष्टुं देवान् द्रुहिणहरिरुद्रानुपरतान्
रजः सत्त्वं बिभ्रत्तम इति गुणानां त्रयमिव ॥

விபக்தத்ரைவர்ண்யம் வ்யதிகரிதலீலாஞ்ஜனதயா
விபாதி த்வன்னேத்ரத்ரிதயமிதமீஶானதயிதே ।
புன: ஸ்ரஷ்டும் தேவான்
த்ருஹிணஹரிருத்ரானுபரதான்
ரஜ: ஸத்த்வம் பிப்ரத்தம இதி குணாநாம் த்ரயமிவ ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- பராசக்தியின் அருள் கிடைக்க வழி காட்டும்



ஹே பராசக்தி
பரமேஸ்வரரின் பத்தினியே, உனது கண்களில் உள்ள விழிப் படலத்தில் காணப்படும் ரத்த நாளம் போன்ற சிவப்பு ரேகைகளும், கருப்பு நிற கண்ணின் கரு விழிகளும், வெள்ளை நிற விழிப் படலமும் மூன்று தெய்வங்களை உனது கண்களில் நீ அடக்கிக் கொண்டு உள்ளதைக் காட்டுகின்றது. மஹா பிரளய காலத்தில் மும்மூர்த்திகளான பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன் போன்றவர்களும் உன்னுள் அடங்கி விட, அவர்களை மீண்டும் அடுத்த பிரபஞ்சத்தின் தோற்றத்தில் ரஜோ, சத்ய மற்றும் தமோ குணங்களைக் கொண்டவர்களாக படைப்பதற்காக அந்த மூன்று நிறங்களைக் கொண்ட கண்களைக் கொண்டவளாக இருக்கிறாயோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

(**விளக்கம்:**

1. பரமேஸ்வரரின் அன்புக்குரிய மனைவியின் கண்களில் இரண்டு இயற்கை நிறங்கள் உள்ளன. வெள்ளை நிற விழித் திரை வழியாக சிவப்பு நரம்புகள் ஓடுகின்றன. அதில் கருமை நிறத்திலான கண் விழியும் உள்ளது. இப்படியாக அவளது கண்கள் மூன்று நிறங்களை வெளிப்படுத்தும் கண்களாக உள்ளது. அதே நேரத்தில் அவள் மேல் மற்றும் கீழ் கண் இமைகளில் கருத்த மையை பூசிக் கொள்கின்றாள். அது அவளது அழகை மேலும் அதிகரிக்கின்றன.
2. அந்த மூன்று நிறங்களிலும் அவள் மூன்று குணங்களைக் கொண்ட தெய்வங்களை வெளிப்படுத்துகிறாள்.- சிவப்பு நிறமான ரஜஸ் குணம் பிரும்மாவைக் குறிக்கிறது, வெள்ளை

நிறத்திலான சத்வ குணம் விஷ்ணுவை குறிக்கிறது, மற்றும் கருப்பு நிறத்திலானது தமஸ் குணமுடைய ருத்ரனைக் குறிக்கிறது.

3. இது எதைக் காட்டுகின்றது**?** அவள் மூவரையும் தனக்குள் அடக்கி வைத்துக் கொண்டு இருக்கின்றாள் - பிரபஞ்சத்தின் அழிவின் போது அவர்களை தன்னுள் ஆகர்ஷித்து கொண்டு, மீண்டும் அழிவுக்குப் பிறகு புதிய பிரபஞ்சத்தைப் படைக்கும் போது அவர்களை மீண்டும் அதே குணங்களுடன் வெளிப்படுத்துகின்றாள்.

4. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் என்ன கூறி உள்ளார் என்றால் கருணையுள்ள தாய் பராசக்தியானவள் தனது கண்கள் மூலமே படைப்பு-அழிவு- மீண்டும் படைப்பு என்பதை ஒரு சுழற்சி முறையில் செய்கின்றாள்.

5. படைத்தல், காத்தல் மற்றும் மீண்டும் அழித்தல் எனும் மூன்று குணங்களையும் கொண்ட மூன்று தெய்வங்களை தனது கண்கள் மூலமே வெளிப்படுத்தி பிரபஞ்சத்தை படைத்த பின்னர் மீண்டும் பிரபஞ்சத்தை அழிக்கும் அவள் தனது கணவரான சிவபெருமானுடன் சில காலம் தனிமையில் இருக்க விரும்புகிறாள்.

6. பிரளய காலத்தில் பிரபஞ்சம் அழியும் போது பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், யமன், குபேரன், இந்திரன் மற்றும் பிற கடவுள்கள் உட்பட அனைத்து பெண் தெய்வங்களுக்கும் அழிந்து விடுகின்றார்கள். ஆனால் பராசக்தியின் கணவரான பரமேஸ்வரருக்கு மட்டும் அழிவு ஏற்படுவதில்லை; அதன் காரணம் அவர் அவளுடைய உடலில் பாதி அங்கம் ஆனவர், அவர்கள் இருவரும் என்றும் நிலையானவர்கள், அவர்களுக்கு அழிவு என்பதே கிடையாது

-54-

पवित्रीकर्तुं नः पशुपतिपराधीनहृदये
दयामित्रैर्नेत्रैररुणधवलश्यामरुचिभिः ।
नदः शोणो गङ्गा तपनतनयेति ध्रुवममुं
त्रयाणां तीर्थानामुपनयसि संभेदमनघम् ॥

பவித்ரீகர்தும் ந: பஶுபதிபராதீனஹ்ருதயே
தயாமித்ரைர்னேத்ரைரருணதவலஶ்யாமருசிபி: ।
நத: ஶோணோ கனகா தபனதனயேதி த்ருவமமும்
த்ரயாணாம் தீர்தானாமுபனயஸி ஸம்பேதமனகம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- பாலியல் நோய்கள் நிவர்த்தி ஆகும்



ஹே பராசக்தி
பசுபதி நாதர் எனும் சிவபெருமானையே எப்போதும் மனதில் நினைத்துக் கொண்டிருக்கும் அன்னையே, புனித நதிகளான, சிவப்பு நிறத்தில் ஓடும் சோணபத்ரா நதி (சரஸ்வதி) நதி, வெண்மை நிறத்திலான பாகீரதி எனும் கங்கை நதி மற்றும் கரும் நீல நிறத்திலான யமுனை நதிகளின் சங்கமம் போல விளங்கும் உனது சிவப்பு, வெண்மை மற்றும் கருமை நிறத்திலான விழிகள் எங்களுக்கு கருணைக் காட்டி, எங்களை புனிதப்படுத்துகின்றது.

(விளக்கம் :

1. புனித நதிகளில் நீராடுவது பாவங்களைப் போக்கும் என்பது பொதுவான கருத்து ஆகும், குறிப்பாக கங்கை, யமுனை மற்றும் சோணபத்ரா (சரஸ்வதி) போன்ற நதிகளின் சங்கமத்தில் (இணைந்து சேரும் இடங்கள்) குளிக்கும்போது நமது பாவங்கள் தீரும் என்பது நம்பிக்கை. இன்று சரஸ்வதி நதி வெளியில் தெரியாமல் காணாமல் போய் பல நூற்றாண்டுகள் ஆகி விட்டது என்றாலும் அது இன்றும் திரிவேணி சங்கமத்தில் வெளித் தெரியாமல் கங்கை மற்றும் யமுனை நதிகளின் அடியில் கலந்து உள்ளது என்ற நம்பிக்கை வலுவாக உள்ளது. அதனால்தான் திரிவேணி சங்கம் (மூன்று நதிகளின் சங்கமம்) என்பதாக அதைக் குறிப்பிடுகின்றார்கள்.
2. ஆதி சங்கரர் பராசக்தியின் கண்களை அந்த மூன்று நதிகளுடன் ஒப்பிடுகிறார் என்பதின் காரணம் அவற்றின் நிறங்கள் பராசக்தியின்

கண்களில் காணப்படும் - சிவப்பு, வெள்ளை மற்றும் கருப்பு- நிறங்களை ஒத்திருக்கின்றன.

3. பசுபதி என்ற சிவபெருமானிடம் முழு மனதுடன் சரணடைந்துள்ள பராசக்தி மனித குலத்தின் மீது கொண்டுள்ள கருணையினால் தனது கண்களில் இந்த மூன்று நதிகளின் சங்கமங்களை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றாள் என்பது ஆதி சங்கரரின் நம்பிக்கை ஆகும்.
4. சோணபத்ரா நதி தங்க நிறத்திலான இளம் சிவப்பு நிறத்தில் இருந்ததாகவும், கங்கை நதி பளிங்குக் கல்லை போன்று நிறமற்றதாகவும் (வெள்ளை), யமுனை நதியோ கரும் நீல நிறத்தில் உள்ளதாகவும் புராணங்களில் மற்றும் ரிக்வேத குறிப்புக்களில் கூறப்பட்டு உள்ளன.
5. ஒரு வகையில் பார்த்தால் யமுனை மற்றும் சோணபத்ரா எனப்படும் நதிகள் இரண்டும் கங்கை நதியின் துணை நதிகள் ஆகும்.
6. அதனால்தானோ என்னவோ பராசக்தியின் கண்களில் காணப்படும் கருப்பு நிறத்திலான விழிகளை சுற்றி உள்ள வெள்ளை நிறத்திலான விழி வெண் படலத்தில் காணப்படும், சிறிய அளவிலான சிவப்பு நிறத்திலான நரம்புகளை, காணாமல் போய் விட்ட இளம் சிவப்பு நிறத்தில் இருந்த சரஸ்வதி நதி என்றும், வெள்ளை விழி படலத்தை கங்கை நதி என்றும் கருமை நிறத்திலான விழிகளை யமுனை நதி என்றும், மூன்று நதிகளையும் பராசக்தி தனது விழிகளில் அடக்கிக் கொண்டு உள்ளாள் என்றும் ஆதி சங்கரர் கருதி அதை நமக்கு இந்த ஸ்லோகத்தின் மூலம் உணர்த்தி இருக்கின்றார்.

7. பண்டைய இந்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரஸ்வதி நதி, இமயமலையில் தோன்றி, இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் பாய்ந்து, பிரயாகையில் த்ரிவேணி சங்கமம் எனும் இடத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி சங்கமம் ஆகின்றன என்பதான நம்பிக்கை உள்ளது. ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட பெரும் பூகம்பத்தினால் ஏற்பட்ட மாற்றங்களினால் ஆறுகளின் ஓட்டங்கள் திசை மாறி விட்டதினால் சரஸ்வதியின் நீர் யமுனையுடன் இணைந்து ராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் வறண்டு விட்டது என்று நம்புகின்றார்கள்.

8. சரஸ்வதி நதி இன்னும் தார் பாலைவனத்திற்குக் கீழே பாய்கிறது என்றும் அதன் இமயமலை இணைப்பு உயிருடன் இருப்பதாகவும் நம்பப்படுகிறது**).**

-55-

निमेषोन्मेषाभ्यां प्रलयमुदयं याति जगती
तवेत्याहुः सन्तो धरणिधरराजन्यतनये ।
त्वदुन्मेषाज्जातं जगदिदमशेषं प्रलयतः
परित्रातुं शङ्के परिहृतनिमेषास्तव दृशः ॥

நிமேஷோன்மேஷாப்யாம் ப்ரலயமுதயம் யாதி ஜகதீ
தவேத்யாஹு: ஸந்தோ தரணிதரராஜன்யதனயே ।
த்வதுன்மேஷாஜ்ஜாதம் ஜகதிதமஶேஷம் ப்ரலயத:
பரித்ராதும் ஶங்கே பரிஹ்ருதனிமேஷாஸ்தவ த்ருஶ: ॥

இந்த ஸ்லோகத்தை 2500 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- சத்ருக்கள் அழிவார்கள் , உயிரணு விதைப்பை நோய் நிவர்த்தி ஆகும்



ஹே பராசக்தி
பர்வதராஜன் ஹிமயவனின் மகளான உன்னுடைய கண்களில் இருந்துதான் இந்த உலகம் தோன்றுகின்றது, அழிகிறது, மீண்டும் தோன்றுகின்றது என்பதாகவே ஞானிகளும் ரிஷி முனிவர்களும் கூறுகின்றார்கள். நீ கண்களை திறந்து வைத்திருக்கும் போது இந்த உலகம் அழியாமல் உள்ளது; கண் இமைகளை மூடினால் உலகம் அழிந்து விடும்; நீ கருணை மிக்கவள், உன்னால் படைக்கப்பட்ட உலகம் அழிந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் உன் இமைகளைக் கூட அசைக்காமல் கண்களை திறந்தபடியே காணப்படுகின்றாய்.

(**விளக்கம் :**

1. சமஸ்கிருதத்தில் இரண்டு அழகான சொற்றொடர்கள் உள்ளன. அவை 'சிருஷ்டி-திருஷ்டி' என்றும் 'திருஷ்டி-சிருஷ்டி' என்றும் கூறப்படும்.
2. 'சிருஷ்டி-திருஷ்டி' என்றால் நீங்கள் 'இருப்பதைப் பார்க்கிறீர்கள்' என்பது அர்த்தம். அதே போல திருஷ்டி-சிருஷ்டி என்றால் 'நீங்கள் பார்க்க விரும்புவதை உருவாக்குகிறீர்கள்' என்பது அர்த்தம்.
3. ஆகவே பராசக்தி பிரபஞ்சத்தை உருவாக்குவதை 'சிருஷ்டி-திருஷ்டி' என்றும் அதே பிரபஞ்சத்தை நாம் பார்ப்பதை திருஷ்டி- சிருஷ்டி என்கின்றோம்.
4. நமக்கு தோன்றும் வஸ்துக்களுடைய தோற்றங்கள் அனைத்துமே நாம் பார்க்கும் பார்வையில்தான் உள்ளன. ஒரு பொருளை நமது கண்ணின் உள்ளே உள்ள லென்ஸ் என்னும் கருவியால் பார்க்கிறோம். நல்ல

கண்பார்வை அற்றவனுக்கு ஒரு பொருள் சிறிதாக தோன்றலாம் ஆனால் அதே பொருள் கண்பார்வை கோளாறு உள்ளவனுக்கு பெரியதாக தோன்றும். ஆகவே நாம் பார்க்கும் பொருளில் கூட இரண்டு கருத்துக்கள் இருக்கலாம். அதைத்தான் 'திருஷ்டி சிருஷ்டி வாதம் ' என்று கூறுகின்றார்கள்.

5. நாம் கண்களை மூடிக் கொண்டு கனவு காண்கின்றோம், அதில் பல பொருட்களும், இயற்கை காட்சிகளும் நமது எண்ண அலைகளின் விருப்பம் போல, பார்ப்பவை அனைத்துமே நிஜம் போல தோன்றும். ஆனால் நாம் கண்களை திறந்தவுடன் அவை அனைத்துமே மறைந்து விடுகின்றது. ஆனால் பராசக்தியின் கண்கள் மூடிக் கொண்டால் பிரபஞ்சம் அழிந்து பஸ்பமாக காட்சி தருகின்றது. அவள் கண்களை திறந்தால் பல்வேறு ரம்யமான இயற்கை காட்சிகளுடன் கூடிய பிரபஞ்சம் உருவாகின்றது. இதுதான் நமக்கும் பராசக்தியின் பார்வைக்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

6. அதனால்தான் இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறுகின்றார், 'ஹே மலைராஜனின் மகளே, இந்த பிரபஞ்சத்தின் தோற்றமும் மறைவும் உன்னுடைய கண் பார்வையில்தான் உள்ளது. நீ கண்களை திறந்து கொண்டு இருக்கும்போது உலகம் தோற்றம் அளிக்கின்றது. ஆனால் நீ கண்களை மூடிக் கொண்ட அடுத்த க்ஷணமே உலகம் அழிந்து விடுகின்றது. இதுவே தோற்றம் எனும் ஸ்ருஷ்டியாகவும், அழிவு எனும் த்ருஷ்டி தத்துவமாக உள்ளது என்பது எனக்கு தெரிகின்றது.

7. நீயோ கருணை மிக்கவள், எப்போது கண்கள் மூடிக் கொண்டால் உலகம் அழிந்து விடுமோ என்ற எண்ணத்தில்தான் உனது கண்களின் இமைகளைக் கூட அசைக்காமல் உலகை பார்த்தபடியே இருக்கின்றாய் என்பதை பார்க்கும்போது ஆனந்தமாக உள்ளது’ என்று அன்னையின் கருணையைக் குறித்து புகழாரம் சூட்டுகிறார்)

-56-

तवापर्णे कर्णेजपनयनपैशुन्यचकिता
निलीयन्ते तोये नियतमनिमेषाः शफरिकाः ।
इयं च श्रीर्बद्धच्छदपुटकवाटं कुवलयम्
जहाति प्रत्यूषे निशि च विघटय्य प्रविशति ॥

தவாபர்ணே கர்ணேஜபனயனபைஶுன்யசகிதா
நிலீயந்தே தோயே நியதமனிமேஷா: ஶபரிகா: ।
இயம் ச ஶ்ரீர்பத்தச்சதபுடகவாடம் குவலயம்
ஜஹாதி ப்ரத்யூஷே நிஶி ச விகடய்ய ப்ரவிஶதி ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை கிடைக்கும்

ஹே பராசக்தி
காதுகள் வரை நீண்டு இருக்கும், நீலோத்பல புஷ்பங்கள் போன்றதும், சப்ஹாரிகா மீன்களை போன்றதுமான நீண்ட இமைகளைக் கொண்ட, உங்கள் கண்கள், எங்கே தம்மைப் பற்றி தவறாக உங்கள் காதுகளில் கூறி விடுமோ என்ற பயத்தில் சப்ஹாரிகா மீன்கள் உறங்காமல் கண்களை திறந்து கொண்டே நீரில் இருக்க, நீலோத்பல புஷ்பங்களும் அதே காரணத்திற்காக இரவில் கண்களை திறந்து வைத்தபடி உள்ளன. உங்கள் கண்களில் வாசம் செய்யும் லஷ்மி தேவியோ, தன்னைப் பற்றி நீலோத்பல புஷ்பம் உங்களிடம் எதுவும் கூறி விடுமோ என்ற பயத்தில் இரவில் திறந்து இருக்கும் அந்த புஷ்பத்தில் சென்று உறங்குகின்றாள்.

(விளக்கம் :

1. இந்த ஸ்லோகத்திலும் பராசக்தியின் கண்களின் அழகை குறித்தே வர்ணிக்கப்பட்டு உள்ளது. பராசக்தியின் கண்கள் என்றுமே விழித்துக் கொண்டு உள்ள 'சப்ஹாரிகா' என்ற மீனின் குணத்தோடு ஒப்பிட்டு கூறப்பட்டு உள்ளன. அந்த மீன்கள் எப்போதும் கண்களை விழித்து வைத்துக் கொண்டே இருக்குமாம், தூங்குவது இல்லை. அதுவே அதன் தனி குணம். அது போலவே இந்த பிரபஞ்சத்தை தனது கண்களை மூடாமல் பார்த்தபடி இருந்து கொண்டு தேவி இரட்சித்துக் கொண்டு இருக்கின்றாள். இரவில் மட்டும் தேவி யோகா நித்திரையில் இருக்கின்றாள். அதாவது கண்கள் திறந்தே இருக்கும், ஆனால் அதில் இயக்கம் இல்லாமல் ஓய்வில் இருக்கும்.

2. பராசக்தியின் கண்கள் மீன் விழி போன்றது, அது காதுகள் வரை நீண்டு உள்ளது என்பதாக ஏற்கனவே கூறப்பட்டு உள்ளது. 'சப்ஹாரிகா' மீன்கள் தாம் உறங்கி விட்டால் பராசக்தியின் கண்களானது தம்மைக் குறித்து தேவியின் காதுகளில் எதையும் கூறி விடுமோ என்ற பயத்தில் நாள் முழுவதும் விழித்துக் கொண்டு அந்த கண்கள் நகரும் திசைகளையே பார்த்துக் கொண்டு இருக்கின்றன.
3. அதே போலவேதான் பராசக்தியின் கண்களில் வாசம் செய்யும் லட்சுமி தேவியும் எங்கே தாம் தூங்கும் சமயத்தில் பராசக்தியின் கண்களானது தம்மைக் குறித்து தேவியின் காதுகளில் எதையும் கூறி விடுமோ என்ற பயத்தில் நாள் முழுவதும் விழித்துக் கொண்டு அந்த கண்கள் நகரும் திசைகளையே பார்த்துக் கொண்டு இருக்கின்றாள் என்பதினால் பகலில் லட்சுமி தேவியின் கண்களும் மூடுவது இல்லை; சப்ஹாரிகா மீன்களின் கண்களும் மூடுவது இல்லை. இப்படியாக சப்ஹாரிகா மீன்களும் லட்சுமி தேவியும் ஒருவருக்கு ஒருவர் உதவுவது போல அன்னையின் கண்களின் அசைவை வேவு பார்த்தபடி இருக்கிறார்களாம்.
4. தேவியின் இமைகளோ நீலோத்பல பூக்களை போன்றது என்பது ஏற்கனவே கூறப்பட்டு உள்ளது. நீலோத்பல பூக்களோ இரவில் மட்டுமே மலரும். தன்னை வழிபட பகல் முழுவதும் காத்திருக்கும் பக்தர்களுக்கு அருள் புரிவதற்காக பகல் முழுவதும் தானும் முழித்துக் கொண்டே உள்ள லட்சுமி தேவியோ, இரவில் தூங்குகையில், நீலோத்பல பூக்கள் தேவியிடம் தம்மைக் குறித்து எதையாவது கூறி விட்டாள் என்ன ஆவது என பயந்து

கொண்டு, இரவில் பராசக்தி யோக நித்திரையில் இருக்கும்போது அவளுக்கு தெரியாமல், தேவியின் கண்களில் வாசம் செய்யும் லட்சுமி தேவி, இரவில் மலரும் நீலோத்பல பூக்களுக்குள் சென்று, அதில் உறங்கி, நீலோத்பல பூக்கள் தேவியின் கண்களிடம் தன்னை குறித்து கூறி விடாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றாள்.

5. இப்படியாக தேவியின் கண்களை லஷ்மி முதல் நீலோத்பல பூக்கள் மற்றும் சப்ஹாரிகா மீன்கள் வரை அனைவரும் வேவு பார்த்தபடி இருந்தாலும் கருணை மிக்க தேவியோ தனது கண்களை மூடாமல் லோகத்தை பார்த்தபடி அதை ரட்ஷித்துக் கொண்டு இருக்கின்றாள் என்பதே இந்த ஸ்லோகத்தின் தாத்பர்யமாக ஆதி சங்கரர் கூறி உள்ளார்.

-57-

दृशा द्राघीयस्या दरदलितनीलोत्पलरुचा
दवीयांसं दीनं स्नपय कृपया मामपि शिवे ।
अनेनायं धन्यो भवति न च ते हानिरियता
वने वा हर्म्ये वा समकरनिपातो हिमकरः ॥

த்ருஶா த்ராகீயஸ்யா தரதலிதனீலோத்பலருசா
தவீயாம்ஸம் தீனம் ஸ்னபய க்ருபயா மாமபி ஶிவே ।
அனேனாயம் தன்யோ பவதி ந ச தே ஹானிரியதா
வனே வா ஹர்ம்யே வா ஸமகரனிபாதோ ஹிமகர: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்

श्रीं
श्रीं

ஹே பராசக்தி,
நீலோத்பல புஷ்பத்தை போன்ற இமைகளுடனான அற்புதமான கண்களைக் கொண்ட, காது வரை நீண்டுள்ள உனது கண்களின் கருணைப் பார்வை, சந்திரனின் குளிர்ந்த கிரணங்கள், எப்படி, காடுகள், அரண்மனைகள் போன்ற அனைத்து இடங்களிலும் எந்த பேதமும் இன்றி ஒரே நிலையிலான ஒளியை வீசுகின்றதோ, அதே போன்று உனது கருணை பார்வை, ஏழை மற்றும் சற்றும் பாக்கியமும் இல்லாதவனாகிய என் பக்கமும் சிறிதளவு திரும்புமா?

(விளக்கம் :

1. இந்த ஸ்லோகத்தின் மூலம், ஆதி சங்கரர், பராசக்தி தேவியிடம், தான் ஒரு பரிதாபமான நிலையில் உள்ள அனாதையைப் போன்றவர் என்றும், தூரத்தில் நிற்கும் தன் மீது கருணை காட்டுமாறும் வேண்டுகின்றார்; காரணம் அவளை சுற்றி தேவர்களும் தெய்வங்களும் எப்போதுமே நின்று கொண்டு இருப்பதினால் அவளது அருகில் செல்ல முடியவில்லை என்று கூறும் அவர், அவளுடைய கருணையுள்ள கண்களை, மலர்ந்த நீலோத்பவ மலர்களுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.
2. பனி உருண்டை போன்ற சந்திர ஒளி கதிர்கள், மாளிகையோ அல்லது அடர்ந்த காடோ அனைத்தின் மீதும் ஒரே அளவிலான வெளிச்சத்தை வீசுவதை போலவே அனைவர் மீதும் அவள் காட்டும் கருணை தன் மீதும் விழ வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றார். அவள் எங்கும் நிறைந்தவள் என்பதை அறிந்ததால், அவள் நீண்ட தூரத்தில்

நின்றிருந்தாலும் கூட அவளுடைய அருளைத் வேண்டினார்.

3. பராசக்தியின் கருணையைக் குறித்த ஆதி சங்கரரின் ஒப்பீடு சூரியனுடன் இல்லாமல் சந்திரனுடன் இருந்ததின் காரணம் ஒருவரின் குணம் குளிர்ச்சியான அம்சம் என்பதால், கருணை உள்ளம் கொண்ட அவளது குணத்தை சந்திரனின் ஒளியோடு ஒப்பிட்டு உள்ளார்).

-58-

अरालं ते पालीयुगलमगराजन्यतनये
न केषामाधत्ते कुसुमशरकोदण्डकुतुकम् ।
तिरश्चीनो यत्र श्रवणपथमुल्लङ्घ्य विलस-
न्नपाङ्गव्यासङ्गो दिशति शरसंधानधिषणाम् ॥

அராலம் தே பாலீயுகலமகராஜன்யதனயே
ந கேஷாமாதத்தே குஸுமஶரகோதண்டகுதுகம் ।
திரஶ்சீனோ யத்ர ஶ்ரவணபதமுல்லனக்ய விலஸ-
ந்னபானகவ்யாஸனகோ திஶதி
ஶரஸந்தானதிஷணாம்॥

இந்த ஸ்லோகத்தை 5000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்து வியாதிகளும் குணமாகும்



ஹே பராசக்தி மலையரசனின் மகளே, உன்னுடைய கண்களுக்கும் காதுகளுக்கும் இடையில் உள்ள கன்னப் பகுதியை பார்க்கும் எவருக்கும் அது மன்மதனின் கையில் உள்ள புஷ்பத்தில் ஆன வில்லை போலவே காட்சி தரும் எனும் வகையில் அழகாக வளைந்து காணப்படுகின்றது. உன்னுடைய கடைக்கண் பார்வையோ உனது காதையும் தாண்டிச் செல்வதை பார்த்தால், அது அந்த வில்லில் இருந்து எறியப்படும் பாணமோ (அம்பு) என்பதை போல அல்லவா காட்சி அளிக்கின்றது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர், பராசக்தியின் விண்மீன் போன்ற கண்களின் கூர்மையான முனை மற்றும் காது மடல்களுக்கு இடையில் வளைந்து காணப்படும் கன்னத்தின் தோற்றத்தை மலர்களால் ஆன மன்மதனின் வளைந்த வில்லுடன் ஒப்பிடுகிறார். காது மடல்களை நோக்கி பார்க்கும் தேவியின் கடைக்கண் பார்வை மன்மதனின் மலர் வில்லில் இருந்து ஏவப்பட அம்பைப் போன்ற தோற்றத்தை ஆதி சங்கரருக்கு தந்ததினால் பராசக்தியின் முக அழகை மன்மதனின் மலர்களால் ஆன வில் மற்றும் அம்புடன் ஒப்பிட்டு உள்ளார்.
2. சிவபெருமானின் தவத்தைக் கலைக்க மன்மதன் அனுப்பப்பட்ட போது, அவர் தனது மலர் வில்லில் இருந்து காமத்திலான ஆன அம்பை எய்தார். சிவபெருமான்

கண்களைத் திறந்தபோது, மன்மதனின் எய்த அம்பானது, பராசக்தியின் அழகிய பார்வை தன்னை பக்கவாட்டில் இருந்து இழுப்பதை போல காட்சி தந்தபோது, அது பகவானின் இதயத்தில் நெருப்பை எழுப்பியது. ஆனால் ஆனால் அடுத்த கணத்திலேயே அது மன்மதனின் வில்லில் இருந்து வெளியான அம்பு என்பதை உணர்ந்தவர் மன்மதனை தனது மூன்றாவது கண்ணால் எரித்து விட்டார்)

-59-

स्फुरद्गण्डाभोगप्रतिफलितताटङ्कयुगलं
चतुश्चक्रं मन्ये तव मुखमिदं मन्मथरथम् ।
यमारुह्य द्रुह्यत्यवनिरथमर्केन्दुचरणं
महावीरो मारः प्रमथपतये सज्जितवते ॥

ஸ்புரத்கண்டாபோகப்ரதிபலிததாடனகயுகலம்
சதுஶ்சக்ரம் மன்யே தவ முகமிதம் மன்மதரதம் ।
யமாருஹ்ய த்ருஹ்யத்யவனிரதமர்கேந்துசரணம்
மஹாவீரோ மார: ப்ரமதபதயே ஸஜ்ஜிதவதே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- உலகையே கவர்ந்தவனாக இருப்பான்

ஹே பராசக்தி
உனது முகத்தில் இருபுறமும் உள்ள கன்னங்கள் கண்ணாடியைப் போல வழுவழுப்பாக இருப்பதினால், உனது காதுகளில் உள்ள இரண்டு தோடுகளின் வடிவமும் அதில் பிரதிபலிக்கையில், தூரத்தில் நின்று பார்க்கும்போது அது நான்கு சக்கரங்களை கொண்ட மன்மதனின் தேர் போல காட்சி அளிக்கின்றது. அதில் ஏறிக் கொண்டுதான் மன்மதனும் தாரகாசுரனை வென்ற, சூரிய சந்திரர்களை சக்கரங்களாகக் கொண்ட, பூமித் தேரில் வந்த பரமேஸ்வரரை எதிர்த்து போர் புரிய வந்தானோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்திலும் ஆதி சங்கரர் பராசக்தியின் முக அழகை முக்கியமாக கண்ணாடியைப் போல பளபளக்கும் கன்னங்களின் அழகை வர்ணனை செய்து உள்ளார்.
2. இதை மேலோட்டமாக பார்க்கக் கூடாது. மன்மதனைக் கண்டால் பராசக்திக்கு மிகவும் பிடிக்கும் என்பதினால், தவத்தில் இருந்த பரமேஸ்வரனின் தவத்தைக் கலைக்க மன்மதனின் உதவியை பெற்றுக் கொண்டாள். எதற்காக ஆதி சங்கரர் அன்னையின் அழகை வர்ணனை செய்து உள்ளார் என்றால், அவளது அழகு சிவபெருமானைக் கூட மயக்கி விடுகின்றது என்பதை உலகிற்கு காட்ட வேண்டும் என்ற நோக்கம்தான்.
3. பரமேஸ்வரனோ மஹா யோகி, அனைத்து குணங்களுக்கும் அப்பாற்பட்டவர், எதனாலும் ஈர்க்கப்பட்ட முடியாதவர். அவருடைய ஒரே பலவீனமே பராசக்திதான்.

4. மன்மதன் மூலம் பராசக்தி சிவபெருமானின் தவத்தைக் கலைத்ததும் ஒரு நிமிடம் பராசக்தியின் முகத்தை நோக்கினால் அவளது அழகில் பரமேஸ்வரர் மயங்கி விடுவார் என்பதினால்தான், மன்மதன் பராசக்தியின் முகத்தில் இருந்து காம பாணத்தை விட்டதை போன்ற தோற்றத்தை சிவபெருமானின் மனதில் ஏற்படுத்தி இருந்தாள்.
5. பராசக்தியின் கன்னத்தில் தோன்றிய பிம்பத்திலான நான்கு சக்கர தேரில் ஏறிக் கொண்டு, மன்மதன் சிவபெருமானுடன் மனதை மயக்கும் யுத்தம் செய்து அதில் வெற்றி பெற்றான். இதில் இருந்து பராசக்தியின் கன்னங்களின் மேன்மை எப்படிப்பட்டது என்பது புரியும்.
6. அதை எடுத்துக் காட்டவே பராசக்தியின் அழகை பல்வேறு ஸ்லோகங்கள் மூலம் ஆதி சங்கரர் வர்ணனை செய்து உள்ளாரே தவிர அவர் அன்னையின் அழகை பார்த்து ரசிக்கவில்லை. காரணம் ஆதி சங்கரரும் பரமேஸ்வரரைப் போன்றே அனைத்து குணங்களுக்கும் அப்பாற்பட்டவர், எதனாலும் ஈர்க்கப்பட்ட முடியாதவர், அனைத்தையும் துறந்து நின்ற மஹா யோகி.
7. ஆதி சங்கரர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.)

-60-

सरस्वत्याः सूक्तीरमृतलहरीकौशलहरीः
पिबन्त्याः शर्वाणि श्रवणचुलुकाभ्यामविरलम् ।
चमत्कारश्लाघाचलितशिरसः कुण्डलगणो
झणत्कारैस्तारैः प्रतिवचनमाचष्ट इव ते ॥

ஸரஸ்வத்யா: ஸூக்தீரம்ருதலஹரீகௌஶலஹரீ:
பிபந்த்யா: ஶர்வாணி ஶ்ரவணசுலுகாப்யாமவிரலம் ।
சமத்காரஶ்லாகாசலிதஶிரஸ: குண்டலகணோ
ஜணத்காரைஸ்தாரை: ப்ரதிவசனமாசஷ்ட இவ தே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- நல்ல அறிவாற்றல் பெறுவான்



ஹே பராசக்தி
பரமேஸ்வரரின் பத்தினியே, உலகின் தாயே, உனது நாவில் இருந்து வெளி வந்த அமிர்தம் போன்ற வார்த்தைகளை கவனமாக கேட்டு ரசித்த வண்ணம் சரஸ்வதி தேவி இருந்தாள். அப்போது, அதன் உள் அர்த்தங்களை அறிந்து கொண்டபோது வியப்புடன் தன்னை மறந்து தலையை ஆட்டிக் கொண்டு இருந்தபோது, அவளது காதுகளில் அணிந்து கொண்டுள்ள குண்டலங்கள் அசைந்து, அசைந்து வெளிப்படுத்திய ஓசை, உனது வாயில் இருந்து பிரவாகம் போல வெளிப்பட்ட வார்த்தைகளை ஆமோதித்துக் கொண்டு இருந்ததை போல காணப்பட்டது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியின் வாயில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த அமிர்தம் போன்ற இனிமையான வார்த்தைகளை குறித்துக் கூறி உள்ளார்.
2. பராசக்தியின் வாக்கு வலிமைக்கு ஈடு இணை கிடையாது . அத்தனை ஏன், வாக்கின் அதிபதி என்று சொல்லக் கூடிய சரஸ்வதி தேவியே கூட பராசக்தியின் வாக்கு வலிமைக்கு நிகரானவள் அல்ல என்பதை இந்த ஸ்லோகம் மூலம் ஆதி சங்கரர் எடுத்துக் காட்டி உள்ளார்.
3. ஒருமுறை பராசக்தியானவள் தனது சபையில் யாராலும் எளிதில் கூற முடியாத பல அர்த்தங்களைக் கொண்ட சிலவற்றை தனது சொல்லாற்றலினால் கூறிக் கொண்டு இருந்தபோது, வாக்கு மேன்மைக்கு அதிபதியான சரஸ்வதி கூட பராசக்தியின் வாயில் இருந்து வெளி வந்து கொண்டிருந்த

வார்த்தைகளின் அர்த்தங்களைக் கேட்டு வியப்புடன் தன்னை மறந்து, தன்னையும் அறியாமல் தனது தலையை ஆட்டியபடியே அவற்றை ரசித்துக் கொண்டு இருந்தாளாம்.

4. எங்கே தனது வீணையின் நாத ஒலியினால் அன்னையின் சொற்பொழிவு நின்று விடுமோ என்று பயந்து போன சரஸ்வதி தனது வீணையின் இசையை நிறுத்தி விட்டு அவற்றைக் கேட்டுக் கொண்டு இருந்தபோது அவளது காதுகளில் குண்டலம் போன்று அணிந்து இருந்த காதணிகலன்கள் ஆடி ஆடி எழுப்பிய மெல்லிய ஓசை பராசக்தியின் வார்த்தைகளுக்கு மெருகூட்டிக் கொண்டிருந்த ஒரு இசை வாத்தியம் போல இருந்ததாக ஆதி சங்கரர் கூறி உள்ளார்).

-61-

असौ नासावंशस्तुहिनगिरिवंशध्वजपटि
त्वदीयो नेदीयः फलतु फलमस्माकमुचितम् ।
वहन्नन्तर्मुक्ताः शिशिरतरनिश्वासगलितं
समृद्ध्या यत्तासां बहिरपि च मुक्तामणिधरः ॥

அஸௌ நாஸாவம்ஶஸ்துஹினகிரிவம்ஶத்வஜபடி
த்வதீயோ நேதீய: பலது பலமஸ்மாகமுசிதம் ।
வஹன்னந்தர்முக்தா: ஶிஶிரதரனிஶ்வாஸகலிதம்
ஸம்ருத்த்யா யத்தாஸாம் பஹிரபி ச முக்தாமணிதர: ॥

இந்த ஸ்லோகத்தை 12000 முறை என 8 நாட்கள் பாராயணம் செய்தால் -- எடுக்கும் அனைத்து காரியங்களும் வெற்றி அடையும்



ஹே பராசக்தி,
பர்வத ராஜனின் வம்சத்திற்கு ஒளியூட்ட வந்த மகளே, முத்து மூக்குத்தியை தரித்துக் கொண்டிருக்கும் உனது அழகிய மூக்கானது, கணுக்காலுக்கு உள்ளே முத்துக்கள் நிறைந்து உள்ளதாக கூறப்படும் இள மூங்கில் போல் காட்சி தருகின்றது. நீ விடும் மூச்சுக் காற்றினால் வெளி வந்த ஒரு முத்தானது உனது மூக்குத்தியாக மாறி உனது மூக்கை அலங்கரிப்பதை போலவே காட்சி தருகின்றது. அந்த மூக்குத்தி எங்களுக்கு அனைத்து நன்மைகளையும் கிடைக்க அருள் புரியட்டும் என்று வேண்டுகின்றேன்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர், தேவியின் முகத்தில், மூக்கின் மீதுள்ள அழகிய மூக்குத்தியை பற்றி விவரித்து உள்ளார். தேவியின் மூக்கு, ஒரு மூங்கில் போன்றே கீழே பருத்தும் மேலே ஒல்லியாகவும் காணப்படுவது இளம் மூங்கில் போன்றே உள்ளது என்றும், அவளது மூக்கில் காணப்படும் முத்து மூக்குத்தி அன்னைக்கு அழகை மட்டும் சேர்க்கவில்லை, அது பக்தர்களுக்கு தேவையான அருளையும் புரிகின்றது என்பதாக தெரிவிக்கின்றார்.
2. மனித உடலில் மூன்று நாடிகள் உள்ளன. அவை இடை, பிங்கலை மற்றும் சுஷும்னா நாடி என்று அழைக்கப்படுகின்றன. இடை நாடி சூரியனுக்குச் சொந்தமானது மற்றும் உடலை வெப்பமாக்குகிறது; பிங்கலை நாடி சந்திரனுக்குச் சொந்தமானது, உடலை குளிர்விக்கிறது; சுஷும்னா நாடி அக்னியைக் குறிக்கிறது. இயற்கையின் செயலினால் ஒரு

மூக்கு நாசி வழியே செல்லும் சுவாசமானது இதயப் பகுதியைக் கடந்து மற்றொரு நாசி வழியே வெளியில் வருகின்றது. தொடர்ந்து நிகழும் இந்த ஸ்வாச நிகழ்வு உடல் வெப்ப நிலையைப் பராமரிக்கவும் உடலுக்கும் இதயத்திற்கும் தேவையான ஆக்ஸிஜனை வழங்கவும் வழி வகுக்கின்றது. பராசக்தியின் மூக்கு பகுதி இந்த சுவாசப் பயிற்சியை செய்தவண்ணம் இருக்கையில் ஒரு முத்தானது அவளது அவளது நாசியிலிருந்து வெளியே வந்து அவளது மூக்குத்தி ஆகி இருக்க வேண்டும் என்பதாக இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் எடுத்துக் காட்டி உள்ளார்.

3. பொதுவாக, முத்துக்கள் கடலில் உள்ள கிளிஞ்சல்களில் இருந்து எடுக்கப்படுவதாக அனைவரும் நம்புகிறார்கள், இருப்பினும், முத்துக்கள் சில சிறப்பு வகை பாம்புகளிலிருந்தும், சில வகை யானைகளின் முன் கோளங்களிலிருந்தும், மற்றும் கரும்புகளின் உட்புறமுள்ள பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றன என்பதும் தெரிகின்றது.
4. முத்துக்கள் கடலுக்குள் இருந்து மட்டுமே கிடைப்பது இல்லை. மூங்கில் கணுக்கால்களுக்கு இடையே உள்ள இடை வெளியிலும் நீர் வற்றி முத்துக்கள் பிறக்கின்றனவாம். அவை பிறக்கும் இடங்களை பொறுத்தே அவற்றின் நிறங்களும் வடிவங்களும் இருக்குமாம். முத்துக்கள் எங்கெங்கே பிறக்கின்றன என்பதை தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் மற்றும் சமஸ்கிருத நூல்களிலும் கூறப்பட்டு உள்ளது. கருட புராணத்தில் கூட முத்துக்கள் பற்றி கூறப்பட்டு உள்ளதாம்).

-62-

प्रकृत्या रक्तायास्तव सुदति दन्तच्छदरुचेः
प्रवक्ष्ये सादृश्यं जनयतु फलं विद्रुमलता ।
न बिम्बं तद्बिम्बप्रतिफलनरागादरुणितं
तुलामध्यारोढुं कथमिव विलज्जेत कलया ॥

ப்ரக்ருத்யா ரக்தாயாஸ்தவ ஸுததி தந்தச்சதருசே:
ப்ரவக்ஷ்யே ஸாத்ருஶ்யம் ஜனயது பலம் வித்ருமலதா ।
ந பிம்பம் தத்பிம்பப்ரதிபலனராகாதருணிதம்
துலாமத்யாரோடும் கதமிவ விலஜ்ஜேத கலயா ॥

இந்த ஸ்லோகத்தை 8000 முறை என 8 நாட்கள் பாராயணம் செய்தால் -- நல்ல உறக்கம் வரும்

मं
मं
मं

ஹே பராசக்தி
உன்னுடைய பல் வரிசையோடு கூடிய அழகிய சிவந்த உதடுகளுக்கு இணையாக வேறு எதைத்தான் கூற முடியும்? ஒருவேளை பவழக் கொடியின் (கடலில் வளரும் கொடி வகை) பழத்தைக் கூறலாம் என்றால் பவழக் கொடிக்கு பழம் கிடையாது. உள்ளே சிவப்பிலான கோவைப் பழத்தை ஒப்பிடலாம் என்றால், எந்த நிலையிலும் உனது உதடுகளுக்கு தான் சமமானது அல்ல என்று அது ஒதுங்கி கொண்டு விடுகின்றது.

(விளக்கம்:

இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியின் அழகு மிக்க வெண்ணிறமான பற்களையும் அவளுடைய சிவந்த இரண்டு உதடுகளையும் குறித்து பெருமையாக கூறி உள்ளார். ஆனால் அவற்றோடு எதையுமே ஒப்பிட முடியாத அளவினால் அழகானவை என்பதினால் அது குறித்து மேலும் எதையும் கூறாமல் இந்த ஸ்லோகத்தை முடித்து விட்டார்).

-63-

स्मितज्योत्स्नाजालं तव वदनचन्द्रस्य पिबतां
चकोराणामासीदतिरसतया चञ्चुजडिमा ।
अतस्ते शीतांशोरमृतलहरीमम्लरुचयः
पिबन्ति स्वच्छन्दं निशि निशि भृशं काञ्जिकधिया ॥

ஸ்மிதஜ்யோத்ஸ்னாஜாலம் தவ வதனசந்த்ரஸ்ய
பிபதாம்
சகோராணாமாஸீததிரஸதயா சஞ்சுஜடிமா ।
அதஸ்தே ஶீதாம்ஶோரம்ருதலஹரீமம்லருசய:
பிபந்தி ஸ்வச்சந்தம் நிஶி நிஶி ப்ருஶம்
காஞ்ஜிகதியா॥

இந்த ஸ்லோகத்தை 30,000 முறை என 30 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைவரையும் தன் வசம் ஆக்கலாம்



ஹே பராசக்தி,
சந்திரனைப் போன்ற உன் முகத்தில் எப்போதுமே புன்சிரிப்புதான் காணப்படுகின்றது. அந்த புன்சிரிப்பில் இருந்து வெளியேறிக் கொண்டே இருக்கும் ஒளிக் கதிர்களை இனிய பானத்தைப் பருகுவதை போல சகோரப் பறவைகள் குடித்து விடுகின்றன. உனது புன்சிரிப்பின் ஒளிக் கற்றைகளின் இனிப்பான சுவை திகட்டி விடுவதினால், இரவில் புளிப்பாக ஏதாவது கிடைக்குமோ என்ற ஆவலில் அந்த பறவைகள் சந்திரனின் ஒளி கற்றைகளை பருக தேடி அலைகின்றன.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியின் புன்முறுவலின் அபார தன்மையை விளக்கி உள்ளார். பராசக்தியின் சந்திரனைப் போன்ற முகத்தில் எப்போதுமே காணப்படும் புன்சிரிப்பில் இருந்து வெளிவரும் அமிர்தம் போன்ற புன்சிரிப்பின் அழகு அலைகள் நமது கண்களுக்கு தெரிவது இல்லை.
2. ஆனால் அவற்றில் இருந்து வெளிவந்து கொண்டே உள்ள அமிர்தம் போன்ற இனிய ஒளிக் கற்றைகளை சகோரா எனும் பறவைகளினால் பானம் போன்று அருந்த முடியும் என்பதினால் அவை அன்னையின் முகத்தில் இருந்து வரும் புன்னகையின் அமிர்த ஒளிக் கற்றைகளை குடித்துக் கொண்டே இருக்கின்றன.
3. ஒரு கட்டத்தில் அவளது புன்சிரிப்பின் இனிப்பான ஒளிக் கதிர்களை பருகிக் கொண்டே இருக்கையில் அவற்றுக்கும் கூட

அந்த இனிப்பு திகட்டி விடுமாம். அந்த அளவு வெளிவரும் பராசக்தியின் புன்சிரிப்பின் இனிப்பான ஒளிக் கற்றைகளை இனியும் தம்மால் பருக முடியாது எனும் நிலை தோன்றி விடும்போது அந்த பறவைகள் இரவில் எப்போது சந்திரன் தோன்றி தனது ஒளிக் கற்றைகளை வெளியிடுவார். அந்த ஒளிக் கற்றைகள் புளிப்பாக இருந்து இனிப்பின் சுவையை சற்று குறைக்குமா என எதிர்பார்த்து காத்திருக்குமாம்.

4. சகோரா பறவை என்பது இந்து புராணங்களில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு பழம் பெரும் பறவையாகும். இந்த பறவை, கற்பனைப் பறவை என்பதாக சில நூல்களில் கூறப்பட்டு உள்ளது. வட இந்தியாவில் பல நாட்டுப்புற காதல் கதைகளிலும் சகோரா பறவை இடம் பெற்று உள்ளது. இந்த பறவை தினமும் சந்திரனில் இருந்து வெளி வரும் ஒளிக் கற்றைகளில் உள்ள, நமது கண்களுக்கு புலப்படாத அமிர்தம் போன்ற பானகத்தை குடித்து வாழ்கின்றதாம்).

-64-

अविश्रान्तं पत्युर्गुणगणकथाम्रेडनजपा
जपापुष्पच्छाया तव जननि जिह्वा जयति सा ।
यदग्रासीनायाः स्फटिकदृषदच्छच्छविमयी
सरस्वत्या मूर्तिः परिणमति माणिक्यवपुषा ॥

அவிஶ்ராந்தம் பத்யுர்குணகணகதாம்ரேடனஜபா
ஜபாபுஷ்பச்சாயா தவ ஜனநி ஜிஹ்வா ஜயதி ஸா ।
யதக்ராஸீனாயா: ஸ்படிகத்ருஷதச்சச்சவிமயீ
ஸரஸ்வத்யா மூர்தி: பரிணமதி மாணிக்யவபுஷா ॥

இந்த ஸ்லோகத்தை 10,000 முறை என 18 நாட்கள் பாராயணம் செய்தால் -- மக்களை கவர்வார்கள்



ஹே பராசக்தி
பதிவிரதையான நீ எப்போதும் உனது கணவரான பரமேஸ்வரனுடைய பெருமைகளை மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டே உள்ளதினால் உனது நாக்கானது செம்பருத்திப் பூவைப் போல சிவந்த நிறமாகவே மாறி காட்சி தருகின்றது. உனது நாக்கின் நுனி முனையில் வாசம் செய்யும் சரஸ்வதி தேவியோ பளிங்கு போன்ற வெண்மை நிறத்திலானவள் என்றாலும், உனது நாவில் குடி கொண்டு உள்ளதினால் அவளும் மாணிக்கக் கல்லை போன்ற சிவந்த நிறத்தில் காட்சி தருகின்றாள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியின் நாக்கின் நிறம் எதனால் செம்பருத்திப் பூவைப் போல ரத்த சிவப்பாக உள்ளது என்பதைக் குறித்துக் கூறி உள்ளார்.
2. ஆதி சங்கரரின் கூற்றின்படி பரமேஸ்வரரின் நினைவோடு மட்டுமே எப்போதுமே இருக்கும் பராசக்தியானவள், தன்னிடம் வருபவர்கள் அனைவரிடமும் 'பரமேஸ்வரன் அந்த யுத்தம் செய்து அந்த அரக்கர்களையும், அசுரர்களையும் அழித்தார், இந்த யுத்தம் செய்து அந்த அசுரனை வென்றார், திரிபுரா ரகசியம் குறித்து கூறினார்', என்றெல்லாம் அவருடைய அருமை பெருமைகளைக் கூறிக்கொண்டே இருப்பதினால் அவளது நாவானது சிவப்பு நிறத்தில் மாறிவிட்டது.
3. அதில் குடி இருக்கும் பளிங்கு நிறத்திலான சரஸ்வதியும் கூட பராசக்தியின் சிவப்பு நிறத்தையே பிரதிபலிக்கின்றாள் என்பதாகக் கூறி உள்ளார்.

-65-

रणे जित्वा दैत्यानपहृतशिरस्त्रैः कवचिभिर्-
निवृत्तैश्चण्डांशत्रिपुरहरनिर्माल्यविमुखैः ।
विशाखेन्द्रोपेन्द्रैः शशिविशदकर्पूरशकला
विलीयन्ते मातस्तव वदनताम्बूलकबलाः ॥

ரணே ஜித்வா தைத்யானபஹ்ருதஶிரஸ்த்ரை: கவசிபிர்-
நிவ்ருத்தைஶ்சண்டாம்ஶத்ரிபுரஹரனிர்மால்யவிமுக।
விஶாகேந்த்ரோபேந்த்ரை: ஶஶிவிஶதகர்பூரஶகலா
விலீயந்தே மாதஸ்தவ வதனதாம்பூலகபலா: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்திலும் வெற்றி கிடைக்கும்

ஹே பராசக்தி
அசுரர்களுடன் யுத்தம் செய்து அவர்களை அழித்த பின்னர் யுத்தத்தில் தாம் அடைந்த வெற்றியைக் குறித்து உன்னிடம் கூற குமாரசுவாமி (முருகப் பெருமான்) தன்னுடைய சேனாதிபதிகளாக இருந்த விஷ்ணு மற்றும் இந்திரனுடன் வந்தார். அப்படி வந்தவர்கள் சிவ நிர்மால்யத்தை (சிவனின் பிரசாதம்) ஏற்றுக் கொள்ளாமல், தமது தலைப் பாகையை மட்டும் கயற்றி விட்டு, தாம் அணிந்திருந்த யுத்த கவசங்களோடு உன்னிடம் வந்தபோது, உணவு அருந்திய பின்னர் பச்சைக் கற்பூரத்துடன் கூடிய தாம்பூலத்தை வாயில் போட்டு மென்று கொண்டிருந்த நீ, அதை உன் வாயில் இருந்து எடுத்து வந்தவர்களுக்கு கொடுக்க, அவர்களும் அதை மஹா பிரசாதம் என்று உண்டார்கள்.

(விளக்கம்:

1. உலகத்தில் உள்ளவர்களை கொடுமைப்படுத்தி வந்திருந்த அசுரர்களையும் அரக்கர்களையும் அழிக்க சக்தி தேவியான பராசக்தி முருகப் பெருமானுக்கு விசேஷமான ஆயுதத்தை அளித்து அவரோடு மற்ற தெய்வங்களையும் யுத்த பூமிக்கு அனுப்பி வைத்து இருந்தாள். அவர்களும் யுத்தத்தில் அசுரர்களை வதம் செய்துவிட்டு அதைக் குறித்து முதலில் பராசக்தியிடம் கூற வந்தபோது சிவாலயத்தில் சிவ நிர்மால்யத்தை (சிவனின் பிரசாதம்) பெற்றுக் கொள்ளாமல் பராசக்தியிடம் யுத்தத்தின் வெற்றியைக் குறித்துக் கூற சென்றார்கள்.

2. அங்கு சென்றவர்கள் அவளுக்கு மரியாதை தர எண்ணி தலையில் அணிந்திருந்த கிரீடங்களை மட்டும் கயற்றி விட்டு யுத்த ஆடைகளோடு சென்று அவளுக்கு வணக்கங்களை தெரிவித்த பின்னர் யுத்த வெற்றியையும் கூற, அவள் தனது வாயில் மென்று கொண்டிருந்த தாம்பூலத்தை எடுத்து பிரசாதமாக அவர்களுக்கு கொடுக்க, அவர்களும் அதை மஹா பிரசாதமாக எண்ணி உண்டு மகிழ்ந்தார்கள்.
3. சிவபெருமானின் ஆலயத்துக்கு செல்பவர்கள் முதலில் சிவபெருமானை வணங்கிய பிறகே பார்வதி தேவிக்கு பூஜைகள் செய்ய அவளுடைய சன்னதிக்கு செல்வது உண்டு. ஆனால் அந்த முறையை கடை பிடிக்காமல் அவர்கள் நேராக பராசக்தியிடம் சென்றார்கள்.
4. எதனால் அவர்கள் சிவாலயத்தில் இருந்த சிவ நிர்மால்யத்தை பெற்றுக் கொள்ளாமல் சென்றார்கள்? அது சிவபெருமானை அவமதிக்கும் செயல் அல்ல. அதற்கான காரணம் உண்டு. தெய்வங்களுக்கு படைக்கும் பிரசாதங்கள் அனைத்திற்கும் 'நிர்மால்யம்' என்று பெயர். ஆனால் சிவன் ஆலயங்களில் சிவபெருமானுக்கு படைத்த பிரசாதங்களை சிவ பூஜை முடிந்த பிறகு பிரசாதமாக வழங்காமல் இருப்பதற்கான பெயர் 'சிவ நிர்மால்யம்' என்பது, ஆகும். அதை அம்பாள் சன்னதியில் பூஜை செய்த பிறகே பக்தர்களுக்கு தருவார்கள் என்பதான நம்பிக்கை உண்டு.
5. சைவ ஆகமத்தின்படி, தெய்வத்திற்கு படைக்கப்படும் பிரசாதத்தில் தெய்வங்களின் எச்சில் (நிர்மால்யம்) இருப்பதால், அதை பிரசாதமாக வழங்க மாட்டார்கள். எனவேதான்

அதை உண்டால் நிர்மால்ய தோஷம் ஏற்படும் என்பது நம்பிக்கை என்பதினால்தான் சிவன் ஆலயங்களில் எவ்வித பிரசாதமும் பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுவதில்லை என்பது இன்னொரு வாதம்.

6. இன்னொரு வாதம் என்ன என்றால் சிவபெருமானின் சன்னதியில் பூஜை செய்த பிரசாதங்களில் முதலில் ஒரு பங்கு சண்டிகேஸ்வரருக்கு தருவார்கள். அதை சண்டிகேஸ்வரர் பலி என்பார்கள். அதற்குப் பிறகு அது அம்பாள் சன்னதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கும் பூஜை செய்த பின் பக்தர்களுக்கு தருவார்கள்.
7. முருகப் பெருமானும் மற்றவர்களும் யுத்தம் முடிந்து திரும்பிய போது சிவன் சன்னதியில் ஆராதனை முடிந்து அம்பாள் சன்னதிக்கு ஆராதனை செய்ய பிரசாதம் போய்விட்டது. சிவன் சன்னதியிலோ சண்டிகேஸ்வரர் பங்கிற்கான பிரசாதம் மட்டுமே மீதம் இருந்தது. எங்கே சிவபெருமானை சந்தித்து யுத்தத்தில் பெற்ற வெற்றியைக் குறித்துக் கூறினால், அவர் மகிழ்ச்சியில் சண்டிகேஸ்வரர் பங்கிற்கான பிரசாதத்தை தமக்கு தந்து விடுவாரோ, அப்படி செய்தால் சண்டிகேஸ்வரர் வருத்தம் அடைவார் அல்லவா என்ற எண்ணத்தில்தான் அவர்கள் நேரடியாக பரமேஸ்வரியின் சன்னதிக்கு சென்று அவளை சந்தித்தார்கள்.
8. பெரிய புராணத்தின்படி சண்டிகேஸ்வரரின் பெயர் விசாரசர்மன். இவர் இளம் வயதில் மாடு மேய்க்கும் தொழில் செய்து வந்தார். சிறுவயதிலேயே சிவபெருமான் மீது பக்தி கொண்டு இருந்ததினால் மண்ணினால் ஆன சிவ லிங்கம் செய்து பூஜித்து வந்தார். அவர்

மேய்த்த மாடுகள் அவர் உருவாக்கிய மணல் லிங்கத்தின் மீது தானாக பாலை சுரந்து அபிஷேகம் செய்து வந்தன.

9. இந்த செய்தி மாட்டின் உரிமையாளரை எட்டிய போது அவர் விசாரசர்மனின் தந்தையிடம் புகார் செய்ய ஒருநாள் விசாரசர்மன் பூஜித்துக் கொண்டு இருந்தபோது விசாரசர்மனின் தந்தை அந்த மணல் லிங்கத்தை காலால் உதைத்தார். இதனால் கோபமுற்ற விசாரசர்மன் ஒரு குச்சியால் தந்தையின் காலை தாக்க அதுவே கோடாரியாக மாறி அவர் தந்தையின் காலை கடுமையாக தாக்கியது.

10. அப்போது அவர்கள் முன் தோன்றிய சிவபெருமான், விசாரசர்மனின் பக்தியை மெச்சி அவர் தந்தையின் கால்களை மீண்டும் சரியாக்கி அனுப்பி வைத்தார். அன்று முதல் அவர் சண்டிகேஸ்வரர் என்றும், சிவனின் சொத்துக்களான கணங்கள் அனைத்தையும் காவல் காப்பவராக திகழ்வார் எனவும், தனக்கு நிகழ்ந்த பூஜைகளும் மரியாதையும் இனி அவருக்கும் கிடைக்கும் எனவும் அருளினார்.

11. எனவே சிவனை வணங்கி விட்டு செல்லும் பக்தர்கள், சண்டிகேஸ்வரர் சன்னதிக்கு சென்று மென்மையாக கைகளை தட்டி தாம் எந்த சிவ சொத்தையும் எடுத்து செல்லவில்லை என கைகளை உதறி காட்ட வேண்டும். பிரசாதத்தை எடுத்து செல்லும் அனுமதியை அவரிடம் கேட்டு எடுத்து செல்ல வேண்டும். இந்த கைகளை உதறும் வழக்கமே கால போக்கில் கைகளை தட்டும் பழக்கமாக மாறிவிட்டது. இவர் 63 நாயன்மார்களுள் ஒருவராக இருக்கிறார்.

-66-

विपञ्च्या गायन्ती विविधमपदानं पशुपतेः
त्वयारब्धे वक्तुं चलितशिरसा साधुवचने ।
तदीयैर्माधुर्यैरपलपिततन्त्रीकलरवां
निजां वीणां वाणी निचुलयति चोलेन निभृतम् ॥

விபஞ்ச்யா காயந்தீ விவிதமபதானம் பஶுபதே:
த்வயாரப்தே வக்தும் சலிதஶிரஸா ஸாதுவசனே ।
ததீயைர்மாதுர்யைரபலபிததந்த்ரீகலரவாம்
நிஜாம் வீணாம் வாணீ நிசுலயதி சோலேன நிப்ருதம்॥

இந்த ஸ்லோகத்தை 5000 முறை என 3 நாட்கள் பாராயணம் செய்தால் -- சங்கீதத்தில் மேன்மை பெறுவான், வியாதிகள் குணமாகும்



ஹே பராசக்தி,
ஒருமுறை சரஸ்வதி தேவி உனது கணவரான பரமேஸ்வரரின் புகழை உனது சபையில் தனது வீணையில் இசையாக ஒலித்தபடி இருந்தபோது, நீ நடு நடுவே சபாஷ், சபாஷ் என்று கூறத் துவங்க, உனது மதுரமான வார்த்தையின் ஒலி, வீணையின் தந்திகள் வெளிப்படுத்திய இசையை விட இனிய இசையை எழுப்பும் வண்ணம் உள்ளதே என்ற வெட்கத்தினால், சரஸ்வதி தேவி யாருக்கும் தெரியாமல் மெதுவாக வீணை வாசிப்பதை நிறுத்தி விட்டு வீணையின் மீது உறையைப் போட்டு மூடி வைத்து விட்டாள்.

(விளக்கம்:

1. ஒருமுறை சரஸ்வதி தேவி பராசக்தியின் கணவரான பரமேஸ்வரரின் பல்வேறு சாதனைகளையும், மேன்மைகளையும், பராக்கிரமங்களையும் பராசக்தியின் சபையில் தனது வீணையில் இசையாக ஒலித்துக் கொண்டு இருந்தபோது, அதைக் கேட்டுக் கொண்டு இருந்த பராசக்தி பரவசம் அடைகிறாள்.
2. ஒரு பெண்ணுக்கு தனது கணவரின் மகிமையைக் குறித்து மற்றவர்கள் கூறிக் கேட்கும்போது அது அவர்களுக்கு ஒரு விதத்திலான பெருமையை தருகின்றது.
3. அதே நிலையில் இருந்த பராசக்தியும் தன்னை மீறி நடுநடுவே 'சபாஷ்', 'சபாஷ்' என்று கூறத் துவங்கி விடுகின்றாள். பராசக்தியின் மெல்லிய, அற்புதமான வார்த்தை ஒலிகள் வீணையின் தந்திகள் வெளிப்படுத்தும் இசையை விட அதிக இனிய இசையை எழுப்பும் வண்ணம் உள்ளதே, இனி இந்த

சபையில் எனது வீணையின் நாதம் எடுபடாது என்ற எண்ணத்தை அடைந்த சரஸ்வதி தேவி, யாருக்கும் தெரியாமல் மெதுவாக தனது வீணையின் மீது உறையைப் போட்டு மூடி வைத்து விடுகின்றாள்.

4. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் என்ன கூறி உள்ளார் என்றால் 'இசைக்கும் அறிவாற்றலுக்கும் அதிபதியாக பராசக்தியின் உடலுக்குள் இருந்து அவளே தோற்றுவித்த சரஸ்வதியின் குரல் மற்றும் இசை வளமையை விட, அவளை தோற்றுவித்த பராசக்தியின் குரல் வளம் இனிமையாக இருந்தது என்பதில் இருந்தே பராசக்தியின் மேன்மை எத்தகையது என்பது புரியும்').

-67-

करग्रेण स्पृष्टं तुहिनगिरिणा वत्सलतया
गिरीशेनोदस्तं मुहुरधरपानाकुलतया ।
करग्राह्यं शम्भोर्मुखमुकुरवृन्तं गिरिसुते
कथङ्कारं ब्रूमस्तव चिबुकमौपम्यरहितम् ॥

கராக்ரேண ஸ்ப்ருஷ்டம் துஹினகிரிணா வத்ஸலதயா
கிரீஶேனோதஸ்தம் முஹுரதரபானாகுலதயா ।
கரக்ராஹ்யம் ஶம்போர்முகமுகுரவ்ருந்தம் கிரிஸுதே
கதனகாரம் ப்ரூமஸ்தவ சிபுகமௌபம்யரஹிதம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும்



ஹே பராசக்தி
ஹிமயமலை அரசனின் புதல்வியே, உனது தந்தையின் நுனி விரலினால் பாசத்துடன் தொடப்பட்டதும், உனது உதடுகளில் முத்தமிட ஆசைக் கொண்ட உனது கணவரால், அடிக்கடி உயர தூக்கி பிடிக்கப்பட்டதுமான உனது முகவாய்கட்டைக்கு ஈடு இணை ஏதும் கிடையாது. உனது முகவாய்கட்டை, உனது அழகிய முகத்தை தூக்கி நிறுத்தி வைத்துள்ள, ஒரு கண்ணாடியின் கைபிடியைப் போல காணப்படுகின்றது.

(விளக்கம்:

1. குழந்தைகளோடு கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கும் அதன் பெற்றோர்கள் குழந்தையின் முகவாய்க் கட்டையை தமது விரலால் தொட்டு அதன் கவனத்தை தம்மிடம் ஈர்ப்பார்கள்.
2. அதை போன்ற நிலையில்தான் ஹிமய மலையின் அரசனான ஹிமாயவனும் தனது மகள் பராசக்தியின் முகவாய் கட்டையை ஆசையோடு தனது கைவிரல் நுனியினால் தொட்டு அவளது கவனத்தை தன்பால் ஈர்ப்பார். அது தனது குழந்தையான மகளிடம் தந்தை காட்டும் பாசம் ஆகும்.
3. அதே போன்று பராசக்தியின் கணவரான பரமேஸ்வரனோ பராசக்தியின் முகவாய்க் கட்டையை தன் விரல்களால் பிடித்து தன் முகத்தை நோக்கி இழுத்து வைத்து அதார பானத்தை பருகுவது போல அவளது இதழ்களில் தனது இதழ்களை பதிப்பார். அது கணவனுக்கு மனைவி மீதான மோகத்திலான ஆசையைக் காட்டுகின்றது.

4. குழந்தை வளர்ந்து பெரிய பெண்ணானாலும் அவளுடைய தந்தை அவளை தொடலாம், குழந்தை வளர்ந்து பெரியவள் ஆனாலும் பெற்றோர்களுக்கு அந்த உரிமை உண்டு. அதே போன்று அவளை மண முடிக்கும் கணவரும் அவளை தொடலாம், அவருக்கும் அந்த உரிமை உண்டு. ஆனால் மற்ற எந்த ஆண்களுக்கும் அந்த உரிமை கிடையாது.

5. அதார என்றால் தெய்வங்களின் உதடுகள் என்பதாகும். பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் நடைபெறும் விழாவில் பாரம்பரியத்தின் படி, பால், சர்க்கரை, பாலாடைக் கட்டி, வாழைப்பழம், கற்பூரம், ஜாதிக்காய் மற்றும் கருப்பு மிளகு போன்றவற்றால் செய்யப்பட்ட இனிப்பு பானத்தை ஆதார பானம் என்பார்கள். (அதை பனா என்பார்கள்)

6. ஒவ்வொன்றும் ஒரு மீட்டர் உயரம் கொண்ட ஒன்பது பெரிய மண் குடங்களில் அந்த பானம் இறைவனுக்கு சமிர்பிக்கப்படும். அந்த மண் பானைகளில் உள்ள பானம் தெய்வங்களின் உதடுகளை தொடும் அளவில் இருக்கும். அதையே அதாரா பானம் பருகுவது என்பார்கள்.

-68-

भुजाश्लेषान्नित्यं पुरदमयितुः कण्टकवती
तव ग्रीवा धत्ते मुखकमलनालश्रियमियम् ।
स्वतः श्वेता कालागुरुबहुलजम्बालमलिना
मृणालीलालित्यम् वहति यदधो हारलतिका ॥

புஜாஶ்லேஷான் நித்யம் புரதமயிது: கண்டகவதீ
தவ க்ரீவா தத்தே முககமலனாலஶ்ரியமியம் ।
ஸ்வத: ஶ்வேதா காலாகுருபஹுலஜம்பாலமலினா
ம்ருணாலீலாலித்யம் வஹதி யததோ ஹாரலதிகா ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும்



ஹே பராசக்தி,
பரமேஸ்வரர் உன்னை கட்டித் தழுவும் போதெல்லாம் உன்னுடைய கழுத்து பகுதி மயிர்க் கூச்சல் எடுப்பதினால் முள்ளு முள்ளாகத் தோற்றம் தருகின்றது. உன் முகமோ தாமரை மலருக்கு இணையாக இருக்க, முள்ளு முள்ளாகத் தெரியும் உனது கழுத்து பகுதியோ தாமரை மலரின் தண்டு போல காணப்படுகின்றது. கழுத்தில் கீழே தொங்கும் முத்து மாலையோ உனது கழுத்து பகுதியில் தடவி உள்ள 'அகில்' கலந்த சந்தனக் கலவையின் கருமை நிறத்தினால் கருப்பாகி சேற்றில் உள்ள தாமரை தண்டின் கொடியைப் போலக் காட்சி அளிக்கின்றது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியின் அழகிய கழுத்துப் பகுதியை குறித்து இப்படியாக விமரிசனம் செய்து உள்ளார்.
2. பரமேஸ்வரர் தனது மனைவியான பராசக்தி மீது அளவு கடந்த ஆசையும் மோகமும் கொண்டவர். அவர் அவளிடம் அடிக்கடி சென்று கட்டி அணைத்துக் கொள்வார். அப்படி அவர் கட்டி அணைக்கும்போது அவளுக்கு வெட்கத்தினால் மயிர் கூச்சல் எடுக்கும். அப்படி மயிர்க் கூச்சல் எடுக்கும் போதெல்லாம் அவளது கழுத்துப் பகுதியில் மயிர் கால்கள் விறைத்து நிற்க கழுத்து முழுவதுமே முள்ளு முள்ளாகத் தெரியும்.
3. பராசக்தியின் முகமோ மலர்ந்த தாமரை மலரைப் போல காட்சி அளிக்க, மயிர் கூச்சல் எடுத்ததினால் கழுத்து முழுவதும் முள்ளு முள்ளாகத் தெரியும் போது பராசக்தியின்

கழுத்து தாமரை மலரின் தண்டு போல காட்சி அளிக்கின்றது. அதோடு மட்டும் இல்லாமல் அவளது கழுத்தில் பூசிக் கொண்டு உள்ள சந்தனக் கலவையில் கருமை நிறத்திலான 'அகிற் கட்டை' எனும் நறுமணப் பொருளும் சேர்ந்து உள்ளதினால், பராசக்தி அணிந்துள்ள வெண்ணிற முத்து மாலையில் அந்தக் கலவை ஒட்டிக் கொண்டு, தாமரை தண்டை சுற்றிக் கொண்டுள்ள சிறு செடி கொடிகள் அல்லது வேர்களை போல காட்சி தருகின்றது.

4. அகிற் பிசின் என்பது நறுமணப் பொருள்களின் தயாரிப்புக்காகப் பெறப்படும் அகிற் கட்டையில் (Agarwood) இருந்து பெறப்படும் நறுமணப் பொருள் ஆகும், எண்ணெய் பிசின் போன்றதாக இருக்கும்.

-69-

गले रेखास्तिस्रो गतिगमकगीतैकनिपुणे
विवाहव्यानद्धप्रगुणगुणसंख्याप्रतिभुवः ।
विराजन्ते नानाविधमधुररागाकरभुवां
त्रयाणां ग्रामाणां स्थितिनियमसीमान इव ते ॥

கலே ரேகாஸ்திஸ்ரோ கதிகமககீதைகனிபுணே
விவாஹவ்யானத்தப்ரகுணகுணஸங்க்யாப்ரதிபுவ: ।
விராஜந்தே நானாவிதமதுரராகாகரபுவாம்
த்ரயாணாம் க்ராமாணாம் ஸ்திதினியமஸீமான
இவ தே॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- சகல கார்ய சித்தி



ஹே பராசக்தி,

சங்கீத சாஸ்திரங்களில் வரும் கதி, கமகம், கீதம் போன்றவற்றில் வல்லவளே, உனது கழுத்தில் காணப்படும் மூன்று கோடுகளும் (ரேகைகள்) பரமசிவன் உனது கழுத்தில் கட்டிய திருமாங்கல்யக் கயிற்றின் அடையாளம் போல தெரிகின்றது. இசையில் வேறு எந்த எந்த எல்லையும் இல்லாததை போல, நீங்கள் பேசும்போது, உங்கள் குரல் மூன்று இனிமையான இசைத் தாளங்களை வெளியிடுகிறது.

(**விளக்கம்:**

1. இந்த ஸ்லோகத்தில், ஆதி சங்கரர் பராசக்தியின் கழுத்தில் காணப்படும் மூன்று ரேகைகளின் அழகை விவரிக்கிறார். முதலாவது பராசக்தியின் கணவர் அவள் கழுத்தில் கட்டிய மூன்று முடிச்சுக்களில் ஆன தாலியை எடுத்துக் காட்டும் விதத்தில் அந்த மூன்று ரேகைகள் அமைந்து இருக்கலாம். இரண்டாவது பராசக்தியின் கழுத்துப் பகுதியில் உள்ள குரல் வளையில் இருந்து வெளிப்படும் குரல்தான் இனிமையான இசை ஒலிகளுக்கு மூல ஆதாரமானது என்றும், அதைத் தாண்டி வேறு எந்த இசைக் குறிப்புகளும் கிடையாது என்பதையும் எடுத்துக் காட்டும் விதத்தில் அவர் இந்த ஸ்லோகத்தை அமைத்து இருக்கலாம்.
2. ஆதி சங்கரர் பராசக்தியின் கழுத்தில் காணப்படும் மூன்று ரேகைகளின் அழகை வர்ணித்ததோடு மட்டும் இருந்திருக்கலாம். ஆனால் அவர் இசை உட்பட அனைத்திலும் நிபுணத்துவம் பெற்றவர் என்பதால், அன்னையின் கழுத்தில் உள்ள மூன்று

வரிகளை விவரிக்க, அவர் சங்கீதத்தையும், பராசக்தியின் குரல் வளத்தையும் அதோடு கலந்து உள்ளார் என்பதின் காரணம் 66 ஆம் ஸ்லோகத்தில் கூறி உள்ளபடி சரஸ்வதியின் சங்கீத ஆற்றலை முறியடிக்கும் விதத்தில் பராசக்தியின் குரல் வளம் இருந்தது என்பதே ஆகும்.

3. மனதை மயக்கும் வண்ணம் இசைக்கப்படும் ஒலியே சப்த ஸ்வரங்கள் ஆகும். அந்த ஏழு ஸ்வரங்கள் ஸட்ஜம் (ஸ), ரிஷபம் (ரி), காந்தாரம் (க), மத்யமம் (ம), பஞ்சமம் (ப), தைவதம் (த), நிஷாதம் (நி) என்பன ஆகும். அவற்றில் முக்கியமானவை ஸட்ஜம், காந்தாரம், மற்றும் மத்யமம் எனும் க்ரமங்கள் (ராகங்கள்) என்றும், அவற்றில் இருந்துதான் மனதை மயக்க வைக்கும் அளவிலான பெரும்பாலான இசை ராகங்கள் எழுகின்றன என்பதாகவும் கருதி உள்ள ஆதி சங்கரர், அன்னையின் கழுத்தில் உள்ள மூன்று வரிகள் மூன்று கமகங்களைக் (ராகங்களை) குறிக்கின்றனவோ என்றும், அந்த கமகங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து விடாமல் இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடும் வகையில் அவற்றின் எல்லைகளைக் காட்டும் வகையில் மூன்று ரேகைகள் அன்னையின் கழுத்தில் காணப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகம் அடைகின்றார்.

4. பராசக்தியின் தொண்டைப் பகுதியில் இருந்து குரலின் இனிமையும் வெளிப்படுகின்றது என்பதினால், அன்னையின் கழுத்தில் உள்ள மூன்று ரேகைகள்தான் ராகங்களையே உற்பத்தி செய்யும் இடமாக உள்ளது என்பதாக கருதி உள்ளார் என்றே தோன்றுகின்றது).

-70-

मृणालीमृद्वीनां तव भुजलतानां चतसृणां
चतुर्भिः सौन्दर्यं सरसिजभवः स्तौति वदनैः ।
नखेभ्यः सन्त्रस्यन् प्रथममथनादन्धकरिपो-
श्चतुर्णां शीर्षाणां सममभयहस्तार्पणधिया ॥

ம்ருணாலீம்ருத்வீநாம் தவ புஜலதாநாம் சதஸ்ருணாம்
சதுர்பி: ஸௌந்தர்யம் ஸரஸிஜபவ: ஸ்தௌதி வதனை: ।
நகேப்ய: ஸந்த்ரஸ்யன் ப்ரதமமதனாதந்தகரிபோ-
ஶ்சதுர்ணாம் ஶீர்ஷாணாம் ஸமமபயஹஸ்தார்பணதியா॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்து வேலைகளிலும் வெற்றி



ஹே பராசக்தி
ஒருமுறை பிரும்மா கூறிய பொய்யினால் கோபமுற்ற பரமேஸ்வரர் அவருடைய ஐந்தாவது தலையை தனது கை நகங்களினால் கிள்ளி எறிந்து விட்டார். ஆகவே எங்கே தன்னுடைய மீதமுள்ள நான்கு தலைகளையும் பரமேஸ்வரர் கிள்ளி எறிந்து விடுவாரோ என்ற அச்சம் கொண்ட பிரும்மா, பரமேஸ்வரி உன்னை சரண் அடைந்து, உன்னுடைய நான்கு கைகளின் அழகை தோத்திரம் செய்து, மீதம் உள்ள தனது தலைகளை காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கின்றார்.

(விளக்கம்:

1. ஜென்ம ஜென்மாந்திரங்களுக்கு முன் ஒருமுறை பிரும்மா மற்றும் விஷ்ணுவிற்கு இடையே ஒரு பந்தயம் நடைபெற்றது. சிவபெருமானின் பாதத்தையும், தலையையும் பார்த்து விட்டு முதலில் யார் திரும்பி வருகிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர்கள் என்பதே போட்டியாகும்.
2. அப்போது பிரும்மாவிற்கு ஐந்து தலைகள் இருந்தன. அதன்படி பிரும்மா சிவபெருமானின் தலையையும், விஷ்ணு சிவபெருமானின் பாதத்தையும் தரிசனம் செய்து விட்டு வர ஒப்புக் கொண்டார்கள்.
3. விஷ்ணு வராஹ அவதாரம் எடுத்துக் கொண்டு கீழே இருந்த ஏழு லோகங்களான அதல, விதல, சுடல, ராசாதல, தலாதல, மஹாதல, பாதாள என அனைத்து இடங்களுக்கும் சென்றும் கூட சிவபெருமானின் பாதத்தைக் காண முடியாமல் திரும்பி வந்து தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

4. ஆனால் பிரும்மாவோ பூமிக்கு மேலே இருந்த ஏழு லோகங்களான பூலோக , புவர் லோக, ஸ்வர்க லோகம், ஜன லோகம், தப லோகம், மற்றும் சத்ய லோகம் வரை சென்றும் சிவபெருமானின் தலையை காண முடியாமல் போனதினால் திரும்பி வந்து, தான் சிவபெருமானின் தலையை பார்த்து விட்டதாக பொய் கூறி விட்டார் .
5. அதற்கு சாட்சியாக தான் எங்கிருந்தோ பறித்துக் கொண்டு வந்திருந்த தாழம்பூவை காட்டி, சிவபெருமானின் தலையில் இருந்த தாழம்பூவே அது என்று கூறினார். போட்டி துவங்கும் முன்னர் சிவபெருமான் தலையில் தாழம்பூவை வைத்துக் கொண்டு இருந்ததை இருவருமே பார்த்து இருந்தார்கள். பிரும்மா கூறிய பொய்களைக் கேட்ட சிவபெருமான் கோபமுற்று பிரும்மாவின் ஐந்தாவது தலையை தனது கை நகத்தினால் கிள்ளி எறிந்து விட்டார்.
6. எங்கே மிச்சமுள்ள நான்கு தலைகளையும் கூட சிவபெருமான் கிள்ளி எறிந்து விடுவாரோ என்று பயந்து போன பிரும்மா பராசக்தியிடம் ஓடிச் சென்று அவளிடம் சரண் அடைந்து தாமரை மலரைப் போன்ற அன்னையின் முகத்தை தாங்கி நிற்கும் நான்கு தாமரை மலரின் தண்டுகளை போல காணப்பட்ட அன்னையின் நான்கு கைகளையும் போற்றி ஆராதனை செய்து தனது தலையை காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டார்.
7. அதனால் மீதம் இருந்த நான்கு தலைகளும் தப்பின. இதில் இருந்து என்ன தெரிந்தது என்றால் பிரும்மா ஒருவரே பராசக்தியின் நான்கு கரங்களையும் ஒரே நேரத்தில் பூஜித்து வணங்கத் தகுதி வாய்ந்தவராக இருந்துள்ளார்.

அவருக்கு நான்கு தலைகள் இருந்ததினால் பராசக்தியின் நான்கு கைகளையும் ஒரே நேரத்தில் வணங்கி துதிக்க முடிந்தது.

8. பரமேஸ்வரராலும் கூட பராசக்தியை மீறி பிரும்மாவை ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. அவளுடைய கருணையினால்தான் பிரும்மாவும் செயல்பட முடிகின்றது என்பதை எல்லாம் இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் எடுத்துக் காட்டி உள்ளார் .

-71-

नखानामुद्द्योतैर्नवनलिनरागं विहसतां
कराणां ते कान्तिं कथय कथयामः कथमुमे ।
कयाचिद्वा साम्यं भजतु कलया हन्त कमलं
यदि क्रीडल्लक्ष्मीचरणतललाक्षारुणदलम् ॥

நகானாமுத்த்யோதைர்னவனலினராகம்
விஹஸதாம்
கராணாம் தே காந்திம் கதய கதயாம: கதமுமே ।
கயாசித்வா ஸாம்யம் பஜது கலயா ஹந்த கமலம்
யதி க்ரீடல்லக்ஷ்மீசரணதலலாக்ஷாரஸசணம் ॥

இந்த ஸ்லோகத்தை 12,000 முறை என 90 நாட்கள் பாராயணம் செய்தால் -- யக்ஷினிகள் வசியம் ஆவார்கள்

ஹே பராசக்தி,
புதியதாக மலர்ந்த சிவப்பு தாமரைப் பூவே வெட்கி தலை குனியும் வகையில் உனது கைகளில் உள்ள நகங்களின் வண்ணம் காணப்படுகின்றது. அதன் காரணம் அந்த தாமரைப் பூவின் சிவப்பு வண்ணம் கூட, அதில் வாசம் செய்யும் மஹாலக்ஷ்மியின் கால்களில் அவள் பூசிக் கொள்ளும் மருதாணியின் சிவப்பு நிறத்தில் இருந்தே வண்ணத்தை பெறுகின்றது. எனவே உனது விரல் நகங்களின் நிறத்தை ஒப்பிட வேறு எதுவுமே இந்த பிரபஞ்சத்தில் கிடையாது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியின் கை நகங்களின் சிவப்பான நிற அழகை வர்ணனை செய்ய முயல்கின்றார். அவற்றோடு ஒப்பிட, சன்யாசியான அவருக்கு வேறு எதுவுமே கிடைக்கவில்லை என்பதினால், அவர் மஹாலஷ்மியின் கால் பாதங்களில் காணப்படும் மருதாணி வண்ணத்துடன் ஒப்பிடப் பார்த்தால், அதுவும் முடியவில்லை.
2. சிவப்பு நிறத்திலான தாமரைப் பூவோடு ஒப்பிடலாம் என்றால் அதுவும் முடியவில்லை. மஹாலக்ஷ்மி வாசம் செய்யும் தாமரைப் பூவோ அதற்கான சிவப்பு நிறத்தைக் கூட மஹாலக்ஷ்மியின் கால்களில் உள்ள மருதாணி நிறத்தில் இருந்தே பெறுகின்றது என்பதை அறிந்து கொள்ளும்போது, பராசக்தியின் கைகளையும், அதில் உள்ள நகங்களின் நிறங்களின் அழகையும் ஒப்பிட இந்த பிரபஞ்சத்தில் வேறு எதுவுமே கிடையாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டு விடுகின்றார்).

-72-

समं देवि स्कन्दद्विपवदनपीतं स्तनयुगं
तवेदं नः खेदं हरतु सततं प्रस्नुतमुखम् ।
यदालोक्याशङ्काकुलितहृदयो हासजनकः
स्वकुम्भौ हेरम्बः परिमृशति हस्तेन झडिति ॥

ஸமம் தேவி ஸ்கந்தத்விபவதனபீதம் ஸ்தனயுகம்
தவேதம் ந: கேதம் ஹரது ஸததம் ப்ரஸ்னுதமுகம் ।
யதாலோக்யாஶனகாகுலிதஹ்ருதயோ ஹாஸஜனக:
ஸ்வகும்பௌ ஹேரம்ப: பரிம்ருஶதி ஹஸ்தேன ஜடிதி ॥

இந்த ஸ்லோகத்தை 12,000 முறை என 90 நாட்கள் பாராயணம் செய்தால் -- பயங்களில் இருந்து விடுதலை கிடைக்கும்.

ஹே பராசக்தி
தனது மகன்களைக் கண்டதும் பால் பெருகுகின்ற நுனியோடு கூடிய ஸ்தனங்களில் இருந்து கணபதியும், குமாரசாமியும் ஒரே நேரத்தில் பருகிய பாலை சுரந்த உனது ஸ்தனங்களைக் கண்ட யானை முகத்தவனான கணபதி, தனது தலையிலுள்ள கும்பங்களைத்தான் தனது தாயார் அபகரித்துக் கொண்டு தனது ஸ்தனங்களாக மாற்றிக் கொண்டு விட்டாளோ என்ற பயத்தில் அடிக்கடி தனது தலையில் கும்பங்களுள்ளதா என தடவிப் பார்த்துக் கொள்வதைக் காணும் தாயாரும் தந்தையும் சிரிப்பார்களே, அப்படிப்பட்ட மகிமை வாய்ந்த உனது ஸ்தனங்கள் எங்கள் துயரங்களை தீர்க்கட்டும்.

(விளக்கம்:

1. ஆதி சங்கரர் இயற்றி உள்ள இந்த ஸ்லோகத்தில் பராசக்தியின் ஸ்தனங்களின் மகிமையை விளக்குவது காமப் பார்வையைக் கொண்ட நிலையிலானது அல்ல. இவற்றை பராசக்தியின் அங்க வர்ணனைகளாக கருதக் கூடாது. அவர் கூறி உள்ள கருத்து மிகவும் ஆழமானது, அற்புதமான தத்துவத்தைக் கொண்டது ஆகும்.
2. ஸ்தனம் என்றால் முலை என்ற அர்த்தம் ஆகும். ஆகவே முலை என்பதை முளைக்க வைப்பது என்ற அர்த்தத்தில் பார்க்க வேண்டும். ஒரு செடியோ மரமோ வளர வேண்டும் எனில் அதற்கு விதை போட்டு தண்ணீர் ஊற்றி பராமரித்தால்தான் அந்த விதை முளை விட்டு பெரியதாகும். அதே போன்ற நிலையில்தான் ஒவ்வொரு தாயாரும் கருவுற்று குழந்தையை

பெற்றெடுத்து பாலூட்டி வளர்த்து பெரியவர்களாக்குகின்றாள்.

3. பராசக்தி அவளது மகன்களான கணபதி மற்றும் குமாரசாமிக்கு மட்டும் தாயார் அல்ல. அவள் இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவன்களுக்கும் தாயாரானவள். இந்த உலகைப் படைத்தவள் அவள்தான். ஆகவே அவளே பல்வேறு ஜீவன்களில் ஒரு தாயாரைப் போன்ற உருவில் இருந்தவாறு அந்தந்த ஜீவன்களுக்கு உணவை தன்னிடம் இருந்து தருகின்றாள். பிறந்த குழந்தைகள் சில ஆண்டுகள் தாயின் பாலில்தான் உயிர் வாழ்கின்றன என்பதால் பெரிய மார்பகம் (ஸ்தனங்கள்) என்பது பெரிய உயிரியல் நோக்கத்தைக் கொண்டுள்ளது.
4. அப்படி தனது உடலில் இருந்து (ஸ்தனங்களில் மற்றும் பால் சுரக்கும் உடலின் பகுதியில் இருந்து) உணவை தரும்போது அந்தந்த ஜீவன்களுக்கு தனது கருணையையும் சேர்த்தே தருகின்றாள் என்பதினால்தான் இந்த ஸ்லோகத்தின் மூலம் மீண்டும் அவளது கருணையை தந்து வாழ்க்கையின் இருளை போக்க வேண்டும் என்பதாக ஆதி சங்கரர் வேண்டுகோள் விடுகின்றார்.
5. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

6. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு காட்சி அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.
7. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் பார்த்தபடி இருந்தவாறு ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்.
8. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எந்த அளவில், எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

-73-

अमू ते वक्षोजावमृतरसमाणिक्यकुतुपौ
न संदेहस्पन्दो नगपतिपताके मनसि नः ।
पिबन्तौ तौ यस्मादविदितवधूसङ्गरसिकौ
कुमारावद्यापि द्विरदवदनक्रौञ्चदलनौ ॥

அமூ தே வக்ஷோஜாவம்ருதரஸமாணிக்யகுதுபெள
ந ஸந்தேஹஸ்பந்தோ நகபதிபதாகே மனஸி ந: ।
பிபந்தெள தெள யஸ்மாதவிதிதவதூஸனகரஸிகெள
குமாராவத்யாபி த்விரதவதனக்ரெளஞ்சதலனெள ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 7 நாட்கள் பாராயணம் செய்தால் -- பெண்கள் மார்பில் அதிக பால் சுரக்கும்

ஹே பராசக்தி,
பர்வத ராஜனான ஹிமவனுக்கு புகழை சேர்க்க வந்தவளே, உன்னுடைய இரண்டு ஸ்தனங்களும் அமிர்தத்தைக் கொண்ட மாணிக்கக் குடுவைகள் போன்றவைகளாகவே இருந்திருக்க வேண்டும், சாதாரணமாக தாயிடம் இருந்து வெளிப்படும் பாலை அவை சுரந்ததாக தெரியவில்லை. அதன் காரணம் உனது ஸ்தனங்களில் இருந்து பாலை பருகிய கணபதியும், கந்தனும் அது பாலாக இருந்திருந்தால் பருவத்தின் முதிர்ச்சி அல்லவா அடைந்து இருப்பார்கள். எத்தனைக் காலம் ஆயினும் அவர்கள் இன்னமும் மங்கையர்கள் சம்மந்தம் இல்லாத குழந்தைகளாகவே அல்லவா இருக்கின்றார்கள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் என கூறி உள்ளார் என்றால் 'பராசக்தியின் ஸ்தனங்களில் இருந்து பாலைக் குடித்த கணபதி மற்றும் கந்தன் என்ற இரண்டு மகன்களும் தங்கள் இளம் தோற்றத்தையும், அதே பால்ய மன நிலையையும் இழக்காமல் ஒரே மன நிலையோடு இருந்தவாறும், பெண்களிடம் எந்த தவறான செயல்களிலும் ஈடுபடாமல் உள்ளதைக் காணும்போது அவர்கள் பராசக்தியிடம் இருந்து பருகியது பாலும் அல்ல, அவள் ஸ்தனங்களில் இருந்து வெளி வந்ததும் பால் அல்ல. மாறாக அவளது ஸ்தனங்களில் இருந்து வெளி வந்த பானம் அமிர்தமாகவே இருந்திருக்க வேண்டும்'.
2. இந்த கருத்தையே பிருஹதாரண்யக உபநிட ஸ்லோகத்தில் (5-5-1) இவ்வாறாக கூறப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது :

-'தஸ்மாத் ப்ரஹ்மணா பாண்டித்தியம் நிர்வித்ய பால்யேன திஷ்டாசேத்' அதாவது பரிபூரண ஞானம் பெற்று இருந்தாலும், பால்யத்துடன் (மனதில் குழந்தைப் பருவத்தோடு) இருக்க வேண்டும்-

3. பிருஹதாரண்யக உபநிடம் என்பது யசுர் வேதத்தில் அமைந்துள்ள ஒரு உபநிடம் ஆகும். பிருஹதாரண்யக என்பதின் அர்த்தம் 'மிகப்பெரிய அடர்ந்த காடு' என்பதாகும். இது இந்து மதத்தின் பல்வேறு பள்ளிகளுக்கு முக்கியமான வேதமாகும். இந்த உபநிடதத்தில் ஆத்ம தத்துவ விசாரணை, நன்னெறிகள், வேள்விகள், சடங்குகள், தியானம், உபாசனை, ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும், பிரம்மத்தை அடையும் வழிகள், மன அடக்கம், புலனடக்கம் மற்றும் கருணை போன்றவை போதனை செய்யப்பட்டு உள்ளன. இந்த உபநிடத்திற்கு ஆதி சங்கரர், இராமானுசர், மற்றும் மத்வர் ஆகியோர் விளக்க உரை எழுதியுள்ளனர்.

-74-

वहत्यम्ब स्तम्बेरमदनुजकुम्भप्रकृतिभिः
समारब्धां मुक्तामणिभिरमलां हारलतिकाम् ।
कुचाभोगो बिम्बाधररुचिभिरन्तः शबलितां
प्रतापव्यामिश्रां पुरदमयितुः कीर्तिमिव ते ॥

வஹத்யம்ப ஸ்தம்பேரமதனுஜகும்பப்ரக்ருதிபி:
ஸமாரப்தாம் முக்தாமணிபிரமலாம் ஹாரலதிகாம் ।
குசாபோகோ பிம்பாதரருசிபிரந்த: ஶபலிதாம்
ப்ரதாபவ்யாமிஶ்ராம் புரதமயிது: கீர்திமிவ தே ॥

இந்த ஸ்லோகத்தை 108 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- பெரும் கீர்த்தி பெறுவார்கள்



ஹே பராசக்தி,
கஜாசுரனை சிவபெருமான் வதம் செய்த பின்னர் அவனது கும்பத்தில் இருந்து வெளி வந்த முத்துக்களால் செய்த மாலையை நீ உனது இரண்டு ஸ்தனங்களுக்கும் இடையே அணிந்து கொண்டு உள்ளாய். பல நிறமுடைய அந்த மணியின் நிறமானது உனது உதட்டின் சிவப்பு நிறத்தைப் போல வெளியிலும், உள்ளே பல நிறங்களில் ஆனதாகவும், பரமேஸ்வரரின் பராக்கிரமத்தை எடுத்துச் சொல்வதாகவும் அமைந்து உள்ளது.

(விளக்கம்:

1. பராசக்தி அணிந்துள்ள முத்து மாலையின் பின்னணியில் ஒரு கதை உண்டு. அது கஜாசுரன் என்ற அசுரனின் கதை ஆகும்.
2. மகிஷாசுரனின் மரணத்திற்குப் பிறகு, அவரது மகன் கஜாசுரன் என்பவன் தனது தந்தையின் மரணத்திற்கு காரணமான அனைத்து தேவர்களையும் பழிவாங்க முடிவு செய்தான். ஒரு கால் விரலில் நின்று, பல வருடங்கள் தீவிரமாக தவமிருந்து, பிரம்மாவிடமிருந்து ஒரு தனித்துவமான வரத்தைப் பெற்றான்; அதன்படி எந்த ஆணோ, பெண்ணோ அல்லது தெய்வமோ அவனுக்கு எந்த தீங்கும் செய்ய முடியாது.
3. தனக்குக் கிடைத்த தனித்துவமான வரத்தினால், கஜாசுரன் மூன்று உலகங்களையும் வென்ற பிறகு, பூமி, வானம் மற்றும் பாதாளம் ஆகிய மூன்று லோகங்களிலும் உள்ள அனைவரையும் பயமுறுத்த தொடங்கினான். அவனிடம் இருந்த மாய சக்தியின் காரணமாக, அவன் ஒரு கண்

இமைக்கும் நேரத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல முடிந்தது. 'வரவிருக்கும் நிகழ்வுகள் அவற்றின் நிழலை முன்னோக்கிப் போட்டன' என்று நாம் சொல்வது போல், ஆணவத்துடன் காசிக்குச் சென்று அங்குள்ள சிவ பக்தர்களைப் துன்புறுத்தத் தொடங்கினான்.

4. பக்தர்கள் சிவபெருமானின் சென்று தமக்கு ஏற்படும் கொடுமைகளை கூறி, அவரது பாதுகாப்பை நாடிய போது, சிவபெருமான் கோபமடைந்து, கஜாசுரனை எதிர்த்துப் போர் தொடுத்து, அவனை தனது திரிசூலத்தால் கொன்றார்.
5. சிவபெருமானின் சக்தியை உணர்ந்து கொண்ட கஜாசுரன் மரணத்தின் விளிம்பில் சென்று விட்ட போது, தன்னை மன்னித்து, தனது தோலைத் அவருடைய ஆடையாக பயன்படுத்தும்படி இறைவனிடம் வேண்டுகோள் விடுத்து அவரிடம் சரணடைந்தான், தனக்கு அமைதியான மரணத்தைத் தரும்படி வேண்டினான். அதை இறைவனும் ஏற்றுக் கொண்டு அவனுக்கு அவ்வாறே அருள் புரிந்தார்.
6. யானை வடிவில் இருந்த கஜாசுரன் மண்டை ஓட்டிலிருந்து ரத்தினங்கள் வெளியில் எடுக்கப்பட்டு உருவான மாலை பராசக்திக்கு தரப்பட்டது. அந்த மாலையின் அழகைதான் ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் வெளிப்படுத்தி உள்ளார்.
7. பொதுவாக, முத்துக்கள் கடலில் உள்ள கிளிஞ்சல்களில் இருந்து எடுக்கப்படுவதாக அனைவரும் நம்புகிறார்கள், இருப்பினும், முத்துக்கள் சில சிறப்பு வகை பாம்புகளிலிருந்தும், சில வகை யானைகளின்

முன் கோளங்களிலிருந்தும், கரும்புகளின் உட்புறமுள்ள பகுதிகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றன என்பதும் தெரிகின்றது.

8. முத்துக்கள் கடலுக்குள் இருந்து மட்டுமே கிடைப்பது இல்லை. மூங்கில் கணுக்கால்களுக்கு இடையே உள்ள இடை வெளியிலும் நீர் வற்றி முத்துக்கள் பிறக்கின்றனவாம். அவை பிறக்கும் இடங்களை பொறுத்தே அவற்றின் நிறங்களும் வடிவங்களும் இருக்குமாம். முத்துக்கள் எங்கெங்கே பிறக்கின்றன என்பதை தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் மற்றும் சமஸ்கிருத நூல்களிலும் கூறப்பட்டு உள்ளது. கருட புராணத்தில் கூட முத்துக்கள் பற்றி கூறப்பட்டு உள்ளதாம்).

-75-

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

தவ ஸ்தன்யம் மன்யே தரணிதரகன்யே ஹ்ருதயத:
பய:பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ ।
தயாவத்யா தத்தம் த்ரவிடஶிஶுராஸ்வாத்ய தவ யத்
கவீநாம் ப்ரௌடானாமஜனி கமனீய: கவயிதா ॥

இந்த ஸ்லோகத்தை 12,000 முறை என 3 நாட்கள் பாராயணம் செய்தால் -- கவிதை, கட்டுரைகள் போன்றவற்றை எழுதும் ஆற்றல் கிடைக்கும்



ஹே பராசக்தி
உனது ஸ்தனங்களில் இருந்து வெளியான பால் வெறும் பால் அல்ல; அது சரஸ்வதி தேவியால் உனது ஸ்தனங்களில் இருந்து வெளிப்படுத்தப்பட்ட ஞானப் பால் எனும் அமிர்தம் என்றும், அதை பருகியதினால்தான் திராவிட நாட்டில் ஒரு பெரும் கவிஞன் உருவானான் என்றும் கூறுகின்றார்கள்.

(விளக்கம்:

1. இதில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டு உள்ளன. பராசக்தியின் ஸ்தனங்களில் இருந்து வெளியான பாலானது வெறும் பால் அல்ல, அதை ஞானத்தை தரும் சரஸ்வதி தேவி அமிர்தமாகவே வெளியிட வைக்கிறாள். அதனால்தான் அதை குடித்த (விநாயகர் மற்றும் முருகப் பெருமான் எனும் தெய்வ குழந்தைகளை தவிர்த்து) திராவிடக் குழந்தையானது, அனைவரும் போற்றிடும் மாபெரும் கவிஞ்சராக பிற்காலத்தில் உருவானார் என்பதாக ஆதி சங்கரர் குறிப்பிட்டு உள்ளார். அவர் யாரைக் குறித்து அப்படி கூறி உள்ளார் என்பது விளங்கவில்லை.
2. ஸ்தனங்களில் இருந்து வெளியான அமுதப் பால் என்பதை இங்கு மேன்மையான ஆன்மீக எண்ணங்கள் என்பதாக பொருள் கொள்ள வேண்டும். ஏன் எனில் ஆதி சங்கரர் பராசக்தியிடம் இருந்து ஞானப் பாலைக் குடிக்கவில்லை. அமுதப் பால் என்பது அன்னையின் போதனைகளாக இருந்திருக்கலாம். அவர் வாழ்ந்திருந்த காலத்தில் தென் இந்தியா நான்கு மானிலங்களையும் உள்ளடக்கிய திராவிட

நாடாகவே இருந்துள்ளது. ஆகவே அவர் கேரளாவில் உள்ள காலடியில் பிறந்ததினால் தானும் திராவிட நாட்டுக் குழந்தை என்று கருதி இந்த ஸ்லோகத்தை இயற்றி இருக்கலாம்.

3. அவளுடைய ஸ்தனங்களில் இருந்து சுரக்கும் பால், ஞானத்தை விரும்பும் ஒருவருக்கு வழங்கப்பட வைக்கப்பட்டு உள்ள 'ஞான அமிர்தக் கலசங்களாக' அவர் கற்பனை செய்திருக்கலாம் - அமிர்தத்தைக் குடித்த இரண்டு மகன்களும், இளமையை இழக்கவில்லை, அதே அப்பாவித்தனத்தை கொண்டு, இன்றுவரை பெண்களின் மீதான நாட்டம் கொண்டு ஆடவில்லை.
4. பராசக்தியின் பாலை அருந்திய ஒரு திராவிடக் குழந்தை ஞானம் பெற்றது என்றும் அவர் தன்னையே கூட குறிப்பிட்டு இருக்கலாம். ஆனால் இதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆதி சங்கரர் மாபெரும் யோகி, உலக ஆசைகள், பந்தங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதினால் தன்னை குறுக்கிக் கொண்டு திராவிட நாட்டுக் குழந்தை என்று கூறிக் கொள்ள ஆசைப்பட்டு இருக்க முடியாது. அவர் விரும்பியது மோட்ஷம் மட்டுமே ஆகும்.
5. ஞானப் பாலைக் குடித்தவர் என்ற பெருமை திருஞான சம்மந்தருக்கு மட்டுமே உண்டு என்பதினால் அவரைக் குறித்துக் கூறி இருக்கலாம். முருகப் பெருமானே திருஞான சம்மந்தராக அவதரித்து இருந்தார் என்றும் சிலர் கூறுவார்கள். திராவிட நாடு என்ற பகுதியில் தான் முருகப் பெருமானும் அதிக பெருமை பெற்றவர் என்பதினால் இதில் சற்று குழப்பம் உள்ளது).

-76-

हरक्रोधज्वालावलिभिरवलीढेन वपुषा
गभीरे ते नाभीसरसि कृतसङ्गो मनसिजः ।
समुत्तस्थौ तस्मादचलतनये धूमलतिका
जनस्तां जानीते तव जननि रोमावलिरिति ॥

ஹரக்ரோதஜ்வாலாவலிபிரவலீடேன வபுஷா
கபீரே தே நாபீஸரஸி க்ருதஸனகோ மனஸிஜ: ।
ஸமுத்தஸ்தௌ தஸ்மாதசலதனயே தூமலதிகா
ஜனஸ்தாம் ஜானீதே தவ ஜனநி ரோமாவலிரிதி ॥

இந்த ஸ்லோகத்தை 1,000 முறை என 12 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும்

ஹே பராசக்தி,
இமயமலை மன்னனின் மகளே, பரமசிவன் ஒருமுறை கோபத்தில் மன்மதனை எரித்து விட அந்த சூட்டின் வெப்பம் தாங்க முடியாமல் நெருப்புப் புகையுடன் அமிர்த கங்கையோ என்ற எண்ணத்தில் மன்மதன் உனது தொப்புளில் குதித்து விட்டான். உனது தொப்புளை சுற்றி எழுந்த புகை உனது தொப்புளை சுற்றி இருந்த அழகிய ரோமமோ என்று எண்ணினார்கள்.

(விளக்கம்:

1. முதலில் இந்த ஸ்லோகத்தின் பின்னணிக் கதையைப் பார்க்க வேண்டும். தக்ஷனுக்கு சிவபெருமானின் மீது இருந்த வெளிப்படையான பகைமையால் வருத்தம் அடைந்த தக்ஷனின் மகள் சதி, தீயில் குதித்து தன்னைத்தானே எரித்துக் கொண்டு இறந்து விடுகிறாள். பின்னர் அவள் இமயவனின் மகளாக மறுபிறவி எடுத்து, சிவனை மீண்டும் தனது மனைவியாகப் பெற இமயமலையில் கடுமையான தவம் செய்கிறாள். சதி, கைலாசத்தை விட்டு வெளியேறிய பிறகு, சிவனும் கைலாசத்தில் இருந்து கிளம்பி தொலை தூர இடத்திற்குச் சென்று மிகக் கடுமையான தவத்தில் அமர்ந்து விடுகின்றார்.
2. அந்த நேரத்தில்தான் சிவனால் மட்டுமே தீர்க்கக் கூடிய ஒரு சிக்கல் எழுந்தது. சிவபெருமானின் பக்தனான தாரகாசுரன் என்ற ஒரு அசுரன் அனைத்து லோகங்களிலும் அனைவரையும் பயமுறுத்தி துன்புறுத்திக் கொண்டிருந்தான்.
3. அவனை சிவபெருமானுக்குப் பிறக்கும் குழந்தையால் மட்டுமே கொல்ல முடியும் என்ற

அரிய வரத்தை பிரம்மாவிடமிருந்து பெற்று இருந்ததினால், அவனை எப்படி அழிப்பது என்ற பிரச்சனை எழுந்தது. சிவபெருமானோ கடுமையான தவத்தில் இருந்தார். ஏற்கனவே அவருடன் மீண்டும் இணைய வேண்டும் என்பதற்காக பார்வதி சிவனைத் தேடிக் கொண்டிருந்தார். சிவபெருமான் தவத்தில் இருந்த இடத்தைக் கண்டு பிடித்துவிட்டாள்.

4. அவருடைய தவத்தை எப்படி கலைப்பது என்று எண்ணியவள் பிரும்மாவையும், விஷ்ணுவையும் சந்தித்து ஆலோசனை கேட்டாள். அவர்கள் இருவரும் நன்கு ஆலோசனை செய்த பின் மன்மதனை அணுகி, பார்வதி மீது சிவபெருமானுக்கு மோகம் ஏற்பட வேண்டும் என்பதற்காக சிவனின் தவத்தைக் கலைக்க மன்மதனை அனுப்பினார்கள்.

5. மன்மதன் சிவன் மீது காதல் அம்புகளை எய்து அவரது தவத்தைக் கலைத்தார். அதனால் கோபமடைந்த சிவபெருமான், மன்மதனை தனது மூன்றாவது கண்ணை திறந்து எரித்து விட்டாலும், பார்வதியின் வேண்டுகோளை ஏற்று அவருக்கு மீண்டும் உடலற்ற உயிரைக் கொடுத்தார்.

6. சிவ பெருமானால் எரிக்கப்பட்ட மன்மதன், தீயின் சூட்டை தாங்க முடியாமல், கங்கை நதி போல அவருக்கு காட்சி தந்த பராசக்தியின் தொப்புளில் குதித்து அங்கேயே மறைந்து கொண்டு விடுகின்றார் என்று ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தின் மூலம் வர்ணிக்கிறார்.

7. மன்மதனின் உடலில் இருந்து தீக்காயத்தினால் எழுந்த புகையின் தோற்றம் பராசக்தியின் தொப்பிளை சுற்றி புல்லரிப்பினால் ரோமம் எழுந்து உள்ளதை

போல காணப்பட்டது என்பதாக அந்த காட்சியை விவரித்து உள்ளார். ஆதி சங்கரர் அவளுடைய தொப்பிளை ஒரு ஹோம குண்டமாக கற்பனை செய்திருக்கலாம், அங்கிருந்து புகை எழுந்து மேலே செல்கின்றது. அது காற்றினால் மெல்ல உயரே எழும்பியவாறு பறக்கும் மெல்லிய முடியுடன் ஒப்பிடப்படுகிறது.

8. மன்மதன் அழகு காம உணர்வின் அடையாளமாகும். ஆகவே மன்மதன் பராசக்தியின் தொப்புள் பகுதியில் இருந்ததினால், பராசக்தியின் தொப்புள் பரமசிவனை காமத்தால் இழுக்கும் அளவிலான அழகை பெற்றது என்றும், அதனால்தான் பரமசிவன் அவளது தொப்புள் பகுதியை பார்க்கும்போது எல்லாம் அவள் மீது மோகம் கொண்டு விடுகின்றார், அந்த மோகத்தால் அவளிடம் அவர் அடங்கி இருக்கின்றார் என்பதாக கூறி உள்ளார். தொப்புளின் அழகை ஏன் ஆதி சங்கரர் இப்படியாக வர்ணித்து உள்ளார்?

9. சிவபெருமானின் தவத்தைக் கலைக்க காம தேவன் தனது உடலில் அபரிதமான அளவில் காம உணர்வுகளை வளர்த்துக் கொண்டு அந்த மோக சக்தியால் காம பாணத்தை எறிந்தான். அந்த செயலை செய்து முடித்த பின்னர் அதே எண்ணங்களோடு இருக்கக் கூடாது என்பதற்காகவே உடனடியாக பராசக்தியிடம் சரண் அடைந்து தனது காம எண்ணங்களை அழித்துக் கொள்கின்றான். அதை எடுத்துக் காட்டியதே அவன் பராசக்தியின் தொப்புளில் குதித்த நிலை ஆகும்.

10. ஆகவே இந்த ஸ்லோகத்தின் கருத்தை 'காமதேவனின் தனது உடலில் எரிந்து

கொண்டிருந்த காம எண்ணங்களை அழித்துக் கொள்வதற்காக தூய்மையான கங்கை நதி போலிருந்த அன்னையின் தொப்பிள் பகுதியில் குதித்தான்' என்பதாக பொருள் கொள்ள வேண்டும். ஆகவேதான் பராசக்தியின் தொப்பிள் பகுதியை தியானிக்கும் சாதகனின் காம எண்ணங்கள் அனைத்தும் அடியோடு அழிந்து அவன் அடுத்த நிலைக்கு (சக்கரத்திற்கு) செல்ல ஆயத்தம் ஆகின்றான் என்பதையே இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் மறைமுகமாகக் கூறி உள்ளார்.

11. ஆதி சங்கரர் இதை ஒரு உவமையாக மட்டும் கூறி உள்ளார். ஆனால் மேலும் அதில் அவர் வைத்துள்ள தத்துவம் என்ன என்றால் பராசக்தியின் தொப்புளை போன்றதே இந்த உலக தோற்றங்கள். அதில் காணப்படும் அனைத்துமே மாயை.

12. எவன் உலக வாழ்க்கையை துறந்து ஞானம் அடைய நினைக்கிறானோ அவர்கள் உலகின் சுக போகங்களை பார்க்காமல், அந்த நினைவுகளை அழித்துக் கொண்டு பராசக்தியை மனதில் கொண்டு தியானம் அல்லது யோக நிலையில் இருந்தால், அவனால் அவளது பாதங்களில் கலந்து விட முடியும், மோட்ஷம் பெற முடியும். மற்றவர்களின் சுக போகங்களை பார்த்தால்தானே உலகில் வாழ வேண்டும் என்ற ஆசை அதிகமாகும் என்பதால் அவற்றின் மீதான எண்ணங்களை அழித்துக் கொள்ள வேண்டும் என்பது இதன் அர்த்தம் ஆகும்.

13. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை

படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

14. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எவ்வாறான அளவில்,எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

15. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

16. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்.

-77-

यदेतत् कालिन्दीतनुतरतरङ्गाकृति शिवे
कृशे मध्ये किंचिज्जननि तव यद्भाति सुधियाम् ।
विमर्दादन्योऽन्यं कुचकलशयोरन्तरगतं
तनूभूतं व्योम प्रविशदिव नाभिं कुहरिणीम् ॥

யதேதத் காலிந்தீதனுதரதரனகாக்ருதி ஶிவே
க்ருஶே மத்யே கிஞ்சிஜ்ஜனநி தவ யத்பாதி ஸுதியாம் ।
விமர்தாதன்யோன்யம் குசகலஶயோரந்தரகதம்
தனூபூதம் வ்யோம ப்ரவிஶதிவ நாபிம் குஹரிணீம் ॥

இந்த ஸ்லோகத்தை 2000 முறை என 15 நாட்கள் பாராயணம் செய்தால் -- அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும்



ஹே பராசக்தி,
கருமை நிறத்திலான யமுனை நதியின் மெல்லிய அலைகளை போன்று, ஞானம் பெற்ற ஆத்மாக்கள் கண்களுக்கு மட்டுமே புலப்படும், உன் சிறு இடுப்பின் ரோம வரிசைகள், இரு பருத்த ஸ்தனங்களின் மத்தியில் எங்கே தான் அகப்பட்டுக் கொண்டு அழிந்து விடுவோமோ என்ற பயத்தில், கருப்பு நிறத்திலான யமுனை நதி இரு ஸ்தனங்களுக்கும் இடையே புகுந்து சென்று உனது தொப்புளில் சங்கமிக்கின்றது போல காணப்படுகின்றது.

(விளக்கம்:

1. பராசக்தியின் அழகை ஆதி சங்கரர் விவரித்து உள்ள விதம், விரசமாக தோன்றலாம்.
2. ஆதி சங்கரர் பராசக்தியை எந்த நிலையிலும் ஒரு குடும்பப் பெண்ணாகப் பார்க்கவில்லை; மாறாக அவரை பிரபஞ்சத்தின் பூமியாக, இந்த பிரபஞ்சத்தின் தாயாகப் பார்க்கிறார். தன்னை அவளுடைய குழந்தையாக, தனக்கு பாலூட்டி வளர்த்த தாயாராகவே பார்க்கின்றார்.
3. ஸ்லோகங்களில் உள்ள வசனங்கள் பெரும்பாலும் அதிக விளக்கம் தராத நிலையில் உள்ளன இருக்கின்றன என்றாலும் ஆழமான ஆன்மீக அர்த்தங்களை வெளிப்படுத்துகின்றன.
4. பராசக்தி அவருக்கு தூய ஞானத்தைக் கொடுத்திருக்கிறாள். அவரைப் பொறுத்தவரை பராசக்தி இந்த பிரபஞ்சத்தை படைத்தவள்; அவளே இந்த பிரபஞ்சமாக இருப்பதினால் இயற்கையாக உள்ள ஆறுகள், மலைகள், குகைகள், நெல் மற்றும் பிற வயல்கள், கடல், ஆறுகள் போன்றவற்றின்

உருவங்கள் அவள் உடலில் காணப்படுகின்றன; பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பக்கமும் ஏதோ ஒரு வடிவத்தில் அவளுடைய உடலில் பிரதிபலிக்கிறது; எனவே அவர் தனது தாயின் உடலில் காணும் இயற்கையின் அழகை ஒரு சிறு ரோமம் போல பார்த்து தனது ஸ்லோகங்களில் வெளிப்படுத்தி உள்ளார் .

5. பராசக்தியின் உடலில் உள்ள கண்கள், புருவங்கள், கண் இமைகள், மூக்கு, வாய் காது மடல், கன்னம், உதடுகள், கன்னம், மார்பகங்கள், முடி போன்றவை பல்வேறு இயற்கையின் அழகை பிரதிபலிக்கின்றன.
6. ஆதி சங்கரர் அவளுடைய தொப்பிளை ஒரு ஹோம குண்டமாக கற்பனை செய்திருக்கலாம், அங்கிருந்து புகை எழுந்து மேலே செல்கின்றது. அது காற்றினால் மெல்ல உயரே எழும்பியவாறு பறக்கும் மெல்லிய முடியுடன் ஒப்பிடப்படுகிறது.
7. அவளுடைய ஸ்தனங்களில் இருந்து சுரக்கும் பால், ஞானத்தை விரும்பும் ஒருவருக்கு வழங்கப்பட வைக்கப்பட்டு உள்ள 'ஞான அமிர்தக் கலசங்களாக' அவர் கற்பனை செய்திருக்கலாம் - அமிர்தத்தைக் குடித்த இரண்டு மகன்களும், இளமையை இழக்கவில்லை, அதே அப்பாவித்தனத்தை கொண்டு, இன்றுவரை பெண்களின் மீதான நாட்டம் கொண்டு ஆடவில்லை.
8. பராசக்தியின் பாலை அருந்தியதினால் ஒரு திராவிடக் குழந்தை (ஒருவேளை சைவப் பிரிவின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவரான திருநாவுக்கரசரை, அல்லது தன்னையும் சேர்த்தே குறிப்பிடலாம்) ஞானம் பெற்றது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

9. தாயின் பெரிய மார்பகங்களை மலைகளின் ராஜா, இமயமலை என்று அவர் அர்த்தப்படுத்தியிருக்கலாம். அவை இரண்டின் இடைவெளியை ஒரு குகையாகவும், அவளுடைய உடலில் உள்ள முடியை நெல், செடிகள் மற்றும் அவற்றில் வளரும் பிற பயிர்கள் நிறைந்த விவசாய வயல்களாகவும் அவர் கற்பனை செய்திருக்கலாம்.

10. பராசக்தியின் உடலின் மார்புப் பகுதியில் காணப்படும் மயிர்கள் ஆழ்ந்த ஞான நிலையில் உள்ளவர்களின் கண்களுக்கு மட்டுமே தெரியும். அவைகளே அவர்களுக்கு வயல் வெளியில் வளரும் நெல், செடி-கொடிகள் மற்றும் அவற்றில் வளரும் பிற பயிர்களாக காட்சி தருகின்றது. ஏன் என்றால் அவர்கள் அன்னையை ஒரு பெண்ணின் உடலாக பார்க்கவில்லை. அவளை இந்த பிரபஞ்சத்தின் பூமியாகவே பார்த்து தியானிக்கின்றார்கள்.

11. எனவே, ஒரு சாதாரண மனிதனால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத மாய தத்துவ செய்திகள் நிறைந்தவை ஆதி சங்கரரின் சௌந்தர்யலஹரி ஸ்லோகங்கள்.

12. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

13. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

14. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்.

-78-

स्थिरो गङ्गावर्तः स्तनमुकुलरोमावलिलता-
कलावालं कुण्डं कुसुमशरतेजोहुतभुजः ।
रतेर्लीलागारं किमपि तव नाभिर्गिरिसुते
बिलद्वारं सिद्धेर्गिरिशनयनानां विजयते ॥

ஸ்திரோ கனகாவர்த: ஸ்தனமுகுலரோமாவலிலதா-
கலாவாலம் குண்டம் குஸுமஶரதேஜோஹுதபுஜ: ।
ரதேர்லீலாகாரம் கிமபி தவ நாபிர்கிரிஸுதே
பிலத்வாரம் ஸித்தேர்கிரிஶனயனாநாம் விஜயதே ॥

இந்த ஸ்லோகத்தை 108 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- அரசாங்கத்தின் அங்கீகாரம் கிடைக்கும், அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும்



ஹே பராசக்தி
உனது தொப்பிள் என்பது அமைதியாக உள்ள கங்கை நதியின் சூழல் போன்றது. அங்கே தாமரை மலர்களின் மொட்டுக்களை தாமரை மலர்களின் தண்டுகள் சுமப்பதை போன்று, உனது ரோமங்கள் ஸ்தனங்களை சுமந்து கொண்டு இருக்கும் காட்சி உள்ளது. மேலும் அது மன்மதனின் அக்னி குண்டம் போன்றும், மன்மதனின் மனைவியான ரதி விளையாடும் இடமும் போன்றும், பரமேஸ்வரர் மற்றும் ரிஷி -முனிவர்கள் சித்தி அடைய தவம் செய்ய தேர்ந்து எடுத்த இடம் போலவும் அல்லவா உள்ளது.

(விளக்கம்:

1. கங்கை நதியின் நீர் சுழல்கள் ஸ்திரமாக இருக்காதாம். ஆனால் இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியின் தொப்பிளை கங்கையின் அமைதியான சுழல் நீருடன் ஒப்பிட்டு உள்ளார். கங்கை நீரில் குளித்தால் பாவங்கள் போய் விடும், ஆனால் பராசக்தியின் தொப்பிள் உள்ள பகுதியை தியானித்தால் மட்டும் போதும் அது பாவத்தைப் போக்கி விடும்.
2. அங்குதான் மன்மதன் குதித்து தன்னை தீயின் தாக்கத்தில் இருந்து காப்பாற்றிக் கொண்டதாக 76 வது ஸ்லோகத்தில் கூறப்பட்டு இருந்தது. அந்த இடத்தில் உள்ளவரை அவன் மனதில் காம மோக எண்ணங்கள் வர முடியாதாம். அத்தகைய எண்ணங்களை அழித்து விடும் நிலையிலான இடம் அது ஆகும். ஆகவே அந்த இடத்தை தியானிக்கும் சாதகர்களுக்கு காம, மோக, இச்சைகளுக்கான எண்ணங்கள் அழிந்து விடுமாம்.

3. மூன்றாவது, அன்னையின் அந்த உடல் பகுதியில் உள்ள ரோமங்கள் அன்னையின் ஸ்தனங்களை தூக்கிப் பிடித்துக் கொண்டு உள்ளதை போல தோற்றம் தரும் காட்சி தாமரை மலரையும் அதை தாங்கி நிற்கும் தண்டையும் போல உள்ளது என்று கூறுவதில் மூலம், தாமரை மலரில் வசிப்பவள் லட்சுமி தேவி, ஆகவே அந்த பகுதியை நினைத்து தியானம் செய்கையில் பரிபூரணமான லட்சுமி கடாட்ஷம் கிட்டும் என்பதை உணர்த்துகின்றார்.
4. மன்மதனை எரித்த சிவபெருமான் அவன் எப்போது வெளி வருவான் என்று எதிர் பார்த்தபடி அவன் கீழே குதித்தவுடன், கங்கை நதியின் அமைதியான சுழல் நீரைப் போல உள்ள அன்னையின் தொப்பிளை நிலையாக பார்த்துக் கொண்டே இருக்கின்றார். அப்படி பார்த்துக் கொண்டே இருக்கும்போது அவளது தொப்பிள் அழகில் மயங்கி தன்னை மறந்து தியான நிலையில் சென்று விடுகின்றார். அவருடைய கோபங்கள் கங்கை நதியின் அமைதியான சுழல் நீரைப் போல உள்ள அன்னையின் தொப்புளில் கரைந்து அமைதியாகி விடுகின்றன. எனவே பராசக்தியின் தொப்பிள் உள்ள பகுதியை தியானித்தால் ஒருவரது மனம் அமைதியாகி விடுகின்றது.
5. அமைதி தியான நிலையின் உச்ச கட்டத்திற்கு செல்ல வழி காட்டி விடுகின்றது. தியானத்தின் உச்ச கட்டத்தை எட்டுபவன் ஞான நிலைக்கு சென்று விடுவான் என்பவை அனைத்தும் இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தமாக உள்ளது.
6. ஆகவே அன்னையின் உடலின் இந்த இடம், விழிப்புணர்வு விரைவாகப் பெற எண்ணி

தியான நிலையில் உள்ள சாதகர்களுக்கு மிக முக்கியமான இடம் ஆகும்.

7. எனவே, முன் ஸ்லோகத்தில் விளக்கி உள்ளபடி ஒரு சாதாரண மனிதனால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத மாய தத்துவ செய்திகள் நிறைந்தவை ஆதி சங்கரரின் சௌந்தர்யலஹரி ஸ்லோகங்கள் என்பது இதிலும் புரிகின்றது.

8. சௌந்தர்யலஹரியின் உண்மையான விளக்க உரைகளை நல்ல குருக்களிடம் இருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

9. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

10. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எவ்வாறான அளவில்,எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

11. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும்

நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

12. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்).

-79-

निसर्गक्षीणस्य स्तनतटभरेण क्लमजुषो
नमन्मूर्तेर्नारीतिलक शनकैस्त्रुट्यत इव ।
चिरं ते मध्यस्य त्रुटिततटिनीतीरतरुणा
समावस्थास्थेम्नो भवतु कुशलं शैलतनये ॥

நிஸர்கக்ஷீணஸ்ய ஸ்தனதடபரேண க்லமஜுஷோ
நமன்மூர்தேர்னாரீதிலக ஶனகைஸ்த்ருட்யத இவ ।
சிரம் தே மத்யஸ்ய த்ருடிததடினீதீரதருணா
ஸமாவஸ்தாஸ்தேம்னோ பவது குஶலம் ஶைலதனயே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- தந்திர, மாயா வித்தைக் கலைகளில் சிறந்து விளங்குவார்கள்; மக்கள் மனதை கவர்வார்கள்

ஹே பராசக்தி

ஆற்று கரையில் உள்ள பெரிய மரமானது ஆற்று மணல் அரிப்பால் சாய்ந்து கொண்டே இருந்தாலும், அது பூமியில் புதைந்து உள்ள நீண்ட வேரினால் உடையாமல் உறுதியாக நிற்பதை போல உனது ஸ்தனங்களின் பாரத்தினால் சற்றே சாய்ந்து காணப்படும் உன்னுடைய மெல்லிய இடை ஒடிந்து விழாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன்.

(விளக்கம்:

1. இதன் தத்துவார்த்தமான அர்த்தம் என்ன என்றால் இந்த பிரபஞ்சமே அன்னையின் உடல். வளைந்து காணப்படும் உடலின் இடுப்புப் பகுதியே பூமி ஆகும். அந்த பூமியையே கரை உடைந்த நதிக்கரையில் உள்ள ஒரு மரத்தின் நிலையைப் போன்ற ஒரு பொருளாக காட்டுகின்றார்.
2. பிரபஞ்சத்தை தாங்கி நிற்கும் பூமியானது பெருகிக் கொண்டே இருக்கும் ஜனத்தொகை, மலை, நதிகள், ஆறுகள், மரம் செடி கொடிகள், விலங்குகள் என்ற அனைத்து பாரத்தையும் தாங்க முடியாமல் போகும் நிலையில் பூமி அழிந்து விடக் கூடாதே என்ற எண்ணத்தில் பிரபஞ்சத்தின் நியதி அவ்வப்போது இயற்கை பேரழிவுகளை ஏற்படுத்தி மானிடர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அதன் மூலம் பூமியின் மீதுள்ள பாரத்தை குறைத்துக் கொண்டு வருகின்றது.
3. ஆகவே அப்படிப்பட்ட பேரழிவுகள் வராத அளவில் பூமிக்கும், மானிடர்களின் எண்ணிக்கைக்கும் ஒரு அளவுக் கோட்டை நியதி நியமித்து உள்ளது. அந்த இரண்டு

வரைமுறைகளை எடுத்துக் காட்டுவதே தராசு போல இயங்கும் அன்னையின் இரு மார்பகங்களும் ஆகும். அது ஒரு தராசைப் போல இயங்கி கொண்டு இரு பக்கத்தையும் - மானிடர்கள் மற்றும் பிற ஜீவன்கள், இயற்கை வளங்கள் என அனைத்தையும் சம நிலையில் வைத்து, பூமியே அழிந்து விடாமல் இருக்குமாறு பாதுகாத்துக் கொண்டு வருகின்றது என்பதை இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் உணர்த்தி அதற்காகவே பிரார்த்தனை செய்கின்றார்.

-80-

कुचौ सद्यःस्विद्यत्तटघटितकूर्पासभिदुरौ
कषन्तौ दोर्मूले कनककलशाभौ कलयता ।
तव त्रातुं भङ्गादलमिति वलग्नं तनुभुवा
त्रिधा नद्धं देवि त्रिवलि लवलीवल्लिभिरिव ॥

குசௌ ஸத்ய:ஸ்வித்யத்தடகடிதகூர்பாஸபிதுரௌ
கஷந்தௌ தோர்மூலே கனககலஶாபௌ கலயதா ।
தவ த்ராதும் பனகாதலமிதி வலக்னம் தனுபுவா
த்ரிதா நத்தம் தேவி த்ரிவலி லவலீவல்லிபிரிவ ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- தந்திர, மாயா ஜால வித்தைகளில் சிறந்து விளங்குவார்கள்



ஹே பரமேஸ்வரி,
நீ உன் கணவர் பரமேஸ்வரரின் பெருமைகளை நினைத்து, நினைத்து பூரிப்பு அடைவதினால், உன்னுடைய தேகம் வியர்வையில் நனைந்து போகின்றது. அப்போது விம்மும் தங்கக் கலசங்கள் போன்ற உனது ஸ்தனங்கள், உனது ரவிக்கையையும் கிழித்துக் கொண்டு இடுப்பையும் ஒடித்து விடுமோ என்ற பயத்தில், உன்னுடைய சரீரத்தை உருவாக்கிய மன்மதன், உனது இடுப்பில் மூன்று ரேகைகளை போன்று மூன்று மடிப்புக்களையும் ஏற்படுத்தி உள்ளான் என்று தோன்றுகின்றது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை கவனிக்க வேண்டும். பராசக்தி யாராலும் உருவாக்கப்படவில்லை. அவள் உருவாக்கியதே இந்த பிரபஞ்சமும் பதினான்கு லோகங்களிலும் காணப்படும் அனைத்து உயிரினங்கள், இயற்கை வளங்கள், தாவரங்கள், விலங்குகள் போன்றவை ஆகும். அது மட்டும் அல்ல அனைத்து தெய்வங்களும் அவளால்தான் படைக்கப்பட்டுள்ளனர் எனும்போது எதற்காக ஆதி சங்கரர் அவளது இடுப்பு பிரதேசத்தில் காணப்படும் மூன்று மடிப்புக்களை போன்ற சதையை மன்மதன் உருவாக்கி உள்ளான் என்று கூற வேண்டும்?
2. மன்மதன் என்றால் அழகிலும் அழகானவன் என்பது அர்த்தம். இந்த பிரபஞ்சம் உருவாகும் முன்னரே பராசக்தி என்பவள் பரமேஸ்வரனுடன் கலந்து இருந்த சதாசிவனாக இருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே. முதலில் பராசக்தி இந்த

பிரபஞ்சத்தை தான் கூறியபடி படைக்க எண்ணி தன்னிடம் இருந்து சதாசிவனை வெளியில் விடுகின்றார். அவரை ஈஸ்வரன் என்று அழைத்தார்கள்.

3. அந்த ஈஸ்வரன் வெளிப்படுத்திய மூன்று தெய்வங்களான பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்திரன் என்பவர்களில் பிரும்மா மூலம்தான் இந்த பிரபஞ்சத்தின் அனைத்தும் உருவாகியது. ஆகவே பிரும்மா கூட உருவாக்காத பரமேஸ்வரியின் உருவத்தை எப்படி மன்மதனால் இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளபடி அமைத்து இருக்க முடியும்?
4. இங்குதான் இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரரின் பார்வை என்ன என்பது தெரிகின்றது. அவர் மன்மதன், அதாவது அதி அழகன் என்று இந்த ஸ்லோகத்தில் குறிப்பிட்டு உள்ளது பரமேஸ்வரியோடு இணைந்து இருந்த சதாசிவனைத்தான். ஆகவே இது அவளால் சுயமாக உருவாக்கப்பட்டது என்பதை தெளிவுபடுத்துகிறது.
5. எதனால் மூன்று ரேகைகளை போன்ற மூன்று மடிப்புக்கள் பராசக்தியின் உடலில் உள்ளது? பராசக்தியின் உடலே இந்த பிரபஞ்சம் ஆகவே என்பது ஆதி சங்கரரின் பார்வை. அந்த மூன்று மடிப்புக்களும் பிரபஞ்சத்தில் மேல் லோகம், மத்திய லோகமான பூமி மற்றும் பூமிக்கு கீழே உள்ள கீழ் லோகம் என்பவற்றை பிரதிபலிக்கின்றது. அந்த மூன்று மடிப்புக்களும், மூன்று லோகங்களையும் தனது உடலில் அடக்கிக் கொண்டு உள்ளாள் என்பதைக் காட்டுகின்றன என்பதே இந்த ஸ்லோகத்தில் காணப்படும் ஆழமான அர்த்தம் ஆகும்.

6. பராசக்தியின் கனத்த மார்பகத்தை அவளது வயிற்றுப் பகுதி தாங்குவதால் வயிற்றுப் பகுதியின் மேல் மூன்று கொடிகள் போன்ற மடிப்புகள் காணப்படுகின்றது. அது மட்டும் அல்ல மார்பகத்தின் பாரத்தால் ஒடிந்து விடுவது போல காட்சி அளிக்கும் மெல்லிய இடைக்கு ஒட்டியாணம் போலவும் அந்த மூன்று மடிப்புக்கள் காட்சி அளிக்கின்றது.
7. இதில் உள்ள தத்துவம் என்ன என்றால் 'பராசக்தியின் மார்பகம் தாய்மையைக் குறிக்கின்றது. பிரபஞ்சத்தில் உள்ள அனைவரின் வயிற்றுக்கும் உணவளிக்கும் தாய் என்பதால், வயிறு அனைத்து ஜீவன்களும் உள்ள பிரபஞ்சத்தைக் குறிக்கிறது. இடுப்பில் அணிந்திருக்கும் ஒட்டியாணம் அவள் பிரபஞ்சத்தை எல்லாப் பக்கங்களிலிருந்தும் அணைத்துக் கொண்டிருக்கும் நிலையைக் குறிக்கிறது.'
8. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.
9. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எவ்வாறான அளவில்,எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால்

எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

10. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

11. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்).

-81-

गुरुत्वं विस्तारं क्षितिधरपतिः पार्वति निजा-
न्नितम्बादाच्छिद्य त्वयि हरणरूपेण निदधे ।
अतस्ते विस्तीर्णो गुरुरयमशेषां वसुमतीं
नितम्बप्राग्भारः स्थगयति लघुत्वं नयति च ॥

குருத்வம் விஸ்தாரம் க்ஷிதிதரபதி: பார்வதி நிஜா-
ந்னிதம்பாதாச்சித்ய த்வயி ஹரணரூபேண நிததே ।
அதஸ்தே விஸ்தீர்ணோ குருரயமஶேஷாம் வஸுமதீம்
நிதம்பப்ராக்பார: ஸ்தகயதி லகுத்வம் நயதி ச ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 16 நாட்கள் பாராயணம் செய்தால் -- நெருப்பின் மீது நீந்தும் வகையிலான சக்தியை பெறலாம்

ஹே பராசக்தி உன்னுடைய பின் பாகமானது பிரும்மாண்டமாகவும், பக்கவாட்டில் அகலமாகவும் உள்ளதினால், அது இந்த பூமியையே மறைப்பது போல உள்ளது. அது உனது தந்தையான ஹிமாயவன் உனக்கு ஹிமய மலையின் அடிவாரத்தில் இருந்து வெட்டி எடுத்து அளித்த சீர் வரிசை போன்ற அளவில் காணப்படுகின்றது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் கூறி உள்ளது என்ன என்றால்,' நாம் அனைவருமே இந்த உலகம் மிக, மிகப் பெரியது என்று நினைத்துக் கொண்டு உள்ளோம், ஆனால் அதுவே அன்னையின் இடுப்புப் பகுதியால் மறைக்கப்பட்டு விடுகின்றது என்றால் பராசக்தி இந்த உலகை விட எத்தனை பெரிய அளவிலான உருவம் கொண்டு இருந்திருக்க வேண்டும்'.
2. அப்படி என்றால் மறைக்கப்படும் அதே உலகில் நின்று கொண்டு அன்னையை வர்ணிக்கும் ஆதி சங்கரரும் அல்லவா அன்னையின் முழு உருவையும் பார்க்க முடியாமல், அங்கம் அங்கமாக வர்ணிக்க முடியாமல் இருந்திருப்பார்.
3. ஆகவே இந்த ஸ்லோகத்தின் கருத்தை மேலோட்டமாக பார்க்கக் கூடாது, இதில் அடங்கி உள்ள தத்துவத்தை மட்டுமே பார்க்க வேண்டும். 'அன்னையின் பின்புறம் பூமியை மறைக்கின்றது என்றால் இந்த உலகமே அவளுக்குள் அடங்கி உள்ளது, உலகமே பராசக்தியாக காட்சி அளிக்கின்றது என்பதே

இதன் அர்த்தம் ஆகும்'. ஆதி சங்கரர் அன்னையின் ஒவ்வொரு அங்கங்களும் எப்படி இந்த உலகை பிரதிபலிக்கின்றது என்பதாகவே ஒவ்வொரு ஸ்லோகத்தின் மூலமும் விளக்கி உள்ளார்).

-82-

करीन्द्राणां शुण्डान् कनककदलीकाण्डपटली-
मुभाभ्यामूरुभ्यामुभयमपि निर्जित्य भवती ।
सुवृत्ताभ्यां पत्युः प्रणतिकठिनाभ्यां गिरिसुते
विजिग्ये जानुभ्यां विबुधकरिकुम्भद्वयमसि ॥

கரீந்த்ராணாம் ஶுண்டான் கனககதலீகாண்டபடலீ-
முபாப்யாமூருப்யாமுபயமபி நிர்ஜித்ய பவதீ ।
ஸுவ்ருத்தாப்யாம் பத்யு: ப்ரணதிகடினாப்யாம் கிரிஸுதே
விதிஜ்ஞ்யே ஜானுப்யாம் விபுதகரிகும்பத்வயமஸி ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 16 நாட்கள் பாராயணம் செய்தால் -- நீரில் மிதக்கும் வகையிலான சக்தியை பெறலாம்



ஹே பராசக்தி,
உனது தொடைகள் இரண்டும் யானைகளின் துதிக்கைகள் மற்றும் பளபளக்கும் வாழைத் தண்டுகளை விட அதிக அழகுடன் உள்ளன. நீ அடிக்கடி உனது கணவனை வணங்கித் துதித்தாலும் உனது முழங்கால் முட்டி எந்த பாதிப்பிற்கும் உள்ளாகாமல் ஐராவத யானையின் இரண்டு கும்பங்களுக்கும் மேலான அளவில் வலுவாக உள்ளன.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியின் தொடைகள் மற்றும் முன் கால்களின் மேன்மையை புகழ்ந்து உள்ளார். அவர் கூறுகின்றார் 'ஓ, பராசக்தி, யானையின் மென்மையான தும்பிக்கைகள் மற்றும் தங்கம் போல மின்னும் வாழை மர தண்டுகள் உங்கள் அழகான தொடைகளுக்கு எந்த வகையிலும் இணை ஆகாது என்பதை நீங்கள் ஆழமாக நிரூபித்துள்ளீர்கள். உங்கள் கணவரின் காலடியில் நீங்கள் மீண்டும் மீண்டும் விழுந்து வணங்கினாலும், உங்கள் மென்மையான கால் முட்டி இன்னும் அதன் வலுவான தன்மையை இழக்காமல் உள்ளது என்பதின் மூலம் , உங்கள் கால் முட்டியானது தெய்வீக யானை ஐராவதத்தின் கடினமான முன் கோளங்களை (தலையின் மேல் பகுதி) விட சிறப்பானவை, வலுவானவை என்பது அர்த்தம் ஆகின்றது.
2. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் மறைமுகமாக சில அறிவுரைகளை வீட்டில் உள்ள ஸ்திரீகளுக்கு தெரிவித்து உள்ளார்.

3. அவர் கூறி உள்ளது என்ன என்றால் ‘எந்த நிலையிலும் கணவனே கண்கண்ட தெய்வம் என்பதே திருமணம் ஆன ஸ்த்ரீகள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் ஆகும். அதனால்தான் பராசக்தியே ஆனாலும் தனது கணவரான பரமேஸ்வரருக்கு முட்டிக் கால் போட்டு அடிக்கடி நமஸ்கரிக்கின்றார்.

4. இந்த ஜகத்தை படைத்த பராசக்தி எப்படி சிவபெருமானுக்கு முட்டிக் கால் போட்டு நமஸ்காரம் செய்தாள் என்ற எண்ணம் வரக் கூடாது. பராசக்தி சிவபெருமானுக்கு நமஸ்காரம் செய்யவில்லை. தன்னுடைய கணவனுக்குத்தான் நமஸ்காரம் செய்து உள்ளாள். ஆகவே திருமணம் ஆன எந்த பெண்ணுக்கும் அவளுடைய கணவனே முதல் தெய்வம் என்பதை மனதில் ஆழமாகக் கொள்ள வேண்டும்.

5. சௌந்தர்யலஹரியின் பல ஸ்லோகங்கள் தேவியின் அங்க அழகை விவரமாக விவரித்து உள்ளன. அவை வெளிப் பார்வைக்கு விரசமாக தோற்றம் அளிக்கலாம். ஆனால் அதை படிக்கும் உண்மையான பக்தர்கள், தனது தாயார் ஸ்தானத்தில் உள்ள அன்னை சாமுத்ரிகா லஷணத்தை பிரதிபலிக்கின்றாள் என்பதை உணர்வார்களே தவிர அன்னையின் அழகை வேறு கோணத்தில் பார்க்க மாட்டார்கள்.

6. சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒருவரின் உடல் அமைப்புகளை பற்றி கூறும் சாஸ்திரம் ஆகும். ஆண்கள் மற்றும் பெண்களுடைய உடலின் ஒவ்வொரு பகுதியும். எவ்வாறான அளவில்,எந்த கோணத்தில்,இருக்க வேண்டும் என்பது பற்றி அகஸ்திய முனிவரால்

எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும் சிலைகளை செதுக்கும் சிறப்பிகளும் மற்றும் சிற்பங்களை வரையும் கலைஞர்களும் அந்த அளவீடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

7. ஆதி சங்கரர் ஒரு பரிசுத்தமான யோகி. அவர் தியான நிலையில் இருந்தபோது பராசக்தியையும் பரமேஸ்வரரையும் நேரடியாக பார்த்தபோது, அவர்கள் எப்படி அவருக்கு தோற்றம் அளித்தார்களோ அவற்றைத்தான் ஸ்லோகங்களில் விளக்கிக் கூறி உள்ளார்.

8. பராசக்தி இந்த ஜகத்திற்கே தாயார் என்பதினால், ஒரு பிறந்த குழந்தை தனது தாயாரின் அழகை அதன் மனதிற்குள்ளேயே, அது என்ன என்று தெரியாமல் ரசிப்பதை போலவேதான் ஆதி சங்கரரும் அன்னையின் உருவத்தை ஒரு குழந்தையாக இருந்தவாறு விளக்கி உள்ளார்).

-83-

पराजेतुं रुद्रं द्विगुणशरगर्भौ गिरिसुते
निषङ्गौ जङ्घे ते विषमविशिखो बाढमकृत ।
यदग्रे दृश्यन्ते दशशरफलाः पादयुगली-
नखाग्रच्छद्मानः सुरमकुटशाणैकनिशिताः ॥

பராஜேதும் ருத்ரம் த்விகுணஶரகர்பௌ கிரிஸுதே
நிஷனகௌ ஜனகே தே விஷமவிஶிகோ பாடமக்ருத ।
யதக்ரே த்ருஶ்யந்தே தஶஶரபலா: பாதயுகலீ-
நகாக்ரச்சத்மான: ஸுரமகுடஶாணைகனிஶிதா: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 12 நாட்கள் பாராயணம் செய்தால் -- முழு இராணுவத்தையும் அடக்கி வைத்திருக்கும் அளவிலான சக்தியைப் பெறுவார்கள்.

ॐ
ह्रीं
ॐ

ஹே பராசக்தி
உனது கூர்மையான நகங்களை வெளிப்படுத்தும் கணுக் கால்கள், பரமேஸ்வரரை வெற்றி கொள்ள (தவத்தைக் கலைக்க) மன்மதன் வைத்திருந்த அம்புக் கூட்டில் (அம்பு வைக்கும் கூடு) காணப்படும் அம்பு போன்று உள்ளது. பரமேஸ்வரரை வெற்றி கொள்ள தன்னுடைய ஐந்து அம்புகளும் போதாமல், தேவர்கள் வணங்கும் போது அவர்கள் தலையில் இருந்த கிரீடத்தினால் கூர்மையாக சாணை தீட்டப்பட்டதை போல ஆகி விடும் உனது பத்து கணுக்கால் விரல் நகங்களை பத்து அம்புகளாக பாவித்துக் கொண்டான் போல உள்ளது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியின் கால் விரல்களில் உள்ள நகங்களின் அழகு எப்படி சிவபெருமானை ஆட்கொண்டுள்ளது என்பதை வர்ணிக்கிறார். ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளார். 'ஓ பராசக்தி, மன்மதன் சிவனின் தவத்தைத் அழிக்கும் விதத்திலான செயலை எப்படிச் செய்வது என்ற குழப்பத்தில் இருந்தபோது திடீரென்று உன் முழங்காலுக்கு கீழே உள்ள கால்களை பார்த்தார், அதன் தோற்றம் அவருக்கு சிக்கலை உடைக்க ஒரு தீர்வை தந்தது; உன் 'முழங்காலுடன் சேர்ந்த கால் நகங்களைப்' போன்ற அம்புகளைத் தயார் செய்தார்; பூக்களால் ஆன அம்புகளை ஒதுக்கி வைத்தார்; அன்பையும் காம உணர்வையும் கொண்ட முழங்காலுடன் சேர்ந்த கால் நகங்களைப் போன்ற வடிவ அம்புகளை எய்தார்; அந்த அம்பு சிவனின்

உறுதியை தகர்த்து உன்னுடன் இணைய வழி வகுத்தது; சிவன் முதலில் அது உன் முழங்கால் என்று நினைத்தார்; அடுத்த நொடி மன்மதன் மீது கோபமடைந்து அவனை எரித்தார்; ஆனால் உன் வேண்டுகோளின் பேரில் அவனை உயிர்ப்பித்தார்'.

2. இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் என்ன என்றால் 'முதலில் என்ன செய்தும் சிவபெருமானின் தவத்தைக் கலைக்க முடியாமல் என்ன செய்வது எனக் குழம்பிய மன்மதன், பராசக்தியின் கணுக்கால் விரல்களை ஒரு கணம் நோக்கிய வண்ணம் யோசனையில் இருந்தபோது, பராசக்தியின் கணுக்கால் விரல் நகத்தின் அழகு பரமேஸ்வரரை அவள் மீதான மோகத்தில் வீழ்த்தி விடும் என்ற உண்மையை புரிந்து கொண்டு விடுகின்றான்.

3. ஆகவே பராசக்தியின் முழங்காலுடன் சேர்ந்த கூர்மையான நகங்களுடன் கூடிய கணுக்கால் விரல் போல தன்னிடம் உள்ள காதல் அம்பை செய்தான்; அந்த மலர் அம்பை சிவபெருமான் மீது வீசினான்; அவர் தவம் கலைந்து ஒரு க்ஷணம் பராசக்தியை பார்க்க அவள் மீது பெரும் ஆசை கொண்டு விடுகின்றார். அடுத்த க்ஷணம் தன் தவத்தை கலைத்து விட்டானே என்ற கோபத்தில் மன்மதனையும் மூன்றாவது கண்ணை திறந்து பார்த்து எரித்து விடுகின்றார் என்றாலும் பராசக்தியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனுக்கு மீண்டும் உயிர் தருகின்றார்'.

-84-

श्रुतीनां मूर्धानो दधति तव यौ शेखरतया
ममाप्येतौ मातः शिरसि दयया धेहि चरणौ ।
ययोः पाद्यं पाथः पशुपतिजटाजूटतटिनी
ययोर्लाक्षालक्ष्मीररुणहरिचूडामणिरुचिः ॥

**ஶ்ருதீநாம் மூர்தானோ தததி தவ யௌ ஶேகரதயா
மமாப்யேதௌ மாத: ஶிரஸி தயயா தேஹி சரணௌ ।
யயோ: பாத்யம் பாத: பஶுபதிஜடாஜூடதடினீ
யயோர்லாக்ஷாலக்ஷ்மீரருணஹரிசூடாமணிருசி: ॥**

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 365 நாட்கள் பாராயணம் செய்தால் -- கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை சித்தி ஆகும்



ஹே பராசக்தி
உனது புனிதமான கால்களை என் தலை மீது வைத்து அருள் புரிய வேண்டுகின்றேன். ஏன் எனில் உனது கால்களை பூக்களாக வேதங்களின் சிகரமான உபநிஷத்துக்கள் தலையில் சூடிக் கொள்கின்றன; சிவபெருமானின் தலையில் இருந்து பாயும் கங்கை நீர் உனது பாதத்தை புனிதமாக்குகின்றது; விஷ்ணுவின் தலை கிரீடத்தில் உள்ள சிந்தாமணியில் இருந்து விழும் ஒளி உனது பாதங்களை சிவப்பு நிறத்தில் ஜொலிக்க வைக்கின்றன.

(விளக்கம்:

1. ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் கூறி உள்ளார் 'ஓ பராசக்தியே, வேதங்களும் உபநிடதங்களும் உன் பாதங்களை தாம் தலையில் சூட்டிக் கொள்ளும் பூக்களைப் போலக் கருதி உன்னை போற்றி வணங்குகின்றன; சிவனின் ஜடா முடியிலிருந்து வெளி வந்து விழும் கங்கை நீர் உன் பாதங்களுக்கு அபிஷேகம் செய்கின்றது; விஷ்ணுவின் கிரீடத்தின் மீது பதிக்கப்பட்ட ரத்தினங்கள் உன் பாதங்களில் ஒளிக் கதிர்களை வீசுகின்றன. அப்போது உனது பாதங்கள் சிவப்பாகத் தெரிகின்றன; ஓ, தேவியே, அத்தகைய மேன்மையான உனது பாதங்கள் என் தலை மீது வைக்கப்பட்டு என்னைப் புனிதப்படுத்தட்டும்'.
2. இந்த ஸ்லோகத்தின் மூலம் பராசக்தியை சிவன், விஷ்ணு மற்றும் உபநிடதங்கள் உட்பட அனைவரும் வழிபடுவதாக தெரிகின்றது. சிவபெருமானின் ஜடாமுடியிலிருந்து கீழே பாயும் கங்கை நீர் பராசக்தியின் புனித

பாதங்களைச் சுத்தப்படுத்துகிறது என்பதையும் இது குறிக்கிறது.

3. பொதுவாக, சிவனின் ஜடாமுடியிலிருந்து கீழே பாயும் கங்கை நீர் பராசக்தியின் பாதங்களில் விழுவதில்லை, ஆனால் சிவன் தனது தலையை அவள் பாதங்களுக்கு அருகில் வைத்து மரியாதை செலுத்தும் போதெல்லாம் கங்கை நீர் அவள் பாதங்களில் பாய்கிறது. அந்த நேரத்தில் அன்னையின் பாதங்களில் பாயும் கங்கை நீர் பராசக்தியின் பாதங்களை தொட்டு நமஸ்கரிப்பதை போல உள்ளது என்று எண்ணுகின்றதாம்.

4. 'பாத பிரக்ஷணம்' என்ற சடங்கின் கணவர் மனைவிக்கு நமஸ்கரிப்பார்கள். இந்த சடங்கு தெய்வங்களுக்கு மட்டுமே உண்டு. அந்த சடங்கின்போது அனைத்து தெய்வங்களும்-அவர்கள் பிரதான தெய்வங்களாக இருந்தாலும் சரி, தேவர்கள் மற்றும் பிற தெய்வ கணங்களாக இருந்தாலும் சரி, அனைவரும் பராசக்தியின் முன் விழுந்து மரியாதை செலுத்துகிறார்கள். அப்போது அவர்களின் தலைகள் அவளுடைய பாதங்களைத் தொடுகின்றன.

5. மேலும், தெய்வ, தேவதைகளும் மற்றும் அவர்களது கணவர்களும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது, தேவிக்கு 'பிராணய கோபம்' என்று அழைக்கப்படும் தற்காலிக கோபம் வரும். அந்த கோபத்தை அடக்க, தேவியின் துணைவர் அவள் முன் விழுந்து நமஸ்கரித்து அவளது கோபத்தைத் தணிப்பார்களாம். இரண்டு சடங்குகளும் கணவர்களை இழிவுபடுத்துவதற்காக நடப்பவை அல்ல, ஆனால் அவை

ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் இணைக்கும் நிலை என்று அழைக்கப்படுகின்றன.

6. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியிடம் 'தனது தலையின் மேல் அவளது கால்களை வைத்து, அருள் புரியுமாறும், அதன் மூலம் தனக்கு உடனடியாக முழுமையான விடுதலை கிடைக்கும், என்பதாகவும் கெஞ்சுகிறார்.

-85-

नमोवाकं ब्रूमो नयनरमणीयाय पदयो-
स्तवास्मै द्वन्द्वाय स्फुटरुचिरसालक्तकवते ।
असूयत्यत्यन्तं यदभिहननाय स्पृहयते
पशूनामीशानः प्रमदवनकङ्केलितरवे ॥

நமோவாகம் ப்ரூமோ நயனரமணீயாய பதயோ-
ஸ்தவாஸ்மை த்வந்த்வாய ஸ்புடருசிரஸாலக்தகவதே ।
அஸூயத்யத்யந்தம் யதபிஹனநாய ஸ்ப்ருஹயதே
பஶூனாமீஶான: ப்ரமதவனகனகேலிதரவே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 12 நாட்கள் பாராயணம் செய்தால் -- பூதங்கள் மீதான பயம் நீங்கும்

ஹே பராசக்தி,
நீ நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, கண்களுக்கு ஆனந்தத்தை தருவதாகவும், பிரகாசமாகவும், ஈரத்துடன் உள்ள மருதாணி போடப்பட்டு இருந்த உனது அழகிய பாதங்களினால் அசோக மரங்களை எட்டி உதைக்கின்றாய். அதை பார்க்கும் பரமசிவனோ, அந்த அசோக மரங்கள் மீதே பொறாமை கொள்கின்றார். உனது பாதங்கள் தன் மீது மட்டுமே பட வேண்டும் என்று ஆசை கொள்கின்றார். அப்படிப்பட்ட புனிதமான அந்த பாதங்களை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம்.

(விளக்கம்:

1. சில புராணத்தில், 'ஒரு மரம் கனி கொடுக்க வேண்டும் என்றால் ஒரு பெண் அதை உதைக்க வேண்டும்' என்று கூறப்பட்டு உள்ளதாக படித்தேன்.
2. அசோக மரங்கள் பராசக்தியினால் படைக்கப்பட்டவைதான். தாவரங்களுக்கும், செடி கொடிகளுக்கும் மனிதர்களைப் போலவே சொந்த வாழ்க்கை மற்றும் உணர்வுகள் குறித்த சிந்தனைகள் கொண்டு உள்ளன என்பதாக ஆன்மீகப் பெரியோர்கள் கூறுவது உண்டு. அவற்றின் உணர்ச்சிகளும், உணர்வுகளும் நமது கண்ணுக்குத் புலப்படாதவைகள் மற்றும் நம்மால் கேட்க முடியாதவை, மானிடர்களினால் புரிந்து கொள்ள முடியாத வகையில் இருக்குமாம்.
3. சில தெய்வங்கள், மரங்கள் மற்றும் விலங்குகளின் அல்லது ஜடப் பொருள்களின் பிரார்த்தனைகளை கூட தெய்வங்கள் ஏற்றுக் கொண்டு, அவற்றுக்கு அருள் புரிந்து,

அவற்றின் உண்மையான தோற்றத்தைக் கொடுத்த கதைகள் நம் புராணங்களிலும் பிற நூல்களிலும் உள்ளன. அவற்றுக்கு சாப விமோசனம் அளித்து அடுத்த பிறவியில் மானிடப் பிறவியில் பிறக்கவும் அருள் புரிந்துள்ளார்கள்.

4. இந்தச் சூழலில், கடந்த கால பாபங்களின் விளைவாக மரங்களாக்கி இருந்த அசோக மரங்களின் பிரார்த்தனைகளை ஏற்று அந்த மரங்களுக்கு சாப விமோசனம் அளிக்க பராசக்தி அவற்றை உதைத்து இருக்கலாம். சில செயல்களை குறிப்பிட்ட காரணங்களுக்காக சில முறைகளில்தான்- கால்களால் உதைப்பது போன்ற செயல்கள் மூலம், அகலிகை ராமபிரானின் கால்களால் உதைக்கப்பட்டு சாப விமோசனம் பெற்ற கதையைப் போல - தெய்வங்கள் செய்கின்றன என்பதை புராணங்களில் நாம் படித்து உள்ளோம்.

5. சிவபெருமானின் பொறாமை என்பது முற்றிலும் தத்துவார்த்தமானது. இந்த பிரபஞ்சத்தையே படைத்தவள் பராசக்தி, ஆகவே அந்த மரங்களும் அவள் படைத்தவைகளே எனும்போது அவற்றை அவள் உதைப்பதை பார்த்து சிவபெருமான் ஏன் பொறாமைப் படவேண்டும்?

6. சிவபெருமானும் உலக நன்மைக்காக சில செயல்களை செய்யும்போது அவருக்கும் சில பாவங்கள் ஏற்படுகின்றன; இதற்கு ஒரு சிறந்த உதாரணம் பைரவராக இருந்தபோது, பிரம்மாவின் தலையை வெட்டி எறிந்த சிவபெருமான் பிரும்மஹத்தி தோஷத்தை அடைந்தார். அந்த தோஷத்திலிருந்து விடுபட

அவர் காசிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு காசி விசாலாக்ஷி ஆட்சி செய்கிறார்.

7. எனவே, பல்வேறு காரணங்களுக்காக தனக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய பல தோஷங்களிலிருந்து விடுபட பராசக்தி தன்னை முதலில் உதைக்க வேண்டும் என்று சிவபெருமானும் எதிர்பார்த்துக் காத்திருந்து இருக்கலாம்.
8. சிவபெருமான் நிலையான சக்தி உள்ளவர், பராசக்தியோ இயக்க ஆற்றல் சக்தி கொண்டவள். எனவே, சிவபெருமான் மனித குலத்தின் நன்மைக்காக ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் எனில் அவரது துணைவி பராசக்தியின் சக்தி வேண்டும்.
9. ஆகவே இங்கே அவளுடைய பாதத்தினால் உதைபடுவது என்பதை 'தூண்டுதல்' என்ற வடிவத்தில் பார்க்க வேண்டும். பராசக்தி துணை இன்றி சிவ பெருமானால் ஒரு விரலைக் கூட இயக்க முடியாது என்று கூறப்படுகிறது. எனவே, பராசக்தி எப்போதுமே தன்னுடன் இருந்தவாறு தனது சக்தியை தூண்டிக் கொண்டே இருந்தால்தான் தன்னால் மனித குலம் மற்றும் பிரபஞ்சத்தின் நன்மைக்காக எதையாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று சிவபெருமான் நினைப்பது தவறா?

-86-

मृषा कृत्वा गोत्रस्खलनमथ वैलक्ष्यनमितं
ललाटे भर्तारं चरणकमले ताडयति ते ।
चिरादन्तःशल्यं दहनकृतमुन्मूलितवता
तुलाकोटिक्वाणैः किलिकिलितमीशानरिपुणा ॥

ம்ருஷா க்ருத்வா கோத்ரஸ்கலனமத
வைலக்ஷ்யனமிதம்
லலாடே பர்தாரம் சரணகமலே தாடயதி தே ।
சிராதந்த:ஶல்யம் தஹனக்ருதமுன்மூலிதவதா
துலாகோடிக்வாணை: கிலிகிலிதமீஶானரிபுணா ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 21 நாட்கள் பாராயணம் செய்தால்
அனைத்து வித பேய் மற்றும் பிசாசுகளின் மீதான பயம் நீங்கும்

यं
यं
यं

ஹே பராசக்தி
ஒருமுறை உனது கணவரான பரமேஸ்வரர் விளையாட்டாக உன்னை வேறு ஒரு பெண்ணின் பெயரைக் கூறி அழைக்க, அதனால் நீ கோபம் அடைய, உன் அருகில் வந்தவர், வெட்கப்பட்டு தனது தலையை குனிந்து கொண்ட போது, ஆசனத்தில் அமர்ந்து இருந்தவள் கோபத்துடன் அவரை தள்ளி விட்டு எழுந்தபோது தாமரை மலர் போன்ற உனது பாதம் அவர் நெற்றி மீது பட்டு விட, அதனால் உன் காலில் இருந்த சிலம்பு கணகணவென ஒலியை எழுப்ப, தன்னை எரித்து விட்ட சிவபெருமான் மீது பகை கொண்டு இருந்த மன்மதன், உனது சலங்கை ஒலியின் சப்தம் தனது வெற்றி முழக்கம் போல நினைத்து மகிழ்ந்தான்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் இப்படியாகக் கூறி உள்ளார் 'ஓ பராசக்தி நீ தனிமையில் இருக்கையில் உன்னை சீண்டும் விதமாக உனது கணவர் தனக்கு இன்னொரு மனைவி உள்ளதை போல வேறு பெயரைக் கூறி உன்னை அழைத்தபோது நீ கோபமுற்றாய். அப்போது உன் கை கால்களை நீ உதறிக் கொண்டே எழுந்து அவரை தள்ளிய போது, தவறுதலாக உனது பாதம் அவரது நெற்றிக் கண்ணில் பட்டுவிட்டது. அப்போது உன்னுடைய காலில் கட்டி இருந்த சலங்கை கலகலவென ஒலியை எழுப்பியது. அந்த காட்சியைக் கண்ட மன்மதன், தன்னை எரித்த சிவபெருமானின் மூன்றாவது கண் அவமானப்பட்டு விட்டதை போல எண்ணி தானும் அந்த சப்தத்துடன் சேர்த்து சிரித்து

தனது மனதில் சிவபெருமான் மீது இருந்த கோபத்தை அழித்துக் கொண்டான்'

2. ஆதி சங்கரரின் இந்த ஸ்லோகத்தை, இதற்கு முன் உள்ள ஸ்லோகத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டும். அசோக மரத்தை பராசக்தி உதைத்ததைக் கண்டு பொறாமை அடைந்த பரமேஸ்வரர் அந்த பாதம் தன்னையும் உதைக்காதா என்ற சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். ஒருநாள் வேண்டும் என்றே பராசக்தியின் பெயரை வேறு பெயராக உச்சரிக்க, தான் இருக்க இன்னொரு பெண்ணுடன் அவருக்கு பிரேமையா என்று பராசக்தி கோபம் அடைகிறாள்.

3. இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டு உள்ள 'கோத்ரஸ்கலனம்' (**गोत्रस्खलनम**) என்பது கணவன் மனைவிகளிடையே உள்ள அந்தரங்கமான விளையாட்டு ஆகும். மனைவியை வேண்டும் என்றே வேறு பெயரில் அழைப்பது, அவளது பிறந்த வீட்டைக் குறித்து வேண்டும் என்றே எதையாவது குறை கூறுவது என்றெல்லாம் செய்து அவளை சீண்டி அவள் கோபத்தைக் கிளறுவது. மனைவியிடம் தனக்கு உள்ள பிரேமையை வெளிப்படுத்தும் ஒரு வகையிலான விளையாட்டு; பிறகு அவளை சமாதானம் செய்து தன்னோடு அணைத்துக் கொள்வது போன்ற காம ரசத்திலான விளையாட்டு என்பார்கள். அவள் அருகில் அமர்ந்து இருந்த பரமேஸ்வரர் எதை எதிர்பார்த்தாரோ அதுவே நடப்பதை கண்டு தன்னை அறியாமல் நாணமுற்று தனது தலையை குனிந்து கொண்டபோது, கை கால்களை உதறிக் கொண்டே எழுந்து அவரை தள்ளிய போது பராசக்தியின் பாதங்கள் அவர்

நெற்றியில் இருந்த மூன்றாம் கண்ணின் மீது மீது பட்டுவிட்டது. அப்போது அவளது காலில் கட்டி இருந்த சலங்கை ஒலி கலகலவென சப்தம் போட்டது.

4. அந்த சப்தத்தைக் கேட்ட மன்மதனோ தன்னை எரித்த சிவபெருமான் அவமானம் அடைந்து விட்டார் என்ற எண்ணத்தில் சலங்கை ஒலி சப்தத்துடன் தானும் சேர்ந்து தானும் சிரித்தான். அவனது சிரிப்போ சலங்கை ஒலியின் ஓசையோடு கலந்து விட்டதினால் யாருக்கும் சந்தேகம் எழவில்லை. இப்படியாக மனமதனுக்கும் சிவபெருமான் மீது இருந்த கோபம் அழிந்தது.

5. இந்த ஸ்லோகத்தின் அர்த்தம் மேலே உள்ள விளக்கத்தைக் கொண்டதுதான் என்பது மேலோட்டமாக பார்த்தால் தெரியும். ஆனால் அதில் மறைந்து உள்ள தத்துவம் தெரியாது. சிவபெருமான் இன்றி பராசக்தி இல்லை, பராசக்தி இன்றி சிவபெருமான் இல்லை. அவர்கள் ஒன்றாக இருக்கும்போது மட்டுமே இந்த பிரபஞ்சத்தில் உயிர்களின் இயக்கம் உள்ளது என்பதை சலங்கை ஒலியின் சப்தம் மூலமும், மன்மதனின் சிரிப்பின் மூலமும் எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.

6. அசோக மரங்களின் மீது பட்ட பராசக்தியின் பாதங்கள் தன் மீது படவில்லையே என்று சிவபெருமானின் மனதில் இருள் சூழ்ந்த ஏக்கம் தோன்றுகின்றது. பரமேஸ்வரர் அவளை சீண்டும் விதமாக வேறு பெயரில் அழைக்கும்போது அதே போன்ற ஏக்கம் பராசக்தியின் மனதிலும் தோன்றுகின்றது.

7. ஆகவே இருவரின் ஏக்கமும் உலகம் இருளை நோக்கிச் செல்லும் நிலையைக் குறிக்க, இந்த பிரபஞ்சமே துயரில் ஆழ்ந்து விடுமோ

(கலிகாலம் உடனடியாக தோன்றி விடுமோ) என்று எண்ணும் மன்மதன், தவறுதலாக பராசக்தியின் கால்கள் சிவபெருமானின் நெற்றியில் பட்டபோது வேண்டும் என்றே அவளது காலில் இருந்த கொலுசை தட்டி ஓசையிட வைத்து, தானும் சேர்ந்து அதோடு சிரித்தபோது, கொலுசின் ஓசையோடு, அவன் அவர்களுக்காக தனது சிரிப்பின் மூலம் வெளிப்படுத்திய காம உணர்வினால் பரமேஸ்வரரும் பராசக்தியும், 'அனைவர் முன் நிலையிலும் நாம் இருவரும் சின்ன குழந்தையைப் போல நடந்து கொண்டு விட்டோமே' என்று வெட்கமுற்று கலகலவென சிரித்தபடி ஒருவருடன் ஒருவர் மீண்டும் ஒன்றிணைகின்றார்கள்.

8. அவர்கள் இருவரும் இணைந்த நிலையைக் காட்டுவதே சலங்கை ஒலியின் சப்தமும் மன்மதனின் சிரிப்பும் ஒன்றாக இணைந்து வெளிப்படுத்திய நிலை. அவர்கள் மீண்டும் இணைந்தவுடன் உலகை சூழ இருந்த இருள் விலகி மீண்டும் பிரகாசம் தோன்றுகின்றது. இதுவே இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் ஆகும்)

-87-

हिमानीहन्तव्यं हिमगिरिनिवासैकचतुरौ
निशायां निद्राणं निशि चरमभागे च विशदौ ।
वरं लक्ष्मीपात्रं श्रियमतिसृजन्तौ समयिनां
सरोजं त्वत्पादौ जननि जयतश्चित्रमिह किम् ॥

ஹிமானீஹந்தவ்யம் ஹிமகிரினிவாஸைகசதுரௌ
நிஶாயாம் நித்ராணம் நிஶி சரமபாகே ச விஶதௌ ।
வரம் லக்ஷ்மீபாத்ரம் ஶ்ரியமதிஸ்ருஜந்தௌ ஸமயிநாம்
ஸரோஜம் த்வத்பாதௌ ஜனநி ஜயதஶ்சித்ரமிஹ கிம்॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 16 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்து வித பாம்புகளை அடக்கும் சக்தி கிடைக்கும்



ஹே பராசக்தி
இமயமலையில் வீற்று இருக்கும் தேவி, விடியற்காலை, பகல், சந்தியா காலம் மற்றும் இரவு என எந்த நேரமும், தாமரை மலர்களை போன்ற உனது பாதங்கள் மலர்ந்து உள்ளதை போன்றே தோற்றம் தருகின்றது. அது உன்னையே வணங்கி துதிக்கும் பக்தர்களுக்கு அழிவற்ற செல்வத்தை தருகின்றது. ஆனால் லட்சுமி தேவி வாசம் செய்யும் தாமரைப் பூவோ பனியால் உதிர்கின்றது; இரவில் மூடிக் கொள்கின்றது; காலை சூரிய ஒளி பட்டால் மட்டுமே மலர்கின்றது என்பதினால் லஷ்மி தேவி வாழும் தாமரை மலரை விட, தாமரை மலர் போன்ற உனது பாதங்கள் உயர்வானவை என்பதை கூறத்தான் வேண்டுமா?

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்திலும் ஆதி சங்கரர் பராசக்தியின் பாதங்களின் மகிமையை எடுத்துக் காட்டி உள்ளார். ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தில் இப்படியாக தத்துவார்த்தமாக தேவியின் பாதங்களை புகழ் பாடி உள்ளார் 'பராசக்தியின் பாதங்கள் நிலையானவை, அவளை ஆராதிக்கும் அனைவருக்கும் செழிப்பு தருபவை. இரவோ, பகலோ எந்த நேரத்திலும் அவை பனிபடந்த இமய மலையில் உள்ள, மலந்த தாமரைப் பூக்களைப் போலவே காட்சி தருகின்றன. அவள் பாதங்கள் உதிர்ந்து போகும் தாமரைப் பூக்களை போன்ற இதழ்களைக் போன்றவை அல்ல, அது என்றும் வாடாத, நிலையான தங்கத் தாமரைப் பூக்கள்'.
2. செல்வத்தை அள்ளித் தரும் லட்சுமி தேவி வாசம் செய்யும் இடம் தாமரைப் பூ. லட்சுமி தேவியின் வாசஸ்தலமான அந்த தாமரைப்

பூவை மட்டுமே பூஜிப்பதினால் ஒருவருக்கு செல்வப் பிராப்தி கிடைத்து விடுமா என்றால் அது கிடைக்காது, ஆனால் அதில் வசிக்கும் லட்சுமி தேவியை பிரார்த்தனை செய்தால் மட்டுமே கிடைக்கும்.

3. இரண்டாவது தாமரை மலர் நிரந்தரமானது அல்ல, அது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வாடி விடுகின்றது என்பதினால் லட்சுமி தேவி ஒரு தாமரை மலரில் இருந்து இன்னொரு தாமரை மலருக்கு தனது வாசஸ்தலத்தை மாற்றிக் கொண்டே இருக்க வேண்டி உள்ளது.
4. பனியில் தாமரை மலரின் இலைகள் கருகி விடுகின்றன, இரவில் மூடிக் கொண்டு விடுகின்றது, மாலை சூரிய உதயத்தில்தான் மலர்கின்றது என்பதை எல்லாம் பார்க்கும்போது அந்த தாமரை மலரைப் போன்ற மனத்தைக் கொண்டிராமல் நிலையான மனதுடன் லட்சுமி தேவியை வேண்டிக் கொண்டால் மட்டுமே அவளது அருள் கிடைக்கும் என்பதான மறைமுக செய்தி இதில் கூறப்பட்டு உள்ளது.
5. அதே நேரத்தில் பராசக்தியின் பாதங்களையும் தாமரை மலருக்கு ஒப்பானவை என்பதாக ஆதி சங்கரர் குறிப்பிட்டு உள்ளது தாமரை மலரைப் போன்று அழகான தோற்றத்தைத் தருபவை அன்னையின் பாதங்கள் என்பது பொருள் ஆகும். தாமரை மலரைப் போன்ற அழகிய மலர் அன்னையின் பாதங்கள் என்றாலும் அந்த பாதங்களின் அழகோ அல்லது தன்மையோ அனைத்துமே நிலையானது, எந்த சந்தர்ப்பத்திலும் அதன் அழகோ அல்லது தன்மையையோ மாறுவதில்லை என்பதின் மூலம் என்ன கூறப்பட்டு உள்ளது என்றால் உண்மையான பக்தன் எந்த நேரத்தில்

வேண்டுமானாலும் பராசக்தியை தியானித்துக் கொண்டே இருக்கலாம். அதற்கு நேரமோ காலமோ கிடையாது. அவனது மௌனமான ஆராதனையை ஏற்கும் அன்னையின் பரிபூரண அருள் அவனுக்கு நிச்சயமாக கிடைக்கும்.

-88-

पदं ते कीर्तीनां प्रपदमपदं देवि विपदां
कथं नीतं सद्भिः कठिनकमठीकर्परतुलाम् ।
कथं वा बाहुभ्यामुपयमनकाले पुरभिदा
यदादाय न्यस्तं दृषदि दयमानेन मनसा ॥

பதம் தே கீர்தீநாம் ப்ரபதமபதம் தேவி விபதாம்
கதம் நீதம் ஸத்பி: கடினகமடீகர்பரதுலாம் ।
கதம் வா பாஹுப்யாமுபயமனகாலே புரபிதா
யதாதாய ந்யஸ்தம் த்ருஷதி தயமானேன மனஸா ॥

இந்த ஸ்லோகத்தை 1008 முறை என 180 நாட்கள் பாராயணம் செய்தால் -- அனைத்து வித மிருகங்களை அடக்கும் சக்தி கிடைக்கும்



ஹே பராசக்தி
உன்னுடைய திருமணத்தின்போது கவிஞர்கள் வர்ணிக்கும் ஆமையின் ஓடு போல உள்ள அந்த பாதங்களை வணங்கி துதிக்கும் பக்தர்களை, அவர்களுக்கு நேரிடும் ஆபத்துகளில் இருந்து நீ காத்து அருள்கின்றாய். அந்த பாத நுனியை உனது கணவர் சிவபெருமான் மென்மையாக பற்றி மிக பத்திரமாக கருங் கல்லை போன்ற அம்மிக் கல்லில் எப்படி வைத்தார் என்பதும், கவிஞர்கள் எதற்காக உனது பாதங்களை ஆமையின் ஓட்டுடன் வர்ணித்தார்கள் என்பதும் தெரியவில்லையே.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் சில வித்தியாசமான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.
2. முதலாவது, மனத் தூய்மையுடன் பராசக்தியின் பாதங்களை வணங்குபவர்கள், அனைத்து ஆபத்துகள் மற்றும் பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாகப் பாதுகாக்கப்படுகிறார்கள். மானிடர்களாக பிறவி எடுத்த எந்த ஒருவருமே தமது கடந்த கால கர்ம வினைகளை கடந்துதான் செல்ல வேண்டும் என்றாலும் மனத் தூய்மையுடன் அவள் பாதங்களை வணங்கினால் அந்த கர்ம வினைப் பயன்கள் அதிக மன வேதனையை ஏற்படுத்தாது. ஆகவே பராசக்தியின் பாதங்களில் ஒருவர் முழு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்பதை மறைமுகமாக இது குறிக்கிறது.
3. இரண்டாவதாக, எதற்காக அவளுடைய பாதம் ஆமையின் ஓட்டுடன் ஒப்பிடப்பட்டு உள்ளது? எந்தவொரு ஆபத்தையும் எதிர்

கொள்ளும்போது ஆமை தனது அனைத்து உறுப்புகளையும் தனது ஓட்டின் உள்ளுக்குள் இழுத்துக் கொண்டு விடும். அதை போலவேதான் தங்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு ஒரு தீர்வைக் காண வேண்டும் என்றால், தங்கள் எண்ணங்கள் அனைத்தையும் நம்பிக்கையோடு பராசக்தியின் பாதங்களில் இணைத்து விட வேண்டும்.

4. நமக்குள்ள ஆபத்துக்களைக் கடக்க நமது முழு மனதையும் அன்னையின் பாதங்களில் செலுத்தி, அவளிடம் தீர்வு கேட்டு வழிபடுகையில், ஆமையின் ஓடுகளை போன்ற அவளுடைய பாதங்கள் வலிமையான ஒரு தீர்வை தந்து நம்மைக் காத்து அருள்கின்றது. அதே நேரத்தில் அவளுடைய அருளை நாடுபவர்கள் மனத் தூய்மையுடன் அவளது பாதங்களை ஆராதித்தால் மட்டுமே பயனையடைய முடியும். ஆமையின் கூடு எளிதில் ஊடுருவ முடியாதது. ஆமை வலிமையான மனத்தைக் கொண்ட பிராணி அவளுடைய பாதங்களும் எளிதில் ஒருவரது எண்ணங்களினால் ஊடுருவக்கூடியவை அல்ல, அதற்கு தூய்மையான மன நிலை மற்றும் அவள் மீது உறுதியான நம்பிக்கை வேண்டும்.

5. திருமணச் சடங்குகளின் போது, மணமகளின் வலது கால் நுனியை மணமகன் மெதுவாகப் பிடித்து, ஒரு கல்லின் மீது வைக்கும் ஒரு குறிப்பிட்ட சடங்கு உள்ளது. அம்மி மீது காலை வைக்கும் சடங்கின் அர்த்தம் இதுதான். 'அம்மிக் கல்லைப் போல மணமகள் மனம் கலங்காமல் உறுதியாக இருக்க வேண்டும். இல்லற வாழ்வில் அவளுக்கு ஏற்படும்

இடர்களைப் பொறுத்துச் சகித்துக் கொள்ள வேண்டும். எது வந்தாலும் மனம் குலையாமல் அனைத்தையும் மன உறுதியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்' அனைத்து உலோகத்தையும் விடக் கல் உறுதியானது, வளைக்கவோ, உருக்கவோ முடியாதது என்பதினால் இந்த பாவனைக்கு மிக உறுதியான கல்லான அம்மியை பயன்படுத்துகின்றார்கள்.

6. அந்த சடங்கை சிவபெருமான் செய்வதாக இங்கு காட்டி உள்ள ஆதி சங்கரர், அதன் மூலம் என்ன எடுத்துக் காட்டுகின்றார் என்றால் 'அன்னையின் பாதங்கள் மிருதுவானது என்றாலும் அவை ஆமையின் ஓடுகளை போலவும், அம்மிக் கல்லை போலவும் உறுதியானவை. ஆகவே பராசக்தியின் மிருதுவான பாதங்களை வழிபடுவதின் மூலம் கடினமான கற்கள் போன்ற எந்த விதமான தடைகளையும் எளிதில் கடந்து செல்ல அவளது பாதங்கள் உதவிடும்' என்பதை எடுத்துக் காட்டி உள்ளார். இந்த மூன்றுமே இந்த ஸ்லோகத்தின் உள் அர்த்தம் ஆகும்.

-89-

**नखैर्नाकस्त्रीणां करकमलसंकोचशशिभि-
स्तरूणां दिव्यानां हसत इव ते चण्डि चरणौ ।
फलानि स्वःस्थेभ्यः किसलयकराग्रेण ददतां
दरिद्रेभ्यो भद्रां श्रियमनिशमह्नाय ददतौ ॥**

**நகைர்னாகஸ்த்ரீணாம் கரகமலஸங்கோசஶஶிபி-
ஸ்தரூணாம் திவ்யாநாம் ஹஸத இவ தே சண்டி
சரணௌ ।
பலானி ஸ்வ:ஸ்தேப்ய: கிஸலயகராக்ரேண தததாம்
தரித்ரேப்யோ பத்ராம் ஶ்ரியமனிஶமஹ்னாய
தததௌ ॥**

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 30 நாட்கள் பாராயணம் செய்தால் -- நோய் நொடிகள் விலகும்



ஹே பராசக்தி
தேவலோகத்தில் உள்ள கற்பக விருட்ஷங்கள் தமது மரத்தில் உள்ள துளிர் இலைகளினால் தேவலோகத்தினர் விரும்பியதை தருகின்றன; ஆனால் நீயோ சந்திரன் போல ஒளிர் விடும் உனது பாத விரல்களினால் தேவலோகத்தினருக்கு மட்டும் அல்ல, பூமியில் வறுமையில் வாடும் அனைவருக்குமே அவர்கள் கேட்ட வரத்தை தந்து அருள் புரிகின்றாய்; தேவலோகத்தினரின் கரங்கள் தாமரை மலர்களுக்கு ஒப்பானது என்பார்கள். காலையில் சூரியனைக் கண்டால் மலரும் தாமரைப் பூ, இரவில் தோன்றும் சந்திரனைக் கண்டால் தமது இதழ்களை மூடிக் கொண்டு விடும்; அதனால்தானோ என்னவோ சந்திரனைப் போன்று ஜொலிக்கும் உனது பாத விரல்களின் நகத்தைக் கண்டால், தாமரை மலரைப் போன்ற கைகளைக் கொண்ட தேவலோகத்தினர் உன்னை வணங்குவதை போல தமது கைகளை உடனே மூடி வைத்துக் கொண்டு விடுகின்றார்கள்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்திலும் ஆதி சங்கரர் பராசக்தியின் பாதங்களில் உள்ள விரல் நகங்கள் எவ்வாறு இரவில் தோன்றும் சந்திர ஒளி போல ஜொலிக்கின்றன, எவ்வாறு எந்த பேதமும் இன்றி-ஒருவர் தேவலோகத்தில் இருந்தாலும் சரி, பூமியில் இருந்தாலும் சரி, தன்னை வேண்டி நின்றால் அவர்களுக்கு அருள் புரிவதில் தயக்கமே காட்டவில்லை என்பதாக கூறுகின்றார்.
2. தேவலோகத்தில் உள்ள கற்பக மரங்களோ தேவலோகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே

அவர்கள் விரும்பியதை கொடுக்கின்றன என்பதை சுட்டிக் காட்டி தேவலோகத்தினருக்கும் அன்னையின் கருணைக்கும் இடையிலான வித்தியாசத்தை எடுத்துக் காட்டி உள்ளார்.

3. மேலும் சந்திரனைக் கண்டால் தாமரை மலர்கள் மூடிக் கொண்டு விடும். தேவலோகத்தில் உள்ளவர்கள் கைகள் தாமரை மலருக்கு ஒப்பானவை என்றாலும் கூட அன்னையின் பாத விரல்களில் உள்ள சந்திரனைப் போல ஒளிர் விடும் நகங்களைக் கண்டால், தமது இருக் கரங்களில் எதை வைத்து இருந்தாலும் அவற்றை தூக்கி எறிந்து விட்டு, இரண்டு கரங்களையும் கூப்பியபடி அன்னையை வணங்குவார்களாம் என்பதான கருத்தை ஆதி சங்கரர் இந்த ஸ்லோகத்தின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்).

-90-

ददाने दीनेभ्यः श्रियमनिशमाशानुसदृशी-
ममन्दं सौन्दर्यप्रकरमकरन्दम् विकिरति ।
तवास्मिन् मन्दारस्तबकसुभगे यातु चरणे
निमज्जन्मज्जीवः करणचरणः षट्चरणताम् ॥

ததானே தீனேப்ய: ஶ்ரியமனிஶமாஶானுஸத்ருஶீ-
மமந்தம் ஸௌந்தர்யப்ரகரமகரந்தம் விகிரதி ।
தவாஸ்மின் மந்தாரஸ்தபகஸுபகே யாது சரணே
நிமஜ்ஜன்மஜ்ஜீவ: கரணசரண: ஷட்சரணதாம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 30 நாட்கள் பாராயணம் செய்தால் -- சூனியங்கள் வைத்திருந்ததால் அவை விலகும்

क्षां क्षां
क्षीय क्षीय
ह्रीं

ஹே பராசக்தி
உனது பாதங்கள் ஆதரவற்றவர்களின் நியாயமான தேவைகளை நிரந்தரமாக நிறைவேற்றும் திறன் கொண்டவை. தெய்வீக மலர்கள் அமிர்தத்தை சுரப்பதை போலவே, உனது பாதங்களும் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்ற அமிர்தம் போன்ற உனது அருளை வழங்கிக் கொண்டே உள்ளன. ஓ, தேவி, நான் ஆறு அம்சங்களைக் கொண்ட மானிடன் என்றாலும், நான் ஆறு கால்களைக் கொண்ட வண்டாக மாறி என் அனைத்து புலன்களுடன் உனது பாதங்களில் சரணடைய ஆசைப்படுகிறேன்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் கூறும் செய்தி மிகவும் எளிமையானது, 'பராசக்தியிடம் நிபந்தனையின்றி சரண் அடைந்தால், அவளுடைய ஆசீர்வாதங்களை நிரந்திரமாக பெறலாம்'. அவரும் அதையே செய்ய விரும்பினார்; பராசக்தியின் பாதங்களில் நிபந்தனை இன்றி சரணடைந்து அவளுடைய பாதங்களுடன் ஒன்றிணைந்து, முக்தி அடைய விரும்பினார்.
2. சாதாரண மக்களைப் போன்று வேறெந்த ஆசைகளும் அவருக்கு இல்லை, உலகின் எந்த தேவைகளுமே இல்லாதவர். சொந்த பந்தங்கள் இல்லை. காரணம் அவர் முற்றும் துறந்த முனிவர். ஆறு கால்களைக் கொண்ட வண்டுகள் உண்ண மலர்கள் எப்படி அமிர்தத்தை சுரந்து கொண்டே உள்ளனவோ, அதே போன்றே பராசக்தியின் பாதங்களும் அமிர்தம் போன்ற அருளை தனது

பக்தர்களுக்கு அளித்துக் கொண்டே உள்ளாள் என்பதை இந்த ஸ்லோகம் கூறுகிறது.

3. எனவே, ஆதி சங்கரர் ஆறு கால் தேனீயாக மாறி, அனைத்து புலன்களுடன் அவள் பாதங்களில் சரணடைய விரும்பியதின் காரணம், அமிர்தத்தை உறிஞ்ச அல்ல, இந்த பிரபஞ்சமேயான பராசக்தியின் அங்கமான, பேரானந்த நிலையிலான அமைதியை தரும் பாதங்களில் நிலையாக ஒன்றிணைய விரும்பினார்).

-91-

पदन्यासक्रीडापरिचयमिवारब्धुमनसः
स्खलन्तस्ते खेलं भवनकलहंसा न जहति ।
अतस्तेषां शिक्षां सुभगमणिमञ्जीररणित-
च्छलादाचक्षाणं चरणकमलं चारुचरिते ॥

பதன்யாஸக்ரீடாபரிசயமிவாரப்துமனஸ:
ஸ்கலந்தஸ்தே கேலம் பவனகலஹம்ஸா ந ஜஹதி ।
அதஸ்தேஷாம் ஶிக்ஷாம் ஸுபகமணிமஞ்ஜீரரணித-
ச்சலாதாசக்ஷாணம் சரணகமலம் சாருசரிதே ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- நிலங்கள் மற்றும் செல்வங்களை பெறலாம்



ஹே பராசக்தி
உன் வீட்டு தாடகத்தில் உள்ள அன்னப் பறவைகள், உன் இரண்டு கால்களும் அடி மேல் அடியெடுத்து நடக்கும் அழகினைக் கண்டு, தானும் அதை போன்றே நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில், துள்ளித் துள்ளி நடந்து, உனது நடை அழகை பின்பற்றி நடக்க முயல்கின்றன. நீ நடக்கும் பொழுது உனது கால்களில் அணிந்துள்ள கொலுசில் பதிக்கப்பட்டு உள்ள பத்மராகக் கற்கள் எழுப்பும் ஓசையானது, அந்த அன்னப் பறவைகளுக்கு நடைப் பயிற்சியை சொல்லித் தருவது போல் அமைந்து உள்ளது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்திலும் ஆதி சங்கரர் பராசக்தியின் பாதங்களின் மகிமையைப் புகழ்ந்து உள்ளார். பொதுவாகவே பெண்களின் நடை அழகின் பாணியை அன்னப் பறவைகள் அல்லது மன்னர்களின் அழகிய யானைகள் நடக்கும் பாணியுடன் கவிஞர்கள் ஒப்பிடுவது உண்டு. இருப்பினும், இந்த ஸ்லோகத்தில், ஆதி சங்கரர் அந்த கருத்தை மாற்றி அமைத்து உள்ளார். 'பராசக்தியின் தோட்டதில் உள்ள அன்னப் பறவைகள், பராசக்தியைப் போல தாமும் அழகாக நடக்க விரும்பி, அவள் ஒவ்வொரு முறையும் அவளது தோட்டத்தைச் சுற்றி நடக்கும்போது, அவள் பின்னால் சென்றவாறு இருந்தவண்ணம், அவள் ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் முறையும், அவளது கால்களில் அணிந்திருக்கும் கொலுசுகள் வெளிப்படுத்தும் சப்தத்தில் கவனம் செலுத்தி, அதிலிருந்து நடையின்

பக்குவத்தை அறிந்து கொள்கின்றன' என்பதாகக் கூறி உள்ளார்.

2. இந்த விளக்கம் இந்த ஸ்லோகத்தின் எளிமையான அர்த்தமாகத் தோன்றலாம், ஆனால் இதில் அடங்கி உள்ள தத்துவார்த்தமான அர்த்தம் வேறு ஆகும். இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் என்ன கூறி உள்ளார் என்றால் 'பராசக்தியை வழிபாடு செய்பவர்கள் அல்லது அவளை தியானிப்பவர்கள் பராசக்தியின் பாதங்களில்தான் கவனம் செலுத்தி வழிபட வேண்டும். எப்படி அன்னப் பறவைகளுக்கு நடை அழகு பயிற்சிக்கான பாடங்களை அவளது பாதங்களில் அணிந்து உள்ள கொலுசுகள் மெல்ல மெல்ல வெளிப்படுத்துகின்றனவோ, அதே போலவேதான் தேவியை ஆராதிக்கும் மற்றும் தியானிக்கும் பக்தர்களுக்கும், தேவி அருள் மழையை மெல்ல மெல்ல அவளது பாதங்கள் மூலம் வெளிப்படுத்துகிறாள் என்பதினால்தான் அவளது பாதங்களின் மீது கவனம் செலுத்தி தியானிக்க வேண்டும் என்கின்றார்).

-92-

गतास्ते मञ्चत्वं द्रुहिणहरिरुद्रेश्वरभृतः
शिवः स्वच्छच्छायाघटितकपटप्रच्छदपटः ।
त्वदीयानां भासां प्रतिफलनरागारुणतया
शरीरी शृङ्गारो रस इव दृशां दोग्धि कुतुकम् ॥

கதாஸ்தே மஞ்சத்வம் த்ருஹிணஹரிருத்ரேஶ்வரப்ருத:
ஶிவ: ஸ்வச்சச்சாயாகடிதகபடப்ரச்சதபட: ।
த்வதீயாநாம் பாஸாம் ப்ரதிபலனராகாருணதயா
ஶரீரீ ஶருனகாரோ ரஸ இவ த்ருஶாம் தோக்தி குதுகம் ॥

இந்த ஸ்லோகத்தை 2000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- மன்னனாகலாம், சுற்றி உள்ள தீமைகள் அழியும்



ஹே பராசக்தி
நீ அமர்ந்து உள்ள உனது கட்டிலின் நான்கு கால்களாக ஈசன், பிரும்மா, விஷ்ணு மற்றும் ருத்திரர் வீற்று இருக்க உனது மஞ்சத்தின் மேல் விரிப்பாக சதாசிவன் இருக்க, அவர் வெள்ளை ஆடையை அணிந்தவராக இருந்தாலும் உனது சிவந்த உடலழகின் தாக்கத்தினால் அவரும் சிவப்பாகவே காணப்பட்டு ஆனந்தத்தைத் தருகின்றார்.

(விளக்கம்:

1. பிரபஞ்சம் பராசக்தியினால் படைக்கப்பட்டது என்பது நமக்குத் தெரியும். பராசக்தியும் பரமேஸ்வரரும் ஒன்றிணைந்த ரூபமே சதாசிவ ரூபம் ஆகும். பராசக்தி இந்த பிரபஞ்சத்தை படைக்க எண்ணியதும் முதலில் தன்னுள் இருந்து சதாசிவனை வெளியேற்றுகின்றாள். வெளிவந்த சதாசிவன், ஈஸ்வரனை தன்னுள் இருந்து படைக்க, ஈஸ்வரன் பிரபஞ்சத்தின் மூன்று முக்கிய செயல்களுக்காக பிரம்மாவை படைக்கும் தொழிலுக்கும், மக்களைக் காக்கும் தொழிலுக்கு விஷ்ணுவையும், அழிக்கும் தொழிலிற்கு ருத்ரனையும் படைத்தார். ஆனால் பராசக்தியின் பகுதியான அந்த ஐந்து தெய்வங்களும் பராசக்தியிடமிருந்து சக்திகளைப் பெறாமல் சுயாதீனமாக செயல்பட முடியாது. சதாசிவனே தன்னை ஈஸ்வரராக ஒரு உருவம் எடுத்துக் கொண்டு சதாசிவனில் இருந்து வெளி வந்து அந்த ரூபத்தில் மூன்று தெய்வங்களையும் படைக்கின்றார்.

2. பராசக்தியும், சதாசிவனும் இருவரும் ஒன்றிணைந்த தெய்வம் ஆகும் என்பதினால் அவை இரண்டும் நிரந்தரமாக இரண்டு தனித்தனி தெய்வங்களாக இருக்க முடியாது. ஈஸ்வரனின் பங்கு, படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் போன்ற முக்கியமான செயல்களைச் செயல்படுத்த மூன்று முதன்மை தெய்வங்களை படைப்பதோடு நின்று விடுகின்றது.

3. ஆனால் அந்த நான்கு தெய்வங்களும் எப்போதும் பராசக்தியுடன் அல்லது அவளைச் சுற்றி இருக்க விரும்பினாலும் அவள் அருகில் அவர்களால் சுதந்திரமாக சென்று நிற்க முடியாது. ஆகவே பராசக்தி மணித்வீபத்தில் உள்ள தனது இருப்பிடத்திற்கு சென்றதும் ஈஸ்வரன், பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரன் எனும் நால்வரும் அவள் அமர்ந்திருக்கும் கட்டிலின் கால்களாக தம்மை மாற்றிக் கொள்கின்றார்கள். அதே நேரத்தில் சதாசிவரோ அன்னை அமரும் கட்டிலின் மேல் கம்பளமாக தன்னை மாற்றிக் கொண்டு விடுகின்றார். இப்படியாக அவர்கள் விரும்பியபடியே அனைவரும் எப்போதும் பராசக்தியுடன் அவளது வீட்டில் இருக்கின்றார்கள்).

-93-

अराला केशेषु प्रकृतिसरला मन्दहसिते
शिरीषाभा चित्ते दृषदुपलशोभा कुचतटे ।
भृशं तन्वी मध्ये पृथुरुरसिजारोहविषये
जगत्त्रातुं शम्भोर्जयति करुणा काचिदरुणा ॥

அராலா கேஶேஷு ப்ரக்ருதிஸரலா மந்தஹஸிதே
ஶிரீஷாபா சித்தே த்ருஷதுபலஶோபா குசதடே ।
ப்ருஶம் தன்வீ மத்யே ப்ருதுருரஸிஜாரோஹவிஷயே
ஜகத்த்ராதும் ஶம்போர்ஜயதி கருணா காசிதருணா ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- மனக் கவலைகள் அகன்று நினைத்தது நடக்கும்



ஹே பராசக்தி
நீ பரமேஸ்வரரின் மனதிற்கும், வாக்குக்கும் கூட எட்டாதவளாக உள்ளாய். இயற்கையிலேயே சுருண்ட முடியுடன், அழகிய புன்சிரிப்பு கொண்டவளான உனது மனமோ காட்டில் உள்ள வாகைப் பூக்களை விட மிருதுவானது; உனது ஸ்தனங்களோ கல்லை விட அதிக பாரமாக உள்ளன; மெல்லிய இடையும், பருத்த பின் பாகத்தையும் மயக்கம் தரும் உதடுகளையும், சிவந்த உடலோடும் காணப்படும் நீ இந்த பிரபஞ்சத்தை ரட்ஷிக்க வந்த பரமேஸ்வரி அல்லவா.

(விளக்கம்:

இந்த ஸ்லோகத்திலும் ஆதி சங்கரர் மீண்டும் ஒருமுறை பராசக்தியின் அழகை, சுருக்கமாக கூறி உள்ளார்).

-94

कलङ्कः कस्तूरी रजनिकरबिम्बं जलमयं
कलाभिः कर्पूरैर्मरकतकरण्डं निबिडितम् ।
अतस्त्वद्भोगेन प्रतिदिनमिदं रिक्तकुहरं
विधिर्भूयो भूयो निबिडयति नूनं तव कृते ॥

கலனக: கஸ்தூரீ ரஜனிகரபிம்பம் ஜலமயம்
கலாபி: கர்பூரைர்மரகதகரண்டம் நிபிடிதம் ।
அதஸ்த்வத்போகேன ப்ரதிதினமிதம் ரிக்தகுஹரம்
விதிர்பூயோ பூயோ நிபிடயதி நூனம் தவ க்ருதே ॥

இந்த ஸ்லோகத்தை 2000 முறை என 45 நாட்கள் பாராயணம் செய்தால் -- நினைத்தவற்றை அடையலாம்



ஹே பராசக்தி
நமது கண்களுக்கு தெரியும் சந்திரனின் இருண்ட பகுதியே வாசனை திரவியமான கஸ்தூரிப் பொடியாகும்; சந்திர பிம்பமோ நீர் நிறைந்த மரகத ரத்தினத்தால் ஆன குடம் போன்றது ஆகும்; பச்சைக் கற்பூரம் எனும் இன்னொரு வாசனை திரவியம் அந்தக் குப்பியின் விளிம்புவரை நிறைந்துள்ளது. நீங்கள் குளித்த பின்னர் காலியாகி விடும் அந்த வாசனை வஸ்துக்களை மீண்டும் மீண்டும் உங்களுக்காக பிரும்மா நிரப்பி வைக்கின்றார்.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் பராசக்தியை வணங்கித் துதிப்பதற்கான, அல்லது அவளை தியானிக்க தகுந்த காலம் எது, அவளது பரிபூரண அருளை பெறுவதற்கான சிறந்த கால கட்டம் எது என்பதை மறைமுகமாக உணர்த்தி உள்ளார்.
2. ஒரு பக்ஷம் என்பது பௌர்ணமியின் இருபுறமும் இருக்கும் காலம். இந்து நாட்காட்டியின்படி ஒரு பக்ஷம் என்பது இரண்டு பதினைந்து நாட்களைக் கொண்டது. முதல் பக்ஷம் என்பது பௌர்ணமியில் துவங்கி அமாவாசை வரையிலான முதல் 15 நாட் காலம்; இரண்டாம் பக்ஷம் என்பது அமாவாசை துவங்கி பௌர்ணமி வரையிலான 15 நாட் காலம் ஆகும்.
3. அமாவாசைக்கும் பௌர்ணமிக்கும் இடைப்பட்ட பதினைந்து நாட்கள் சுக்ல பக்ஷம் அல்லது வளர்பிறை காலம் என்பதாகும். அதே போலவே பௌர்ணமிக்கும் அமாவாசைக்கும் இடைப்பட்ட பதினைந்து நாட்கள் கிருஷ்ண

பக்ஷ அல்லது சந்திரனின் மறைவு காலம் (தேய்பிறைக் காலம்) என்று அழைக்கப்படுகிறது.

4. பராசக்தியானவள் வளர்பிறை அல்லது சுக்ல பக்ஷ காலமான 15 நாட்கள் தனது தர்பாரில் அமர்ந்து கொண்டு பக்தர்களுக்கு அனுக்கிரஹம் செய்யத் துவங்குகிறாள் என்றும், அடுத்த 15 நாட்களான சந்திரனின் மறைவு காலத்தில், அதாவது கிருஷ்ண பக்ஷ காலத்தில் அவள் ஸ்நானத்திற்கு சென்று விடுவதால் அந்த கால கட்டத்தில் அவளை யாராலும் நெருங்க முடியாது என்பதினால் அவளது பரிபூரண கடாட்ஷம் அந்த கால கட்டத்தில் கிடைப்பது இல்லை என்பதும் ஐதீகம்.
5. பௌர்ணமி முடிந்ததும் அன்னை ஸ்நானத்திற்கு சென்று ஒவ்வொரு நாட்களிலும் ஒவ்வொரு வாசனை திரவியங்களில் ஸ்நானம் செய்வாள் (தேய்பிறைக் காலம்).
6. 15 நாட்களுக்கு பின்னர் மீண்டும் அலங்காரம் செய்து கொண்டு அமாவாசையின் அடுத்த நாட்களில் இருந்து தனது தர்பாரில் அமர்ந்து கொண்டு பக்தர்களை ஆசிர்வதிக்க துவங்குகிறாள்.

சுக்ல பக்ஷம் அல்லது

சந்திரனின் வளர்பிறை காலம்

கிருஷ்ண பக்ஷ அல்லது சந்திரனின் தேய்பிறைக் காலம்

7. இதில் இருந்து பராசக்தியின் பரிபூரண அருள் அமாவாசையின் அடுத்த நாள் துவங்கி பதினைந்து நாட்கள் (வளர்பிறை காலம்) கிடைக்கும் என்பது விளங்குகின்றது.
8. அந்த கால கட்டத்தில்தான் பிரும்மா மீண்டும் அன்னை ஸ்நானம் செய்து விட்டு காலியாக்கி வைத்துள்ள மரகத ரத்தினத்தால் ஆன குடங்களில் மீண்டும் வாசனை திரவியங்களை நிரப்பி வைக்கின்றார் என்பதாக ஐதீகம் உள்ளது).

-95-

पुरारातेरन्तःपुरमसि ततस्त्वच्चरणयोः
सपर्यामर्यादा तरलकरणानामसुलभा ।
तथा ह्येते नीताः शतमखमुखाः सिद्धिमतुलां
तव द्वारोपान्तस्थितिभिरणिमाद्याभिरमराः ॥

புராராதேரந்த:புரமஸி ததஸ்த்வச்சரணயோ:
ஸபர்யாமர்யாதா தரலகரணானாமஸுலபா ।
ததா ஹ்யேதே நீதா: ஶதமகமுகா: ஸித்திமதுலாம்
தவ த்வாரோபாந்தஸ்திதிபிரணிமாத்யாபிரமரா: ॥

இந்த ஸ்லோகத்தை 108 முறை என 3 நாட்கள் பாராயணம் செய்தால் -- உடல் ரணங்கள் நிவர்த்தி ஆகும்



ஹே பராசக்தி
திரிபுரா எனும் மூன்று உலகங்களையும் எரித்த பரமேஸ்வரரின் பட்டத்து மஹரிஷியாக நீ இருக்கின்றாய் என்பதினால், பஞ்சேந்திரியங்களை வென்றவர்களினால் மட்டுமே உன் மண்டபத்தில், உன் அருகில் வந்து பூஜை செய்ய முடியும்; அதனால் தேவேந்திரனுக்கு கூட அந்த பாக்கியம் கிட்டவில்லை; அவர்களும் உனது மண்டபத்தின் நுழை வாயிலில் துவாரகா பாலகர்களாக உள்ள அணிமா போன்ற எட்டு சித்திகளோடு சமமாக நிற்க வேண்டி உள்ளது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் என்ன கூறி உள்ளார் எனில் 'பராசக்தியின் அருகில் எளிதில் சென்று எவராலும் பூஜை செய்ய முடியாது; அவளது உத்தரவு இன்றி யாரும் உள்ளே செல்ல முடியாது. ஆகவே பராசக்தியின் அருகில் சென்று பூஜை செய்ய வைராக்கியம் வேண்டும்; அந்த வைராக்கியம் வேண்டும் என்றால் முதலில் பஞ்சேந்திரியங்கள் எனப்படும் ஐந்து புலன்களையும் முற்றிலும் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும்; பஞ்சேந்திரியங்களை அடக்கி வைத்துக் கொண்டு உள்ளவர்களால் மட்டுமே அவளை பூஜிக்க முடியும் என்பதினால் எவன் ஒருவன் தேவியின் பரிபூரண அருளை பெற விரும்புகிறானோ அவர்கள் தமது ஐம்புலன்களையும் அடக்கி வைத்துக் கொண்டு அவளை ஆராதிக்க வேண்டும்.
2. பஞ்சேந்திரியங்களை அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை என்பதினால்தான்

தேவலோக அதிபதியான இந்திரன் கூட திரிபுரா எனும் மூன்று நகரங்களையும் அழித்த பரமேஸ்வரரின் பட்டத்து ராணியான பராசக்தி அமர்ந்து உள்ள மண்டபத்தில், அவள் அருகில் நின்று கொண்டு அவளை பூஜை செய்ய முடியாமல் உள்ளது. அவரும் பராசக்தி மண்டபத்தின் நுழை வாயிலில் காவலுக்கு உள்ள அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், மற்றும் வசித்துவம் போன்ற அஷ்ட சித்தி தேவதைகளுடன்தான் நின்று கொண்டு அன்னையை தரிசிக்க வேண்டி உள்ளது').

-96-

कलत्रं वैधात्रं कतिकति भजन्ते न कवयः
श्रियो देव्याः को वा न भवति पतिः कैरपि धनैः ।
महादेवं हित्वा तव सति सतीनामचरमे
कुचाभ्यामासङ्गः कुरवकतरोरप्यसुलभः ॥

கலத்ரம் வைதாத்ரம் கதிகதி பஜந்தே ந கவய:
ஶ்ரியோ தேவ்யா: கோ வா ந பவதி பதி: கைரபி தனை: ।
மஹாதேவம் ஹித்வா தவ ஸதி ஸதீனாமசரமே
குசாப்யாமாஸனக: குரவகதரோரப்யஸுலப: ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 10 நாட்கள் பாராயணம் செய்தால் -- அறிவாற்றல் பெருகும்



ஹே பராசக்தி
பிரும்மாவின் பத்தினியாகிய சரஸ்வதியை எத்தனை வித்வான்கள் (அறிஞசர்கள், புலவர்கள்) தம் வசமாக்கிக் கொண்டு சரஸ்வதி கடாட்ஷம் பெற்றவர்களாகி உள்ளார்கள்; லஷ்மி தேவியை எத்தனை பெரும் செல்வந்தர்கள் தம் வசமாக்கிக் கொண்டு லஷ்மி கடாட்ஷம் பெற்றவர்களாகி உள்ளார்கள்; ஆனால் பராசக்தி உன்னை மட்டும் சிவபெருமானைத் தவிர யாராலும் தம் வசமாக்கிக் கொள்ள முடியவில்லை; உன் கை மற்றும் கால்களை சிவப்பாகும் மருதாணி மரம் கூட தன்னிடம் வசியம் செய்து வைத்துக் கொள்ளவில்லையே; அப்படியானால் நீதானே உண்மையான பதிவிரதை ஆவாய்?

(விளக்கம்:

1. எத்தனை, எத்தனை வித்வான்கள், அறிஞசர்கள் மற்றும் புலவர்கள் நாவில் சரஸ்வதி வசிக்கிறாள் என்பதை பெருமையாக கூறுவார்கள். அதை போலவேதான் எத்தனை பெரும் செல்வந்தார்கள், வசதி படைத்தோர்கள் வீடுகளில் லட்சுமி தேவி வாசம் செய்கின்றாள் என்பதாக கூறுவார்கள். அதனால் லக்ஷ்மியும், சரஸ்வதியும் பதிவிரதைகள் அல்ல என்பதல்ல. அவர்கள் இருவரையும் முறைப்படி வணங்கித் துதிப்பவர்கள் அவர்களை எளிதில் தன் வசமாக்கிக் கொள்ள முடியும் என்பது தத்துவம் ஆகும்.
2. ஆனால் முறைப்படி வணங்கித் துதித்தாலும் பராசக்தியை தன் வசமாக்கிக் கொள்ளும் எந்த செயலும் எவரிடமும் கிடையாது. பராசக்தி தனது கணவரான

பரமேஸ்வரனைத் தவிர வேறு யாரிடமும் நெருக்கம் காட்டுவதில்லை. மனதளவில் கூட அவளை யாராலும் தம் வசப்படுத்த முடியாது; அவளும் எவருடைய வீட்டிலும் சென்று வாசம் செய்வதில்லை. ஆனால் அதற்காக தன்னை வேண்டுபவர்களுக்கு பரிவு காட்டுவதில்லை என்பது அர்த்தம் அல்ல. உண்மையான மனதுடன் தன்னை வேண்டி நிற்கும் பக்தர்களுக்கு தனது கருணையை அள்ளிக் கொடுப்பவள் பராசக்தி.

3. பராசக்தியின் கைகளிலும் கால்களிலும் பூசிக் கொள்ளும் மருதாணி இலைகளின் மரங்கள் கூட அன்னையிடம் நெருக்கம் காட்ட முடிவதில்லை என்பதாக ஆதி சங்கரர் கருதுகின்றார். அவளை ஆராதிப்பவர்கள் அனைவருமே அவளது பாதங்களில் கலந்து விட வேண்டும் (அதாவது ஆத்ம விடுதலை) என்பதற்காக அவளை ஆராதிக்கின்றார்கள் என்பதினால்தான் அவள் தனித்துவமான தெய்வமாக காணப்படுகிறாள். இந்த கருத்துக்களைத்தான் இந்த ஸ்லோகம் எடுத்துக் காட்டுகின்றது).

-97-

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिःसीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥

கிராமாஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீமாகமவிதோ
ஹரே: பத்னீம் பத்மாம் ஹரஸஹசரீமத்ரிதனயாம் ।
துரீயா காபி த்வம் துரதிகமனி:ஸீமமஹிமா
மஹாமாயா விஸ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷி ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 8 நாட்கள் பாராயணம் செய்தால் -- உடல் பலமும் ஆண்மைத் தன்மையும் பெருகும்



ஹே பராசக்தி
ஆகம வேத பாடங்களை நன்கு கற்றறிந்த அனைவருமே நீயே சரஸ்வதி, நீயே மஹாலக்ஷ்மி மற்றும் நீயே பார்வதி என்று உன்னை பல்வேறு தேவிகளாக வர்ணிக்கிறார்கள். ஆனால் நீயோ நான்காவது தேவியான மஹா மாயாவாக இருந்தபடி எவருடைய மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாதவளாக இருந்து கொண்டு, இந்த பிரபஞ்சத்தையே ஆட்சி செய்து வருகிறாய்.

(விளக்கம் :

1. இந்த ஸ்லோகத்தில் ஆதி சங்கரர் பராசக்தியை குறித்துக் கூறுகையில் அவள் மூன்று பெண் தெய்வங்களான பார்வதி, லஷ்மி மற்றும் சரஸ்வதி என்பவர்களின் எவரும் இல்லை, அவர்களுக்கு அப்பாற்பட்ட நான்காவது தெய்வமான மஹா மாயா என்பதை போல ஒரு தோற்றத்தை தருகின்றார்.
2. உண்மையில் மஹா மாயா என்பவள் யார்? 'சில புராணங்களில் மஹா மாயா என்பவளை பெண் தெய்வங்களில் மிக உயர்ந்த தெய்வம் என்பதாக கூறப்பட்டு உள்ளது; இந்த உலகமே மாயை என்பதால் அவளே அந்த மாயையின் உருவம்; அவளே உலகைப் படைத்தவள்; படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்ற மூன்று செயல்களையும் செய்ய வைப்பவள்; அவள் குணங்கள் அற்றவள்; அவளது ஆற்றல்கள் எவருக்கும் தெரியாது; துர்கை அவளுடைய அவதாரம்; பார்வதி அவளுடைய அவதாரம்; லட்சுமி அவளுடைய அவதாரம்; காளி அவளுடைய அவதாரம் என்றெல்லாம் கூறப்பட்டு உள்ளது. அனைத்து தெய்வங்களும்

பராசக்தியின் வெளிப்பாடுகள் மட்டுமே. அவற்றில் இருந்தே மஹா மாயா என்பவள் அனைத்து தெய்வங்களையும் பிரதிபலிப்பவள் என்பது விளங்கும்.

3. மஹா மாயா மிக உயர்ந்த தெய்வம். அவள் எல்லையற்றவள்; பிறப்பற்றவள்; மரணமற்றவள்; காலத்திற்கும் இடத்திற்கும் அப்பாற்பட்டவள்; என்பதாக கூறப்பட்டு உள்ளது. அவளே அக்னிக்குப் பின்னால் உள்ள சக்தி; வாயுவுக்குப் பின்னால் உள்ள சக்தி; சூரியனுக்குப் பின்னால் உள்ள சக்தி; வசுக்களுக்குப் பின்னால் உள்ள சக்தி; இந்திரன், பிருஹஸ்பதி மற்றும் வருணனுக்குப் பின்னால் உள்ள சக்தி அவளே என்றெல்லாம் அவளைக் குறித்து கூறி உள்ளார்கள்'.
4. இவற்றை எல்லாம் பார்க்கும்போது ஆதி சங்கரர் இந்த உலகைப் படைத்த, அனைத்து தெய்வங்களையும் படைத்த பராசக்தியின் இன்னொரு தோற்றமே மஹா மாயா என்பதாக மறைமுகமாக கூறி உள்ளார் என்றே அறிந்து கொள்ள வேண்டும்.
5. மகாலட்சுமி அஷ்டகத்தில் உள்ள ஒரு ஸ்லோகம் மகா மாயாவைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:-

   ‘ஓ தேவி, நீ ஆரம்பமோ முடிவோ இல்லாதவள். ஆதி காலத்தில் இருந்தே உள்ள மிகப் பெரிய சக்தி நீ; யோகிகளின் மனதில் இருக்கும் மகாலட்சுமியே, ஒவ்வொருவருடைய உணர்விலிருந்தும் பிறந்த தெய்வீக நெருப்பு நீயே’.
6. லட்சுமி நாராயண ஹ்ருதயம் இவ்வாறு கூறுகிறது:-

   ‘ஓ தேவி, ஆதி காலம் முதலே உள்ள மாயை நீ ; பிரபஞ்சத்தின் முட்டை நீ ; உருவம்

உள்ளவளும், உருவமற்றவளும் நீயே; நீயே சிவனை ஆதரிப்பவள்; நீயே பிரம்மா, விஷ்ணு மற்றும் ருத்ரனுடன் இருப்பவள் ஆவாய்; வேதங்களின் புரிதலுக்கு அப்பாற்பட்டவள் நீ என்பதினால்தான் உன் மகத்துவத்தை எவராலும் விவரிக்க முடியவில்லை; அனைத்து நிலையும் இவ்வாறு இருக்கும்போது, மந்த புத்தியுள்ள என்னால் எப்படி உன் மகத்துவத்தை விவரிக்க முடியும்?’

7. ஸ்ரீ சுக்தம் இவ்வாறு கூறுகிறது:-
'ஓ தேவி, நீ அக்னிக்குப் பின் உள்ள சக்தி, வாயுவுக்குப் பின் உள்ள சக்தி, சூரியனுக்குப் பின் உள்ள சக்தி, வசுக்களுக்குப் பின் உள்ள சக்தி; இந்திரன், பிரகஸ்பதி மற்றும் வருணனுக்குப் பின் உள்ள சக்தி நீயே ஆவாய்; அனைத்திற்கும் பின் உள்ள, எங்கும் நிறைந்த தெய்வம் நீயே'.

-98-

कदा काले मातः कथय कलितालक्तकरसं
पिबेयं विद्यार्थी तव चरणनिर्णेजनजलम् ।
प्रकृत्या मूकानामपि च कविताकारणतया
कदा धत्ते वाणीमुखकमलताम्बूलरसताम् ॥

கதா காலே மாத: கதய கலிதாலக்தகரஸம்
பிபேயம் வித்யார்த்தீ தவ சரணனிர்ணேஜனஜலம் ।
ப்ரக்ருத்யா மூகானாமபி ச கவிதாகாரணதயா
கதா தத்தே வாணீமுககமலதாம்பூலரஸதாம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 30 நாட்கள் பாராயணம் செய்தால் -- உடல் வியாதிகள் குணமாகும்



ஹே பராசக்தி
பிறவியிலேயே ஊமையாக இருந்தவனுக்கு கூட உன் மீது ஸ்துதி பாடும் அளவிற்கான சக்தி கொடுத்தாய். கவிகள் பாடும் பாடலுக்கு தேவையான அருள் தரும் சரஸ்வதியின் தாம்பூலம் போன்ற, சிவந்த நிறத்திலான, உனது பாதத்திலுள்ள மருதாணி அலம்பிய அமிர்தம் போன்ற தீர்த்தத்தை குடிக்க எனக்கு எப்போது அருள் புரிவாய்?

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தில் ஊமைக்குக் கூட பேசும் சக்தியைத் தந்த பராசக்தியின் மேன்மை குறித்து ஆதி சங்கரர் விளக்கி உள்ளார். அந்த ஊமை யார் என்பவரைக் குறித்து இரண்டு விதமான கதைகள் உள்ளன.
2. <u>முதலாம் கதை இது:</u>
   கோகர்ண ஷேத்திரத்திற்கு சமீபத்தில் உள்ள மூகாம்பிகை ஷேத்திரத்தில் பிறப்பிலேயே ஊமையாகவும் பேச முடியாமலும் இருந்த பிராமண குமாரர் ஒருவர் தன்னால் பேச முடியவில்லையே என்ற ஏக்கத்தில், மூகாம்பிகை ஆலயத்தில் சென்று தனது இரண்டு கைகளையும் சிரசில் வைத்துக் கொண்டு தனக்கு பேச்சு வர வேண்டும் என்று வேண்டிக் கொள்ள, அந்த அன்னையோ தனது காலில் அலங்கரிக்கப்பட்டு இருந்த மருதாணியோடு அவர் முன் தோன்றி, சிவந்து இருந்த தனது காலை அலம்பிக் கொண்டு அந்த நீரை பருகுமாறு கூறினாளாம். அதைக் குடித்த அந்த பிராமண பாலகரின் வாயும் நாக்கும் சிவந்து விட்டதாம். அடுத்து அவருக்கு பேச்சு ஆற்றல் வந்து விட அவர் அன்னையை

பல்வேறு ஸ்தோத்திரங்களினால் போற்றி பாடத் துவங்கி விட்டாராம். அந்த கிரந்ததையே 'மூக பஞ்ச சதீ' என்பதாக வித்வான்கள் கூறுவார்கள்.

<u>ஆதாரம் & தகவலுக்கு நன்றி :</u> **(1955 ஆம் ஆண்டில் வெளியாகி உள்ள ஸ்ரீ தேதியூர் சுப்ரமணிய சாஸ்திரிகளால் தமிழாக்கம் செய்யப்பட்ட ஸ்ரீ சங்கர பகவத் பூஜ்யபாதாள் அருளிய சௌந்தர்யா லஹரி எனும் புத்தகம்)".**

3. <u>இரண்டாவது கதை இது :-</u>

'மூக பஞ்சஷதி' என்பது காஞ்சிபுரத்தின் காமாக்ஷி தேவிக்கு ஐந்நூறு வசனங்கள் கொண்ட பாடலாகும், இது மூக்கா கவியால் (பின்னர் காஞ்சி காமகோடி பீடத்தின் 20வது சங்கராச்சாரியாரான மூக சங்கரேந்திர சரஸ்வதி) இயற்றப்பட்டது. காது கேளாத-ஊமையாகப் பிறந்த மூக்கா (ஊமை என்று பொருள்) தேவி காமாக்ஷியின் கருவறையில் பல மணி நேரம் செலவழித்து, தன் அருளைத் தன் மீது பொழியும்படி வேண்டினார். இறுதியாக தேவி அவ்வாறு செய்தபோது, மூக்கா பேசவும், கேட்கவும் மட்டுமின்றி, தன்னிச்சையாக கவிதையில் பொங்கி எழுந்த 'மூக பஞ்சஷதி'யைப் பாடும் அளவுக்கு ஞானம் பெற்றவர் ஆனார். காஞ்சி காமகோடி பீடத்தின் 19 வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ மார்த்தாண்ட வித்யாகனேந்திர சரஸ்வதியால், அவருக்குப் பிறகு மடம் ஏறும்படி மூக்கா கோரப்பட்டார். இன்றும் கூட, 'மூக பஞ்சஷதி' என்பது பேச்சுக் குறைபாடு உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து வித்யாக்களிலும் (அறிவின் கிளைகள்) தேர்ச்சி பெற விரும்புவோருக்கு பரிந்துரைக்கப்படும் ஒரு சக்திவாய்ந்த பாடலாகும்).

ஆதாரம் & தகவலுக்கு நன்றி **:(https://panchadravida-com.translate.goog/mooka-panchashathi?_x_tr_sch=http&_x_tr_sl=en&_x_tr_tl=ta&_x_tr_hl=ta&_x_tr_pto=tc)**

4. 'மூக பஞ்சஷதி' மற்றும் 'மூக பஞ்ச சதீ' என்கின்ற இரண்டுமே காமாக்ஷி தேவிக்கு ஐந்நூறு வசனங்கள் கொண்ட ஒரே ஸ்லோகம்தான்.

-99-

सरस्वत्या लक्ष्म्या विधिहरिसपत्नो विहरते
रतेः पातिव्रत्यं शिथिलयति रम्येण वपुषा ।
चिरं जीवन्नेव क्षपितपशुपाशव्यतिकरः
परानन्दाभिख्यम् रसयति रसं त्वद्भजनवान् ॥

ஸரஸ்வத்யா லக்ஷ்ம்யா விதிஹரிஸபத்னோ விஹரதே
ரதே: பாதிவ்ரத்யம் ஶிதிலயதி ரம்யேண வபுஷா ।
சிரம் ஜீவன்னேவ க்ஷபிதபஶுபாஶவ்யதிகர:
பரானந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத்பஜனவான் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 15 நாட்கள் பாராயணம் செய்தால் -- ஒருவருக்கு மனத் துணிவும் அச்சு உணர்வின்மையும் கிடைக்கும்



ஹே பராசக்தி
உன்னை பூஜித்து துதிப்பவன் பிரும்மா பொறாமைப்படும் அளவில் சரஸ்வதியின் கடாக்ஷம் பெற்ற அறிவாற்றலும், விஷ்ணு பொறாமைப்படும் அளவில் லட்சுமி கடாக்ஷம் பெற்ற செல்வந்தனாகவும் இருக்கின்றான். அவனது அழகோ மன்மதனின் மனைவியான ரதியை தோற்கடிப்பதாக உள்ளதினால் மன்மதனால் வெறுக்கப்படுகின்றான். உனது பக்தன் சிரஞ்சீவியாகவே இருந்தவாறு பந்த பாசங்களில் இருந்து விடுபட்டு பரமானந்த இன்பத்தை அனுபவிக்கின்றான்.

(விளக்கம் :

1. இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆதி சங்கரர் மேலோட்டமாக என்ன கூறி உள்ளார் என்றால் 'பராசக்தியை வழிபாடு செய்பவன் உலகின் அனைத்து பந்தங்களில் இருந்து விடுதலை அடையும் முன் வாழ்க்கையின் மிக மேன்மையான நிலையை அடைகிறான்; அதன் பின் பராசக்தியின் தீவிரமான வழிபாட்டினால் அவன் ஒரு யோகி போன்ற நிலையை அடைந்து விடுகின்றான். அந்த நிலையை அடைபவன் மீது பிரும்மா மற்றும் விஷ்ணு போன்ற தெய்வங்களும் பொறாமைக் கொண்டு விரோதியைப் போல அவனைப் பார்ப்பார்கள். அதன் காரணம் பிரும்மாவின் மனைவியான சரஸ்வதி அவன் நாக்கில் குடி இருப்பதினால் ஞானத்தில் சிறந்தவனாகின்றான்; பெரும் பொருள் மற்றும் செல்வத்தை அடையும் அவன் வீட்டிலோ விஷ்ணுவின் மனைவியான லக்ஷ்மி குடி இருப்பாள் என்பார்கள். அதை தொடர்ந்து

அவன் முகப் பொலிவையும், உடல் அழகையும் பெறுகின்றான். அந்த நிலையில் உள்ள அவனைக் காணும் மன்மதனின் மனைவியான ரதியோ அவனை பார்த்துக் கொண்டே இருக்க நினைக்கிறாள் என்பதினால் மன்மதனும் அவன் மீது பொறாமை கொள்கின்றான்.

2. இந்த ஸ்லோகத்தில் கூறப்பட்டுள்ள உள் அர்த்தங்கள் நுட்பமானவை, அவை அனைத்துமே மிகைப்படுத்தப்பட்டு, மேலோட்டமாக விளக்கப்பட்டுள்ளது. உண்மையில், இதில் காணப்படும் தத்துவங்கள் மிக வித்தியாசமானது. வாழ்க்கையில் அனைத்தையும் அடைந்து விட்டவர்கள் வாழ்க்கையில் இறுதியில் அமைதியான முடிவை அடைய பராசக்தியின் அருளை வேண்டி நிற்கின்றார்கள், அவர்கள் அதற்காகவே பராசக்தியிடம் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்த ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரம்மா, விஷ்ணு மற்றும் மன்மதன் என்ற பெயர்களில் ஆதி சங்கரர் குறிப்பிட்டு உள்ளவர்கள்- கற்றறிந்த ஆளுமைகள் மற்றும் கல்வியறிவு பெற்றவர்களிடையே உள்ள போட்டியாளர்கள்; செல்வந்தர்களிடையே காணப்படும் போட்டியாளர்கள்; பொது வாழ்க்கையில் பிரபலமான ஆளுமைகளிடையே காணப்படும் போட்டியாளர்கள் என்பவர்கள் ஆவர். அந்த தெய்வங்களின் பெயர்கள் ஒரு உதாரணமாகவே கூறப்பட்டு உள்ளன.

3. இந்து தெய்வங்கள் தனித்துவமான தன்மைகளைக் கொண்டவர்கள், அவர்கள் சாதாரண குடிமகனின் எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள்,

அவரவர்கள் சில குறிப்பிட்ட செயல்களை நிறைவேற்றுவதற்காக மட்டுமே தோன்றியவர்கள் என்பதினால் அவர்கள் மனதில் எந்த உணர்ச்சிகளோ, ஆசா பாசங்களோ இருக்க முடியாது. ஏன் என்றால் மானிடர்களும், தெய்வங்களும் வெவ்வேறு வகையான உலகத்தை சேர்ந்தவர்கள்.

4. ஆதி சங்கரர் கூறி உள்ளது என்னவென்றால், மேலான ஞான நிலையை எட்டும் பராசக்தி உபாசகன், வாழ்க்கையில் எந்த தேவையும் இல்லாமல் இருக்கின்றார். உலகில் எந்த பந்தங்களும் இல்லாத நிலையை அடைந்ததும் மனதில் அழிவற்ற இளமையை பெறுகின்றார். அது ஜீவாத்மாவை பரமார்த்தத்துடன் இணைக்கும் நிலை மற்றும் பேரின்பத்தின் உச்ச நிலை என்பதாகும்.

5. ஆகவே சௌந்தர்யலஹரியில், மேலே கூறப்பட்டு உள்ள 98 ஸ்லோகங்களின் அர்த்தங்களையும் மேலோட்டமாகப் பார்க்காமல், அதில் புதைந்து உள்ள ஆழமான அர்த்தங்களை நன்கு அறிந்து கொண்டால் மட்டுமே, ஆதி சங்கரர் போன்ற மாபெரும் மஹான், பரிபூரணமான யோகி எத்தனை புனிதமான மனதுடன் அன்னையை வர்ணித்து உள்ளார் என்பது புரியும்).

-100-

प्रदीपज्वालाभिर्दिवसकरनीराजनविधिः
सुधासूतेश्चन्द्रोपलजललवैरर्घ्यरचना ।
स्वकीयैरम्भोभिः सलिलनिधिसौहित्यकरणं
त्वदीयाभिर्वाग्भिस्तव जननि वाचां स्तुतिरियम् ॥

ப்ரதீபஜ்வாலாபிர்திவஸகரனீராஜனவிதி:
ஸுதாஸூதேஶ்சந்த்ரோபலஜலலவைரர்க்யரசனா ।
ஸ்வகீயைரம்போபி: ஸலிலனிதிஸௌஹித்யகரணம்
த்வதீயாபிர்வாக்பிஸ்தவ ஜனநி வாசாம் ஸ்துதிரியம் ॥

இந்த ஸ்லோகத்தை 1000 முறை என 16 நாட்கள் பாராயணம் செய்தால் -- ஒருவருக்கு அனைத்து விருப்பங்களும் நிறைவேறும் நிறைவேறும்



ஹே பராசக்தி
நீ கொடுத்த வாக்கு வலிமையினாலேயே உன்னை நான் இந்த துதியால் புகழ்வது -கற்பூர ஆராத்தியினால் சூரியனை ஆராதிப்பதை போலவும், சந்திர காந்த கல்லின் நீரால் சந்திரனுக்கு அர்க்கியம் தருவதை போலவும், சமுத்திர நீரைக் கொண்டே கடலுக்கு தர்ப்பணம் செய்வதை போலவும் -உள்ளது.

(விளக்கம்:

1. இந்த ஸ்லோகத்தை எழுதி முடித்ததும் (சௌந்தர்ய லஹரி) ஆதி சங்கரர் அன்னையிடம் கூறுகின்றார் 'இந்த பெருமை எனக்கு உரியது அல்ல. என்னால் செய்ய முடிந்த அனைத்திற்குமே நீதான் காரணகர்த்தாவாக இருக்கின்றாய் என்பதால் எனது திறமை அனைத்தும் உன்னுடைய திறமையாகும் என்பதினால் நீதான் பெருமைக்கு உரியவள்'.
2. ஆதி சங்கரர் மிக்க தன்னடக்கத்துடன் அன்னையிடம் கூறுகின்றார் 'உனக்கு நான் நன்றி கூறுவது எப்படி உள்ளது என்றால் கடலில் இருந்து எடுக்கப்பட்ட நீரால் கடலுக்கே தர்ப்பணம் செய்வதை போன்றது; சந்திரகாந்தக் கல்லில் (marble stone) இருந்து சுரக்கும் நீரால் சந்திரனுக்கே அர்க்கியம் தருவதை போன்றது; கற்பூர விளக்கு ஏற்றி சூரிய பகவானை வழிபடுவது போன்றது'. அவற்றுக்கு இங்கு நேரடியாக முக்கியத்துவம் இல்லை என்றாலும், அவற்றை தனது செயலுடன் ஒப்பிடுவதற்காக குறிப்பிடுகிறார்.
3. தன்னை உணர்ந்த எந்த ஒரு ஞானியும் (ஆத்ம விடுதலை அடைந்த ஞானி) தனது திறனைப்

பற்றியோ அல்லது ஆன்மீக சாதனையைப் பற்றியோ எவரிடமும் பெருமை பேச மாட்டார். ஏனெனில் அவர் அன்றாட வாழ்க்கையின் சாதாரண கவலைகளுக்கு அப்பாற்பட்டவர். அவர் தெய்வங்களின் பாதங்களுடன் இணைந்து விடும் நிலையான ஆத்ம விடுதலையிலும் அதற்கு அப்பாலும் மட்டுமே கவனம் செலுத்துகிறார். அவர் வழிபடும் தெய்வீகத்தின் பாதங்களில் தன்னை இணைத்துக் கொள்கிறார். எனவே ஆதி சங்கரரும் தனது திறமைக்கான பெருமையை பராசக்திக்கே உரியது என்று கூறுவதில் காரணம் பராசக்தி தான் தன்னை இயக்குகின்றாள், அவள் கையில் தான் ஒரு கருவி மட்டுமே என்கின்றார்).

॥ ஓம் தத்ஸத் ॥